உள்ளடக்கம்.

22—1—1990.

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. 275—313

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (1 முதல் 100 வரை) 314—358

2. தகவல் கோரல்—

(அ) உச்சிப்புளி கடற்கரைப் பகுதிக்குப் படகுகளில் வந்து இறங்கிய சிலர் மணலுக்குள் ஆயுதங்களைப் புதைத்து வைத்ததாக வந்துள்ள செய்தி குறித்து 358—374

(ஆ) திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் சில பகுதிகளில் காலரா நோய் பரவியுள்ளது குறித்து 374—377

(இ) சேலத்தில் வெப்ப உருட்டாலை அமைக்க வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்த வேண்டிய அவசியம் குறித்து 377—380

(ஈ) காவிரி நீர்ப்பிரச்சினை பற்றி வெளியே தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் குறித்து 380—386

3. அறிவிப்பு—

எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ.) .. 386

4. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1990 386

(ஆ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைத்தல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1990 .. 387

பக்கங்கள்

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி. 387

திரு. ஏ. செங்குட்டுவன் 391—396

திரு. மா. சுந்தரதாஸ் 396—409

திரு. ச. அழகுவேலு 409—414

திரு. ஆர். அண்ணாநம்பி 414—426

திரு. இளம்வழுதி 426—434

திருமதி பாப்பா உமாநாத் 435—445

திரு. ஆர். சிங்காரம் 445—453

திரு. ஏ. கோதண்டம் 454—456

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 456—457

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

தை 9, சுக்ல, திருவள்ளுவர் ஆண்டு, 2021
1990, சனவரி 22, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.''

புறத்தே தூய்மையாக விளங்குதல் நீரினால் ஏற்படும். அதுபோல், அகத்தே தூய்மையாக விளங்குதல் வாய்மையால் உண்டாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

பவுஞ்சூர் கிராமத்தில் காவல் நிலையம் அமைத்தல்.

*277—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், பவுஞ்சூர் கிராமத்தில் காவல் நிலையம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

தமிழ்நாட்டில் குதிரைப் பந்தயம்.

* 413—திரு. பொன். விஜயராகவன் :
திரு. எஸ். டி. உகம்சந்த் :
பேராசிரியர் க. பொன்னுசாமி :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படுமா ?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

தை 9, சுக்ல, திருவள்ளுவர் ஆண்டு, 2021
1990, சனவரி 22, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடி மகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.''

புறத்தே தூய்மையாக விளங்குதல் நீரினால் ஏற்படும். அதுபோல், அகத்தே தூய்மையாக விளங்குதல் வாய்மையால் உண்டாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

பவுஞ்சூர் இராமத்தில் காவல் நிலையம் அமைத்தல்.

*277—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், பவுஞ்சூர் கிராமத்தில் காவல் நிலையம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

தமிழ்நாட்டில் குதிரைப் பந்தயம்.

* 413—திரு. பொன். விஜயராகவன் :
திரு. எஸ். டி. உகம்சந்த் :
பேராசிரியர் க. பொன்னுசாமி :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு குதிரைப் பந்தய (பணயம் வைத்தல் மற்றும் பந்தயம் கட்டுதல் ஒழிப்பு) சட்டம், 1974 எண் 44/74-ன்படி 31–3–1975 முதல் குதிரைப் பந்தயங்களில் பணயம் அல்லது பந்தயம் கட்டுதல் ஒரு குற்றமாக்கப்பட்டு சட்டப்படி ஒழிக்கப் பட்டது. இச்சட்டத்தை எதிர்த்து குதிரைப் பந்தய சங்கத்தால் தொடரப்பட்ட வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. உச்சநீதிமன்றத்தின் இடைக்கால ஆணைகளின்படி குதிரைப் பந்தயம் தமிழ்நாட்டில் தற்பொழுது நடைபெறுகிறது. எனவே, குதிரைப் பந்தய ஒழிப்பு, நிலுவையிலுள்ள வழக்கு களில், உச்சநீதிமன்றத்தின் இறுதி முடிவைப் பொறுத்து அமையும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குதிரைப் பந்தயத் துறை இந்த அரசி னுடைய ஒரு துறையாக இருக்கிறபோது அங்கே பந்தய நாட் களில் பணியாற்றுகிற ஊழியர்கள் அதாவது "Race day Employees" என்பவர்களை நிரந்தரமாக்குவதற்கு வழியில்லாமல் அதாவது தொடர்ச்சியாக 480 நாட்கள், 240 நாட்கள் ஓராண்டுக்கு, என்பதுகூட இல்லாமல் அவர்களுக்கு வேலை வாய்ப்பு மறுக்கப் படுகிற ஒரு உத்தரவை அந்தத் துறையில் பொறுப்பேற்றிருக்கக் கூடிய அரசு அதிகாரிகளே வழங்கி இருக்கிறார்களே, இதனை முதல்வர் அவர்கள் அறிவார்களா ? அந்த ஊழியர்களுக்குத் தொடர்ச்சியாக வேலை கொடுக்க உத்திரவாதம் நல்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயமே நிரந்தரமா என்பது தெரியாத நிலைமையில் இந்த நிரந்தரத்தைப் பற்றிப் பதில் சொல்ல என்னால் இயலாது.

திரு. எஸ். ஆர். இராதா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் அரசு தீவிர அக்கறை கொள்ளுமானால், உச்சநீதிமன்றத்தில் இருக்கிற வழக்கை விரைவுபடுத்தவும், அப்படி விரைவுபடுத்த முடியாத சூழ்நிலை ஏற்படுமானால் மத்திய அரசினுடைய ஏதாவது ஒரு சட்டத்தின் மூலமாகவாவது இந்தக் குதிரைப் பந்தயத்தை நிறுத்துவதற்குரிய வழிவகைகளை உடனடியாகக் காண வழிவகை இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசினுடைய சட்டத்தை எதிர்த்து வழக்கு நடைபெறும்போது மத்திய அரசு திடீரென்று இன்னொரு சட்

1990 சனவரி 22]

டத்தைப் பிறப்பிக்க இயலாது என்று நான் கருதுகிறேன். ஆனால் 1975ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிற இந்த வழக்கைத் துரிதப்படுத்தாமல் கடந்த காலத்தில் என்ன காரணத்தாலோ விட்டுவிட்டார்கள். ஆனால் இப்போது இந்த வழக்கைப் பொறுத்தவரையில் இந்த அரசின் கருத்தை இந்த வழக்கை நடத்துகிற நம்முடைய வழக்கறிஞர்கள் கேட்டபோது நான் அவர்களுக்குத் தந்திருக்கிற குறிப்பு—குதிரைப் பந்தய ஒழிப்பு நமது கொள்கை, இந்தக் கொள்கை வெற்றிபெறும் வகையில் உச்சநீதிமன்றத்தில் அரசின் சார்பில் வழக்காட வேண்டுமென்று நான் திட்டமாகக் கூறியிருக்கிறேன்.

திரு. கோ. பூவராகன் : பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயத்தில் நிறைய முறைகேடுகள் நடப்பது என்பது அடிக்கடி பத்திரிகைகள் வாயிலாகத் தெரியவருகிறது. அரசாங்கத்திற்கு அதைப் பற்றிய புகார் ஏதாவது வந்திருக்கிறதா? அது குறித்து அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, புகார்கள் வந்தது உண்டு. எல்லாத் தீங்குகளும் அகற்றப்படவேண்டும் என்பதற்காகத்தான் ஒரேயடியாக குதிரைப் பந்தயத்தையே ஒழித்துவிட வேண்டுமென்று அரசு கருதி ஏற்கனவே ஒரு சட்டம் கொண்டு வந்தது. இடையிலே அதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டுவிட்டன.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயத்தை 1975 ஆம் ஆண்டு ஒழித்து, அரசு அவ்வாறு ஒழித்தது சரி என்று உயர்நீதிமன்றமும் தீர்ப்பு வழங்கி, பிறகு அதற்கு மேல்முறையீடு செய்தபோது குதிரைப் பந்தயத்தை ஒழித்தது சரியா, தவறா என்று அறிவதற்காக ஒரு குழுவையே உச்சநீதிமன்றம் நியமித்து இருக்கிறது. இதை நான் ஏற்கனவே விவாதத்தில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறேன். உச்ச நீதிமன்றத்தில் இன்றைக்குத் தனிப்பட்ட நபர்கள் தொடுத்த வழக்கு நிலுவையில் இருக்கிறது. 1975 ஆம் ஆண்டு பப்ளிக் இன்டரஸ்ட்டில் அதை ஒழித்தது. இன்றைக்கு There is a clash of private and public interest. நாம் ஒரு சட்டத்தை நிறைவேற்றி அங்கே அனுப்பியிருக்கிறோம், அதாவது குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்று. நம்முடைய சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில் அந்த intention of the legislature-ஐ நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாங்க வழக்கறிஞர் மூலமாக உடனே எடுத்துச் சொல்லி தனிப்பட்ட அந்த வழக்கை ரத்து செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தெரிந்து கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

[சனவரி 1990 22

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தின் படி அரசாங்கம் வழக்கறிஞர்களுக்கு யோசனைகள் கூற நல்ல முறையில் விரிவாக விவாதித்து முடிவுகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அவர்கள் இந்த வழக்கைப் பற்றிச் சொன்னார்கள். 6–5–1986 அன்று—குதிரைப் பந்தயத்தினுடைய சங்கம் இருந்தது—அந்தச் சங்கமே அந்தச் சட்டத்திற்கு எதிராகத் தாக்கல் செய்திருந்த அப்பீலைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டது.

[9-05 மணி]

ஆனால் என்ன இடைஞ்சல் வந்தது என்றால், அதை அவர்கள் திரும்பப் பெறுவதற்கு, சில நாட்களுக்கு முன்பு, அன்றைக்கு இருந்த அரசு அங்கே குதிரைப் பந்தயச் சங்கத்திற்குச் சொந்த மான கட்டடங்களையெல்லாம் கையகப்படுத்த ஒரு உத்தரவு பிறப்பித்தது. எனவே அதை எதிர்த்து குதிரைப் பந்தய சங்கம் நீதிமன்றத்திற்குச் சென்றது. எனவேதான் சிக்கல் ஏற்பட்டு விட்டது. அதன் காரணமாகத்தான் இன்றைக்கு குதிரைப் பந்தயம் தப்பித்துப் பிழைத்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, குதிரைப் பந்தயம் சார்பிலே, சூதாட்டம் நடக்கிறது என்று அதைப்பற்றி அக்கறையாகப் பேசுகிறோம். அது போலத்தான் சீட்டுக் கச்சேரி. எல்லா நகரங்களிலேயும், கிளப் கிளப் என்ற வகையிலே, சீட்டுக் கச்சேரி நடத்தி அந்த மாதிரி சூதாட்டங்களை நிறைய நடத்தி பணங்கள் பறி போகின் றன. அந்த மாதிரி சூதாட்டங்களைக் கட்டுப்படுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்கமுடியுமா என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீட்டுக் கச்சேரியில் கட்சி பேதமில்லாமல், மதபேதமில்லாமல், நாமம் தரித்தவர்களும், விபூதி அணிந்தவர் களும் எல்லாம் கூட உட்கார்ந்து ஆடுகின்ற வேடிக்கையை நான் பல இடங்களில் பார்த்திருக்கிறேன். (சிரிப்பு.)

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரியிலே ஊட்டியில் வெள்ளைக்காரன் காலத்தி லேயிருந்து குதிரைப் பந்தயம் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது. ஒரு சுற்றுலா இடமாக நீலகிரி காட்சி அளிக்கிறது. இந்த குதிரைப் பந்தயம் நடைபெறுகின்ற காரணத்தினாலே தான், ஊட்டியிலே பல்வேறுவிதமான பணப்புழக்கம் ஏற்பட்டு இருக்கிறது. அங்கே இருக்கக்கூடியவர்கள், ஊட்டியிலே இருக் கின்ற பல பேர்களும் பேசுகின்றபோது, குதிரைப் பந்தயம் நடந்தால்தான் எங்களுக்கு நல்லது என்று பேசப்படுகின்ற பல

1990 சனவரி 22]

ருடைய கருத்து ஊட்டியில் இருக்கின்றது. இதைச் சொல்கின்ற காரணத்தால் நான் குதிரைப் பந்தயத்திற்கு ஆதரவாளன் என்று கருதிவிடக் கூடாது. ஆக அரசு குதிரைப் பந்தயத்தை முற்றிலுமாக ஒழித்தாலும், ஊட்டி ஒரு டூரிஸ்ட் ஸ்பாட் ஆக விளங்குகிறது என்பதால் அதைத் தொடர்ந்து நடத்துவதற்கான பரிசீலனையை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகைக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளைக் கவர்வது குதிரைப் பந்தயம் மாத்திரம்தான் என்று கூற முடியாது. அது ஒழிக்கப்பட்டால் அதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்து சுற்றுலாப்பயணிகளைக் கவருகின்ற வகையிலே எதுவும் செய்ய முடியும். வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து குதிரைப் பந்தயம் இருக்கிறது என்று வாதாடுவது சரியல்ல. வெள்ளைக்காரன் காலமே போய்விட்டது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குதிரைப் பந்தயம் பொறுத்தவரையில் அப்பாவி ஏழை மக்கள் பணம் கட்டுகின்றவர்களை அந்தக் குதிரைப் பந்தயத்திற்குப் பின்னாலே இருக்கின்றவர்கள், குதிரையை ஓட்டுகின்றவர்கள் எல்லாம் சேர்ந்துகொண்டு பெருமளவில் மோசடி செய்வதாகத் தகவல் வந்துகொண்டிருக்கிறதே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முழுமையாக ஒழிக்கவேண்டும் என்று சொன்னால், அதை வரவேற்கிறேன். இருந்தாலும் அது வரைக்குமாவது பொது மக்களை ஏமாற்றாதவாறு நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா ? அதன் பின்னால் சில பெரிய மனிதர்கள்கூட இருப்பதாகச் சொல்கிறார்களே, அதெல்லாம் அரசுக்குத் தெரியுமா என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏமாறுவோம் என்று தெரிந்தும் ஏழையெளிய மக்கள் அங்கே சென்றுகொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய அப்பாவித்தனத்தை அவர்களுக்கு உணர்த்த முடியாமல் அரசும் சங்கடத்திலே இருக்கிறது. ஆகவேதான் அந்தப் பந்தய முறையையே ஒழித்துவிடலாம் என்று அரசு முடிவெடுத்தது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயம் மூலமாக தமிழக அரசுக்கு வருமானம் வருகிறதா ? அது ஆண்டுக்கு எவ்வளவு என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு விற்பனை ஆகின்ற டிக்கட்டில் 20 சதவிகிதம் அரசுக்கு வரியாகத் தரப்படுகிறது. அந்த வகையிலே 1987–88 ஆம் ஆண்டில் ரூ. 3,58,00,000, 1988–89-ல் ரூ. 3,71,00,000—1989–90-ல் ரூ. 3,98,00,000 எதிர்பார்க்கப் படுகிறது.

[1990 சனவரி 22

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு ஆளுநர் உரையின் போது நான் முதலமைச்சர் அவர்களிடத்திலே கேட்டேன். சென்னையிலே நடைபெறுகின்ற குதிரைப் பந்தயத்திலே, பல குதிரைப் பந்தயங்களிலே எந்தக் குதிரை வெற்றி பெறவேண்டும் என்று ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டு அந்தக்குதிரைகள்தான் வெற்றி பெறுவதன் மூலமாக ஏழையெளிய மக்கள் கசக்கிப் பிழியப்படுகிறார்கள். எனவே அதை மாற்றுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்று கேட்டிருந்தேன். நிச்சயமாக உங்கள் ஒத்துழைப்போடு அந்த உத்தரவைப் போடச் செய்வேன், 20 நாட்கள் தானே ஆயிற்று என்று அன்றைய தினம் சொன்னார்கள். இப்போது 7 ஆண்டு காலமாகிவிட்டது. அதே போல உதகையிலே நடைபெறுகின்ற 'ஆப் கோர்ஸ் பெட்டிங்' ஆண்டு முழுவதும் அங்கே இருக்கின்ற ஏழையெளிய மக்கள் 'ஆப் கோர்ஸ் பெட்டிங்லே' கசக்கிப் பிழியப்படுகின்றார்கள். பல குடும்பங்களிலே சின்னாபின்னாமாக பலபேர்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றார்கள். எனவே இந்தக் கொடுமைகளை முழுவதுமாக விரைந்து ஒழித்துக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[மணி 9.10]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தொடக்கம் முதல் அளித்து வருகிற ஒவ்வொரு பதில்களிலும் அங்கு சில்லரையாகவோ மொத்தமாகவோ நடந்து வருகிற தீமைகளை ஒழிப்பதற்காகத் தான் குதிரைப் பந்தய ஒழிப்பு என்ற சட்டத்தை 1974 ஆம் ஆண்டு இந்த அரசு கொண்டு வந்தது. இப்போதும் கூட உச்ச நீதிமன்றம் வரை இவ்வழக்கு நடைபெற்று இன்னமும் வழக்கு முடிவுறாத சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வுகளை எல்லாம் கவனத்திலே வைத்து இந்த வழக்குகள் விரைவிலே நடைபெற்று விரைவிலே தீர்ப்புகள் வழங்குவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மாத்திரம் நான் விளக்கமாக, விடையாக அளிக்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயம், சூதாட்டம் என்பதால்தான் ஒழிக்கப்படுகிறது என்று கருதுகிறேன். அப்படியானால் லாட்டரிச் சீட்டும் சூதாட்டம்தானே. அதை ஒழிக்க நம்முடைய அரசு முன்வருமா ? குதிரைப் பந்தயத்தை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் பார்த்திருக்கிறாரா ? (சிரிப்பு) அதிலே சவாரி செய்திருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயத்தில் நான் சவாரி செய்யவில்லை. (சிரிப்பு). அவர்கள் லாட்டரிச் சீட்டு

1990 சனவரி 22]

பற்றிக் கேட்டார்கள். ஏற்கனவே, முதலிலே மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்ட பிறகு அறவே ரத்து செய்யப்பட்டது கழக ஆட்சியிலே. அதைத் தொடர்ந்து ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் மூதறிஞர் ராஜாஜியினுடைய நினைவகத்தைத் திறந்து வைக்க வந்தபோது அப்போது அவர்கள் மேடையிலே என்னிடத்தில் ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். அப்போது பரிசுச் சீட்டுகள் ஒழிக்கப்பட வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிட்டீர்கள், பரிசுச் சீட்டையும் ஒழிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்போதே அதற்கு வாக்குறுதி அளிக்கப்பட்டு இந்த மாநிலத்தில் பரிசுச் சீட்டுகள் ஒழிக்கப்பட்டன. ஆனால் மீண்டும் பரிசுச் சீட்டுகள் கடந்த கால ஆட்சியிலே அறிமுகப்படுத்தப்பட்டு இப்போதும் நடைபெற்று வருகிறது. இப்போது இந்தியாவிலேயே பரிசுச் சீட்டு முறை வளர்ந்திருக்கிற நிலையில் நம்முடைய மாநிலத்தில் மாத்திரம் ஒழிக்கப்படுவது என்பது இயலாத காரியம். எனவே தான் தனியார் பரிசுச் சீட்டுகளின் மூலம் நடைபெறுகின்ற அநியாயங்களைத் தடுத்து நிறுத்துகின்ற வகையில் தனியார் பரிசுச் சீட்டுகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நகரங்களில், குதிரைப் பந்தயத்தையொட்டி தமிழ்நாட்டிலே, பல இடங்களிலே (Inter venue betting) என்கிற பெயரில் சூதாட்டம் நடைபெறுகிறதே, அதைத் தடுக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றுக்கும் ஒரே நடவடிக்கை இந்தக் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதுதான்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் பதில் சொல்லும்போது 1986ஆம் ஆண்டு குதிரைப் பந்தய சங்கத்தினர் கொடுத்த வழக்கினை வாபஸ் பெற்று விட்டார்கள், திரும்பப் பெற்றுவிட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படியானால் நாம் இங்கே குதிரைப் பந்தயத்தை ஒழித்தது சரி என்று தீர்ப்பு நிரந்தரமாக இருக்கிறது என்றுதானே பொருள். அப்படி இருக்கும்போது தனிப்பட்ட நபர்கள் தங்களுடைய சொத்துக்களை, ஆர்ட்டிகிள் 31-சி-யின்கீழ் மீட்க வழக்கு தொடர்ந்திருக்கிறார்களே, எங்களுடைய சொத்துக்களை எடுக்கக்கூடாது என்று, தங்கள் (Private interest and public interest clash) ஆகிறது என்று சொல்லி வழக்குத் தொடர்ந்திருக்கிறார்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் அரசாங்க வழக்கறிஞர்களிடத்தில் சொல்லி, உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அந்தக் குழுவை உடனே கலைக்க வேண்டும், தீர்ப்பு வழங்க வேண்டும் என்று அரசாங்க வழக்கறிஞர் மூலமாக உடனே கேட்பார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1990 சனவரி 22

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் நான் சொல்ல வேண்டாமென்று இருந்தேன். மாண்புமிகு நண்பர் திரு. பி.எச். பாண்டியன் அவர்கள் என்னை சொல்ல வைத்துவிட்டார்கள். குதிரைப் பந்தய சங்கத்தினர் தி.மு.க. அரசு நிறைவேற்றிய சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று இடைக் காலத் தடை பெற்றார்கள். அப்படி அவர்கள் தடை பெற்றது 1975 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள். அதற்குப் பிறகு 2 மாத காலம்தான் கழக ஆட்சி இருந்தது. பின்பு கலைக்கப்பட்டு விட்டது. அந்தத் தடையை நீக்க வேண்டுமென்ற முயற்சியை அடுத்த கவர்னர் ஆட்சியில் யாரும் எடுத்துக்கொள்ளவில்லை. எடுத்துக்கொள்ளாதது மாத்திரமல்ல, தடை விதிக்கப்பட்ட உடன், நவம்பர் மாதம் தடை விதிக்கப்பட்ட உடன், கழக ஆட்சியில் 12–12–1975 அன்று ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்கப் பட்டது. அந்த அவசரச் சட்டத்தினுடைய பெயர் Abolition of Bookmakers Ordinance என்பதாகும். குதிரைப் பந்தயம் நடைபெற்றாலும் கூட, குதிரைகள்தான் ஓட முடியும். பெரிய பெரிய பந்தயங்கள், அதிலே லட்சக்கணக்கிலே பணத் தைக் கட்டுகிற முறைகளை எல்லாம் ஒழிக்க வேண்டும் என்பதற் காக, ஸ்டே கொடுத்துவிட்ட காரணத்தால் அடுத்த ஒரு முயற்சியாக செய்து பார்க்கலாம் என்று இந்த அரசின் சார்பிலே 12–12–1975-லே ஓர் ஆர்டினன்ஸ் போடப்பட்டு Abolition of Bookmakers Ordinance என்கிற பெயரில் அது பிறப்பிக்கப் பட்டது. பிறகு ஒரு மாதத்தில் ஆட்சி கலைக்கப்பட்டது.

மணி 9–15

பிறகு வந்த கவர்னர் ஆட்சியில் அந்த அவசரச் சட்டத்தைச் சட்டம் ஆக்காமலே விட்டுவிட்டார்கள். இது குதிரைப் பந்தயச் சொந்தக்காரர்களுக்கு ரொம்ப அனுகூலமாகச் செய்யப்பட்ட காரியம் என்று நான் சொல்லமாட்டேன், அனுகூலமாக முடிந்துவிட்டது ; அவசரச் சட்டத்தை சட்டம் ஆக்காத காரணத்தால் அது குதிரைப் பந்தயச் சொந்தக்காரர்களுக்கு அனுகூலமாக முடிந்துவிட்டது. அதற்குப் பிறகு அந்த வழக்கில் 1985 ஆம் ஆண்டில் அவர்களாகவே, குதிரைப் பந்தயச் சங்கத்தாரே வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டார்கள். பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டது போல அது அரசுக்குச் சாதகமான ஒரு காரியம். அதில் அரசு என்ன செய்தது என் றால் ஒரு குறுக்குச் சால் ஓட்டிவிட்டது. திடீரென்று அவர்கள் வாபஸ் வாங்குவதற்கு 5, 6 அல்லது 10 நாட்களுக்கு முன்பும் அவர்களுடைய நிலங்களை, கட்டிடங்களைக் கையகப்படுத்தும் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அவர்களுக்கு அதுதான் வழி என்று அவர்கள் போட்ட அந்த அப்பீலைத் திரும்பப் பெற்றுக்கொண்டு விட்டு, இது ரொம்ப ஸ்ட்ராங் கேஸாக ஜெயிப்பதற்கு இருக்கிறது என்பதற்காக அந்தச் சொத்துக்களை அரசு எடுத்துக்கொள்ளக் கூடாது என்று அதன் மீது அப்பீல் போனது. அப்படி அப்பீல் போட்டவுடன் சுப்ரீம் கோர்ட்

1990 சனவரி 22]

அதைப் பற்றிக் கருத்துத் தெரிவிப்பதற்கு முன்பு ஒரு கமிட்டி உருவாக்கப்பட்டு, அந்தக் கமிட்டியினுடைய கருத்துக்கள் கேட்கப்பட்டன. மால்கம் ஆதிசேஷய்யா என்று கருதுகிறேன், அவர்களுடைய தலைமையிலே ஒரு கமிட்டி போடப்பட்டு அந்தக் கமிட்டியிடமிருந்து கருத்துக்கள் கோரப்பட்டன. கமிட்டி ரிப்போர்ட் தருகிற வரையில் வழக்கைத் தள்ளி வைக்க வேண்டுமென்று குதிரைப் பந்தயச் சங்கத்தினர் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் கேட்டுக்கொள்ளப்பட்டு அரசும் அதற்கு மறுப்புத் தெரிவிக்காத காரணத்தால் கமிட்டி ரிபோர்ட் வருகிற வரையிலே தீர்ப்புத் தள்ளி வைக்கப்படலாம் என்று வழக்குத் தள்ளி வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு கமிட்டி ரிப்போர்ட் கொடுத்துவிட்டது. கமிட்டி ரிப்போர்ட் கொடுத்துவிட்ட பிறகு அரசு என்ன செய்தது என்றால் அன்றைக்கு இருந்த அரசின் தலைவர் அவர்கள் என்ன எழுதினார்கள் என்றால், கோர்ட் தீர்ப்பு வருகிற வரையில் கமிட்டி ரிப்போர்ட்டைப் பற்றி அபிப்பிராயம் சொல்ல முடியாது என்று. ஆக என்ன ஆயிற்று என்றால் நெய்க்குத் தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா என்பதைப் போல் ஒரு இருதலைக் கொள்ளி எறும்பு போல நிலைமை ஆகிவிட்ட காரணத்தால் வேறு வழி இல்லாத சூழ்நிலையில் வழக்கு இன்றைக்கு நீடித்துக் கொண்டிருக்கிறது. நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல இந்த வழக்கைத் துரிதப்படுத்தவும், அரசாங்கத்தினுடைய கொள்கை குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது நமது கொள்கை — இந்தக் கொள்கை வெற்றி பெறும் வரையில் உச்ச நீதிமன்றத்தில் அரசின் சார்பில் வழக்காடவும் வேண்டுமென்று நான் திட்டவட்டமாகக் குறிப்பிட்ட நிலையில் இந்த வழக்கை அரசு நடத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வழக்கறிஞர்களுக்கு சேம்பர் கட்டும் திட்டம்

*1174—திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்களுக்கு சேம்பர் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1990 சனவரி 22]

அதைப் பற்றிக் கருத்துத் தெரிவிப்பதற்கு முன்பு ஒரு கமிட்டி உருவாக்கப்பட்டு, அந்தக் கமிட்டியினுடைய கருத்துக்கள் கேட்கப்பட்டன. மால்கம் ஆதிசேஷய்யா என்று கருதுகிறேன், அவர்களுடைய தலைமையிலே ஒரு கமிட்டி போடப்பட்டு அந்தக் கமிட்டியிடமிருந்து கருத்துக்கள் கோரப்பட்டன. கமிட்டி ரிப்போர்ட் தருகிற வரையில் வழக்கைத் தள்ளி வைக்க வேண்டுமென்று குதிரைப் பந்தயச் சங்கத்தினர் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் கேட்டுக்கொள்ளப்பட்டு அரசும் அதற்கு மறுப்புத் தெரிவிக்காத காரணத்தால் கமிட்டி ரிபோர்ட் வருகிற வரையிலே தீர்ப்புத் தள்ளி வைக்கப்படலாம் என்று வழக்குத் தள்ளி வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு கமிட்டி ரிப்போர்ட் கொடுத்துவிட்டது. கமிட்டி ரிப்போர்ட் கொடுத்துவிட்ட பிறகு அரசு என்ன செய்தது என்றால் அன்றைக்கு இருந்த அரசின் தலைவர் அவர்கள் என்ன எழுதினார்கள் என்றால், கோர்ட் தீர்ப்பு வருகிற வரையில் கமிட்டி ரிப்போர்ட்டைப் பற்றி அபிப்பிராயம் சொல்ல முடியாது என்று. ஆக என்ன ஆயிற்று என்றால் நெய்க்குத் தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா என்பதைப் போல் ஒரு இருதலைக் கொள்ளி எறும்பு போல நிலைமை ஆகிவிட்ட காரணத்தால் வேறு வழி இல்லாத சூழ்நிலையில் வழக்கு இன்றைக்கு நீடித்துக் கொண்டிருக்கிறது. நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல இந்த வழக்கைத் துரிதப்படுத்தவும், அரசாங்கத்தினுடைய கொள்கை குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது நமது கொள்கை — இந்தக் கொள்கை வெற்றி பெறும் வரையில் உச்ச நீதிமன்றத்தில் அரசின் சார்பில் வழக்காடவும் வேண்டுமென்று நான் திட்டவட்டமாகக் குறிப்பிட்ட நிலையில் இந்த வழக்கை அரசு நடத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வழக்கறிஞர்களுக்கு சேம்பர் கட்டும் திட்டம்

*1174—திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்களுக்கு சேம்பர் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நீதிமன்றத்திற்கு வழக்கறிஞர்கள் சேம்பர் இல்லாததால் அந்தப் பகுதியில் இருக்கிற வழக்கறிஞர்கள் மரத்தடியிலே நின்றுதான் அவர்கள் வழக்கு சம்பந்தமாகப் பேச வேண்டிய ஒரு அவல நிலை இருக்கிறது. அதனால் அந்த நிலையைப் போக்க இந்த ஆண்டு அரசு கட்டிடம் கட்டித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் சேம்பர் அமைப்பதற்கான கேள்வி ஆகும். தமிழ்நாட்டில் இப்போது பல நீதிமன்றங்களுக்குக் கட்டிடங்கள் இல்லை. அந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்குக் கூட ஏராளமான பணம் செலவாகும். வழக்கறிஞர்கள் தங்கள் அலுவலகத்திலேயே வழக்குகளைப் பரிசீலித்து, பிறகு வழக்கு மன்றத்திற்கு வருகிறார்கள். இன்னும் பல மாவட்டங்களில் குறிப்பாக மதுரையிலும் கூட அப்படி ஒரு கோரிக்கை இருக்கிறது. இதையெல்லாம் இப்போது பரிசீலிக்கும் வாய்ப்பு இல்லை. முதலாவதாக நீதிமன்றக் கட்டிடங்களை கட்டி முடித்துவிட்டு பிறகு இதைப் பரிசீலிக்கலாம் என்று அரசு கருதுகிறது.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நீதிமன்றம் புதிதாகக் கட்டப்பட்டது. முழுமையாகக் கட்டிடம் கட்டும் பணி முடியாமல் இருக்கிறது என்பதை அரசு அறியுமா? முழுமையாகக் கட்டிடத்தைக் கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா? புதிதாகக் கட்டப்பட்ட அந்தக் கட்டிடம் பழுதடைந்து இருக்கிறது. அதைப் பழுது பார்க்கும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடம் பழுதடைந்து இருப்பதாகக் குறிப்பு ஒன்றும் அரசாங்கத்திடம் இல்லை. அப்படி ஏதாவது குறிப்பு இருக்குமானால் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நீதிமன்றத்திலே வெயிலின் கொடுமை தாங்க முடியவில்லை. வக்கீலைப் பார்க்க வேண்டுமென்று பார்ட்டிகள் வந்தால், அதாவது கேஸ் நடத்துபவர்கள் வந்தால் கூட வெயிலில் நின்று மிகவும் கஷ்டப்படும் நிலைமை இருக்கிறது. முதலில் இந்த சேம்பர் கட்ட முடியா விட்டாலும் ஷெட்டுகளையாவது, அதாவது பஸ் ஷெட் போடுகிறோமே அப்படிப் போட்டாலும் கூட பரவாயில்லை. தற்போது வக்கீல்களிடம் பேச முடியாத நிலைமை இருக்கிறது. பல ஆண்டுக்

1990 சனவரி 22]

காலமாக நிலக்கோட்டையில் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் வேண்டுமென்று பலமுறை கேட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், சட்ட அமைச்சர் அவர்களிடமும் 1990–91 ஆம் ஆண்டில் (மணியடிக்கப் பெற்றது).

மணி 9.20

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; தொடர்புடைய கேள்விகளை மட்டும் தான் நான் அனுமதிப்பது வழக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு மன்றங்களுக்கு வருகிற கட்சிக்காரர்கள் வழக்கறிஞர்களை வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ சந்தித்துப் பேசிவிட்டு, பிறகு தான் வழக்கு மன்றத்திற்கு வருகிறார்கள். எனவே வழக்கு மன்றத்திற்கு வந்த பிறகு கட்சிக்காரர்களைச் சந்திப்பதும், சாட்சிகளை விசாரிப்பதும் இல்லை என்று தான் நான் கருதுகிறேன். ஆகவே அதற்கு இடையூறு ஏற்படக் காரணம் இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற கருத்து, வழக்கு மன்றங்களிலே அங்கே வருகிற கட்சிக்காரர்களுக்கு ஷெட் அமைக்க வேண்டும் என்பதாகும். இப்படிப்பட்ட பிரச்சினை பல்வேறு நகரங்களிலே இருக்கிறது. பல நகரங்களிலே ஏற்கெனவே வழக்கு மன்றங்களுக்கே கட்டிடம் இல்லை. எனவே அவைகளை எல்லாம் முடித்துக் கொண்டு பிறகு இவைகளைப் பற்றி பரிசீலிக்கலாம் என்று அரசு கருதுகிறது.

திரு. கே. ரமணி ; மாண்புமிகு தலைவர் அவர்களே, கோவையிலே இருக்கிற செஷன்ஸ் கோர்ட் வளாகத்திலே அந்தக் கோர்ட்டுக்கு வேண்டிய கட்டிடங்கள் சில ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டு, ஓரளவுக்கு கட்டிட வசதியோடு இருக்கிறது. ஆனால் அங்கே இருக்கிற நூற்றுக் கணக்கான வழக்கறிஞர்கள் உட்கார்ந்து செயல்படுவதற்கு, கோர்ட்டுக்குள்ளேயே வந்த பிறகு செயல்படுவதற்கு—அவர்கள் வீட்டில் தயாரித்துக் கொண்டு வருவதைச் சொல்லவில்லை—அதற்குத் தேவையான இட வசதி இல்லை என்று என்னிடத்திலே அவர்கள் சொல்லி நானும் முன்பிருந்த அரசாங்கத்திற்கு இந்த விஷயங்களைப் பல முறை சொல்லியும் இன்று வரையிலும் அந்தக் காரியம் நடைபெறவில்லை. ஆகவே கட்டிடங்கள் இல்லாத நீதிமன்றங்களுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பது முக்கியமான விஷயம் தான் என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அதோடு இணைந்து, தவிர்க்க முடியாத ஒரு நடவடிக்கை தான் இந்த வழக்கறிஞர்களுக்கு குறைந்த பட்சத் தேவையான இதை பூர்த்தி செய்யும் வகையில் கட்டிடம் கட்டித் தருவதாகும். அந்த வளாகத்திலேயே அதற்கு இடமும் இருக்கிறது. அங்கே வழக்கறிஞர்களுக்குத் தேவையான கட்டிடத்தைக் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா ; மாண்புமிகு தலைவர் அவர்களே, கோவை மாவட்ட வழக்கறிஞர்கள் மன்றத்தை நானே பார்த்திருக்கிறேன். அங்கே வழக்கறிஞர்கள் வந்து ஓய்வு எடுத்துக் கொள்வதற்கும், கட்சிக்காரர்களைச் சந்திப்பதற்கும் வசதியான பார் ரூம் இருக்கிறது. அந்த பார் ரூம் விசாலமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கேட்பது வழக்கறிஞர்களுக்குத் தனியான சேம்பர் கட்டிக் கொடுக்கிற பிரச்சினையாகும். இது அவ்வளவு சீக்கிரம் முடிகிற பிரச்சினையல்ல. நிதி அதிகமாகத் தேவை. நிதிப் பற்றாக்குறை பொதுவாக இருப்பதால் இப்போது இதைக் கவனிக்க இயலவில்லை.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டே மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களிடம் விருதுநகர் மாவட்டத் தலைமை நீதிமன்றம் அமைப்பது பற்றி ஒரு கேளவி எழுப்பியபோது அரசாங்கத்தினுடைய கொள்கை ரீதியாக, அந்தந்த மாவட்டத் தலைநகரங்களிலேயே மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று அவர்கள் பதில் உரை கூறினார்கள். கட்டிடம் கட்டிக் கொடுக்காவிட்டாலும் நாங்கள் வாடகைக்கு அங்கே கட்டிடம் ஏற்பாடு செய்து தருகிறோம் : அடுத்துள்ள 5 ஆண்டுகளுக்குப் புதிய கட்டிடம் எதையும் கேட்க மாட்டோம் என்ற உறுதி மொழியைக் கண்டிப்பாகக் கூறுகிறோம் என்று சொன்னேன். கடந்த கூட்டத்தில் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கொள்கை ரீதியாக இதை ஏற்று அரசின் முடிவாக இதை அறிவித்தார்கள். எனவே இந்த ஓராண்டு காலத்தில் விருதுநகரில் மாவட்டத் தலைமை நீதிமன்றம் அமைப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வி. எனவே தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துச் சொல்ல இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாவிட்டால் நான் தொடக்கத்திலேயே உட்கார வைத்து விட வேண்டியிருக்கும். வருத்தப்பட மாட்டீர்கள் என்று கருதுகிறேன்.

திரு. ந. சௌந்திரபாண்டியன் ; பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால் போதுமான இடவசதி இல்லாமல் இருக்கிறது. எனவே அங்கே அவர்களுக்கு சேம்பர் கட்டிக் கொடுப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என்று..... (மணியடிக்கப்பெற்றது).

1990 சனவரி 22]

திரு. டி. சி. விஜயேந்திரையா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில்...... (மணியடிக்கப்பெற்றது).

மணி 9.25

திரு மா. சுந்தரதாஸ் ; பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் எத்தனை நீதிமன்றங்களிலே பார் அசோசியேஷன் பில்டிங் கூட இல்லாமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? நான் பிராக்டிஸ் செய்கின்ற குழித்துறை நீதிமன்றத்திலே பார் அசோசியேஷன் இல்லை. சேம்பர் பற்றிக் கேள்வி இருக்கிறது. பார் அசோசியேஷன் இருப்பதற்கு இட வசதி செய்வதற்கு, அதற்கு நிதி ஆதாரம் இல்லை என்று சொன்னால் வாடகைக்காவது பார் அசோசியேஷன் பில்டிங் எடுத்துக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா ; தலைவரவர்களே, என்னிடத்திலே இப்பொழுது விவரம் இல்லை. குழித்துறையில் இருக்கின்ற நிலைமை பற்றி எனக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அங்கே பிராக்டிஸ் செய்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஒவ்வொரு நீதிமன்றத்திலும் ஒரு பார் ரூம் இருக்கும். பார் அசோசியேஷன் இருக்கத்தான் செய்யும். எப்படி இல்லை என்று தெரியவில்லை. ஒரு வேளை அதை ஏற்பாடு செய்யவில்லையோ என்னவோ தெரியவில்லை. அது பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பத்து நாட்களாக வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தைப் புறக்கணித்தும், உண்ணா நோன்பு இருந்தும் தங்களுடைய......... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு, இடைச்செருகல் வேண்டாம். இதை ஏற்கெனவே கொடுத்திருக்கிறீர்கள், நான் மறுத்திருக்கிறேன்.

சென்னை உயர்நீதி மன்றத்தின் பெயர் மாற்றம்.

*4934 திரு. துரை சந்திரசேகரன்,
பேராசிரியர் கே. பொன்னுசாமி,
திரு. கே. அர்ஜுனன்

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை உயர்நீதி மன்றத்தினை தமிழ்நாடு உயர்நீதிமன்றம் எனப் பெயர் மாற்றம் செய்ய மாநில அரசு மைய அரசுக்குக் கோரிக்கை அனுப்பி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1990 சனவரி 22]

திரு. டி. சி. விஜயேந்திரையா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில்..... (மணியடிக்கப்பெற்றது).

மணி 9.25

திரு மா. சுந்தரதாஸ் ; பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் எத்தனை நீதிமன்றங்களிலே பார் அசோசியேஷன் பில்டிங் கூட இல்லாமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? நான் பிராக்டிஸ் செய்கின்ற குழித்துறை நீதிமன்றத்திலே பார் அசோசியேஷன் இல்லை. சேம்பர் பற்றிக் கேள்வி இருக்கிறது. பார் அசோசியேஷன் இருப்பதற்கு இட வசதி செய்வதற்கு, அதற்கு நிதி ஆதாரம் இல்லை என்று சொன்னால் வாடகைக்காவது பார் அசோசியேஷன் பில்டிங் எடுத்துக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா ; தலைவரவர்களே, என்னிடத்திலே இப்பொழுது விவரம் இல்லை. குழித்துறையில் இருக்கின்ற நிலைமை பற்றி எனக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அங்கே பிராக்டிஸ் செய்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஒவ்வொரு நீதிமன்றத்திலும் ஒரு பார் ரூம் இருக்கும். பார் அசோசியேஷன் இருக்கத்தான் செய்யும். எப்படி இல்லை என்று தெரியவில்லை. ஒரு வேளை அதை ஏற்பாடு செய்யவில்லையோ என்னவோ தெரியவில்லை. அது பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பத்து நாட்களாக வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தைப் புறக்கணித்தும், உண்ணா நோன்பு இருந்தும் தங்களுடைய......... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு, இடைச் செருகல் வேண்டாம். இதை ஏற்கெனவே கொடுத்திருக்கிறீர்கள், நான் மறுத்திருக்கிறேன்.

சென்னை உயர்நீதி மன்றத்தின் பெயர் மாற்றம்.

*4934 திரு. துரை சந்திரசேகரன்,
பேராசிரியர் கே. பொன்னுசாமி,
திரு. கே. அர்ஜுனன்

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை உயர்நீதி மன்றத்தினை தமிழ்நாடு உயர் நீதிமன்றம் எனப் பெயர் மாற்றம் செய்ய மாநில அரசு மைய அரசுக்குக் கோரிக்கை அனுப்பி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) :

ஆகஸ்டு 1983-ல் சென்னை உயர்நீதி மன்றத்தினை தமிழ் நாடு உயர்நீதி மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்ய, தக்க சட்டமியற்றும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாநில அரசு மைய அரசை கேட்டுக் கொண்டது. சென்னை உயர்நீதிமன்றம் இப்பெயர் மாற்றத்தை விரும்பாததால் உயர்நீதிமன்றத்தின் கருத்தை மீண்டும் அறிந்து தெரிவிக்குமாறு மைய அரசு கேட்டுக் கொண்டது. அதன்படி சென்னை உயர் நீதிமன்றத்தின்கருத்து கோரப்பட்டது. மார்ச் 1988-ல், பெயர் மாற்றம் செய்வதற்கான காரணம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை என்று உயர் நீதிமன்றம் திட்டவட்டமாக அறிவித்து விட்டது. எனவே சென்னை உயர்நீதிமன்றம் என்றே தொடர்ந்து இருக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணாவின் தலைமையில் அமைந்த அரசு சென்னை மாகாணத்தைத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்ததைப் போல தமிழ் நாட்டிற்குத் தலைமை நீதிமன்றமாக இருக்கின்ற உயர்நீதிமன்றத்தைக் கண்டிப்பாகத் தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று மாற்றுவதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் செய்ய முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, பம்பாய், கல்கத்தா, அலகா பாத், பாட்னா ஆகிய நீதிமன்றங்களில் அந்தத் தலைநகரத்திலே இருக்கக் கூடிய பெயரிலேயே இயங்குகின்றன. குறிப்பாக, சென்னை, கல்கத்தா—வங்காளம் ஆகிய நீதிமன்றங்கள்—உயர் நீதிமன்றங்கள் 1861 - வது ஆண்டு சார்ட்டர் ஆக்டபடி அமைக்கப்பட்டது. 1935 ஆம் ஆண்டுச் சட்டத்தில் 5 நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து இன்றைக்கும் அந்த நீதிமன்றங்கள்—சென்னை, பம்பாய், கல்கத்தா, அலகாபாத், பாட்னா ஆகிய ஹைகோர்ட்டுகள் அந்தப் பெயராலேயே இப்பொழுதும் இருந்து வருகின்றன. மேலும், இப்பொழுது சென்னை உயர்நீதிமன்றம் தமிழ் மாநிலத்திற்கும், பாண்டிச்சேரிக்கும் சேர்த்து இயங்குகிறது. எனவே, இதைப் பற்றி கருத்து அறிவிக்கும்படி கேட்டபொழுது உயர்நீதிமன்றம் 1983-ம் ஆண்டிலேயும், 1988-ம் ஆண்டிலேயும் ஏற்கெனவே இருக்கின்ற பெயரிலேயே இருக்கவேண்டுமென்று செய் திருக்கிறார்கள். எனவேதான் இப்பொழுது சென்னை உயர்நீதிமன்றம், Highcourt of Judicature Madras என்றுதான் சொல்லப்படுகிறது. இந்தக் கருத்தை மத்திய அரசுக்கு நாம் தெரிவித்தும் கூட—மத்திய அரசுதான் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். சட்டத் திருத்தத்தைக் கோரிய பொழுது

1990 சனவரி 22]

நீதிமன்றத்தினுடைய கருத்தைக் கேட்டோம்.—உயர்நீதிமன்றம் ஒப்புக் கொள்ளாத காரணத்தினாலே, இப்பொழுது அந்தக் கருத்து நிறைவேறுவதற்கான வாய்ப்பு இல்லை.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை இராஜதானி, சென்னை மாகாணம என்றெல்லாம் இருந்ததைத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் போல, இந்த மன்றத்தில் இந்த நீதிமன்றத்தின் பெயரை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை தீர்மான வடிவிலே எடுக்கப்பட செயற் குறிப்பு அரசிடத்திலே இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இராஜ்யம் என்பதை நாடு என்று மாற்றவும், சென்னை என்ற ஒரு தலைநகரத்தினுடைய பெயரை நாட்டுக்கு வைக்கத் தேவையில்லை என்பதற்காகவும், சென்னை இராஜ்யம் என்று வழங்கி வந்த பெயர், இந்த மண்ணின் பெயரால் தமிழ்நாடு என்று வழங்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டு, இங்கே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதை மத்திய அரசும் ஏற்றுக் கொண்டது.

9-30 மணி

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல சென்னை, பம்பாய், கல்கத்தா, அலகாபாத் போன்ற தலைநகரங்களில் இருக்கிற நீதிமன்றங்களுடைய பெயர்களை அந்தந்த மாநிலத்தின் பெயரால் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. சென்னை என்பதும் தமிழ்ப் பெயர் தான்.

திரு. கே. அர்ஜுனன் ; பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியாக ஒரு தமிழரே இருக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று.............(மணியடிக்கப்பெற்றது).

திரு. வே. தங்கபாண்டியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதி மன்றத்தினுடைய ஒரு பிரிவை மதுரையில் அமைக்க வேண்டுமென்ற நீண்ட நாள் விருப்பத்தை..............(மணியடிக்கப்பெற்றது).

கோவில்பட்டி தாலுக்காவுடன் சில இராமங்களைச் சேர்த்தல்.

*521—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன் கோவில் தாலுக்கா இளயரசனேந்தல் பிர்க்காவைச் சேர்ந்த சில கிராமங்களை சிதம்பரனார் மாவட்டம் கோவில்பட்டி தாலுக்காவுடன் சேர்க்க கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி.மனோகரன்; மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சோ. அழகர்சாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்வி சம்பந்தப்பட்ட கோவில்பட்டியை ஒட்டியுள்ள கிராமங்களிலுள்ள மக்கள் ஏதாவது ஒரு சான்று பெற வேண்டுமென்றாலோ அல்லது அரசாங்க அலுவலர்களைச் சந்திக்க வேண்டுமென்றாலோ ஐந்து மைல் தொலைவில் உள்ள கோவில்பட்டிக்கு வந்து, அங்கிருந்து 30 கி. மீ. தொலைவில் உள்ள சங்கரன்கோவிலுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. சாதாரணமாக ஒரு சான்று பெற வேண்டுமென்றாலும் மாணவர்கள் கூட தாலுகா அலுவலகத்திற்குச் செல்ல கோவில்பட்டி வந்துதான் செல்ல வேண்டியிருக்கிறது. இப்படி கடுமையான கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிற அந்த மக்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கையாகும். சென்ற பட்ஜெட் தொடரின் போது ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும் போது, சீக்கிரம் அறிவிப்பேன் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பகுதி மக்கள் எல்லாவிதமான அலுவலர்களையும் அணுக வேண்டு என்றாலும் நெல்லை அல்லது சங்கரன்கோவிலுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, அந்த மக்களுடைய கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றி தந்து, அவர்களுடைய கஷ்டத்தைப் போக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்; மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், மரியாதைக்குரிய அழகர்சாமி அவர்கள் எழுப்பிய கோரிக்கையின் மீது சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின்

1990 சனவரி 22]

அறிக்கை கோரப்பட்டுள்ளது. சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் முடிவான அறிக்கை இன்னும் அரசிற்குக் கிடைக்கப் பெறவில்லை.

திரு. சோ. அழகர்சாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கைகள் அரசுக்கு வந்து விட்டதாக நான் சமீபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கேட்டபோது சொன்னார்கள். அது சம்பந்தப்பட்ட நம்பர் கூட வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே, அந்தத் தகவல்கள் எல்லாம் வந்து விட்டன. சங்கரன்கோவில், விளாத்திகுளம், கோவில்பட்டி ஆகிய இந்த மூன்று தாலுக்காக்களும் அதிகமான கிராமங்களைக் கொண்டுள்ள தாலுக்காக்களாக இருப்பதால், நிர்வாக வசதிகள் குறைவாக இருக்கின்றன என்று அதனை நான்காகப் பிரித்து எட்டையபுரத்தைத் தலை நகராகக் கொண்ட ஒரு தாலுக்காவும், விளாத்திகுளம் தாலுக்காவிலிருந்து சில கிராமங்களையும், கோவில்பட்டி தாலுக்கா இருந்து சில கிராமங்களையும் இணைத்து எட்டையபுரத்தைத் தலைமையாகக் கொண்ட ஒரு தாலுக்காவும், கோவில்பட்டியை ஒட்டியுள்ள சங்கரன்கோவில் தாலுக்காவைச் சார்ந்திருக்கிற சில கிராமங்களை கோவில்பட்டி தாலுக்காவுடன் இணைத்தும் இந்தத் தாலுக்காக்களை அமைப்பதாக ஏற்கனவே அரசிடத்தில் ஒரு முடிவு இருந்ததாக நான் கேள்விப்படுகிறேன். அதைத் துரிதப் படுத்தி அந்த மக்களுக்கு இந்த வசதிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்புடைய அமைச்சருக்குக் கிடைக்காத தகவல்கள் மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்களுக்குக் கிடைத்திருப்பதைப் பற்றி எண்ணிப் பார்க்கிறபோது மகிழத் தோன்றுகிறது, சிரிக்கவும் தோன்றுகிறது. (சிரிப்பு) கடைசியாக நான் அவருக்குச் சொல்கிற பதில், 1991 ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் காரணமாக மாவட்டம், வட்டம் மற்றும் வருவாய் கிராமங்களின் ஆட்சி வரம்பிலே மாற்றம் செய்ய 1991 ஜூன் திங்கள் வரையில் தடையாணை உள்ளது. எனவே, இந்த கோரிக்கை அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டாலும், 1991 ஜூன் திங்களுக்குப் பின்தான் அதை அரசுக்கு கருத இயலும் அல்லது செயல்படுத்த இயலும்.

9-35 மணி

திரு. தி. ரா. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை-அண்ணா மாவட்டத்தில் அடங்கிய......
(மணியடிக்கப்பெற்றது)

[1990 சனவரி 22

சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

*1542 —மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்); மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, நாமக்கல் மாவட்டம் தனியாக அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் ; (அ) மற்றும் (ஆ) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து நாமக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைப்பது பற்றிய செயற் குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாக நலன் கருதி, சேலம் மாவட்டம் தமிழ்நாட்டிலே பெரிய மாவட்டங்களில் ஒன்றாக இருப்பதால், அதனை இரண்டாகப் பிரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. தமிழக அரசு தீட்டுகின்ற நலன் சார்ந்த திட்டங்களினுடைய பரிகாரங்கள் விரைவில் மக்கள் பெற வேண்டிய அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும், அதை இரண்டாகப் பிரிப்பதற்கு தமிழக அரசு முன்னுரிமை எதிர் காலத்தில் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, இப்போது அது பரிசீலனையில் இல்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகக் காரணங்களுக்காகவும், சமுதாய, பொருளாதார துரித மாற்றங்களுக்காகவும், மாவட்டங்களை இரண்டாகப் பிரித்துக் கொண்டிருக்கிற இந்த வேளையில், தமிழகத்திலே மிகப் பெரிய மாவட்டமாக இருக்கிற ஒரு மாவட்டம், அதிலும் நம்முடைய முதல்வர் அவர்களுடைய மாவட்டமே இருந்து கொண்டு இருப்பது இந்த அரசுக்குத் தெரியும். அதிலும் அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் எண் 130 மூலமாக முதல்வர் அவர்கள் குறிக்கின்ற இடத்தை தலைமையிடமாகக் கொண்டு, மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று ஒருமனதாக தீர்மானமே நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

1990 சனவரி 22]

அந்தச் சூழ்நிலையில் கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் நீர் நிர்வாகத்திலே மிகப் பெரிய சண்டைகள் எல்லாம் வந்து, காவிரியிலே ஓடுகின்ற நீர் எங்களுக்கு வெண்ணாரிலே வர மறுக்கிறது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாதது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவர் அவர்களே, நண்பர் திரு. இராஜேந்திரன் அவர்கள் மிகத் திறமையாக இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டார்கள். அவர்கள் எழுந்து தஞ்சாவூர் மாவட்டம் என்று ஆரம்பித்திருந்தால், நீங்கள் உட்கார வைத்திருப்பீர்கள். அவர், அதைச் சொல்லாமல், பொதுவான கருத்துக்களைச் சொல்லி, கடைசி வரையிலே, மாவட்டத்தினுடைய பெயரைச் சொல்லாமல், முதல்வர் பிறந்த மாவட்டம் என்ற அளவோடு நிறுத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய கூற்றின் படி, மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே எடுக்கப்பட்ட அந்த முடிவு வரவேற்கத்தக்கது என்றாலும், உரிய நேரத்திலே ஆவன செய்யப்படும்.

மாணவ மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம்

*798—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:
திரு. எம். சே. கரீம்:
திரு. சு. குருநாதன்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் செல்லக் கூடிய மாணவ, மாணவிகள் மிகவும் சிரமம் அடைகிறார்கள், ஆகையினாலே, இந்த இலவச பஸ் பாஸ் இல்லாவிட்டாலும் கூட—ஒரு மாதத்திற்கு எவ்வளவு பணம் நாம் வசூல் செய்கிறோம்—கர்நாடகத்தைப் போன்று நான்கிலே ஒரு பங்காக வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 சனவரி 22]

அந்தச் சூழ்நிலையில் கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் நீர் நிர்வாகத்திலே மிகப் பெரிய சண்டைகள் எல்லாம் வந்து, காவிரியிலே ஓடுகின்ற நீர் எங்களுக்கு வெண்ணாரிலே வர மறுக்கிறது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாதது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவர் அவர்களே, நண்பர் திரு. இராஜேந்திரன் அவர்கள் மிகத் திறமையாக இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டார்கள். அவர்கள் எழுந்து தஞ்சாவூர் மாவட்டம் என்று ஆரம்பித்திருந்தால், நீங்கள் உட்கார வைத்திருப்பீர்கள். அவர், அதைச் சொல்லாமல், பொதுவான கருத்துக்களைச் சொல்லி, கடைசி வரையிலே, மாவட்டத்தினுடைய பெயரைச் சொல்லாமல், முதல்வர் பிறந்த மாவட்டம் என்ற அளவோடு நிறுத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய கூற்றின்படி, மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே எடுக்கப்பட்ட அந்த முடிவு வரவேற்கத்தக்கது என்றாலும், உரிய நேரத்திலே ஆவன செய்யப்படும்.

மாணவ மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம்

*798—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:
திரு. எம். சே. கரீம்:
திரு. சு. குருநாதன்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; தலைவர் அவர்களே,
(அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் செல்லக் கூடிய மாணவ, மாணவிகள் மிகவும் சிரமம் அடைகிறார்கள், ஆகையினாலே, இந்த இலவச பஸ் பாஸ் இல்லாவிட்டாலும் கூட—ஒரு மாதத்திற்கு எவ்வளவு பணம் நாம் வசூல் செய்கிறோம்—கர்நாடகத்தைப் போன்று நான்கிலே ஒரு பங்காக வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது மூன்றில் ஒரு பங்கு கட்டணச் சலுகை மாணவர்களுடைய பஸ் பாஸுக்காக அரசின் சார்பிலே வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. அப்படி வழங்கப்படுவதினால், பயன் அடையக் கூடியவர்கள் தமிழகம் முழுவதும் எல்லாப் போக்கு வரத்துக் கழகங்களையும் சேர்த்து 2,23,343 மாணவ மாணவியர்கள் மட்டுமே. அதற்கு நாம் சலுகையாகக் கொடுக்கிற தொகையினுடைய அளவு சுமார் 7.5 கோடி ரூபாய்.

9-40 மணி.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இலவசமாக வேட்டி, சேலைகள் வழங்குவது போன்று மாதவருமானம் ரூ. 300-க்குக்கீழே உள்ள குழந்தைகளுக்காவது பஸ்ஸில் செல்லுகிற வாய்ப்பை அரசு ஏற்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் வருமானம் சம்பாதிப்பதாகத் தெரியவில்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களுக்கு மத்திய அரசு இலவசமாக ரயிலில் பிரயாணம் செய்வதற்கு (மணியடிக்கப் பெற்றது).

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆதி திராவிடர் பகுதிகளிலும் மலை ஜாதி மக்களும் மிகுந்த சிரமப்பட்டு பள்ளிகளுக்குச் செல்லக் கூடிய பிள்ளைகளை வைத்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்காவது நம்முடைய அரசு இலவச பஸ் பாஸ் வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சாதாரண சம வெளிப் பகுதியிலே இருப்பதை விட மலை வாழ் மக்கள் வாழக் கூடிய பகுதியிலே இந்த மூன்றில் ஒரு பங்கு சலுகை என்பது மேலும் கூடுதலாக வழங்கப்பட்டிருக்கிறது. கூடுதலான சலுகை எவ்வளவு என்கின்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. ஊட்டி, கொடைக்கானல் போன்ற பகுதிகளில் எல்லாம் கூடுதலான சலுகை ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்களுக்கு மாவட்டங்களுக்குள் பயணம் செய்ய இலவச பாஸ் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தமிழகம் முழுவதும் பயணம் செய்வதற்கான அனுமதி வழங்குவதற்கான திட்டம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

1990 சனவரி 22]

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றிக் கேட்டார். ஆனால் நீங்கள் திரு. ஸ்டாலின் கேட்ட கேள்வியை மட்டும் அனுமதித்திருக்கிறீர்களே.....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவா : உறுப்பினர் திரு. ஸ்டாலின் கேட்ட கேள்வி என்ன என்பதை நான் கவனிக்கவில்லை. நான் கவனித்திருந்தால் கண்டிப்பாக நிறுத்தியிருந்திருப்பேன். அதனால் கவலையே பட வேண்டாம் நீங்கள். எனவே இது மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாதது. அவ்வளவுதான்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டத்தின்கீழ் பள்ளி மாணவ மாணவியர்கள் பயனடைவதைப் போன்று வேறு யார் யார் பயன் அடைகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் பயனடைகிறார்கள்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் சலுகைக் கட்டணத்தில் செல்லுகின்ற அந்த வாய்ப்பு அரசுப் போக்குவரத்துக் கழகத்திலே மட்டும் தானா? தனியார் போக்குவரத்துக் கழகத்திலே சிலவற்றிலே இருப்பதாகத் தெரிகிறது. பலவற்றிலே மறுக்கப்படுகிறது. எனவே அந்த கட்டணச் சலுகை என்பது தனியார் போக்குவரத்து கழகத்திலேயும் விஸ்தரிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அது பற்றிய முழு விவரமான தகவல் என்னிடத்திலே இல்லை.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் குழந்தைகள் ஏற்கெனவே சென்றுகொண்டிருந்த முத்துப்பேட்டை கோவிலூரைச் சேர்ந்த பஸ் ஓராண்டுகாலமாக ஓடாமல், அந்தக் குழந்தைகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்களே, அந்த பஸ்ஸை விடுவதற்கு அரசிடம் உத்தேசம் உள்ளதா என..........(மணியடிக்கப் பெற்றது).

திரு. எம். முத்தையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்தப் பதவிக் காலம் இருக்கிற வரைக்கும்.......(மணியடிக்கப்பெற்றது).

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்களுக்குச் சலுகை அளிப்பது போன்று பஸ்களில் உடல் ஊனமுற்றோர், கண் பார்வையற்றோர் போன்றவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்கப்படுமா .. (மணியடிக்கப் பெற்றது).

திரு. தா. உதயசூரியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலக் கட்டத்தில் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் செல்கின்ற மாண வர்கள் 15 ரூபாய் கட்டிவிட்டால், பஸ் பாஸ் கொடுத்துவிடுவார் கள். அந்த ரூ. 15 அடிப்படையில் அந்த மாதம் முழுவதும் அந்த மாணவர்கள் பல்வேறு இடங்களுக்குச் செல்வதற்கு வாய்ப் பாக இருந்தது. ஆனால் அதற்குப் பிறகு வந்த ஆட்சிக் காலக் கட்டத்தில் டோக்கன் சிஸ்டத்தை உருவாக்கி அந்த டோக் கன் $12\frac{1}{2}$ பைசா வீதம் என உருவாக்கினார்கள்.

9.45 மணி

ஆனால் அதற்குப் பிறகு இன்றைக்கு கூப்பன் என்கிற சிஸ்டத்தை உருவாக்கி அந்த டோக்கனை எடுத்து விட்டார்கள். அந்த டோக்கன் இன்றைக்கு விடுதியிலே தங்கிப் படிக்கின்ற மாணவர்கள் நூலகங்களுக்குச் சென்று படிக்கிறபோது, அவர்களுக்கு மட்டும் அந்த டோக்கன் சிஸ்டத்தை உருவாக்கி உள்ளார்கள். ஆகவே இப்படி பள்ளிகளிலே கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு அந்த பழைய சிஸ்டத்தின்படி, டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தில் முந்தைய அரசு கொண்டு வந்த திட்டத்தின்படி எப்படி 15 ரூபாய் கட்டினால் அந்த பஸ் பாஸ் வழங்குவதாக உள்ளதோ அதை மீண்டும் கொண்டு வர இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல தாங்கள் தங்கி யிருக்கின்ற விடுதியிலோ அல்லது இல்லத்திலிருந்தோ தினசரி ஒரு முறை கல்வி கற்கின்ற இடத்திற்குச் சென்று வருவதற்கு அவர்களுக்கு வழி இருக்கிறது. தினசரி வேண்டுமானாலும் சலுகைக் கட்டணத்தில் சென்று வரலாம். டோக்கன் முறையிலே வேண்டுமானாலும் சென்று வரலாம் என்ற ஏற்பாடு தொடர்ந்து இருந்துக் கொண்டே இருக்கிறதே தவிர அது மாற்றப்பட வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவ மாணவியர்களுக்கு வழங்குகின்ற சலுகை கட்டணத்தை அல்லது பஸ் பாஸ் போன்ற வசதியை நர்சரி, பிரைமரி, மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அந்தக் குழந்தைகளுக்கு, அந்தப் பள்ளி அங்கீகரிக்கப்பட்ட பள்ளி யாக இருந்து, அதிலே பயிலக் கூடிய மாணவர்கள் மாணவியர்கள் அதற்கான விண்ணப்பத்தைத் தந்து போக்குவரத்து கழகங்களி டத்திலே தொடர்பு கொள்வார்களேயானால் அவர்களது கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படும்,

1990 சனவரி 22]

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவ மாணவியர்களுக்கு இலவச பஸ் பாஸ் அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன் ? (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வளவு நேரம் நீங்கள் அவையில் இல்லையா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரம் போன்று முனிசிபல் நகரங்களில். .

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : "Point of order" Sir.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் ஆல்போன்ஸ், எல்லாம் சரிதான் உட்காருங்கள். கேள்வி நேரத்தில் "Point of order" வராது.

திரு. பி. எச். பாண்டியன் : மாணவர்களுக்கு சென்னை நகரம் போன்ற நகர்ப்புறங்களில் காலை 9 மணியிலிருந்து 10 மணி வரை டவுன் பஸ்கள் விட்டிருக்கிறீர்கள். தமிழ்நாட்டிலுள்ள நகரப் பஞ்சாயத்துக்களில், அதுபோன்ற மாணவர்கள் பிளஸ் 2 வரை பள்ளிக் கூடத்திற்கு செல்லக்கூடிய அளவுக்கு உயர்வு ஏற்பட்டு விட்டக் காரணத்தால் எல்லா நகரப் பஞ்சாயத்துக்களிலும் காலை நேரங்களில் டவுன் பஸ் விடுவதற்கு-மாணவர்கள் ஸ்பெஷல் அதுபோல் பெண்கள் ஸ்பெஷல் —என்று தமிழ்நாடு முழுவதும் உள்ள நகரப் பஞ்சாயத்துக்களில் விடுவதற்கு அரசிடம் குறிப்பு உள்ளதா? அரசு அதை ஏற்றுச் செய்யுமா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா நகரப் பஞ்சாயத்துக்களிலும் அல்லது எல்லா நகர மன்ற பகுதிகளிலும் முழுவதுமாகவே ஒரு பேருந்தை மகளிருக்காகவோ அல்லது உயர்நிலை கல்வி கற்கக் கூடிய மாணவர்களுக்காகவோ விடக் கூடிய அளவுக்கு எண்ணிக்கை இருக்கும் என்று நான் கருதவில்லை. அப்படி எண்ணிக்கை இருக்கக்கூடிய இடங்களில் தனியாக மாணவர்களுக்கும் மகளிருக்கும் பேருந்துகளை விடுவதற்கு நம்முடைய போக்குவரத்துக் கழகங்கள் தயாராக இருக்கும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இலவச பஸ் பாஸ் வழங்கப்படுபவர்களின் வரிசையில் சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்து சொன்னார்கள். அதைத்தான் நான் அண்ணா நம்பியிடம் கேட்கச் சொன்னேன். சட்டமன்ற உறுப்பினர்கள் அனை

வரும் இலவச பஸ் பாசில் தான் போகிறார்களா என்பதை அறிய வேண்டும் என்பதற்காகச் சொன்னேன். அவர் மூலக் கேள்வியே அதுதான் என்று தெரியாமல் கேட்டு விட்டார். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவச பஸ் பாஸ் தரப் படுகிறதா என்பதுதான் கேள்வி. அது இலவச பாஸா அல்லது இந்தத் துறையிலேயிருந்து அவர்களுக்கும் கட்டணம் செலுத்தப் படுகிறதா? இப்படி கேள்வி நேரத்தில் நாங்கள் எல்லாம் இலவச மாக செல்லுகின்றவர்கள் மாதிரி செய்தியாக ஆகிவிடக் கூடாது என்பதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சட்டமன்ற உறுப்பினர் கள் நம்முடைய போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் செல்வதற்கு இலவசமாக அனுமதி அளிக்கப்படுகிறது. அதை அரசாங்கம் ஈடு செய்து கொள்கிறதா என்பதைப் பார்த்துத்தான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் இது தொடர்பாக ஏதோ கூற விரும்புவது போல் தோன்று கிறது, கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர் கள் கேட்ட கேள்வி மிக முக்கியமான கேள்வி. சட்ட மன்ற உறுப்பினர்கள் இலவச பாஸ் மூலமாக பேருந்துகளில் செல்லு கிறார்களா என்பது கேள்வி. நம்முடைய சட்ட மன்ற உறுப் பினர்களுக்கு பஸ்ஸிலே செல்ல வசதி செய்து தரப்படுகிறது.

9.50 மணி

இரயிலில் செல்ல கூப்பன் கொடுக்கப்படுகிறது. இந்தக் கட்ட ணத்தை எல்லாம் அரசாங்கம் அந்தந்த இலாக்காவிற்கு ஈடு செய்து விடுகிறது. எனவேதான் இலவசம் என்று இல்லை. வசதி செய்து தரப்படும்.

திரு. எம். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர் களே, மாணவ மாணவியர்களுக்கு இலவசமாக பஸ் பாஸ் வழங்கப் படுமா என்ற கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார் கள். அதிலே எட்டாவது வகுப்பு வரை இருக்கிற மாணவ மாணவிகளுக்கு இலவசமாக பஸ் பாஸ் வழங்கப்படலாம். காரணம் அவர்கள் ஏறிச் செல்லுகிறபோது அவர்களைக் கூட்டி, குறைத்து அந்த வாகனங்களில் ஏற்றுவதில்லை. ஆகவே அப்படிப்பட்ட சூழ் நிலையில் எட்டாவது வகுப்பு வரையில் படிக்கிற மாணவ மாணவி களுக்காவது இலவசமாக பஸ் பாஸ் வழங்கப்படுமா? அதை அரசு ஆராயுமா? அது செயல்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அத்தகைய செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

1990 சனவரி 22]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பள்ளி செல்லக் கூடிய மாணவ மாணவிகளுக்கு இலவசமாக பாஸ் வழங்கப்படுகிற கேள்வி சம்பந்தமாக ஏற்கனவே அவர்களுக்கு சலுகை அளிக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நானும் 4, 5 தினங்களாக காலையிலே பள்ளிக்குச் செல்லக்கூடிய நேரங்களில் குழந்தைகளோடு சேர்ந்து அந்த பஸ்ஸிலே வரக்கூடிய நேரத்தில் மிகப்பெரிய நெருக்கடி ஏற்படுகிறது. அந்தக் குழந்தைகளையெல்லாம் அப்படியே நெருக்கி அவர்களுக்கு மூச்சே திணறக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே தனியாக குழந்தைகள் செல்வதற்கு என்று அந்த நேரத்தில் விசேஷமான, அதிகமான பஸ்களையாவது விட்டு அவர்களுக்கு இந்த இடைஞ்சலிலிருந்து பாதுகாப்பு தருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது பள்ளி மாணவர்கள் செல்லக்கூடிய சில வழித்தடங்களில் குழந்தைகளுக்கு நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக தனிப் பேருந்துகள் விடப்படுகின்றன. இருந்தாலும் கூட தேவைக்கு ஏற்ற அளவில் நம்மாலே விடமுடியவில்லை. எனவேதான் ஏற்கனவே இரண்டு நாட்களுக்கு முன்னாலே நான் பதில் சொல்லும் போது பள்ளிக்கூட நேரம், அலுவலக நேரம், தொழிற்சாலைகளுடைய நேரம் போன்றவற்றை இந்தியாவினுடைய மற்ற நகரங்களில் மாற்றியமைத்து இருப்பதைப் போல சென்னை நகரத்திலும் மாற்றியமைத்தால் வசதியாக இருக்கும் என்ற அந்த எண்ணத்தை அரசு தற்போது பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மாதவரம் நகரியத்திற்கு பேருந்து நிலையம் கட்டுதல்

*2176—திரு. டி. கே. பழனிச்சாமி—மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் நகரியத்திற்கு பேருந்து நிலையம் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) ஆம்.

திரு. டி. கே. பழனிச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற மாதவரம் நகரியத்திற்கு பஸ் நிலையம் கட்ட வேண்டுமென்று மாதவரம் நகரிய குழுவிலே தீர்மானம் போடப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அமைச்சர்

1990 சனவரி 22]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பள்ளி செல்லக் கூடிய மாணவ மாணவிகளுக்கு இலவசமாக பாஸ் வழங்கப்படுகிற கேள்வி சம்பந்தமாக ஏற்கனவே அவர்களுக்கு சலுகை அளிக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நானும் 4, 5 தினங்களாக காலையிலே பள்ளிக்குச் செல்லக்கூடிய நேரங்களில் குழந்தைசளோடு சேர்ந்து அந்த பஸ்ஸிலே வரக்கூடிய நேரத்தில் மிகப்பெரிய நெருக்கடி ஏற்படுகிறது. அந்தக் குழந்தைகளையெல்லாம் அப்படியே நெருக்கி அவர்களுக்கு மூச்சே திணறக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே தனியாக குழந்தைகள் செல்வதற்கு என்று அந்த நேரத்தில் விசேஷமான, அதிகமான பஸ்களையாவது விட்டு அவர்களுக்கு இந்த இடைஞ்சலிலிருந்து பாதுகாப்பு தருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது பள்ளி மாணவர்கள் செல்லக்கூடிய சில வழித்தடங்களில் குழந்தைகளுக்கு நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக தனிப் பேருந்துகள் விடப்படுகின்றன. இருந்தாலும் கூட தேவைக்கு ஏற்ற அளவில் நம்மாலே விடமுடியவில்லை. எனவேதான் ஏற்கனவே இரண்டு நாட்களுக்கு முன்னாலே நான் பதில் சொல்லும் போது பள்ளிக்கூட நேரம், அலுவலக நேரம், தொழிற்சாலைகளுடைய நேரம் போன்றவற்றை இந்தியாவினுடைய மற்ற நகரங்களில் மாற்றியமைத்து இருப்பதைப் போல சென்னை நகரத்திலும் மாற்றியமைத்தால் வசதியாக இருக்கும் என்ற அந்த எண்ணத்தை அரசு தற்போது பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மாதவரம் நகரியத்திற்கு பேருந்து நிலையம் கட்டுதல்

*2176—திரு. டி. கே. பழனிச்சாமி—மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் நகரியத்திற்கு பேருந்து நிலையம் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப் படும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) ஆம்.

திரு. டி. கே. பழனிச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற மாதவரம் நகரியத்திற்கு பஸ் நிலையம் கட்ட வேண்டுமென்று மாதவரம் நகரிய குழுவிலே தீர்மானம் போடப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அமைச்சர்

அவர்களும் அந்த இடத்தை பார்த்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. உடனடியாக அதற்குண்டான நடவடிக்கை எடுத்து பஸ் நிலையம் கட்டுவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் பேருந்து நிலையத்தினுடைய அவசியத்தை அறிந்து கொண்ட காரணத்தினாலே தான் 3—7—1989 தேதி அன்று அரசு அதிகாரிகளுடன் நேரடியாக அந்த இடம் பார்வையிடப்பட்டது. அதற்குப் பின்னாலே சுமார் 2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வருவாய்த்துறையினிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆர்ஜிதம் சம்பந்தமாக மாதவரம் பேரூராட்சி மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது. விரைவில் ஆர்ஜித நடவடிக்கைகள் முடிவடைந்ததற்குப் பிறகு பேருந்து நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. டி. கே. பழனிச்சாமி ; தலைவர் அவர்களே, நன்றி. வணக்கம்.

திரு. செங்கை சிவம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்வது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பல்வேறு துறைகளைச் சார்ந்த நிலம் ஆர்ஜிதம் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதிலே விலை நிர்ணயம் செய்வதில்......(மணியடிக்கப்பெற்றது).

சைதை தொகுதியில் அறநிலையத் துறையின் கண்காணிப்பில் உள்ள திருக்கோயில்கள்

*2189—திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் ; மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;—

சைதை தொகுதியில் அறநிலையத் துறையின் கண்காணிப்பில் உள்ள திருக்கோயில்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. டே. பி. கந்தசாமி ; தலைவர் அவர்களே, சைதை தொகுதியில் அறநிலையத் துறையின் கண்காணிப்பில் மொத்தம் 39 திருக்கோயில்கள் உள்ளன.

9.55 மணி

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பெரும் பகுதியாக இருக்கின்ற கோயில்கள் இன்றைக்கு பாழடைந்து இருக்கின்றன. உதாரணமாக

அவர்களும் அந்த இடத்தை பார்த்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. உடனடியாக அதற்குண்டான நடவடிக்கை எடுத்து பஸ் நிலையம் கட்டுவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் பேருந்து நிலையத்தினுடைய அவசியத்தை அறிந்து கொண்ட காரணத்தினாலே தான் 3—7—1989 தேதி அன்று அரசு அதிகாரிகளுடன் நேரடியாக அந்த இடம் பார்வையிடப்பட்டது. அதற்குப் பின்னாலே சுமார் 2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வருவாய்த்துறையினிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆர்ஜிதம் சம்பந்தமாக மாதவரம் பேரூராட்சி மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது. விரைவில் ஆர்ஜித நடவடிக்கைகள் முடிவடைந்ததற்குப் பிறகு பேருந்து நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. டி. கே. பழனிச்சாமி ; தலைவர் அவர்களே, நன்றி. வணக்கம்.

திரு. செங்கை சிவம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்வது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பல்வேறு துறைகளைச் சார்ந்த நிலம் ஆர்ஜிதம் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதிலே விலை நிர்ணயம் செய்வதில்......(மணியடிக்கப்பெற்றது).

சைதை தொகுதியில் அறநிலையத் துறையின் கண்காணிப்பில் உள்ள திருக்கோயில்கள்

*2189—திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் ; மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;—

சைதை தொகுதியில் அறநிலையத் துறையின் கண்காணிப்பில் உள்ள திருக்கோயில்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. டே. பி. கந்தசாமி ; தலைவர் அவர்களே, சைதை தொகுதியில் அறநிலையத் துறையின் கண்காணிப்பில் மொத்தம் 39 திருக்கோயில்கள் உள்ளன.

9.55 மணி

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பெரும் பகுதியாக இருக்கின்ற கோயில்கள் இன்றைக்கு பாழடைந்து இருக்கின்றன. உதாரணமாக

1990 சனவரி 22]

ஆதிகேசவப் பெருமாள் கோயில் மிகவும் சீர்கெட்டு இருக்கிறது. அதைத் திருத்தியமைக்கின்ற உத்தேசம் அரசிற்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன். அதைப் போலவே, கழகத் தலைவருடைய காலத்தில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் கேள்விக்கு அமைச்சருடைய விடை எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்கின்ற அந்தக் கோயிலைப் பற்றிய விவரம் அறநிலையத் துறையினிடத்திலே இல்லை. அதுபற்றிய விவரத்தை என்னிடத்திலே தந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்: அதைப்போலவே, ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் தேவஸ்தானம் என்பது கோட்டூரிலே இருக்கிறது. பிரபல தொழிலதிபரும், சென்னை மாலை முரசினுடைய பத்திரிகையாளருமான அவர்கள் முன் வந்து, அங்கே கலைஞருடைய பெயராலே திருமண மண்டபம் கட்டித் தர இருக்கிறார்கள். அதில் ஒரு பகுதி அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். மீதிப் பகுதியை நமது அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: அவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பணிகளில் மொத்த மதிப்பீடு என்ன, நன்கொடையாளர்கள் எவ்வளவு தருகின்றார்கள் என்பதைப் பொறுத்து நிச்சயமாக அறநிலையத் துறையும் அதிலே பங்கு கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காளியம்மன் கோயில் திருப்பணி.

*5787—திரு. எம். சேட்டு: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம், செங்கம் அருள்மிகு வேணுகோபால பார்த்தசாரதிப் பெருமாள் வகையறா திருக்கோயில்களில் ஒன்றான காளியம்மன் கோயில் திருப்பணி நிறைவு பெறாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

1990 சனவரி 22]

ஆதிகேசவப் பெருமாள் கோயில் மிகவும் சீர்கெட்டு இருக்கிறது. அதைத் திருத்தியமைக்கின்ற உத்தேசம் அரசிற்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன். அதைப் போலவே, கழகத் தலைவருடைய காலத்தில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் கேள்விக்கு அமைச்சருடைய விடை எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்கின்ற அந்தக் கோயிலைப் பற்றிய விவரம் அறநிலையத் துறையினிடத்திலே இல்லை. அதுபற்றிய விவரத்தை என்னிடத்திலே தந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்: அதைப்போலவே, ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் தேவஸ்தானம் என்பது கோட்டூரிலே இருக்கிறது. பிரபல தொழிலதிபரும், சென்னை மாலை முரசினுடைய பத்திரிகையாளருமான அவர்கள் முன் வந்து, அங்கே கலைஞருடைய பெயராலே திருமண மண்டபம் கட்டித் தர இருக்கிறார்கள். அதில் ஒரு பகுதி அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். மீதிப் பகுதியை நமது அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: அவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பணிகளில் மொத்த மதிப்பீடு என்ன, நன்கொடையாளர்கள் எவ்வளவு தருகின்றார்கள் என்பதைப் பொறுத்து நிச்சயமாக அறநிலையத் துறையும் அதிலே பங்கு கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

காளியம்மன் கோயில் திருப்பணி.

*5787—திரு. எம். சேட்டு: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம், செங்கம் அருள்மிகு வேணுகோபால பார்த்தசாரதிப் பெருமாள் வகையறா திருக்கோயில்களில் ஒன்றான காளியம்மன் கோயில் திருப்பணி நிறைவு பெறாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[1990 சனவரி 22

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி ; தலைவர் அவர்களே, (அ) செங்கம் காளியம்மன் கோயில் திருப்பணி முற்றுப் பெறாமல் இருப்பது அறநிலையத் துறை ஆணையருடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு இருக்கின்றது.

(ஆ) இத்திருக்கோயில் திருப்பணிக்காக அமைக்கப் பட்ட திருப்பணிக் குழு சரிவர இயங்கவில்லை. ஏறத்தாழ இலட்சத்து ஆறாயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே 1974ஆம் ஆண்டு அங்கீகாரம் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு பல ஆட்சிகள் மாற்றம். ஆகவே. எப்படியோ இந்தத் திருப்பணிகள் அங்கே சரிவர நடைபெறவில்லை. 1989 ஆம் ஆண்டு தொடக்கத்திலே அங்கே இருக்கின்ற அறங்காவலர் குழுவினரும் சரியாக இயங்கவில்லை என்ற புகார் வந்தது. அந்தப் புகார்களை விசாரித்து அறங்காவல் குழுத் தலைவரை நீக்கிவிட்டு, 1—4—1989 முதல் செங்கம் பிரிவு ஆய்வர் செயல் அலுவலராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். இப்போது புதிய மதிப்பீடு போடப்பட்டு வருகின்றது. எஞ்சியுள்ள பணி களும் விரைவில் முடிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. எம். சேட்டு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் என்னுடைய தொகுதி செங்கம் வட்டம், காளியம்மன் கோயில் பணிகள் 10 வருடத்திற்கு முன்னே அது செய்து நிறுத்தப்பட்டது. அந்தக் காளியம்மன் கோயில் இந்த அரசின் மூலமாகக் கட்டித் தரப்படுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1974 ஆம் ஆண்டிலிருந்து மானியமாக 25,000 ரூபாயும் மற்ற கோயில்களிலிருந்து நிதி மாற்றமாக 21,000 ரூபாயும், ஆக 46,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக் கிறது. ஏறத்தாழ 30,000 ரூபாய்வரை செலவு செய்யப் பட்டிருக்கிறது. மீதி பணம் வங்கியில் இருக்கிறது. வட்டியும் சேர்த்து ஏறத்தாழ 25,000 ரூபாய் வங்கியில் இருக்கிறது. 1974 ஆம் வருடம் என்றால், 15 ஆண்டுகளுக்கு முன்பு போடப் பட்ட மதிப்பீடு. இன்றைய மதிப்பீடு அதிகமாகி இருக்கும். சட்டமன்ற உறுப்பினரும் அதிலே பங்கு கொண்டு பொது மக்களுடைய நன்கொடையையும் கணிசமாகச் சேர்த்துத் தந்தால் நிச்சயமாக அந்தப் பணிகள் துரிதமாக முடிக்கப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 2119 மற்றும் 3313 மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

(10.00 மணி)

திரு. கோ. பூவராகன் : சார், ஒரு information....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே "information" வராது.

1990 சனவரி 22]

சமுத்திரம் ஏரியில் சாத்தனூர் அணையின் நீரைத் தேக்கி நந்தன் கால்வாயோடு இணைக்கும் திட்டம்.

* 970—திரு. ஏ. ஜி. சம்பத் :—மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம் திருவண்ணாமலை தாலூகா சமுத்திரம் ஏரியில் சாத்தனூர் அணையின் நீரைத் தேக்கி நந்தன் கால்வாயோடு இணைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : (அ) மற்றும் (ஆ), மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையிலே இருக்கிற நீரை திருவண்ணாமலை பக்கத்திலே யிருக்கிற சமுத்திர ஏரிக்கு கொண்டு வந்து அதை நந்தன் கால்வாயோடு இணைக்க வேண்டுமென்ற கோரிக்கை பொது மக்களிடமிருந்து அரசுக்கு வந்திருக்கிறது. எனவே அந்தத் திட்டம் அரசின் கருத்தில் இருக்கிறது. இன்னும் எந்த செயல் வடிவமும் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யுடன் வினாக்கள்—விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப் படுகிறது.

கொள்ளிடத்தில் இருந்து கிடைக்கும் ஊற்று நீர், உபரி நீரை பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டம்.

* 3311—டாக்டர் மா. பன்னீர்செல்வம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சீர்காழியில் வடரங்கத்தில் இருக்கும் கொள்ளிடத் தில் இருந்து கிடைக்கும் ஊற்று நீர், உபரி நீரை மீண்டும் இறைத்து பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

1990 சனவரி 22]

சமுத்திரம் ஏரியில் சாத்தனூர் அணையின் நீரைத் தேக்கி நந்தன் கால்வாயோடு இணைக்கும் திட்டம்.

* 970—திரு. ஏ. ஜி. சம்பத் :—மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம் திருவண்ணாமலை தாலூகா சமுத்திரம் ஏரியில் சாத்தனூர் அணையின் நீரைத் தேக்கி நந்தன் கால்வாயோடு இணைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : (அ) மற்றும் (ஆ), மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையிலே இருக்கிற நீரை திருவண்ணாமலை பக்கத்திலே யிருக்கிற சமுத்திர ஏரிக்கு கொண்டு வந்து அதை நந்தன் கால்வாயோடு இணைக்க வேண்டுமென்ற கோரிக்கை பொது மக்களிடமிருந்து அரசுக்கு வந்திருக்கிறது. எனவே அந்தத் திட்டம் அரசின் கருத்தில் இருக்கிறது. இன்னும் எந்த செயல் வடிவமும் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யுடன் வினாக்கள்—விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப் படுகிறது.

கொள்ளிடத்தில் இருந்து கிடைக்கும் ஊற்று நீர், உபரி நீரை பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டம்.

* 3311—டாக்டர் மா. பன்னீர்செல்வம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சீர்காழியில் வடரங்கத்தில் இருக்கும் கொள்ளிடத் தில் இருந்து கிடைக்கும் ஊற்று நீர், உபரி நீரை மீண்டும் இறைத்து பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

டாக்டர் மா. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் கடந்த டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசில் செயல்பட்ட ஒரு திட்டமாகும். இந்தத் திட்டம் சீர்காழி போன்ற கடைமடைப் பகுதியில் மூன்றாவது போகமாக குள்ளக் கார் என்ற சாகுபடி நடைபெறும். அப்போது தண்ணீர் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால் வடரங்கத்தில் இருந்து கிடைக்கின்ற உபரி நீர், ஊற்றுநீரை ராட்சச என்ஜின் வைத்து இறைத்து அந்தப் பகுதி மக்கள் பாசனத்துக்குப் பயன்படுத்தினார்கள். டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தொடங்கிய அந்தத் திட்டத்தை மீண்டும் மறுபரிசீலனை செய்து அந்தத் திட்டத்தை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு இப்படி ஒரு திட்டத்தை செயல்படுத்தலாமா என்று அரசு யோசித்தது. அதற்கு செலவு அன்றைய மதிப்பீட்டின்படி கிட்டத்தட்ட ரூ. 70 இலட்சம் என்று கணக்கிடப்பட்டது. ஆனால் அரசுக்கு வருகிற வருவாய்க்கும் இந்தச் செலவுக்கும் பெருத்த வித்தியாசம் இருப்பதால் அது சரிபட்டு வராது என்று அரசு அப்போது கைவிட்டு விட்டது. மேலும் காவிரி ஆற்றில் கடந்த 10 ஆண்டுகளாக பாசனத்துக்குத் தண்ணீர் போதிய அளவுக்குக் கிடைக்கவில்லை. காவிரி டெல்டா பகுதிகளுக்கு ஜூன் மாதத்திற்கு பதிலாக ஆகஸ்ட் மாதம்தான் தண்ணீர் விடப்படுகின்ற நிலைமை உருவாகி இருக்கிறது. எனவே கொள்ளிடத்தில் உபரி நீரை எதிர்பார்க்க இயலாது. இருப்பினும் 1975 ஆம் ஆண்டு, 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தண்ணீர் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. அதோடு இரண்டு அடி விட்டமுள்ள குழாய் இரண்டு வரிசைகளாகப் பதிக்கப் பட்டிருக்கின்றன. கோடை கால பற்றாக்குறையின்போது ஆயக்கட்டுகளுக்கு தண்ணீர் இறைத்திடுவதற்கு இந்தத் திட்டம் பயன்படும் என்று அரசு கருதியது.

டாக்டர் மா. பன்னீர்செல்வம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாணியாறு மற்றும் ஈச்சம்பாடி அணைக்கட்டுத் திட்டங்கள்

*5984—திரு. வ. முல்லைவேந்தன் ; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள வாணியாறு மற்றும் ஈச்சம்பாடி அணைக்கட்டுத் திட்டங்களுக்கு மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(ஆ) அதன் விவரம் என்ன?

[1990 சனவரி 22

டாக்டர் மா. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் கடந்த டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசில் செயல்பட்ட ஒரு திட்டமாகும். இந்தத் திட்டம் சீர்காழி போன்ற கடைமடைப் பகுதியில் மூன்றாவது போகமாக குள்ளக் கார் என்ற சாகுபடி நடைபெறும். அப்போது தண்ணீர் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால் வடரங்கத்தில் இருந்து கிடைக்கின்ற உபரி நீர், ஊற்றுநீரை ராட்சச என்ஜின் வைத்து இறைத்து அந்தப் பகுதி மக்கள் பாசனத்துக்குப் பயன்படுத்தினார்கள். டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தொடங்கிய அந்தத் திட்டத்தை மீண்டும் மறுபரிசீலனை செய்து அந்தத் திட்டத்தை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு இப்படி ஒரு திட்டத்தை செயல்படுத்தலாமா என்று அரசு யோசித்தது. அதற்கு செலவு அன்றைய மதிப்பீட்டின்படி கிட்டத்தட்ட ரூ. 70 இலட்சம் என்று கணக்கிடப்பட்டது. ஆனால் அரசுக்கு வருகிற வருவாய்க்கும் இந்தச் செலவுக்கும் பெருத்த வித்தியாசம் இருப்பதால் அது சரிபட்டு வராது என்று அரசு அப்போது கைவிட்டு விட்டது. மேலும் காவிரி ஆற்றில் கடந்த 10 ஆண்டுகளாக பாசனத்துக்குத் தண்ணீர் போதிய அளவுக்குக் கிடைக்கவில்லை. காவிரி டெல்டா பகுதிகளுக்கு ஜூன் மாதத்திற்கு பதிலாக ஆகஸ்ட் மாதம்தான் தண்ணீர் விடப்படுகின்ற நிலைமை உருவாகி இருக்கிறது. எனவே கொள்ளிடத்தில் உபரி நீரை எதிர்பார்க்க இயலாது. இருப்பினும் 1975 ஆம் ஆண்டு, 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தண்ணீர் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. அதோடு இரண்டு அடி விட்டமுள்ள குழாய் இரண்டு வரிசைகளாகப் பதிக்கப் பட்டிருக்கின்றன. கோடை கால பற்றாக்குறையின்போது ஆயக்கட்டுகளுக்கு தண்ணீர் இறைத்திடுவதற்கு இந்தத் திட்டம் பயன்படும் என்று அரசு கருதியது.

டாக்டர் மா. பன்னீர்செல்வம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாணியாறு மற்றும் ஈச்சம்பாடி அணைக்கட்டுத் திட்டங்கள்

*5984—திரு. வ. முல்லைவேந்தன்; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள வாணியாறு மற்றும் ஈச்சம்பாடி அணைக்கட்டுத் திட்டங்களுக்கு மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(ஆ) அதன் விவரம் என்ன?

1990 சனவரி 22]

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) வாணியாறு நீர்த்தேக்க திட்டத்திற்கு அரசு ஆணை (நிலை) எண். 284, பொதுப்பணித் துறை, நாள் 20—2—1979-ல் ரூபாய் 560 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. மீண்டும் அதற்கு, திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் அந்தத் தொகை ரூ. 1,203.10 இலட்சமாக உயர்த்தப்பட்டது.

(ஆ) ஈச்சம்பாடி அணைக்கட்டும் திட்டம் அரசாணை (நிலை) எண். 582, பொதுப்பணித் துறை, நாள் 25-3-1980ல் ரூபாய் 217 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. மீண்டும் திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபாய் 375 இலட்சமாக உயர்த்தப்பட்டது.

திரு. வ. முல்லைவேந்தன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியாறு, ஈச்சம்பாடி அணைக் கட்டுகள் கட்டி முடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டும் கூட இது வரையில் ரெகுலர் ஸ்கிமிடம் ஒப்படைக்கப்படாமல், முறைப்படி தண்ணீர் விடப்படாத சூழ்நிலையில் விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளார்கள். அதைப்போல அந்த அணைக்கட்டுகள் கட்டி முடிக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டாலும், இன்னும் பல்வேறு பகுதிகளுக்கு கால்வாய் வெட்டப்படாமலும், பிரிவு கால்வாய்கள் வெட்டப்படாமலும் இருக்கின்றன. அந்தப் பணிகளை விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு மேலும் ,25,25,000 ரூபாய் தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கு வேண்டிய ஆயத்தப் பணிகள் நடந்து கொண்டிருக் கின்றன.

திரு. வ. முல்லைவேந்தன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணை கட்டப்படுகின்ற நேரத்தில் குடி தண்ணீர் பஞ்சம் கடுமையாக உள்ள அந்தப் பகுதிகளுக்கு அணையிலிருந்து தண்ணீர் விடுவதற்கு, 10 மில்லியன் கன அடி தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாலும், அந்த அடிப்படையில், அணைக்கட்டுகளுக்கு, கால்வாய் வெட்டப் படாத ஏ. பள்ளிப்பட்டி, அதிகாரிபபட்டி போன்ற பகுதி களுக்கும் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ராமையம் பட்டி போன்ற பகுதிகளுக்கும் அந்தக் கால்வாய்களை, குடி தண்ணீர் பஞ்சத்தைப் போக்குகின்ற வகையில் மீண்டும் வெட்டித்தரவும், அதைப்போல கடுமையான குடிநீர் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு நெடுங்காலமாக அவதிப்படுகின்ற அரூர் பகுதிக்கு குடி நீர்வடிகால் வாரியம் மூலம் அனுமதி கிடைப்பதற்கு இந்த அணையிலிருந்து தண்ணீர் வழங்குவதற்கு அரசு உடனடி யாக ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து பரிசீலிக்கப்படும்.

வண்ணாடு கிராமத்திற்கு சாலை.

*4294 திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பச்சைமலையில் வண்ணாடு கிராமத்திற்கு சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ; பேரவைத் தலைவர் அவர்களே,

பச்சைமலையில் "வண்ணாடு" பஞ்சாயத்து பகுதியிலுள்ள கிராமங்கள் வழியாக, உப்பிலியாபுரம் ஒன்றியத்தைச் சார்ந்த மேல் செங்காட்டுப்பட்டியிலிருந்து தோனூர் வரை, கி.மீ. 0/0—20/5 வரை, ரூ. 143 லட்சம் செலவில் சாலை அமைக்கும் பணிக்கு, அரசு ஆணை (நிலை) எண். 2015, சமூக நலத்துறை, நாள் : 28-10-1987-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இச்சாலையில் பாதி வேலைகள் இந்த நிதியாண்டில் நடைபெறும். மீதமுள்ள பாதி வேலை அடுத்த ஆண்டிலும் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(10-05 மணி)

திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள வண்ணாடு, கோம்பை, தென் பெண்ணாடை ஆகிய கிராமங்களுக்குச் சாலை அமைக்கத் திட்டமிட்டுள்ளதற்காக தொகுதியின் சார்பாகவும் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாக முடித்ததற்காக நானும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து பரிசீலிக்கப்படும்.

வண்ணாடு கிராமத்திற்கு சாலை.

*4294 திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பச்சைமலையில் வண்ணாடு கிராமத்திற்கு சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ; பேரவைத் தலைவர் அவர்களே,

பச்சைமலையில் ''வண்ணாடு'' பஞ்சாயத்து பகுதியிலுள்ள கிராமங்கள் வழியாக, உப்பிலியாபுரம் ஒன்றியத்தைச் சார்ந்த மேல் செங்காட்டுப்பட்டியிலிருந்து தோணூர் வரை, கி.மீ. 0/0—20/5 வரை, ரூ. 143 லட்சம் செலவில் சாலை அமைக்கும் பணிக்கு, அரசு ஆணை (நிலை) எண். 2015, சமூக நலத்துறை, நாள் : 28–10–1987-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இச்சாலையில் பாதி வேலைகள் இந்த நிதியாண்டில் நடைபெறும். மீதமுள்ள பாதி வேலை அடுத்த ஆண்டிலும் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(10-05 மணி)

திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள வண்ணாடு, கோம்பை, தென் பெண்ணாடை ஆகிய கிராமங்களுக்குச் சாலை அமைக்கத் திட்டமிட்டுள்ளதற்காக தொகுதியின் சார்பாகவும் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாக முடித்ததற்காக நானும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

1990 சனவரி 22]

பெரியார் மாவட்டத்தில் பாரஸ்டு செட்டில்மெண்ட்

*5485. திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டத்தில் உள்ள பாரஸ்டு செட்டில்மெண்ட் எத்தனை ?

(ஆ) இதில் ஆதிவாசிகள் எத்தனை பேர் மலைவாழ் மக்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் ?

(இ) சேர்க்கப்படாமல் உள்ள ஆதிவாசிகளையும் சேர்க்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெரியார் மாவட்டத்தில் மொத்தம் 12 பாரஸ்டு செட்டில்மெண்டுகள் உள்ளன.

(ஆ) சத்தியமங்கலம் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் 609 பழங்குடியினர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(இ) சேர்க்கப்படாமல் உள்ள 985 பழங்குடியினரை உறுப்பினர்களாகச் சேர்க்க சங்கத்தின் தனி அலுவலர் தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே ஆதிவாசிகள் என்று சொல்லக்கூடிய சமுதாயத்தில் சோழகர், இருளர் என்ற சொல்லக்கூடிய இரண்டு சமுதாயத்தினர்தான் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலையில் அந்தப் பகுதியிலுள்ள வனத்தில் உள்ள செட்டில்மெண்ட் பகுதியில் குடியிருக்கிற மக்களில் ஏறத்தாழ 100-க்கு 80 விழுக்காடு பேர் இன்னும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினர்களாகச் சேர்க்கப்படாமல் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டாமல் விட்டுவிட்டார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்து அவர்களையும் உறுப்பினர்களாக விரைவில் சேர்க்க ஆவன செய்வார்களா ? அடுத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் ஆண்டுதோறும் ஏராளமான இலாபத் தொகை வருகிறது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரின் முதல் கேள்விக்கு மட்டும் அமைச்சருடைய விடை.

[1990 சனவரி 22

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேயுள்ள ஆதிவாசிகள் கல்பாசம், கடுக்காய், புங்கம்பருப்பு, பச்சக்காய் போன்ற பொருட்களை மலைகளில் உள்ள காடுகளில் சேகரம் செய்கிற நேரத்தில் வனத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற யானைகளால் தாக்கப்பட்டு பலபேர் இறக்க நேரிடுகிறது. இதனால் மத்திய அரசு ஜனதா இன்சூரன்ஸ் திட்டம் என்ற திட்டத்தைக் கொண்டுவந்து அதன்படி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய அதிகாரிகளே அந்தத் தொகையினை அரசாங்கத்திற்குக்கட்டி, திடீரென்று உயிரிழப்பு ஏற்படுகின்ற நேரத்தில் தொகை கொடுத்துக்கொண்டு வந்தார்கள். அது தற்போது நிறுத்தப்பட்டு இருக்கிறது. இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அவசியம் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக இதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்திய அரசு ஏதாவது மானியம் வழங்குகிறதா என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, மானியத் தொகை தற்போது வழங்கப் பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தூ. க. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரஸ்ட் செட்டில்மெண்ட்டில் உள்ளவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படுகிற மானியக் கடன்களை அரசு வங்கிகள் வழங்க மறுக்கின்றன. அதேபோல் அரசு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தின்படி பாரஸ்ட் செட்டில்மெண்ட் பகுதியில் வீடு கட்டிக் கொடுக்க முடியவில்லை. இந்த இரண்டையும் செய்து கொடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(10-10 மணி)

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1990 ஜனவரி 22]

தெலுங்கு கங்கைத் திட்டம்.

*42—திரு. இரெ. இராசமாணிக்கம்,
திரு. கே. ஏ. செங்கோட்டையன்,
திரு. பெ. சு. திருவேங்கடம்,
திரு. எம். முத்தையா,
திரு. என். பழனிவேல், மற்றும்
திரு. ஆர். அண்ணாநம்பி.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரக் குடிநீர்த் திட்டமான தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு 1987–88 ஆம் ஆண்டு வரை செய்யப் பட்டுள்ள செலவு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

	(ரூபாய் கோடி.)
தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு ஆந்திர எல்லையில் அமையும் பணிகளுக்கு 1987–88 ஆம் ஆண்டு முடிய செலவு	248.12
இதில் தமிழகத்தின் பங்காகக் கொடுக்கப்பட வேண்டிய தொகை	68.66
ஆனால் இதுவரை தமிழகம் கொடுத்த தொகை (1987–88 வரை)	47.00
சென்னை குடிநீர்த் திட்டத்தில் தமிழ்நாட்டில் அமையும் பணிகளுக்கு 1987–88 முடிய செலவு	11.58
மொத்தச் செலவு 1987–88 முடிய ..	58.58

*1813.—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தெலுங்கு கங்கைத் திட்டத்தின்கீழ் சென்னை மாநகரத்திற்குக் கொண்டுவரப்படும் குடிதண்ணீர் திறந்தவெளி வாய்க்கால் மூலம் கொண்டுவர திட்டம் போடப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(ஆ) இதனால் பல இடையூறுகள் ஏற்படும் என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) இதுபற்றி நிபுணர் குழு ஆய்வு செய்துள்ளதா?

(ஈ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1990 ஜனவரி 22]

தெலுங்கு கங்கைத் திட்டம்.

*42—திரு. இரெ. இராசமாணிக்கம்,
திரு. கே. ஏ. செங்கோட்டையன்,
திரு. பெ. சு. திருவேங்கடம்,
திரு. எம். முத்தையா,
திரு. என். பழனிவேல், மற்றும்
திரு. ஆர். அண்ணாநம்பி.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரக் குடிநீர்த் திட்டமான தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு 1987–88 ஆம் ஆண்டு வரை செய்யப் பட்டுள்ள செலவு எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

	(ரூபாய் கோடி.)
தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு ஆந்திர எல்லையில் அமையும் பணிகளுக்கு 1987–88 ஆம் ஆண்டு முடிய செலவு	248.12
இதில் தமிழகத்தின் பங்காகக் கொடுக்கப்பட வேண்டிய தொகை	68.66
ஆனால் இதுவரை தமிழகம் கொடுத்த தொகை (1987–88 வரை)	47.00
சென்னை குடிநீர்த் திட்டத்தில் தமிழ்நாட்டில் அமையும் பணிகளுக்கு 1987–88 முடிய செலவு	11.58
மொத்தச் செலவு 1987–88 முடிய ..	58.58

*1813.—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தெலுங்கு கங்கைத் திட்டத்தின்கீழ் சென்னை மாநகரத்திற்குக் கொண்டுவரப்படும் குடிதண்ணீர் திறந்தவெளி வாய்க்கால் மூலம் கொண்டுவர திட்டம் போடப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) இதனால் பல இடையூறுகள் ஏற்படும் என்பது அரசுக் குத் தெரியுமா ?

(இ) இதுபற்றி நிபுணர் குழு ஆய்வு செய்துள்ளதா ?

(ஈ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 18—4—1983 அன்று ஆந்திர மற்றும் தமிழக மாநில முதல்வர்களிடையே ஏற்பட்ட உடன்படிக்கையில் கண்டுள்ள ஷரத்து எண் 5-ன்படி ஆந்திர அரசு தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநில எல்லையில் ஏற்படும் இழப்புகள் போக, 12 ஆயிரம் மில்லியன் கனஅடி நீர் வழங்க உறுதி செய்து ஒப்புக்கொண்டுள்ளதால் இடையூறுகள் ஏற்பட சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

(இ) 20—7—1976 அன்று சென்னையில் கிருஷ்ணா நதி நீரைப் பயன்படுத்தும் மாநிலங்களான மகாராட்டிரம், கர்நாடகம், ஆந்திர மாநிலம் மற்றும் தமிழ்நாடு மாநில தொழில் நுட்ப வல்லுநர்கள் அடங்கிய குழு கூடி ஆய்வு செய்தார்கள்.

(ஈ) தலைமைப் பொறியாளர்கள் மட்டத்தில் ஆய்வு செய்தபோது சென்னைக்கு குடிநீர் வசதி செய்யும்பொருட்டு கிருஷ்ணா நதி நீரை குழாய்கள் மூலம் கொண்டு வந்தால் ஆந்திராவிலிருந்து சென்னை வரை நிலவாட்டம் போதுமானதாக இல்லாததினால், அதிக குதிரைத் திறன் கொண்ட விசை இறைப்பிகளை பயன்படுத்தவேண்டும் எனவும், இதனால் திட்டத்தின் மதிப்பீடு மிகவும் அதிகரிக்கும் எனவும், திறந்த வெளிக் கால்வாய் மூலம் தண்ணீரைக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. தவிரவும் ஆந்திர அரசு தமிழ்நாடு எல்லையில் 12 மில்லியன் கனஅடி தண்ணீரை (இழப்புக்கள் போக) தருவதாக ஒப்பந்தம் செய்து உறுதி தந்துள்ளதால் இடையூறு ஏற்பட வாய்ப்பில்லை.

(10–10 மணி)

திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தெலுங்கு கங்கை திட்டத்திற்குத் தேவையான அனுமதியை மத்திய அரசு வழங்கிவிட்டதா? இந்த திட்டத்திற்கு இறுதியாக எவ்வளவு செலவு என்று கணக்கிடப்பட்டிருக்கிறது? அப்படி கணக்கிடப்பட்டு அந்த செலவு செய்து முடிக்கப்பட்ட பிறகு சென்னை நகருக்கு தேவையான தண்ணீர் கிடைக்குமா என்பதை தங்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தெலுங்கு கங்கை திட்டப்பணிகள் கலைஞர் அவர்கள் முயற்சிக்குப் பிறகு, நம்முடைய முதல்வர் அவர்களும் முன்னாள் ஆந்திர முதல்வர் அவர்களும் சேர்ந்து பேசியதற்குப் பிறகு, விரைவுபடுத்தப்பட்ட பிறகு வேகமாக அந்த பணிகள் செயல்பட்டு வருவதை பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும் நானும் நேரிலேயே சென்று

1990 ஜனவரி 22]

அந்த பணிகளைப் பார்வையிட்டு வந்திருக்கிறோம். அந்தப் பணிகள் அங்கே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்காக இருக்கின்ற செலவு மொத்தம் 938 கோடி ரூபாய் ஆகும். அதிலே தமிழ்நாட்டினுடைய பங்கு 251 கோடி ரூபாயாக வும், ஆந்திர மாநிலத்தினுடைய பங்கு 698 கோடி ரூபாயாகவும் இருக்கிறது. இது முதல் கட்ட அளவில் ஒரு நாளைக்கு 400 மில்லியன் லிட்டர் தண்ணீர் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்த பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெலுங்கு கங்கைத்திட்டம் ஆந்திர மாநிலம் வரையிலே குடி தண்ணீரைக் கொண்டுவருவதற்கு ஓப்பன் கேனால் வெட்டித்தான் கொண்டு வருவதாகச் சொல்கிறார்கள். ஆந்திர அரசு அங்கே வேண்டியவர்களுக்கெல்லாம் பாசன வசதி செய்து விட்டுத்தான் அந்த தண்ணீரை இங்கே கொடுப்பதாக ஒப்புதல் அளித்ததாகத் தெரிகிறது. அப்படி இருக்கின்ற நேரத்தில் நம்முடைய சென்னைக்கு குடிதண்ணீர் கொண்டுவருவதற்கு எந்த வழி வகையிலே அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என் பதை அறிவிக்க இயலுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு 15 டி. எம். சி. தண்ணீரை அவர்களிடம் இருந்து பெற்று நம் முடைய எல்லையில், ஆந்திராவிலே இருந்து பிரிகின்ற போது, தமிழகத்திற்கு 12 டி.எம்.சி. தண்ணீரைக் கொடுக்கவேண்டும் என்று ஒப்பந்தமே ஆகியிருக்கின்றது. அவர்கள் ஒப்புக்கொண் டார்கள். ஆந்திர பகுதியிலே அவர்கள் திறந்த கால்வாய் மூல மாகத்தான் தண்ணீரை கொண்டுவருகிறார்கள். எனவே நாம் பெறுகின்ற 12 டி. எம். சி. தண்ணீர் அளவிலே எந்தவிதமான இழப்பும் இருக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த இழப்பும் இருக்காத வகையிலே நிபுணர்கள் குழு ஒன்று கூடிதான் இந்த முடிவுகளை எடுத்திருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, ஏற்கெனவே ஆந்திராவிலேயிருந்த அரசு இந்த திட்டத்தை அக்கறையோடு செய்ததாகப் பத்திரிகையிலே செய்தி வந்தது. இப்போது ஆந்திராவிலே அரசு மாறியுள்ளது. இன்றைய அரசு இந்த திட்டத்திலே அக்கறை செலுத்துகிறதா? அதோடு நம்முடைய அமைச்சர் அவர்கள் தொடர்பு கொண்டிருக்கின்றார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களால் படிக்கப் பெற்று அதற்கு நன்றி கூறுகின்ற வகையில் திரு. பெ. சு. திருவேங்கடம்

அவர்களால் முன்மொழியப்பட்டு, இங்கே விவாதிக்கப்படுகின்ற கவர்னர் உரை விவாதத்தில் நன்றாகக் காணலாம். அந்த உரையிலே இருக்கிறது. ஆந்திர மாநில முதல்வர் திரு. சென்னா ரெட்டி அவர்களுக்குக் கூட பாராட்டு தெரிவித்து அவர்கள் தெலுங்கு கங்கைத் திட்டத்திலே நிச்சயமாக உதவுவார்கள் என நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் என்பதற்காகப் பாராட்டு தெரிவித்திருக்கிறோம். திரு. பெ. சு. திருவேங்கடம் அந்த வரியை மாத்திரம் படிக்காமல் முன்மொழிந்து நன்றி கூறிப் பேசியிருக்கிறார் என்பது தெரிகிறது.

திரு. எம். முத்தையா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மக்கள் அவர்களுடைய எல்லையைக் கடந்து தமிழ்நாட்டிற்கு தண்ணீர் விடுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார் கள் என்பது உண்மையா ? அதைப் பற்றி அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய குறிப்புகள் எதுவும் அரசிடம் இல்லை. அப்படி தனிப்பட்ட புகார்கள் இருக்குமானால் அதைக் குறித்தும் இப்போது இருக் கிற அரசுடன் இந்த அரசு பேச்சுவார்த்தைகள் நடத்தும் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. ஆர். அண்ணாநம்பி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தெலுங்கு கங்கை திட்டம் முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்த திட்டம். இந்த நல்ல திட்டத்தை இன்றைய முதல்வர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த திட்டம் எப்போது முடிவடையும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பிருந்த அரசு கொண்டு வந்த திட்டம் என்பதற்காக நாங்கள் எந்த திட்டத்தையும் கைவிட்டுவிட மாட்டோம்.

(10.15 மணி)

பேராவூரணி பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்.

*203—**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டிட வேலை எப்பொழுது ஆரம்பிக்கப் படும் ?

அவர்களால் முன்மொழியப்பட்டு, இங்கே விவாதிக்கப்படுகின்ற கவர்னர் உரை விவாதத்தில் நன்றாகக் காணலாம். அந்த உரையிலே இருக்கிறது. ஆந்திர மாநில முதல்வர் திரு. சென்னா ரெட்டி அவர்களுக்குக் கூட பாராட்டு தெரிவித்து அவர்கள் தெலுங்கு கங்கைத் திட்டத்திலே நிச்சயமாக உதவுவார்கள் என நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் என்பதற்காகப் பாராட்டு தெரிவித்திருக்கிறோம். திரு. பெ. சு. திருவேங்கடம் அந்த வரியை மாத்திரம் படிக்காமல் முன்மொழிந்து நன்றி கூறிப் பேசியிருக்கிறார் என்பது தெரிகிறது.

திரு. எம். முத்தையா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மக்கள் அவர்களுடைய எல்லையைக் கடந்து தமிழ்நாட்டிற்கு தண்ணீர் விடுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார் கள் என்பது உண்மையா? அதைப் பற்றி அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய குறிப்புகள் எதுவும் அரசிடம் இல்லை. அப்படி தனிப்பட்ட புகார்கள் இருக்குமானால் அதைக் குறித்தும் இப்போது இருக் கிற அரசுடன் இந்த அரசு பேச்சுவார்த்தைகள் நடத்தும் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. ஆர். அண்ணா நம்பி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தெலுங்கு கங்கை திட்டம் முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்த திட்டம். இந்த நல்ல திட்டத்தை இன்றைய முதல்வர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த திட்டம் எப்போது முடிவடையும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பிருந்த அரசு கொண்டு வந்த திட்டம் என்பதற்காக நாங்கள் எந்த திட்டத்தையும் கைவிட்டுவிட மாட்டோம்.

(10.15 மணி)

பேராவூரணி பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்.

*203—**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டிட வேலை எப்பொழுது ஆரம்பிக்கப் படும்?

1990 சனவரி 22]

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நகர் ஊரமைப்பு வாரியக் குழு கூட்டத்தில் இப்பொருள் பற்றி விவாதிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் 3—7—1989ல் வழங்கப் பட்டு விட்டது. பொதுப்பணித்துறையின் தொழில்நுட்ப அனுமதி பெற்ற வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் பேராவூணி பேரூராட்சி நிர்வாக அதிகாரியிடமிருந்து பெறப்பட்டபின்னர் நிதி விடு விக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையக் கட்டிடத்தின் மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு ? எப்போது வேலை துவங்கப்படும் ? அதற்கான ஆயத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டனவா ? சுமார் 2 ஆண்டுக் காலமாக பணிகள் தாமதப்படுத்தப்படுகிறதே, அரசு அப்பணிகளை விரைந்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்து நிலையம் அமைப்பதற்கு பேரூராட்சியின் அறிக்கையின்படி, தற்போது வாரச் சந்தை யுள்ள இடத்தில் 1.74 ஏக்கர் இடத்தில் 20 லட்சம் ரூபாய், மதிப்பீட்டில் அதனை உருவாக்க வேண்டுமென்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பரிந்துரை செய்யப்பட்டு, இந்தப் பரிந்துரை அரசுக்கு 6—2—1989 அன்றுதான் வரப் பெற்றிருக்கிறது. இதற்கு அனுமதி தற்போது வழங்கப்பட்ட நிலைமையில் அந்த மதிப்பீட்டுத் தொகையும், வரைபடமும் நிர்வாக அதிகாரி மூலமாக வரப்பெற்ற உடன் இந்த வேலை நிச்சயமாக தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6—2—1989 என்று சொன்னால் சுமார் ஓராண்டு ஆகிறது. அப்ரூவல் செய்ய ஓராண்டு என்றால் வேலைத் துவங்க எத்தனை ஆண்டுகள் ஆகும்? அநேகமாக இரண்டாயிரத்தி லாவது இந்த வேலை முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான திட்ட மதிப்பீடும், உரிய வரைபடமும் இன்னும் அந்த நிர்வாக அதிகாரியால் அனுப்பப் படவில்லை. அது வந்த உடனே விரைவிலே அந்தப் பணம் விடுவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உடுக்குறியிட்ட வினாக் கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

(1 முதல் 100 வரை)

1—

திருப்பத்தூரில் புதிய பெண்கள் கல்லூரி

வினா எண். 147—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வடாற்காடு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரில் புதிய பெண்கள் கல்லூரி திறக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

பரிசீலனையில் இல்லை.

திருவாரூரில் பெண்கள் கல்லூரி

2—

வினா எண். 538—திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், திருவாரூரில் பெண்கள் கல்லூரி அமைக்க வேண்டும் என்று அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

3—

திருநாகேசுவரம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு வகுப்பறைக் கட்டிடங்கள்

வினா எண். 625—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருநாகேசுவரம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு வகுப்பறைகளுக்கான கட்டிடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 சனவரி 22]

விடை—

இப்பள்ளியின் கட்டிடத் தேவை அரசின் நிதி நிலைமைக்கேற்ப நிறைவு செய்யப்படும்.

4—

கண்ணொளி வழங்கும் திட்டம்

வினா எண். 650—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கண்ணொளி வழங்கும் திட்டம் எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் ?

விடை—

கண்ணொளி வழங்கும் திட்டம் நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவின் மூலம் (Mobile Ophthalmic Unit) எல்லா மாவட்டங்களிலும் கண் சிகிச்சை முகாம் நடத்தி செயல்படுத்தப் பட்டு வருகிறது. 1–1–89 முதல் 30–6–89 வரை 61 முகாம்கள் நடைபெற்று உள்ளன. இதில் பயன் அடைந்தோர் எண்ணிக்கை மொத்தம் 12,515 பேர் ஆகும்.

5—

பாலங்களை விரிவுபடுத்துதல்

வினா எண். 751—திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருமங்கலம் பிரதான கால்வாயில் சின்னக் குறவக்குடி அருகே உள்ள பாலத்தையும் அய்யனார்குளம் அருகே மம்பட்டி பட்டி செல்ல உதவும் பாலத்தையும் நகரப் பேருந்து விட ஏதுவாக விரிவு படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் நிறைவேற்றப் படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

TRUTH ALONE TRIUMPHS

[1990 சனவரி 22

6—

திருவண்ணாமலை நகரில் தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் மகளிர் கல்லூரி

வினா எண். 1024—திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை நகரில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் ஒரு மகளிர் கல்லூரி ஆகியவைகளைத் துவக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

7—

மின் இணைப்புகள் வழங்கப்பட்ட பம்பு செட்டுகள்

வினா எண். 1050—திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பார்ரா :

(அ) தமிழ்நாட்டில் 1967–1976 வரை மின் இணைப்புகள் வழங்கப்பட்ட பம்பு செட்டுகள் எத்தனை ?

(ஆ) 1977–1987 வரை மின் இணைப்புகள் வழங்கப்பட்ட பம்பு செட்டுகள் எத்தனை ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் 1967–1976 வரை உள்ள நிதி ஆண்டில் மின் இணைப்புகள் வழங்கப்பட்ட பம்பு செட்டுகளின் எண் ணிக்கை 4,79,725.

(ஆ) 1977–1987 வரை உள்ள நிதி ஆண்டில் மின் இணைப்பு வழங்கப்பட்ட பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 4,04,631.

8—

திட்டச்சேரியில் மேல் நிலைப் பள்ளி அமைத்தல்

வினா எண். 1180—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திட்டச்சேரியில் மேல் நிலைப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 சனவரி 22]

விடை—

தஞ்சை மாவட்டம், திட்டச்சேரியில் மேல்நிலைப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

9 —

நிலக்கோட்டையில் இரண்டு அரசு கல்லூரிகள்

வினா எண். 1431—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) நிலக்கோட்டைத் தொகுதியில் ஆண்-பெண் இருபாலருக்கும் இரண்டு அரசு கல்லூரிகள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை —

(அ) மற்றும் (ஆ) ; அவ்வாறான கருத்துரு ஏதும் பெறப் படவில்லை.

10 —

விருத்தாசலத்தில் பெண்கள் கல்லூரி

வினா எண். 1675—திரு. கோ. பூவராகன் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலத்தில் பெண்கள் கல்லூரி அமைக்கும் உத்தேசம் அரசிடம் உண்டா ?

(ஆ) எப்போது அமைக்கப்படும் ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

11 —

மேட்டூர் நகரத்தில் கலைக் கல்லூரியும், தொழில் நுட்பக் கல்லூரியும் அமைத்தல்

வினா எண். 1717—திரு. எம். சீரங்கன் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

சேலம் மாவட்டம், மேட்டூர் நகரத்தில் கலைக் கல்லூரியும், தொழில் நுட்பக் கல்லூரியும் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை —

இல்லை.

12 —

கெட்டிச்செவியூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடப் பணிகள்

வினா எண். 1794 —திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

பெரியார் மாவட்டம், கோபி தொகுதி கெட்டிச்செவியூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடப் பணிகள் எப்போது துவங்கப்பட உள்ளன ?

விடை —

வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் (HUDCO) நிதி உதவியுடன் 1989–90 ஆம் ஆண்டில், 120 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவமனை மற்றும் குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. கெட்டிச்செவியூர் ஆரம்ப சுகாதார நிலையமும் இத்திட்டத்தில் அடங்கும்.

13 —

பர்கூரில் சட்டக் கல்லூரி துவங்குதல்

வினா எண். 1920—திரு. கே. ஆர். இராஜேந்திரன் மற்றும் திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தர்மபுரி மாவட்டம், பர்கூரில் சட்டக் கல்லூரி துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், இக்கல்லூரி 1989–90-ல் துவக்கப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பர்கூரில் சட்டக் கல்லூரி அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

1990 சனவரி 22]

14—

திருமங்கலம், சேடப்பட்டி தொகுதிகளில் அரசுக் கல்லூரி.

வினா எண். 2069—திரு. ஆ. அதியமான் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதியிலும் சேடப்பட்டி தொகுதியிலும் அரசுக் கல்லூரி ஏற்படுத்த அரசு முன் வருமா ?

விடை—

அவ்வாறான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

15—

சங்ககிரியில் மகளிர் கல்லூரி.

வினா எண். 2200—திரு. ஆர். வரதராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

சேலம் மாவட்டம் சங்ககிரியில் மகளிர் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

அவ்வாறான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

16—

தனித்தனி மதகுகள் அமைத்தல்.

வினா எண். 2304—திரு. வ. அன்பழகன் ; மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தண்டரை அணைக்கட்டு கால்வாயில் வட எலப்பாக்கம் ஏரிக்கும் பல்லி ஏரிக்கும் தனித்தனி மதகு அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—

மேற்படி பணி 1989–90 ஆம் ஆண்டில், கூடுதல் உணவு உற்பத்திக்கான செயல் திட்டத்தின் கீழ் ரூ. 50,000 மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

17—

பூம்புகாருக்கு மேற்கில் பாலிடெக்னிக் அமைத்தல்

வினா எண். 2353—திரு. ஏ. செங்குட்டுவன் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) கண்ணகி கோட்டம் அமைந்துள்ள பூம்புகாருக்கு மேற்கில் (பாலிடெக்னிக்) தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை --

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

18—

கொள்ளிடம் ஆற்றில் பாலம் கட்டுதல்

வினா எண். 2366—திரு. ஏ. செங்குட்டுவன் ; மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) மயிலாடுதுறை தாலுகாவில் உள்ள மணல்மேடு என்ற ஊரையும், தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார்குடி என்ற ஊரையும் இணைத்து கொள்ளிடம் ஆற்றில் அரசு பாலம் அமைத்துத் தரும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை -

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

19—

கீர்த்திமானாறு வடகோறையாறுகளில் பாலங்கள் கட்டுதல்.

வினா எண். 2482—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம் பேரளம்—அன்னியூர் சாலையில் கீர்த்திமானாறு வடகோறையாறுகளில் பாலங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படும் ?

1990 சனவரி 22]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

20—

பெண்களுக்கு 18 வயதுக்குள்ளாகவே திருமணம் நடந்ததாகப் புகார்.

வினா எண். 2561—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெண்களுக்கு 18 வதுயக்குள்ளாகவே திருமணம் நடந்ததாக 1987–88, 1988–89 ஆம் ஆண்டுகளில் அரசுக்கு எத்தனை புகார் வந்துள்ளன ?

(ஆ) அவற்றின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ)—

பெண்களுக்கு 18 வயதுக்குள் திருமணம் நடந்ததாக 1987-88ல் நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் வந்த ஒரு புகாரின் மீது நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, வழக்கின் முடிவில் குற்றவாளியல்ல எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. 1988–89-ல் 6 புகார்கள் வந்துள்ளன. அவற்றில் 2 வழக்குகள் புலன் விசாரணையிலுள்ளன. 3 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. ஒரு வழக்கு உண்மையல்ல என்ற காரணத்தில் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டது.

21—

வீரசோழன் ஆற்றில் பாலம் கட்டுதல்.

வினா எண். 2589—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம் மங்கநல்லூர் வானவராயன் குப்பம் எல்லையில் வீரசோழன் ஆற்றில் பாலம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும் ?

விடை—.

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

22—

விக்ரமன் பாலம்.

வினா எண். 2590—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், குத்தாலம் பந்தநல்லூர் சாலையில் விக்ரமன் பாலம் பழுதுபட்டு விட்டதால் புதிய பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

23—

காவேரி ஆற்றில் பாலம்.

வினா எண். 2591—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், மல்லியம் வாணாதிராயபுரம் சாலையில் உள்ள காவேரி ஆற்றில் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

24—

நண்டலாற்றில் பாலம் கட்டுதல்.

வினா எண். 2592—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், காஞ்சிவாய்—எழவேலி சாலை நண்டலாற்றில் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 சனவரி 22]

25—

குடமுருட்டி ஆற்றில் பாலம் கட்டுதல்.

வினா எண். 2594—திரு. இரெ. இராசமாணிக்கம் ; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம் செருகளத்தூர்—ராதாநல்லூர் சாலை குடமுருட்டி ஆற்றில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

26—

முடிகொண்டான் ஆற்றில் பாலம் கட்டுதல்

வினா எண். 2597—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம் சேதினிபுரம்—சீதக்கமங்கலம் சாலையில் முடிகொண்டான் ஆற்றில் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

/1990 சனவரி 22

27—

மதுரை மாநகரின் தென்பகுதியில் அரசு மகளிர் கலைக்கல்லூரி அமைத்தல்

வினா எண். 2614— திரு. சோ. பால்ராஜ்; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரின் தென்பகுதியில் அரசின் சார்பில் மகளிர் கலைக் கல்லூரி புதிதாக அமைத்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படத் தொடங்கும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

28—

திருக்கழுக்குன்றத்தில் அரசு கல்லூரி அமைத்தல்

வினா எண். 2655—திரு. வீ. தமிழ்மணி; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றத்தில் அரசு கல்லூரி அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

29—

மதுராந்தகத்தில் உள்ள நீதிமன்றங்களுக்கு கட்டிட வசதி.

வினா எண். 2803—திரு. எஸ். டி. உகம்சந்த்; மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) மதுராந்தகத்தில் உள்ள நீதிமன்றங்களுக்கு கட்டிட வசதி செய்து தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இவ்வேலை உடனடியாக எடுக்கப்படுமா?

1990 சனவரி 22]

விடை—

(அ) மற்றும் (ஆ) :

செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் நகரிலுள்ள நீதிமன்றங்களுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக தேவையான நிலத்தை தேர்ந்தெடுக்க செங்கை அண்ணா மாவட்ட நீதிபதியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தகுந்த நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கையகப்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்றக் கட்டிடம் கட்டுவதற்கான வரை படமும் மதிப்பீடும் உயர்நீதி மன்றத்திடமிருந்து பெறப்பட்டு நிதி நிலைக்கேற்ப மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

30—

திருவாதூர் ஊராட்சி மன்றத்தைப் பிரித்தல்,

வினா எண். 2814— திரு.எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை அண்ணா மாவட்டம், லத்தூர் ஊராட்சி ஒன்றியம் திருவாதூர் ஊராட்சி மன்றத்தைப் பிரிக்க அரசு நடவடிக்கை எடுக்கக் கோரி கோரிக்கை உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், உத்தரவு வழங்கப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

31—

திருப்பெரும்புதூர் வட்டத்தில் புதிதாக அரசு மேல்நிலைப்பள்ளி அமைத்தல்.

வினா எண். 3174—திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பெரும்புதூர் வட்டத்தில் புதியதாக அரசு மேல் நிலைப்பள்ளி அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : திருப்பெரும்புதூர் வட்டத்தில் புதிதாக அரசு மேல்நிலைப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

32—

மணப்பாறை நகராட்சியில் கலைக்கல்லூரி.

வினா எண். 3190—திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை நகராட்சியில் கலைக்கல்லூரி துவங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

33—

தலைவாசலில் பெண்கள் பாலிடெக்னிக்.

வினா எண். 3192—திரு. எஸ். குணசேகரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தலைவாசலில் பெண்கள் பாலிடெக்னிக் ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

34—

சிதம்பரத்தில் பெண்கள் கல்லூரி

வினா எண். 3258—டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரத்தில் பெண்களுக்கு என்று ஒரு தனிக் கல்லூரி அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 சனவரி 22]

35—

பெருமாநல்லூரில் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

வினா எண். 3340—திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், திருப்பூரில் உள்ள பெருமாநல்லூரில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியை (அரசு) மேல்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

36—

ஈரோட்டில் கலைக்கல்லூரி அமைத்தல்

வினா எண். 3389—திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், ஈரோட்டில் ஆண், பெண் இருபாலரும் பயன்பெறத்தக்க வகையில் ஒரு கலைக்கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

37—

சொர்ணக்காடு சி. எம். பி. வாய்க்காலில் பாலம் கட்டுதல்.

வினா எண். 3401—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சொர்ணக்காடு சி. எம். பி. வாய்க்காலில் ஒரு பாலம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

38—

அரூர் வட்டத்தில் அரசு கலைக்கல்லூரி

வினா எண். 3505—திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் அரசினர் கலைக்கல்லூரி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தக் கல்வி ஆண்டு துவக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

39—

ஏரியூரில் மேல்நிலைப்பள்ளி அமைத்தல்

வினா எண். 3541—திரு. ந. நஞ்சப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், ஏரியூரில் மேல்நிலைப் பள்ளி இவ்வாண்டில் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

தருமபுரி மாவட்டம், ஏரியூரிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை 1989-90ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட பரிந்துரைக்கப்படவில்லை.

40—

பெண்ணாகரத்தில் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி

வினா எண். 3542—திரு. ந. நஞ்சப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1990 சனவரி 22]

விடை—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் உள்ள அரசு மகளிர் உயர் நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்துவதற்குக் கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

41—

பெரியகுளத்தில் ஆண்கள் கல்லூரி.

வினா எண் 3550—திரு. எல். மூக்கையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளத்தில் ஆண்கள் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்பொழுது ஆரம்பமாகும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

42—

பரமக்குடியில் கல்லூரி நிறுவுதல்.

வினா எண் 3612—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் ஒரு கல்லூரி நிறுவ அரசு ஆவன செய்யுமா ?

விடை—

அவ்வாறான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

43—

முதுகுளத்தூரில் அரசு பெண்கள் கல்லூரி.

வினா எண் 3837—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரில் அரசு பெண்கள் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும் ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

44—

கிருஷ்ணகிரியில் மகளிர் கல்லூரி.

வினா எண் 3892—டாக்டர் க காஞ்சனா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரியில் மகளிர் கல்லூரி ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

45—

சத்திரக்குடியில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி.

வினா எண் 3930—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, சத்திரக்குடியில் அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளி நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

46—

கிருஷ்ணராயபுரத்தில் அரசு தொழில் நுட்பக் கல்லூரி.

வினா எண் 4061—திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், கிருஷ்ணராயபுரத்தில் அரசு தொழில் நுட்பக் கல்லூரி ஒன்று அமைக்கப்படுமா ?

விடை—

இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 சனவரி 22]

47—

கூடலூரில் கல்லூரி அமைத்தல்.

வினா எண் 4103—திரு. கே. ரமணி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், கூடலூரில் கல்லூரி ஒன்று அமைக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

விடை—

இல்லை.

48—

மேலூர் அரசு கலைக் கல்லூரிக்கு கூடுதல் கட்டிடம்.

வினா எண் 4160—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூர் அரசு கலைக் கல்லூரிக்கு கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

இப்பொருள் சம்பந்தமான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. நிதியின்மையே இதற்குக் காரணமாகும்.

49—

வேடசந்தூரில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி அமைத்தல்.

வினா எண் 4381—திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூரில் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு ஏற்படுத்தப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூரில் அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளி அமைக்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

50—

களத்தூர்—சித்துக்காடு ஆவணம் உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக்குதல்.

வினா எண் 4555—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணித் தொகுதி, பேராவூரணி ஒன்றியம் களத்தூர்—சித்துக்காடு ஆவணம் உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

51—

கோவை, பெரியார் மாவட்டங்களில் ரூட் பெர்மிட்.

வினா எண் 317—திரு. மு. இராமநாதன் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை, பெரியார் மாவட்டங்களில் ஏற்கனவே தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத்திற்கு ரூட் வழங்கப்பட்டு மேற்கண்ட போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் செல்லும் அதே வழித்தடத்தில், கடந்த 1985-86, 1986-87, 1987-88 ஆகிய ஆண்டுகளில் தனியார் கம்பெனிகளுக்கும் ரூட் பர்மிட் வழங்கப்பட்டிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி ஆண்டுகளில் எந்தெந்தக் கம்பெனிகளுக்கு, எந்தெந்த வழித்தடங்களில் ரூட் பர்மிட் வழங்கப்பட்டுள்ளது ?

(இ) எந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1987-88-ல் கோவை மாவட்டத்தில் ஒரு உரிமம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. பெரியார் மாவட்டத்தில் மேற்சொன்ன ஆண்டுகளில் உரிமம் ஏதும் வழங்கப்படவில்லை. திரு. ஜெயராஜ் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்தவருக்கு கோவையில் காந்தி பார்க் முதல் காந்தி பார்க் நகர வழித்தடத்தில் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

1990 சனவரி 22]

(இ) அனுமதிதாரர் தாழ்த்தப்பட்ட வகுப்பினை சார்ந்தவர் என்ற அடிப்படையில் பேருந்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உரிமம் வழங்கப்பட்டதை எதிர்த்து திருவாளர்கள் சேரன் போக்கு வரத்துக் கழகம் கோவை உயர்நீதிமன்றத்தில் தடை உத்திரவு பெற்றுள்ளதால் இன்னும் அனுமதி வழங்காமல் வாகனம் இயக்கப் படாமல் உள்ளது.

52—

குருவாரெட்டியூர், அத்தாணி ஆகிய ஊர்களில் அரசினர் பெண்கள் விடுதியும், ஆண்கள் விடுதியும் திறத்தல்.

வினா எண். 933 திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் தொகுதி, குருவாரெட்டியூர், அத்தாணி ஆகிய ஊர்களில் அரசினர் பெண்கள் விடுதியும் ஆண்கள் விடுதி யும் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும் ?

விடை—

(அ) அந்தியூர் தொகுதி, குருவாரெட்டியூரில் ஒரு அரசு மாணவர் விடுதி துவக்கவும், அத்தாணி, கள்ளிப்பட்டி, பங்களா புதூர், தூக்க நாயக்கன்பாளையம் ஆகிய ஊர்களில் உள்ள பள்ளி களில் பயிலும் ஆதி திராவிட மாணவ மாணவியர்களின் வசதிக் காக தூக்க நாயக்கன் பாளையத்தில் மாணவர் மற்றும் மாண வியர் விடுதிகளைத் துவக்க செயற்குறிப்பு பெறப்பட்டுள்ளது.

(ஆ) 1990-91 ஆம் ஆண்டில் அத்தியாவசியம் மற்றும் நிதி வசதியைப்பொறுத்து அவை பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப் படும்.

53—

அந்தியூர் தொகுதியில் தொகுப்பு வீடுகள்

வினா எண். 939 திரு. வே. பெரியசாமி ; மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் தொகுதியில் உள்ள ஆதி திராவிட கால னியில் கட்டப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள் எத்தனை ?

(ஆ) அவற்றில் மின் இணைப்பு வழங்கப்பட்ட வீடுகள் எத்தனை ?

விடை—

(அ) 661 வீடுகள்.

(ஆ) 298 வீடுகள்.

54—

திருப்பூரிலுள்ள மாவட்ட அரசு மருத்துவ மனைக்கு பல் மருத்துவர்.

வினா எண். 960—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூரிலுள்ள மாவட்ட அரசு மருத்துவ மனையில் காலியாக உள்ள பல் மருத்துவர் காலியிடம் எப்போது நிரப்பப்படும்?

விடை—

20—4—89 முதல் நிரப்பப்பட்டுவிட்டது.

55—

அட்டக்குளம் தச்சன்விளாகம் சாலை

வினா எண் 1134—திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆர். எல். இ. ஜி. பி. திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அட்டக்குளம்—தச்சன்விளாகம் சாலை அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை. 1989-90 ஆம் ஆண்டு முதல் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்படி ஊராட்சிகள் தனக்குத் தேவையான பணிகளை நிறைவேற்றிக்கொள்ள முழு உரிமையும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையும், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அதற்கு அளிக்கப்பட்டுள்ள 20 சதவிகித தொகையிலும், தேவையான பணிகளைச் செய்யலாம். எனவே, சம்பந்தப்பட்ட ஊராட்சி, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பணியினைத் தேர்ந்தெடுத்து நிறைவேற்ற தீர்மானம் இயற்றி செய்து கொள்ளலாம்.

1990 சனவரி 22]

56—

குஜிலியம்பாறை-ஆர். வெள்ளோடு மற்றும் குஜிலியம்பாறை— ஆத்துமேடு நகரப் பேருந்து.

வினா எண். 1161—திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

குஜிலியம்பாறை—ஆர். வெள்ளோடு (வழி) மல்லப்புரம் குலப்புரம், குஜிலியம்பாறை—ஆத்துமேடு (வழி) பாளையம் சேர்வைகாரன்பட்டி சென்று வரும் நகரப் பேருந்து குறிப்பிட்ட நேரத்தில் முறையாக சென்றுவர ஏற்பாடு செய்யப்படுமா?

விடை —

குஜிலியம்பாறை—ஆர். வெள்ளோடு (வழி) மல்லப்புரம், குலப்புரம் மற்றும் குஜிலியம்பாறை—ஆத்துமேடு (வழி) பாளையம், சேர்வைக்காரன்பட்டி என்ற வழித்தடங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் நகரப் பேருந்தானது அப்பேருந்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையில் சரியாக ஓடிக்கொண்டிருக்கிறது. மேலும் எக்காரணங் கொண்டும் கால அட்டவணையில் தாமதமின்றி சரியான முறையில் டிரிப் கட் இல்லாமல் இயக்க சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

57 —

பல்லவன் குளம் ஏரி.

வினா எண். 1226—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், பல்லவன்குளம் ஏரியின் நீர் செம்பூர், பரசநல்லூர் மற்றும் குறிஞ்சி காடுகளுக்கு செல்வது தடுக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை —

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், பல்லவன்குளம் ஏரியின் நீர் செம்பூர், பரசநல்லூர் மற்றும் குறிஞ்சி காடுகளுக்கு செல்வது தடுக்கப்படவில்லை. ஆனால் சென்ற சில ஆண்டுகளில் போதிய நீர் ஏரிக்கு வராததால் கடைகோடியிலுள்ள நிலங்களுக்கு நீர் செல்லவில்லை. மேலும் ஏரிக்கு நீர் வரும் கால்வாய்கள் தூர்ந்துள்ளன.

(ஆ) கால்வாய்களின் தூர் எடுக்கும் பணியினை குடிமராமத்து மூலம் மேற்கொள்ள வேண்டும்.

58—

காமராஜர் ஆதி திராவிடர் வீட்டுவசதி புதிய திட்டம்.

வினா எண். 1407 — திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெருந்தலைவர் காமராஜ் வீடுகட்டும் திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் மாநிலம் முழுமைக்கும் சாங்ஷன் செய்யப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) தீப்பிடிக்காத வீடுகள் கட்டும் திட்டத்தின் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் எல்லா இனத்தவர்களுக்கும் இதனை விரிவாக்கும் உத்தேசம் உள்ளதா ?

விடை —

(அ) சிறப்புத் திட்டமான காமராஜர் ஆதி திராவிடர் வீட்டு வசதி புதிய திட்டத்தின் கீழ் 1988-89-ஆம் ஆண்டில் மட்டும், அடிக்கடி இனக்கலவரம் ஏற்படும் கிராமங்களில் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் 8,000 தீப்பிடிக்காத வீடுகள் கட்ட ஒப்புதல் வழங்கப் பட்டது.

(ஆ) இத்திட்டம் சிறப்புத் திட்டமாக 1988-89-ஆம் ஆண்டுக்கு மட்டிலுமே செயல்படுத்தப்பட்டதால் இக்கேள்வி எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1990 சனவரி 22]

59—

திருக்கழுக்குன்றம் கூட்டுறவு வேளாண்மை பொறியியல் பணி மையம்

வினா எண். 1607 —திரு. வீ. தமிழ்மணி ; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருக்கழுக்குன்றம் கூட்டுறவு வேளாண்மை பொறியியல் பணி மையத்தில் வட்டார மேலாளர் பதவி நிரப்பப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) தற்போது கடம்பத்தூர் வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு மையத்தில் பணியாற்றிவரும் திரு. எம்.சி. முத்து என்பவரை மாற்றம் செய்து திருக்கழுக்குன்றம் வேளாண் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு மையத்தின் வட்டார மேலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (அவர் விரைவில் திருக்கழுக்குன்றம் வேளாண் பொறியியல் பணிக்கூட்டுறவு மையத்தில் பணிக்கு சேருவார்.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

60—

சென்னை—மானாம்பதி பேருந்து

வினா எண். 1610—திரு. வீ. தமிழ்மணி ; மாபுண்மிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மூலம் சென்னை—மானாம்பதிக்கு விடப்பட்டு வந்த இரு பேருந்துகளில் ஒன்று நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் இரண்டு பேருந்துகளையும் விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1990 சனவரி 22

விடை—

(அ) மற்றும் (ஆ) :

சென்னை—மானாம்பதி வழித்தடத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் இரு பேருந்துகளை எப்போதும் இயக்கிடவில்லை. பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திலிருந்து சென்னை—மானாம்பதி வழித் தடத்தில் ஒரு பேருந்தினை மட்டுமே இயக்கும் வகையில் தட உரிமம் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. அந்த ஒரு பேருந்தினை தற்போது தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது.

61—

திருப்பத்தூரில் உள்ள மாவட்டக் கல்வி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டுதல்

வினா எண். 1847—திரு. ப. சுந்தரம் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வட ஆற்காடு, டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள மாவட்டக் கல்வி அலுவலகத்திற்குச் சொந்தமாக ஒரு கட்டிடம் கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

62—

சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளர் மீது ஊழல் குற்றச்சாட்டுகள்

வினா எண். 2170—திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளர் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் ஏதாவது அரசின் கவனத்திற்கு கொண்டுவரப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

1990 சனவரி 22]

விடை—

(அ) ஆம்.

(ஆ) இக்குற்றச்சாட்டுக்கள் மீது விசாரணை நடத்தி அறிக்கை அனுப்புமாறு சென்னைப் பல்கலைக்கழக துணை வேந்தர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். விசாரணை தொடர் கிறது.

63—

ஜவ்வாது மலை ஒன்றியத்திற்கு ஜமுனா மரத்தூரில் புதிய அலுவலகம் கட்டுதல்.

வினா எண். 2459—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) ஜவ்வாது மலை ஒன்றியத்திற்கு ஜமுனா மரத்தூரில் புதிய அலுவலகம் கட்டப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஜவ்வாது மலையில் உள்ள ஜமுனா மரத்தூரில் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடம் அரசு ஆணை எண். 658, ஊரக வளர்ச்சித்துறை (திட்டம் 1) நாள்: 4—9—1985-ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ. 12.40 லட்ச மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரப்படுகிறது. தற்போது வெள்ளை அடித்தல், வர்ணம் பூசுதல் மற்றும் மின்சாதனம் பொருத்தும் பணி களைத் தவிர மற்ற அனைத்து வேலைகளும் முடியும் தருவாயில் உள்ளது.

64—

கூட்டுறவு வேளாண்மை பொறியியல் பணி மையங்கள்

வினா எண். 2588—திரு இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவு வேளாண்மை பொறி யியல் பணி மையங்கள் எத்தனை உள்ளது ?

(ஆ) அவைகளில் எத்தனை டிராக்டர்கள் உள்ளன?

(இ) இலாபத்தில் இயங்கக்கூடிய பணி மையங்கள் எத்தனை ?

விடை—

(அ) வட்டார அளவிலான விவசாயப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு மையங்கள் ..	169
மாவட்ட அளவிலான கூட்டுறவு வேளாண்மை பணிச் சங்கங்கள்	12
மொத்தம் ..	181

(ஆ) மேற்குறிப்பிட்ட பணி மையங்களில் உள்ள டிராக்டர்களின் எண்ணிக்கை .. 154

(இ) 30—6—1989 முடிய 1988—89ஆம் ஆண்டில் 147 மையங்கள் இலாபத்தில் இயங்கின.

65—

மதுராந்தகம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்

வினா எண். 2727—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுராந்தகம் கூட்டுறவு ஒழுங்குமுறை கூடம் சரியாக செயல்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இங்கு விவசாயிகள் உற்பத்தி செய்து விற்பனைக்கு வரும் பொருட்களைப் பற்றி சரியாக விளம்பரம் செய்யப் படுவதில்லை என்பது உண்மையா?

விடை—

(அ) மதுராந்தகம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் நல்ல முறையிலேயே இயங்கி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் வறட்சியினால் வரத்து சற்று குறைவானது. வரத்துக்களை அதிகரிக்க தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. வருவாயிலும் இந்த விற்பனைக் கூடத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது.

(ஆ) இங்கு விவசாயிகள் உற்பத்தி செய்து விற்பனைக்கு வரும் பொருட்கள் பற்றி விளம்பரம் சரியாக செய்வது இல்லை என்பது சரியல்ல. ஒழுங்குமுறை விற்பனைக்கூடப் பணியாளர்கள் (வணிகமுறை) தரம் பிரிப்புப் பணியாளர்களும் சீராக கிராமங்களுக்குச் சென்று விளம்பரம் செய்து வருகின்றனர்.

1990 சனவரி 22]

66—

மதுராந்தகம்-திருப்பதி பேருந்து

வினா எண் 2747—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம்—திருப்பதிக்கு (வழி) செங்கற்பட்டு, காஞ்சிபுரம் பேருந்து விட டி. பி. டி. சி. நிறுவனம் முன் வருமா?

விடை—

மதுராந்தகத்திலிருந்து செங்கற்பட்டு, காஞ்சிபுரம், திருத்தணி மற்றும் ரேணிகுண்டா வழியாக திருப்பதி வரையிலான தடம், தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலங்களை கலந்து வரும் இரு மாநிலங்களுக்கிடையிலான வழித் தடமாதலால் இத்தடத்தில் இவ்விரு மாநிலங்களுக்கிடையிலான வழித்தட ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் பேருந்தை இயக்க இயலும். தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலங்களுக்கிடையே மேற்கொள்ளப்படும் வழித்தட ஒப்பந்தத்தில் இத்தடத்தையும் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

67—

குடிசை மாற்று வாரிய வீட்டின் மதிப்பு

வினா எண் 2820—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை நகரில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டிக் கொடுக்கப்படும் ஒரு வீட்டின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) மற்ற நகரங்களில் கட்டப்படும் வீடுகளின் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) சென்னை நகரில் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக தற்போது கட்டிக் கொடுக்கப்படும் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் ஒரு குடியிருப்புக்கு ஆகும் சராசரி கட்டுமானச் செலவு ரூ. 35,000.

(ஆ) சென்னை தவிர இதர நகரங்களில் தற்போது கட்டிக் கொடுக்கப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு சராசரி கட்டுமான செலவு ரூ. 32,000.

[1990 சனவரி 22

68—

கீழ்பவானி வாய்க்காலை நவீனப்படுத்துதல்

வினா எண் 3022—திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கீழ்பவானி வாய்க்காலை நவீனப்படுத்தி (சிமெண்ட் பிளாஸ்டிரிங்) பாசனத்தை முறைப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

கீழ்பவானி வாய்க்காலை நவீனப்படுத்தும் (லைனிங்) திட்டம் தற்போது தல அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான வரைபடங்கள் மற்றும் முன்னோடித் திட்ட அறிக்கை 1990ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் தல அதிகாரிகளிடமிருந்து பெற்று, தலைமை பொறியாளர் (ஆய்வு) அவர்களின் பரிசீலனைக்குப் பிறகு அவரது கருத்துரு பெற்ற பின்னர் உரிய நடவடிக்கை அரசால் எடுக்கப்படும்.

69—

தேரெழுந்தூரில் கம்பர் விழா

வினா எண் 3075—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தேரெழுந்தூரில் ஆண்டுக்கு ஒரு முறை தமிழ் பண்பாட்டுத்துறை மூலம் கம்பர் விழா கொண்டாடப்பட்டு வருகிறதா?

(ஆ) சென்ற ஆண்டு அரசு மூலம் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

விடை :

(அ) கம்பர் விழா அரசு சார்பாக தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் முதனிலையில் 1985 ஆம் ஆண்டு 30–3–1985 31–3–1985 ஆகிய இரு நாட்களில் தஞ்சை மாவட்டம் தேரெழுந்தூரில் கொண்டாடப்பட்டது. 1986ஆம் ஆண்டு 15–3–1986ஆம் நாளிலும், 1987ஆம் ஆண்டு 10–5–1987 ஆம் நாளிலும் கம்பர் விழா கொண்டாடப்பட்டது கம்பர்

1990 சனவரி 22]

விழாவை இந்து சமய அறநிலை ஆட்சித்துறையே நடத்த வேண்டும் என அரசு முடிவு செய்திருந்ததால் 1988 ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சித் துறையால் இவ்விழா நடத்தப்பட வில்லை.

(ஆ) இந்நிலையில் சென்ற ஆண்டு கம்பர் விழா கொண்டாடப்படவில்லை. இவ்வாண்டு கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது.

70—

தமிழகத்திற்கு வரும் வெளி மாநில போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்.

வினா எண் 3096—திரு. என். பழனிவேல் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எந்தெந்த வெளி மாநில போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தமிழகப் பேருந்து நிலையங்களுக்கு வந்து செல்கின்றன ?

(ஆ) அதனால் தமிழக அரசுக்கு வருவாய் ஏதும் உண்டா ?

விடை—

(அ) தமிழகத்திற்கும் அண்டை மாநிலங்களுக்கும் இடையே பேருந்துகளை இயக்குவதற்காக ஏற்பட்ட ஒப்பந்த அடிப்படையில் கேரளம், பாண்டிச்சேரி, கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தமிழகப் பேருந்து நிலையங்களுக்கு வந்து செல்கின்றன.

(ஆ) தமிழகத்தைச் சார்ந்த பல்வேறு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்துகளுக்கு ஒவ்வொரு தடத்திலுள்ள பேருந்து நிலையங்களுக்குண்டான கட்டணங்கள் நடத்துநர்களால் தினசரி வசூலிலிருந்து கொடுக்கப்படுகின்றன. அதைப் போலவேதான் வெளி மாநில போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் தமிழகத்தில் இயங்கும் தடத்தில் உள்ள பேருந்து நிலையங்களுக்குண்டான கட்டணம் கொடுக்கப் பட வேண்டும். அந்த வகையில் வருவாய் வர வாய்ப்புள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1990 சனவரி 22

71—

வெளி மாநிலங்களுக்கு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்

வினா எண் 3098—திரு. என். பழனிவேல் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், எந்தெந்த வெளி மாநிலங்களுக்கு சென்று வருகின்றன ?

(ஆ) மாநிலவாரியாக அப்படிச் சென்று வரும் பேருந்துகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் கீழ்க்கண்டவாறு அண்டை மாநிலங்களுக்குப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன:—

கேரளா	..	..	178
ஆந்திரப்பிரதேசம்	..	..	155
கர்நாடகா	..	..	205
பாண்டிச்சேரி	..	..	211

72—

தேவியாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

வினா எண் 3117—திரு. வி. பி. இராசன் ; மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசபாளையம் தொகுதியில் தளவாய்புரம்–புத்தூர் சாலையில் தேவியாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கான வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ) மத்திய சாலை நிதியின் கீழ் மைய அரசின் பண உதவி கோரி பரிந்துரைக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ரூ. 24.00 இலட்சம்.

1990 சனவரி 22]

73—

மதுரை புதிய பேருந்து நிலையம்

வினா எண் 3201—திரு. இரா. சாமிநாதன்; மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் உள்ள புதிய பேருந்து நிலையத்தை தார் போட்டு சீர் செய்ய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மதுரை நகரில் உள்ள பெரியார் பேருந்து நிலையத்தில் இட நெருக்கடி ஏற்பட்டதால், பேருந்து நிலையத்தின் எதிர் புறத்தில் உள்ள மகாகவி பாரதியார் வணிக மையத்தில் உள்ள காலியிடத்தில், தற்காலிகமாக பஸ்கள் நிறுத்த ஏற்பாடு செய்யப்பட்டன. தற்காலிகமாக உபயோகத்தில் உள்ளதால், தார் சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், மதுரை மாநகரில் புதியதாக மதுரை—மேலூர் சாலையில் ஓர் ஒருங்கிணைந்த பஸ் நிலையம் அமைக்கப்பட உள்ளது. எனவே, தற்காலிகமாக தற்போது பஸ்கள் நிறுத்தும் இடத்தில் தார் சாலை அமைப்பது அவசியமாகத் தோன்றவில்லை.

74—

மராமத்து செய்தல்

வினா எண். 3423—திரு. கோ. வீரையன்; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளையாற்று பிரிவில் காவேரி (குண்டான், சந்திரநதி ஆறுகள்) ஏர்வக்காட்டில் இருந்து பிரதாபராமபுரம் வரை பல ஆண்டுகளாக மராமத்து செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மராமத்து செய்து தர அரசு முன் வருமா?

விடை —

(அ) மற்றும் (ஆ):

காவிரி கொண்டவாற்றில், நடப்பு ஆண்டு கூடுதல் உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் 5 வேலைகள் ரூ. 2.53 இலட்சத்திற்கு ''மண்வாரி இயந்திரம்'' மூலம் ஜூன்,

[1990 சனவரி 22

ஜூலை மாதங்களில் மராமத்துப்பணிகள் செயல்படுத்தப் பட்டன. இதைத் தவிர பிரதாபராமபுரம் வாய்க்கால் மைல் 1/0 முதல் 5/0 வரை மண் திட்டுகள் அகற்றும் பணி " மண்வாரி இயந்திரம் " மூலம் ரூ. 60,000 செலவில் செய்யப் பட்டன.

75—

செய்யாறு நகரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்குப் புதிய பணிமனை கட்டுதல்

வினா எண் 3563—திரு. வ. அன்பழகன் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செய்யாறு நகரில் உள்ள பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்குப் புதிய பணிமனை கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

விடை—

செய்யாறு நகரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்கு வரத்துக் கழகத்திற்கு புதிய பணிமனை கட்டுவதற்காக செய்யாறு வட்டம், புளியரம்பாக்கம் கிராமத்தில் 24/2 சர்வே எண்ணுடைய தோப்பு புறம்போக்கு நிலத்தில் 4 ஏக்கர் நிலம் நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெறுவதற்கு முயற்சிக் கப்படுகிறது. நிலம் அவ்வாறு கிடைக்கப் பெற்றவுடன் பணி மனை கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

76—

விவசாய வருமான வரி

வினா எண் 3595—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா ;

தமிழக விவசாய வருமான வரி வருமானமும் இதை வசூலிக்கின்ற முறையில் ஏற்படுகின்ற நிர்வாகச் செலவும் எவ்வளவு ?

விடை—

தமிழக விவசாய வருமான வரி ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக ஏழு கோடி ரூபாய் கிடைக்கப்பெற்று வருகிறது. நிர்வாகச் செலவு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 1.25 கோடி ஆகிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 சனவரி 22]

77 —

நீண்டதூரம் செல்லும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் குடிதண்ணீர்

வினா எண் 3643 —டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

நீண்ட தூரம் செல்லும் திருவள்ளுவர் போன்ற போக்குவரத்துக் கழக ஊர்திகளில் குடிதண்ணீர் வைக்கப் படுமா?

விடை —

நீண்ட தூர தடங்களில் இயக்கப்படும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த எல்லா பேருந்துகளிலும் துருவுறா தண்ணீர் பாத்திரம் (Stainless steel water Drum) வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வைக்கப்பட்டுள்ள தண்ணீர் பாத்திரத்தில் பேருந்தினை தடத்தில் இயக்குவதற்கு முன்பாக இக்கழகத்தைச் சார்ந்த எல்லா பணிமனைகளிலும் குடிதண்ணீர் நிரப்பப்பட்டு அனுப்பப்படுகிறது. மேலும் ஒவ்வொரு பணிபுரியும் நடத்துனரிடம் ஒரு துருவுறா குவளை கொடுக்கப்பட்டுள்ளது.

78 —

வெள்ளியூர் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டிடம்

வினா எண் 3710 —திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருவள்ளூர் தொகுதி, வெள்ளியூர் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி சொந்தக் கட்டிடத்தில் இயங்க ஏற்பாடு செய்யப்படுமா?

விடை —

செங்கை அண்ணா மாவட்டத்தில் உள்ள அனைத்து விடுதிகளுக்கும் வசதியான அரசு நிலம் கிடைக்காததால் சொந்தக் கட்டிடங்கள் கட்டித்தர இயலவில்லை. எனினும், நில உச்சவரம்புத் திட்டத்தின் கீழ் கையகப்படுத்தும் உபரி நிலங்களிலோ அல்லது வேறு இடங்களிலோ வசதியான நிலங்கள் தெரிந்தெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தகுதியான நிலங்கள் தெரிந்தெடுக்கப்பட்டால், அரசின் நிதி நிலைமையை அனுசரித்து விடுதிகளுக்கு படிப்படியாக சொந்தக் கட்டிடங்கள் கட்டித்தர தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1990 சனவரி 22

79 —

பரமக்குடி மும்முடிச்சாத்தான் பேருந்தை சதுர்வேத மங்களம் வரை நீட்டித்தல்

வினா எண் 3854 —டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;—

பரமக்குடி —மும்முடிச்சாத்தான் வரும் நகரப் பேருந்தை சதுர்வேத மங்களம் வரை நீட்டித்துவிட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தால் ஏற்கனவே இயக்கப்படும் பரமக்குடி — மும்முடிச்சாத்தான் பேருந்தின் வழித்தடத்தின் தூரம் 29.5 கி. மீ. ஆகும். மும்முடிச் சாத்தானிலிருந்து சதுர்வேத மங்களம் 2.2 கி.மீ. மோட்டார் வாகன விதிப்படி நகரப் பேருந்து ஓட்டுவதற்கு அனுமதிக் கப்பட்ட தூரமான 30.0 கி. மீட்டரைக் காட்டிலும் அதிக மாக உள்ளது. எனவே, பரமக்குடி — மும்முடிச்சாத்தான் பேருந்தை சதுர்வேத மங்களம் வரை நீட்டிக்க இயலாது.

80—

போகலூர் ஒன்றியத்தில் குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 3936—டாக்டர் எஸ். சுந்தரராஜ்; மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்தில் ஊராட்சி ஒன்றிய ஆணையர், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் விரிவாக்க அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்தில் ஊராட்சி ஒன்றிய ஆணையர், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் விரிவாக்க அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தரும் திட்டம் தற்சமயம் அரசிடம் ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1990 சனவரி 22]

81—

டம்டம்பாறை அருகில் பஸ் போக்குவரத்து பாதிப்பு.

வினா எண் 4009—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் செல்லும் வழி பழுதடைந்துள்ள காரணத்தால் (டம்டம்பாறை அருகில்) பஸ் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

விடை—

டம்டம்பாறை என்ற இடம் கொடைக்கானலுக்கு செல்லும் கொடைமலைச்சாலை (மாவட்ட நெடுஞ்சாலையில்) கி.மீ. 14/0—15/0 பகுதியாகும். இப்பகுதியில் கடந்த 9—3—1989 மற்றும் 12—3—1989 நாட்களில் பெய்த பெருமழை காரணமாக கி.மீ. 14/4 மற்றும் 14/6-ல் சரிவுகள் ஏற்பட்டு, அச் சரிவுகளைச் சீரமைக்க தீவிர நடவடிக்கைகள் மூலம் சீர்மைக்கப்பட்டு கடந்த 27—3—1989 அன்று முதல் வாகன போக்குவரத்து சென்று வருகின்றது. மேலும் அப்பகுதியில் தங்கு தடையின்றி தற்போது வாகனப் போக்குவரத்து நடைபெற்று வருகின்றது.

82—

கோவை—செங்கோட்டை மீட்டர்கேஜ் ரயில்பாதை.

வினா எண் 4139—திரு. மு. இராமநாதன்—மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் இருந்து செங்கோட்டைக்கு மீட்டர் கேஜ் ரயில்பாதை இருக்கின்றதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூரிலிருந்து போத்தனூர், பொள்ளாச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி வழியாக் செங்கோட்டைக்கு மீட்டர் கேஜ் இருப்புப்பாதை உள்ளது. அதன் மொத்த நீளம் 404 கி. மீட்டராகும்.

[1990 சனவரி 22

83—

வாசக சாலைக் கட்டிடம் பழுதுபார்த்தல்.

வினா எண் 4164—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, புது வண்ணையம்பதி டி. எச். ரோடில் நீண்ட காலம் இயங்கி வந்த வாசக சாலைக் கட்டிடம் பழுது அடைந்ததால் இயங்காமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) ;

சென்னை புதுவண்ணையம்பதி டி. எச். ரோடில் நீண்ட காலம் இயங்கி வந்த வாசக சாலைக் கட்டிடம் பழுது அடைந்து இருந்ததால் கட்டிட தொழில் நுட்பக் கல்வித் துறை செயற் பொறியாளர் மூலம் இடித்து புதியதாக ரூ. 5.34 இலட்ச மதிப் பீட்டுத் தொகையில் கட்டப்பட்டு வருகிறது. தற்போது கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளது.

84—

சென்னையில் பிற்பட்ட மாணவ, மாணவிகளுக்கான விடுதிகளுக்குச் சொந்தக் கட்டிடங்கள் கட்டுதல்.

வினா எண் 4172—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் பிற்பட்ட மாணவ, மாணவிகளுக்கான விடுதிகளுக்குச் சொந்தக் கட்டிடங்கள் இல்லாதது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

சென்னை நகரில் உள்ள மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு நிலங்கள் கிடைக்காததின் காரணமாகவே சொந்தக் கட்டிடம் கட்டித்தர முடியவில்லை. எனினும், நில உச்ச வரம்புத் திட்டத் தின் கீழ் கையகப்படுத்தும் உபரி நிலங்களிலோ அல்லது வேறு இடங்களிலோ வசதியான நிலங்கள் தெரிந்தெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தகுதியான நிலங்கள் தெரிந் தெடுக்கப்பட்டால் அரசின் நிதி நிலைமைக்கேற்ப விடுதிகளுக்கு படிப்படியாக சொந்தக் கட்டிடங்கள் கட்டித்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1990 சனவரி 22]

85 —

மேலூர் வட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவித்தல்.

வினா எண் 4179 — திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, மேலூர் வட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) நிலவரி ரத்து செய்யப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) ;

மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர் வட்டமும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாகும் என்று வறட்சி நிவாரண ஆணையர் தெரிவித்துள்ளார். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என்று அறிவிப்பு எதுவும் செய்யாமலேயே பாதிக்கப்பட்ட எல்லாப் பகுதிகளிலும், அனைத்து நிவாரணப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மதுரை மாவட்டத்தில், மதுரை தெற்கு, மதுரை வடக்கு, மேலூர், வாடிப்பட்டி, உசிலம்பட்டி மற்றும் திருமங்கலம் ஆகிய வட்டங்களில் பாதிக்கப்பட்ட நிலங்களின் மீதான 1398 பசலி ஆண்டுக்கான நிலவரி முதலியன ரத்து செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

86—

கூடலூர்—மசனகுடி, மாவனனல்லா வழியாக கோவைக்குச் செல்லும் சாலை.

வினா எண் 4298—திரு. எம். கே. கரீம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூடலூர், மசனகுடி, மாவனனல்லா வழியாக கோவைக்குச் செல்லும் சாலை பூர்த்தியாகாமல் இருப்பதை முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

தலைகுந்தா — கல்லட்டி சாலை கி.மீ. 6/6—12/0யை அபிவிருத்தி செய்ய ரூ. 22.00 இலட்சத்திற்கும், கல்லட்டி-மாவனனல்லா சாலை கி.மீ. 12/0—19/0யை அபிவிருத்தி செய்ய ரூ. 33.00 இலட்சத்திற்கும் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, சாலை வேலை தற்போது பூர்த்தியாகிவிட்டது. மசனகுடி, ஊட்டி, கோவைக்கு சீரான முறையில் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

87—

சிறைத்துறை காவல் பணியாளர்களுக்கு குடியிருப்புகள்.

வினா எண். 4353—திரு. சு. குருநாதன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

காவல்துறை காவலர் பணியாளர்களுக்கு வழங்கப்படும் குடியிருப்பு வசதி சிறைத் துறையிலுள்ள அனைத்து (மத்திய கிளை சிறை) காவலர்களுக்கும் வழங்கப்படுமா ?

விடை—

சிறைத் துறையில் பணிபுரியும் காவல் பணியாளர்களில் 75 விழுக்காடு பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. மீதமுள்ள 25 விழுக்காடு சிறைத் துறை காவல் பணியாளர்களுக்கும் படிப்படியாக அரசுக் குடியிருப்புகள் கட்டித் தரப்படும்.

88—

வாளவாய்க்கால் பாலம் விரிவுபடுத்துதல்.

வினா எண் 4363—திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம், திருவாரூர் நகரத்தையும் புலிவலத்தையும் இணைக்கும் வாளவாய்க்கால் பாலம் பழமையாகவும், குறுகலாகவும் இருப்பதால், பாலத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விரிவுபடுத்தப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

1990 சனவரி 22]

89—

புலவர் பிசிராந்தையார் நினைவுச் சின்னம்.

வினா எண். 4497—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச் சாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், பொசுக்குடியில் புலவர் பிசிராந்தையார் பிறந்த ஊரில் நினைவுச் சின்னம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை.—

(அ) சங்கச் சான்றோர்களுக்கு அவரவர் பிறந்த ஊர்களில் நினைவுச் சின்னம் நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளது.

(ஆ) இப்பொழுது முதல் கட்டமாகப் பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டம் ஒக்கூர், செங்கை-அண்ணா மாவட்டம் இடைகழிநாட்டு நல்லூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் கருவூர், தஞ்சாவூர் மாவட்டம் மாங்குடி ஆகிய 4 இடங்களில் நினைவுச் சின்னம் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

90—

பின்னவாசல் ஆதி திராவிடர்களுக்கு தொடக்கப்பள்ளி ஆரம்பித்தல்,

வினா எண் 4798—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி ஒன்றியம் பின்னவாசல் ஆதி திராவிடர்களுக்கு தொடக்கப்பள்ளி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

91—

ஆதிதிராவிடர்களுக்குக் காலனி வீடுகள்.

வினா எண். 4800—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், அதம்ப (வ) ஆதி திராவிடர்களுக்குக் காலனி வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

[1990 சனவரி 22

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. இது குறித்து அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

92—

தமிழக மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இறால் ஏற்றுமதி.

வினா எண். 4928—திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இறால் ஏற்றுமதி செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) அதன் மூலம் 1987–88, 1988–89-ல் ஈட்டிய வருமானம் எவ்வளவு ?

(இ) கழகத்தின் உறைவிப்பு நிலையங்களில் பதப்படுத்து வதற்குப் போதிய வசதிகள் இல்லாமல் இருப்பது உண்மையா?

விடை—

(அ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 1978 முதல் 10–2–1984 முடிய இறால் ஏற்றுமதி செய்யப் பட்டது. அதன்பின் இத்தகைய இறால் ஏற்றுமதி செய்வதற் கான நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) கேள்வி எழாது.

(இ) கழகத்தின் உறைவிப்பு நிலையங்களில் பதப்படுத்து வதற்கான வசதிகள் உள்ளன.

93—

தாமிரபரணி மேம்பாட்டுத் திட்ட செயல் அலுவலகம்.

வினா எண். 4970—திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) ஸ்ரீவைகுண்டத்திலிருக்கும் தாமிரபரணி மேம் பாட்டுத் திட்ட செயல் அலுவலகத்தை திருநெல்வேலிக்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

1990 சனவரி 22]

விடை—

(அ) மற்றும் (ஆ) :

தாமிரபரணி மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்காக் ஏற்கனவே ஸ்ரீவைகுண்டத்திலிருக்கும் கோட்ட அலுவலகத்துடன் தற்போது திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு கூடுதல் கோட்டம் அமைக்க அரசு அனுமதி அளித்து 1-9-1989 முதல் செயல்பட்டு வருகிறது.

94—

பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள்.

வினா எண். 4980—திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி திட்டம் மூலம் வீடு கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) :

அரசு பீடித் தொழிலாளர்களுக்காக நடப்பு ஆண்டில் 1,000 வீடுகள் கட்ட ஆணை பிறப்பித்துள்ளது. அதில் 500 வீடுகள் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் கட்டப்பட உள்ளது.

95—

இரயில் பாதையின் மீது மேம்பாலம் கட்டுதல்.

வினா எண். 5064—திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், தச்சநல்லூரிலும் பாளையங்கோட்டையிலும் இரயில் பாதையின் மீது மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

96—

திருவண்ணாமலை நகரில் நூல் நிலையக் கட்டிடம்.

வினா எண். 5115—திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை நகரில் நூல் நிலையத்திற்குச் சொந்தமான கட்டிடம் கட்ட திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது ?

(இ) நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா ?

விடை—

(அ) சொந்தக் கட்டிடம் கட்டுவதற்குத் திட்டம் உள்ளது.

(ஆ) 1989–90 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிக்கு ரூ. 2,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) நூலகக் கட்டிடம் கட்டுவதற்கு காலி மனை வழங்குவதற்குத் திருவண்ணாமலை நகராட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தீர்மானத்தின் அடிப்படையில் நூலகக் கட்டிடத்திற்கு காலி மனை பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கடிதம் எழுதப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

97—

திருவண்ணாமலை நகரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்.

வினா எண். 5116—திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை நகரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

திருவண்ணாமலை நகரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை. எனினும் திருவண்ணாமலையைத் தலைநகரமாகக் கொண்டு, புதிய மாவட்டம் அமைக்கப்படுவதை கருத்தில் கொண்டு, நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து பெறப்பட்ட சுமார் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் உப பணிமனை ஒன்று நிறுவுவது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

1990 சனவரி 22]

98—

ஆற்றின் குறுக்கே தாம்போதி பாலம் அமைத்தல்.

வினா எண். 5384—திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டம், ஆழ்வார் தோப்பு கிராமத்திற்கும், ஆழ்வார் திருநகர் கிராமத்திற்கும் இடையே ஆற்றின் குறுக்கே தாம்போதி பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

99—

திருநெல்வேலியில் நவீனமயமாக்கப்பட்ட மத்திய நூலகம் அமைத்தல்

வினா எண். 5505—திரு அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் நிதி உதவியோடு திருநெல்வேலியில் ஒரு நவீன மயமாக்கப்பட்ட மத்திய நூலகம் அமைக்கின்ற திட்டம் தமிழக அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதனை அமைக்கின்ற வேலை எப்பொழுது துவங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்போது திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட மைய நூலகம் பாளையங்கோட்டையில் செயல்படுகிறது. இந்நூலகத்தை மேலும் நவீனமயமாக்கும் பொருட்டு 1999–2000 ஆம் ஆண்டிற்கான மாநில முன்னேற்ற திட்டத்தின்கீழ் ஒரு கருத்துரு மாநில திட்டக் குழுவிற்கு 1—2—1989-ல் அனுப்பப்பட்டுள்ளது. மாநில திட்டக்குழு மேற்படி கருத்துருவின் மீது நிதி ஒதுக்கீடு செய்தால் மைய நூலகத்தை நவீனமயமாக்கும் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

[1990 சனவரி 22

100—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட மத்திய நூலகக் கட்டிடம்.

வினா எண். 5506.—திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட மத்திய நூலகக் கட்டிடம் கட்டும் வேலையை உடனே துவங்க அரசு உத்தர விடுமா ?

விடை—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், பாளையங் கோட்டையில் ரூ. 16 இலட்சம் செலவில் புதிய மைய நூலகக் கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற் கான மதிப்பீடு மற்றும் வரைபடம் தொழில் நுட்பக் கல்வி கண்காணிப்புப் பொறியாளரால் தயார் செய்யப்பட்டு வருகிறது. பின்னர் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு விரைவில் கட்டிடப் பணி துவங்கப்படும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உச்சிப்புளி கடற்கரைப் பகுதிக்குப் படகுகளில் வந்து இறங்கிய சிலர் மணலுக்குள் ஆயுதங்களைப் புதைத்து வைத்ததாக வந்துள்ள செய்தி குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மிக அவசரமான, முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை இந்த அவையில் எழுப்பி அதற்கு மாண்புமிகு முதல்வரிடமிருந்து இந்த அவையின் மூலம் சில விளக்கங்களைத் தர வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் பத்திரிகைகளிலே இராமேஸ்வரம் நகரத் திற்கு 15 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தர்க்காவலசை என்னும் கிராமத்தில் நள்ளிரவில் திடீரென 3 விசைப் படகு களில் 15 பேர் வந்ததாகவும், அவற்றிலிருந்து இறங்கி வந்த அந்த 15 நபர்களும் கடற்கரையில் பள்ளம் தோண்டி 40 பீப் பாய்களை புதைத்ததாகவும் அதை ஊர் மக்கள் கண்டு ஒரு வேளை கடத்தல் பொருளைத்தான் கொண்டு வந்து புதைக் கின்றார்களோ என்கிற சந்தேகத்தில் அந்தத் துறைக்குத் தகவல்

[1990 சனவரி 22

100—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட மத்திய நூலகக் கட்டிடம்.

வினா எண். 5506.—திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட மத்திய நூலகக் கட்டிடம் கட்டும் வேலையை உடனே துவங்க அரசு உத்தர விடுமா ?

விடை—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், பாளையங் கோட்டையில் ரூ. 16 இலட்சம் செலவில் புதிய மைய நூலகக் கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற் கான மதிப்பீடு மற்றும் வரைபடம் தொழில் நுட்பக் கல்வி கண்காணிப்புப் பொறியாளரால் தயார் செய்யப்பட்டு வருகிறது. பின்னர் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு விரைவில் கட்டிடப் பணி துவங்கப்படும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உச்சிப்புளி கடற்கரைப் பகுதிக்குப் படகுகளில் வந்து இறங்கிய சிலர் மணலுக்குள் ஆயுதங்களைப் புதைத்து வைத்ததாக வந்துள்ள செய்தி குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மிக அவசரமான, முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை இந்த அவையில் எழுப்பி அதற்கு மாண்புமிகு முதல்வரிடமிருந்து இந்த அவையின் மூலம் சில விளக்கங்களைத் தர வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் பத்திரிகைகளிலே இராமேஸ்வரம் நகரத் திற்கு 15 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தர்க்காவலசை என்னும் கிராமத்தில் நள்ளிரவில் திடீரென 3 விசைப் படகு களில் 15 பேர் வந்ததாகவும், அவற்றிலிருந்து இறங்கி வந்த அந்த 15 நபர்களும் கடற்கரையில் பள்ளம் தோண்டி 40 பீப் பாய்களை புதைத்ததாகவும் அதை ஊர் மக்கள் கண்டு ஒரு வேளை கடத்தல் பொருளைத்தான் கொண்டு வந்து புதைக் கின்றார்களோ என்கிற சந்தேகத்தில் அந்தத் துறைக்குத் தகவல்

1990 சனவரி 22] *[திரு. எம். அப்துல் லத்தீப்]*

தந்ததாகவும், அதற்குப் பிறகு போலீஸ்காரர்கள் அந்த இடத்திற்கு வந்து தோண்டிப் பார்க்கும் போது பெரிய ராட்சஷ பீப்பாய்கள் 40 இருந்ததாகவும், அதை எடுத்துச் சென்று பார்த்த போது ஏவுகணைகளும், துப்பாக்கிகளும், குண்டுகளும் இன்னும் ஏனைய ஆயுதங்களும் ஏறக்குறைய 5 கோடி ரூபாய் அளவுக்கு அவை இருந்ததாகவும்—இன்றைக்குக் கூட பத்திரிகைகளில் அவை 2 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கும் என்று செய்திகளை வெளியிட்டிருக்கிறார்கள். அதையொட்டி அந்த வட்டார டி.ஐ.ஜி. திரு. விஸ்வநாதன் அங்கே முகாமிட்டிருப்பதாகவும், அதே நேரத்தில் சென்னைக்குத் தகவல் கொடுக்கப்பட்டு இங்கிருந்து ரகசிய துறையைச் சார்ந்த கண்காணிப்பாளர் திரு.சுப்பிரமணியம் அங்கே விரைந்திருப்பதாகவும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

(10-20 மணி)

அதுமட்டும் அல்லாமல் சில சந்தேகங்களும் பொது மக்களிடம் எழுப்பப்பட்டு இருக்கின்றன. இந்தக் கடத்தல்காரர்கள் அல்லது ஆயுதங்களைக் கொண்டு வந்தவர்கள் தமிழும், சிங்களமும் கலந்த ஒரு மொழி பேசியதாகவும், அரை பேண்ட் அணிந்து இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் 'ரா' என்ற இரகசிய நிறுவனம் சம்பந்தப்பட்டு இருக்குமோ என்று கூட ஒரு சந்தேகத்தை எழுப்பி இருக்கிறார்கள். எனவே இது மிக முக்கியமான ஒன்று. இராமேஸ்வரத்திற்குப் பக்கத்தில் இருக்கிற தர்க்காவலசையில் நள்ளிரவு நேரத்தில் இவ்வளவு பேர் வந்து அதைப் புதைத்துவிட்டுப் போனார்கள் என்றால் அவர்கள் யார்? அதே நேரத்தில் கிராம மக்கள் பார்க்கக் கூடிய அளவுக்கு எவ்வளவு பயங்கரமாக அவர்கள் வந்து அதைப் புதைத்துவிட்டுப் போனார்கள் என்றால் அவர்களுடைய நோக்கம் என்ன? அந்தப் பகுதியிலே இப்படி ஏதாவது சம்பவம் முன்னர் நிகழ்ந்து இருக்கிறதா? அந்தப் பகுதி முழுவதிலும் ஏதாவது புலன் விசாரணை செய்து தர்க்காவலசை என்ற அந்தக் கிராமத்தைத் தவிர வேறு கிராமத்திலே அல்லது வேறு பகுதியிலே அப்பேர்ப்பட்ட ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டு இருக்கின்றனவா என்றெல்லாம் பொது மக்களிடையே குறிப்பாக கடற்கரை ஓரங்களில் வாழும் மக்களிடையே பெரிய பீதி ஏற்பட்டு இருப்பதாகவும் எங்களுக்குத் தகவல் கிடைத்து இருக்கிறது. பத்திரிகையிலும் பல்வேறு விதமான யூகங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதிலே 'ரா' நிறுவனம் சம்பந்தப்பட்டு இருக்கிறது என்ற ஒரு கருத்தும் வெளியிடப்பட்டு இருக்கிறது. எனவே இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு விளக்கங்களைத் தந்து அந்தப் பகுதியில் ஏற்பட்டு இருக்கிற பீதி அதே நேரத்தில் எழுந்து இருக்கும் சந்தேகங்கள்—இவைகளை எல்லாம் போக்கும் வகையில் குறிப்பாக அரசு இரகசிய நிறுவனம் 'ரா' சம்பந்தப்பட்டு இருக்கிறது என்று வந்திருக்கிற தகவல் குறித்தும் முதலமைச்சர் அவர்களுடைய நிலை என்ன என்பதை எல்லாம் விளக்கிக் கூற வேண்டுமென்று தங்கள் மூலமாக வேண்டிக் கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினுடைய மாநிலத் தலைவர், சட்டப் பேரவை உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இன்று எழுப்பி உள்ள பிரச்சினை மிக மிக முக்கியமான பிரச்சினை ஆகும். தமிழகக் காவல் துறையினர் மிக்க விழிப்போடு இருந்து பணிகளை நிறைவேற்றுவதற்குரிய பிரச்சினை ஆகும். இது குறித்து செய்தி ஏடுகளிலே வெளி வந்துள்ள விஷயங்களை மாத்திரம் திரு. லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் காவல் துறையின் மூலமாகப் பெற்ற விவரங்களை இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்தப் பிரச்சினை ஒரு வேளை இந்த மாமன்றத்தில் எழுப்பப்பட்டு இருக்காவிட்டாலும் கூட அது குறித்த அறிக்கை ஒன்றை வைக்க நான் கடமைப்பட்டவனாவேன்.

20-1-1990, சனிக்கிழமை அதிகாலை 4½ மணியளவில், மண்டபம் காவல் நிலையத்தைச் சேர்ந்த உச்சிப்புளி புறக்காவல் நிலையத்தில் 3 விசைப் படகுகளில் சில இலங்கைத் தமிழர்கள் தர்காவலசை கடற்கரை அருகில் அதிகாலை 1½ மணியளவில் இறங்கியதாகவும், சில பெரிய பிளாஸ்டிக் பீப்பாய்களை கடற்கரை ஓரம் மணலில் புதைத்ததாகவும், பின்னர் அவர்கள் படகுகளில் திரும்பியதாகவும் தகவல் கிடைத்தது. உடனடியாக உச்சிப்புளி புறக்காவல் நிலையத்தினர் அவர்களோடு அப்போது இரவுப் பணியிலிருந்த 'க்யூ' பிரிவு காவலர்களுடன் தர்காவலசை என்ற இடத்திற்குச் சென்று காவல் போட்டு மண்டபம் காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுத்தார்கள். மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கமுதிக்கு முகாமில் சென்று இருந்த காரணத்தினால் இராமநாதபுரம் நகரத் துணைக் காவல் கண்காணிப்பாளர் தலைமையில் மண்டபம் உதவி ஆய்வாளரும், இராமநாதபுரம் 'க்யூ' பிரிவு உதவி ஆய்வாளரும் மற்ற காவலர்களும் சுங்கத் துறையினரின் உதவியோடு அந்தப் புதைத்த இடத்தைத் தோண்டிப் பார்த்ததில் கீழ்க்கண்ட ஆயுதங்கள் மற்றும் ஆயுத உபரிப் பாகங்கள், அவைகளுக்கான ரவைகள், தோட்டாக்கள் மற்றும் சில பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. கண்டெடுக்கப்பட்ட பொருட்களின் விவரம்—

9 எம். எம். பிஸ்டல்	64
ஏ.கே. 47 ரைபிள்ஸ்	88
லைட் மெஷின் கன்	40
செல்ப் லோடிங் ரைபில்ஸ்	3
எல். எம். ஜி. பேரல்ஸ்	39
கை வெடி குண்டு	13
ராக்கெட் லான்ச்சர்	1
ராக்கெட் ஏவுகணைகள்	61

1990 சனவரி 22] [டாக்டர் மு. கருணாநிதி]

ஏ.கே. 47 ரவைகள்	23,520
எஸ்.எல்.ஆர். ரவைகள்	14,538
ஏ.கே. 47 மேகசின்	430
எஸ்.எல்.ஆர். மேகசின்	15
எல்.எம்.ஜி. மேகசின்	10

[10.25 மணி]

7.5 செண்டிமீட்டர் × 2.3 செண்டிமீட்டர் அளவுள்ள ஈ. என். டி.எல்.எப். 1246 என்ற எண் குறித்துள்ள 3 நட்சத்திரம் குறிக்கப்பட்ட பிளாட்டினப் பட்டை—இது அன்-லோடு பண்ணும் போது விழுந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

மண்தோண்டும் சால்	4
மண் வெட்டி	3

இதற்குப் பிறகு, இராமநாதபுரம் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரும் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து சேர்ந்து விசாரணையைத் தொடங்கினார். இது தொடர்பாக மண்டபம் காவல் நிலையக் குற்ற எண். 39/90—குற்றவியல் நடைமுறைச் சட்டம் 102-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, வட்ட ஆய்வாளரின் விசாரணையிலே வழக்கு உள்ளது.

தோண்டி எடுக்கப்பட்ட மேற்கூறிய பொருள்கள் இராமநாதபுரம் வட்டாட்சியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. விசாரணைக்குப் பின் இராமநாதபுரம் வட்டாட்சியர் மேற்கூறிய பொருட்களை மீண்டும் இராமநாதபுரம் மாவட்ட ஆயுதக் கிடங்கில் பாதுகாப்பாக வைப்பதற்காக ஒப்படைத்துள்ளார். இராமநாதபுரம் சுங்க அதிகாரிகளும் உடன் இருந்து மேற்கூறிய பொருள்களைக் கைப்பற்றுவதில் காவல் துறையினருக்கு உதவிபுரிந்துள்ளார்கள். இதுவரை கைது ஏதுமில்லை.

மேற்கொண்டு கடற்கரை ஓரங்களில் காவல்துறையினரால் விசாரணைகளும், தோண்டும் பணியும் தொடரப்படுகின்றன. 'கியூ' பிரிவு கண்காணிப்பாளரும் இராமநாதபுரம் மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளரும் முன்னின்று சம்பவ இடத்தில் விசாரணை செய்து வருகிறார்கள். ஈ.என்.டி.எல்.எப்.—ஈழம் நேஷனல் டெமகிராடிக் லிபரேஷன் ஃபிரன்ட் என்ற அமைப்பு இராஜன் என்பவருடைய தலைமையின் கீழ் இயங்குவதாகும். இந்த அமைப்பு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராகச் செயல்படும் அணியைச் சேர்ந்த அமைப்பாகும். இந்த ஆயுதங்களும் ரவைகளும் என்ன நோக்கத்துக்காகத் தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்டன? அவை யாரால், எப்போது எங்கே கொடுக்கப்பட்டன என்ற விவரங்கள் விசாரிக்கப்பட்டு வருகின்றன. இது 'RAW' மூலமாக ஏற்கெனவே தரப்பட்ட பொருள்களா, அவைகள் திரும்ப இலங்கையிலிருந்து வந்து

புதைக்கப்பட்டதா என்கிற ஒரு ஐயப்பாட்டை திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே எழுப்பினார்கள். அந்த ஐயப்பாடு முழுமையாக புறக்கணிக்கப்படக்கூடிய ஒன்றாக எனக்குத் தெரியவில்லை. அதிகாரம் மாறினாலும்கூட, அதிகாரிகளுடைய உணர்வுகள் மாறாமல் இருக்கின்றன என்பதற்கு இது ஒரு உதாரணமாக இருக்குமோ, என்னவோ எனக்குத் தெரியவில்லை. இருந்தபோதிலும், கடற்கரை ஓரத்தில் காவல்துறை பலத்த பந்தோபஸ்துகளைச் செய்ய வேண்டுமென்றும், இதுபோன்ற ஆயுதங்கள் தமிழகத்திற்குள்ளே வருவதும், அதை யாரும் பயன்படுத்த முனைவதும் தடுக்கப்பட வேண்டுமென்றும் காவல்துறைக்குச் சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும், இது குறித்து புகார்கள் ஏதேனும் வருமானால் உடனுக்குடன் அவை கவனிக்கப்படும் என்பதையும் இம்மாமன்றத்திற்கு நான் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பல்வேறு வகைகளில் நான் மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு விடுத்த வேண்டுகோளின் ஒரு பகுதியாக இப்போது நான் பேச அனுமதிக்கப்பட்டிருப்பதற்கு மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், வருந்தத்தக்க செய்திகளைப் பற்றியே சொல்ல வேண்டியிருக்கிறது.

மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் கேட்ட தகவல்களுக்கெல்லாம் இங்கே விடையளிக்கின்றபோது எவ்வளவு பயங்கரமான ஆயுதங்கள் எல்லாம் இங்கே கொண்டு வந்து புதைத்து வைக்கப்பட்டிருந்தன என்பதையும் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

அதைப் போலவே மதுரையிலிருந்து ''செல்ப்'' மானா மதுரை முகவரியிட்டு ஒரு பெரிய பார்சல் ரெயிலிலே அனுப்பப்பட்டதாகவும், மானாமதுரையிலே வேறு ஏதோ காரணத்திற்காக ரெயிலை சோதனையிட்ட நேரத்தில் இந்த பார்சல் அங்கே கிடைத்ததாகவும், அதைத் திறந்து பார்த்தபோது ஏராளமான வெடி குண்டுகள் அதிலே இருந்ததாகவும் சொல்லுகிறார்கள். மதுரையிலே ஏதோ ஒரு ஸ்டோருடைய பெயரை ''செல்ப்'' என்று போட்டு இராமநாதபுரத்திலே பெற்றுக்கொள்கிற வகையிலே அனுப்பியிருப்பதாகத் தகவல்கள் வருகின்றன. இது எங்கே கொண்டுபோய் பயன்படுத்துவதற்கு? தமிழ் நாட்டிலே பயன்படுத்துவதற்கா? எல்லையோரங்களிலே உள்ளவர்களுக்கு விநியோகப்படுத்தவா என்றுகூட நமக்குத் தெரியமாட்டேன் என்கிறது.

[10-30 மணி]

ஏனென்று சொன்னால், இப்பொழுது முதல்வரவர்கள் தந்த தகவலில் ராக்கெட் லான்ச்சர்ஸ் உட்பட, வெசல்ஸ் உட்பட, வெடி குண்டுகள் உட்பட ஏராளமானவை இருந்தன என்று சொல்கிறார்கள்.

1990 சனவரி 22] [திரு. குமரி அனந்தன்]

இன்னுமொன்று, இன்று 14 தீவிரவாதிகள் இலங்கையிலிருந்து தப்பி தமிழ்நாட்டினுடைய எல்லைக்குள்ளே புகுந்துவிட்டதாகவும் சொல்கிறார்கள். ஆக, 14 தீவிரவாதிகள் இப்பொழுது புதிதாகப் புகுந்து இருக்கிறார்கள் என்றால், ஏற்கனவே இங்கே இருக்கின்ற தீவிரவாதிகள் நேருவினுடைய சிலையை உடைப்பதற்குத் துணை போகிறார்கள் ; டி.வி. நிலையங்களை உடைப்பதற்கு அவர்கள் துணை போகிறார்கள் ; பேங்குகளைக் கொள்ளையடிப்பதற்கு அவர்கள் துணை போகிறார்கள் ; கொலை செய்வதில் அவர்கள் முன் நிற்கிறார்கள். நமது சுங்க இலாக்கா அதிகாரிகளையே அவர்கள் கடத்திப் போகிறார்கள்.

இவைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று சொன்னால், இலங்கையிலே அந்தத் தமிழ் மக்களினுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அதற்காகத்தான் நமது மரியாதைக்குரிய முதல்வரவர்கள் மிகுந்த பிரயாசை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். டிசம்பர் மாதம் பத்தாம் தேதி அவர்கள் புதிய திட்டம் அறிவித்திருப்பதாகப் பத்திரிகையிலே செய்தியை நாம் படித்தோம். டிசம்பர் 12 ஆம் தேதி குஜ்ரால் அவர்களையும், மரியாதைக்குரிய வி. பி. சிங் அவர்களையும் சந்தித்ததற்குப் பிறகு, the Chief Minister will play a key role என்று அதிலே போட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே அவர்கள் உண்மையிலேயே விடுதலைப் போராளிகள் குழுக்களிலே சிலவற்றைச் சந்தித்துப் பேசினார்கள். ஆண்டன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசினார்கள் ; யோகி அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். இன்னும் சொல்லப் போனால் அவர்கள் நமது முதல்வர் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். அதன்பிறகு நமது வட கிழக்கு மாகாணத்தினுடைய முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் அவர்களும் வந்து பேசிவிட்டார். இத்தனை பேர் வந்து பேசியதற்குப் பின்னாலேயும் அந்த விடுதலைப் புலியின் இயக்கத்தைச் சேர்ந்த பிரபாகரன் ஏன் நமது முதல்வரவர்களைச் சந்திக்க மாட்டேன் என்கிறார் என்பது எனக்குப் புரியவில்லை. சென்ற முறை இங்கே ஆண்டு கொண்டிருந்த முதல்வர் அவர்களை அவர் சந்தித்திருக்கிறார்; பாரதப் பிரதமரைச் சந்தித்திருக்கிறார். ஆனால், இந்தத் தடவை இதிலே மிக முக்கியமான பங்கு வகிப்பவர் மட்டுமல்ல, இலங்கைப் பிரச்சினையிலே நான் உதவி செய்ய முடியவில்லை என்றால் சட்டமன்ற உறுப்பினராக இருந்து என்ன பயன் என்று இந்தப் பதவியையே தூக்கி எறிந்துவிட்டு நமது முதல்வராக இன்று இருந்து கொண்டு இருக்கிறார்கள். தங்களுடைய உணர்வை வெளிப்படுத்தியிருக்கிற நேரத்தில், அந்த முதல்வரிடம் பிரபாகரன் வந்து பேசாமல் இருப்பதைப் பார்க்கின்றபொழுது, உண்மையிலேயே அவர் உயிரோடு இருக்க வேண்டுமென்றே நாம் ஆசைப்படுகிறோம். அதிலேகூட சில ஐயங்கள் எழுப்பப்பட்டனவே, அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற அளவிற்கு இந்தப் பேச்சுவார்த்தைகளிலே ஏதாவது தகவல் முதல்வரவர்களுக்குத் தெரிந்திருக்குமா என்பதைக்கூட நாம் இங்கே அறிய

ஆசைப்படுகிறோம். ஏனென்றால், விஜயரத்னே வந்து சொல்கிறார், இவர்தான் அச்சாணியாக இருந்து இதனை நடத்தப் போகிறார் என்று. நாம் மகிழ்ச்சி அடைகிறோம். அதைப் போலவே, எல்லோரும் அப்படிச் சொல்லிவிட்டு நமது முதல்வர் அவர்கள் இரண்டு நாள் பேச்சுவார்த்தைக்குப் பின்னாலேகூட சொன்னார்கள். என்னுடைய பேச்சுவார்த்தை—அவர்களோடு பேசியது திருப்திகரமாக இருந்தது. நமக்கும் திருப்திகரமாக இருந்தது, அவர்களுக்கும் திருப்திகரமாக இருந்தது என்று சொன்னார்கள்.

இத்தனையும் சொன்னதற்குப் பிறகு, மீண்டும் மீண்டும் எல்லோரும் வலியுறுத்திக் கொண்டிருப்பது என்னவென்றால், வட கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற அந்த அமைச்சரவைக்குப் போதுமான அதிகாரம் இருப்பதோடு இணைந்து தான் நமது படைகள் வெளியேற வேண்டுமென்று நாம் சொல்கிறபொழுது, ஒரு பக்கத்திலே பேச்சு வார்த்தைகள் நடத்திக்கொண்டு, இன்னொரு பக்கத்திலே நமது படையை நாம் திரும்பப் பெற்றுக்கொண்டிருக்கிற நேரத்திலே, திரும்பி வருகின்ற படைகள் மீது கூட இன்று அங்கு இருக்கின்ற போராளிகள், விடுதலைப் புலிகள் என்றே சொல்கிறார்கள், எல்.டி.டி.இ. தாக்குதல் நடத்தி எட்டு பேரைக் கொன்றிருக்கிறது. இது எங்கும் நடைபெறாத ஒரு சம்பவம். திரும்ப வந்து கொண்டிருப்பவர்களைக் கூட தாக்குகிற ஒரு கொடுமை அங்கே நடந்து கொண்டிருக்கிறது.

இவைகளுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கு, என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி, இந்தப் பேச்சுவார்த்தைகளிலே மிக முக்கிய நபராக இருக்கின்ற நமது முதலமைச்சரவர்கள் இந்த அவையைத் தனது நம்பிக்கைக்கு உரியதாக எடுத்துக்கொண்டு, நடந்தவைகளைப் பற்றியெல்லாம் ஒரு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று நான் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அந்த அறிக்கையின் மூலம் நமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு உரிய ஒரு வாய்ப்பினை நமக்கு இங்கே தர வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினை என்று வருகின்ற நேரத்தில் அது ஒரு உணர்ச்சிகரமான பிரச்சினை என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே இருக்கின்ற தமிழர்கள் காப்பாற்றப்பட வேண்டுமென்பதும், அந்தத் தமிழர்களுக்கு வாழ்வு கொடுக்க வேண்டுமென்பதற்காகவும், இங்கே — தமிழ்நாட்டிலே இருக்

கின்றவர்களிடத்திலே கருத்து வேறுபாடுகள் நிச்சயமாக இருக்காது. ஆனால், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று வருகின்ற நேரத்தில், ஆளுங்கட்சி மீது எதிர்க்கட்சி குற்றம் சாட்டுவதும், ஆளுங்கட்சி எதிர்க்கட்சி மீது குற்றம் சாட்டுகிறது. அதே நேரத்தில், ஆளுங்கட்சி மீது நாங்கள் குற்றம் சாட்டுகிற நிலைமையும் இன்றைக்கு மாறி மாறி வருகின்றன. நான் இந்த நேரத்தில் எதிர்க்கட்சியாளராக இருக்கின்ற காரணத்தாலே, இன்றைக்கு ஆளுங்கட்சி மீது குற்றம் சாட்ட வேண்டுமென்ற அந்தக் கருத்தோடு நான் ஆரம்பித்தேனானால் எனக்கு இருக்கிற பயமெல்லாம் இலங்கையிலே இருக்கிற தமிழர்கள் எங்கே பாதிக்கப் படுவார்களோ என்ற பயம்தான். ஆனால், கடந்த காலத்தில் அப்படி நடைபெற்றதா என்று சொன்னால், எனக்கிருக்கின்ற வருத்தமெல்லாம், கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சி காலத்தில் அவர் எப்படிப்பட்ட நிலையிலே இருந்தார் என்பதும், இன்றைக்கு ஆளுங்கட்சியாக மாறி அவர் முதலமைச்சராக உட்கார்ந்ததற்குப் பின்னால் இன்றைக்கு அவர்களுடைய நடவடிக்கைகள் எப்படி அமைந்திருக்கின்றன என்பதையும் நான் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறேன்.

1983 ஆம் ஆண்டில் இந்தப் பிரச்சினை உணர்ச்சிகரமாக எழுந்த நேரத்தில் அன்றைக்குக் கலைஞர் அவர்கள் நடந்து கொண்ட நடவடிக்கையும் இன்றைக்கு அவர் முதலமைச்சராக உட்கார்ந்ததற்குப் பின்னால் அவர்களுடைய நிலையும் எனக்கு ஓரளவுக்குப் புரிகிறது.

(10-35 மணி)

ஆனால் அவர் மீது குற்றம் சாட்ட வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இன்னின்ன வகையிலே அவர் தவறி விட்டார் என்பதற்காக நான் அவர் மீது குற்றம் சாட்டுவேனானால் அந்தக் குற்றச்சாட்டுகளின் மூலமாக அது எங்கே சிங்களவர்களுக்குத் துணையாகப் போய்விடுமோ என்ற பயத்தின் காரணமாகத்தான் நான் அந்தக் குற்றச்சாட்டைத் தவிர்க்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

இங்கே முதலமைச்சர் அவர்கள் படித்திருக்கிற ஆயுதங்களுடைய கணக்குகளைப் பார்க்கிற நேரத்திலே இந்த ஆயுதங்கள் அத்தனையும் தமிழ்நாட்டில் எங்காவது ஒரு இடத்தில் பயன்படுத்தப்படுமானால் மக்களுடைய நிலை என்ன ஆகும் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆனால் ஆயுதப் பறிப்பு என்ற காரணத்திற்காக எங்கே அது விடுதலைப் புலிகளுக்கு எதிராகவோ, தமிழ்ப் போராளிகளுக்கு எதிராகவோ போய் விடுமோ என்ற பயமும் எனக்கு நிச்சயமாக இருக்கிறது. நேற்று இராஜேந்திரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். வேதாரணியத்தில் இருக்கிற தமிழர்கள் சிங்களத்திலே போய், அவர்கள் கொல்லப்படுகிறார்கள் என்பதற்காக

[திரு. எஸ். ஆர். இராதா] [1990 சனவரி 22

நிவாரணம் தருகிற நிலையிலே தான் இருக்கிறோமே தவிர, அதைத் தடுக்க முடிகிறதா என்றால் தடுக்க முடியவில்லை. அதைப் போல இன்றைக்கு தமிழகத்திலே ஒரு கூட்டம் இலங்கை சிங்களவர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டு, இங்கே அவர்கள் தீவிரவாதிகள் என்ற பெயரில், தமிழ்நாடு தனி நாடாக வேண்டும் என்பதற்காகப் போராடுகிறோம் என்ற பெயரில் பல்வேறு அக்கிரமங்கள் நடைபெறுகின்றன என்பதைக் கேள்விப் படுகிற நேரத்தில் இன்றைக்கு ஆயுத நடமாட்டம் எவ்வளவு விரைவாக இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது மிகத் தெளிவாகத் தெரிந்து விட்டது. இந்த நிலையில் நாம் ஒன்றை நினைத்துப் பார்க்க வேண்டும். நேற்றைக்கு கூட தொலைக்காட்சியிலே ஒரு பெரிய செய்தியாகச் சொன்னார்கள். நம்முடைய இந்தியப் படை வெளியேறுகிற நேரத்திலே விடுதலைப் புலிகளோடு போராட்டம் நடைபெற்று, இந்தியப் படையிலே ஒரு வீரர் செத்து விட்டார் என்று அறிவித்துவிட்டு, அதே நேரத்தில் விடுதலைப் புலிகளில் இருப்பவர்கள் ஏழு பேர்கள் கொல்லப்பட்டார்கள் என்று செய்தி சொல்லுகிறார்கள். ஆனால் சாகடிக்கப்பட்டவர்கள் இரண்டு பக்கமும் தமிழர்களாக இருப்பார்களே தவிர அவர்கள் வேறு யாரும் அல்ல. நான் பணிவாக முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன், நான் குற்றம் சாட்டவேண்டுமென்று ஆசைப்பட்டாலும், நான் நிச்சயமாகச் சொல்கிறேன், இலங்கை தமிழர்கள் (குறுக்கீடு) கலைஞர் அவர்கள் சிரித்துக் கொண்டே குற்றம் சாட்டுங்கள் என்று சொன்ன காரணத்தால் நான் சொல்கிறேன். நீங்கள் கவர்னர் உரையில் ஒரு வரி கூட இந்த இலங்கைத் தமிழர்களைப் பற்றி குறிப்பிடாமல், இலங்கைத் தமிழர் நிலை என்னவென்று கூட தெரிவிக்காமல், மறைத்திருக்கிறீர்கள் என்று நான் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால் 1984-ஆம் ஆண்டு கவர்னர் உரையில் இந்தப் பிரச்சினை வருகிற நேரத்தில் இலங்கை பற்றி கவர்னர் அவர்கள் அன்றைக்கு எடுத்துச் சொன்னார்கள். அதிலேயிருந்த எல்லா வரிகளும் படிக்கப்பட்டதற்குப் பின்னால், ஒரு வரி இல்லையென்பதற்காக இதே மன்றத்தில் எந்த அளவிற்கு அமளி நடைபெற்றது என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த நிலைகளை நான் உருவாக்க வேண்டுமெனறு ஆசைப்படவில்லை. ஆனால் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வேன். இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினை உங்கள் கைக்கு வந்திருக்கிறது. வந்திருக்கிற அந்தப் பிரச்சினையை வைத்துக் கொண்டு, அங்கே எந்தப் போராளிகள் என்பதல்ல—அங்கே இருக்கிற தமிழர்கள் காப்பாற்றப்பட வேண்டும். அவர்கள் நம்மவர்கள், நம்மவர்களுக்காக நாம் வாதாடுகிறோம். போராடுகிறோம் என்ற நிலையில், பாகுபாடுகளை மறந்து விட்டு, அவர்கள் யார் என்ற நிலையிலிருந்து நாம் பார்க்காமல், அவர்கள் நமக்கு ஆதரவானவர்களா, எதிரானவர்களா என்ற நிலைகளை மறந்து விட்டு, அவர்கள் நிலைகளுக்காகப் போராடுவதற்கு, பாடுபடுவதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.

1990 சனவரி 22] [திரு. எஸ். ஆர். இராதா]

அந்த வகையில் இந்த மன்றத்தின் மூலமாக நாம் விவாதித்து மத்திய அரசு செய்ய வேண்டிய கடமைகளைச் சுட்டிக் காட்டுவதற்கும், அடுத்து நாம் இந்தப் பிரச்சினையில் செய்ய வேண்டிய கடமைகளைக் குறித்து எடுத்துச் சொல்வதற்கும், அறிக்கை வைத்து அவையில் விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டிற்கு நான் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கவர்னர் உரையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து ஏன் சொல்லப்படவில்லை என்று அவர் கேட்டார். கவர்னர் உரையில் சொல்லப்படவில்லை, எனவே இந்த அவையில் அது பற்றி யாரும் பேசக்கூடாது என்ற தடை இல்லை. ஏற்கெனவே இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்து பேசியதை விட, கேட்கப்பட்ட கேள்விகளை விட, எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினைகளை விட, இந்த அவையிலே கடந்த சில நாட்களாக அதிகமாகவே கேட்கப்படுகிறது. பிரச்சினை எழுப்பப்படுகிறது என்பதை நாட்டு மக்கள் மிக நன்றாக அறிவார்கள். எனவே, மறைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு பேச்சுவார்த்தை அங்கேயுள்ள போராளிகளுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அதைப்பற்றி முழுமையாக எதுவும் சொல்ல முடியாத நிலையில், ஆளுநர் உரையில் எதுவும் அறிவிக்கத் தேவையில்லை என்பதால் தான் அது அறிவிக்கப்படவில்லையே அல்லாமல் அதைத் திரை போட்டு மறைக்க வேண்டும் என்கிற எண்ணம் யாருக்கும் கிடையாது.

(10-40 மணி)

ஏன் என்றால், கவர்னர் உரையிலே ஒரு கருத்து சொல்லப்படாத காரணத்தாலே அந்தக் கருத்து பற்றிய சிந்தனை இந்த அரசுக்கு இல்லை என்று யாரும் கூறி விட முடியாது. கவர்னர் உரையில் சொல்லப்படாவிட்டால், பிரச்சினை நல்லமுறையிலே முடிவுற்ற பிறகு வரவு-செலவுத் திட்ட அறிக்கையிலே சொல்லப்படும், அல்லது கவர்னர் உரையிலே சொல்லப்படாதவைகளை, இங்கே மாண்புமிகு உறுப்பினர்களோ, எதிர்க்கட்சித் தலைவர்களோ எடுத்துக் காட்டும் போது, அதற்கான விளக்கங்கள் வழங்கப்படும். கவர்னர் உரையிலும் சொல்லப்படவில்லை, நாங்கள் பிரச்சினைகளை எழுப்பும்போதும் நீங்கள் பதில் கூறத் தயாராக இல்லை, இருட்டடிப்புச் செய்கிறீர்கள் என்று நீங்கள் குற்றம் சாட்டினால், அந்தக் குற்றச்சாட்டில் பொருள் இருக்க முடியும். எனவே நான் விவரமாகவே சில விஷயங்களை இங்கே கூற விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன், அதற்கு முன்பு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலே ஏற்பட்ட கசப்புணர்வுகள், பரிமாறிக்கொள்ளப்பட்ட வார்த்தைகள், வாதங்கள், பிரதிவாதங்கள் இவைகள் அனைத்தையும் மறந்து விட்டு இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு முதல்கட்டமாக முன்னுரிமை தந்து, பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களிடத்திலே சென்று, இரண்டு நாள், 4 தடவை அவர்களைச் சந்தித்து நான் உரையாடினேன். முதல் நாள் நான் அவரிடத்திலே பேசியபோது மறுநாள் காலையிலே வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு. நட்வர்சிங் அவர்களையும், வெளியுறவுத்துறைச் செயலாளரையும், அதிகாரிகளையும் தமிழ்நாடு மாளிகைக்கு அனுப்பி வைக்கிறேன் என்று சொல்லி, டெல்லியிலுள்ள தமிழ்நாடு மாளிகைக்கு காலை $7\frac{1}{2}$ மணிக்கு அனுப்பி வைத்தார்கள். அவர்களோடு ஏறத்தாழ $2\frac{1}{2}$ மணி நேரம் நான் விவாதித்தேன். அவர்கள் விவரங்களைச் சொன்னார்கள். நான் பல விவரங்களைக் கேட்டேன்.

அதற்குப் பிறகு, அவர்களிடத்திலே பேசியது என்ன என்பதைப் பற்றி மாலையிலே தன்னிடத்திலே வந்து பேசுமாறு முன்னாள் பிரதமர் மாண்புமிகு ராஜிவ் காந்தி அவர்கள் என்னை அழைத்தார்கள். நானும் திரு. முரசொலி மாறன், எம்.பி. அவர்களும் மற்றும் நம்முடைய அரசு அலுவலர்களும் அங்கே சென்று இருந்தோம். அவர்களுடைய அலுவலர்கள், வெளியுறவுத்துறை இணை அமைச்சர், திரு நட்வர் சிங் அவர்கள், வந்திருந்தார்கள். அவர்களிடத்திலே பேசி முடித்தபிறகு, நானும் பிரதமரும் அரை மணி நேரம் தனியாகப் பேசி இருக்கிறோம். அப்போது சில கருத்துக்களை வெளியிட்டு, இதற்கெல்லாம் விடுதலைப்புலிகள் ஒத்துக் கொள்வார்களா என்று கேட்டார்கள். நான் அவர்களிடத்திலே சொன்னேன், இப்போது அங்கே நடைபெறுகின்ற கடுமையான சண்டையின் காரணமாக அவர்களோடு தொடர்பு கொள்வது என்பது எனக்கு இயலாத காரியம், எனவே, என்ன கருத்துக்கள் என்று தாங்கள் முன்வைப்பீர்களானால், அவைகளைப் பற்றி, அவர்களிடத்திலே கருத்து அறிவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொன்னேன். பிறகு அவர்கள் சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக அப்போதிருந்த வட கிழக்கு மாநில அதிகாரக் கவுன்சில் இருக்கிறதே, அதிலே இ.பி.ஆர்.எல்.எப். அல்லது அவர்களோடு சேர்ந்துள்ள சில குழுக்கள், பிரதான இடம் வகிக்கிறார்கள், அதை மறுபடியும் Reshuffling செய்து விடுதலைப் புலிகளுக்கும் அதிலே இடம் அளிக்கலாம் என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்து பற்றி இலங்கைக்கே சென்று—தமிழகத்தின் சார்பாக எம்.பி.க்களோ அல்லது நான் குறிப்பிடுகின்ற யாரோ அல்லது நானோகூட இலங்கைக்குச் செல்லலாம் என்றும், அங்கு பிரபாகரனையும் அவர்களைச் சேர்ந்தவர்களையும் சந்திக்கலாம் என்றும் திரு ராஜிவ் காந்தி அவர்கள் என்னிடத்திலே அன்றைக்கே சொன்னார்கள். மீண்டும் ஒருநாள் அவர்களைச் சந்தித்துப் பேசி, உறுதிப் படுத்திக்கொண்டுதான் வந்தேன். அதற்குப் பிறகு, விடுதலைப்

1990 சனவரி 22] [டாக்டர் மு. கருணாநிதி]

புலிகளோடு தொடர்பு கொண்ட நேரத்தில், அவர்கள் அந்தக் கருத்துக்களைப் பற்றி யோசிப்பதாகவும் அதுகுறித்துப் பேசுவதற்குத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்கள். நான் மீண்டும் டெல்லிக்குச் சென்று முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்து நான் இந்த விவரங்களைச் சொன்னேன். அவர்கள் தேதிகளையே குறித்துக் கொடுத்தார்கள். நான் இங்கிருந்து இலங்கைத் தூதுவரை இந்தத் தேதியில் அனுப்புகிறேன். அங்கிருந்து உங்களுக்குத் தகவல் வரும், இந்தத் தேதியில் நீங்கள் அங்கு செல்லலாம், சென்ற பிறகு நீங்கள் இலங்கைத் தூதரிடமும், இந்தியத் தூதரிடமும், அதைப்போல யார் உங்களுக்கு வசதிப்படுகிறார்களோ வாய்ப்பாக, அந்த விடுதலைப் புலிகளினுடைய பிரதிநிதிகளிடமும் நீங்கள் பேசி, ஒரு நல்ல முடிவை ஏற்படுத்தலாம் என்று சொன்னார்கள். மிக்க மகிழ்ச்சியோடு வந்தேன். அந்த நேரத்திலேதான் நம்முடைய நண்பர் திரு பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் கூட இந்த மன்றத்திலே கேள்வி நேரம் முடிந்தபிறகு எழுந்து இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கு உதவிய இந்தியப் பிரதமரையும், தமிழக முதலமைச்சரையும் பாராட்டுகிறேன் என்று சொன்னார். நானும் மகிழ்ந்து போனேன். அதற்குப் பிறகு தமிழகத்திலே ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள், அரசியல் பிரச்சினைகள், என்ன காரணத்தாலோ, இவ்வளவு பெரிய பிரச்சினையிலே போய் புகுந்துகொண்டு, பிறகு எந்தச் செய்தியுமே எனக்கு வராமலேயே போய்விட்டது. அதற்குப் பிறகு காத்துக் காத்து இருந்த விடுதலைப் புலிகளும், இந்த அரசோடு சமாதானம் செய்து கொள்வதைவிட, சாட்சிக்காரன் காலிலே விழுவதைவிட, சண்டைக்காரனிடத்திலே சமாதானமாகப் போய்விடலாம் என்பார்களே, அதைப்போல, அவர்களுக்கும் இலங்கை அரசுக்குமே, பேச்சுவார்த்தை நடைபெறத் தொடங்கிவிட்டது.

(10–45 மணி)

எனவே நானும் காத்திருந்து, என்னிடமிருந்து செய்தி வரும் என்பதற்காக விடுதலைப் புலிகளும் காத்திருந்தார்கள். ஆனால் டில்லியிலிருந்து பிரதமர் ராஜீவ் காந்தியிடமிருந்து எந்தவிதமான தகவலும் எனக்கு வராமலே போய்விட்டது. அதற்குப் பிறகு ஒரு நாள் எங்கேயோ செல்வதற்கு ராஜீவ் காந்தி அவர்கள் ஹெலிகாப்டரிலே வந்து இறங்கினார்கள். விமான நிலையத்திலே, அப்போது என்னிடத்திலே பேசினார்கள். அவரிடத்திலே சொன்னேன், இப்படி காலதாமதம் செய்து காரியத்தை கெடுத்து விட்டீர்களே என்று. இல்லை இல்லை, நாளைக்கே மாறனை அனுப்புங்கள், நாளை பேசிக் கொள்ளலாம் என்றார்கள். பிறகு மாறன் அனுப்பப்பட்டார். அவரிடத்திலே பேசினார். ஆனால் அதற்குள்ளாக காலம் தாழ்ந்துவிட்டது. எனவே இந்தப் பிரச்சினையில் மறுபடியும் ஈடுபட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அதன் பின்னர் நடைபெற்ற நிலைமைகள் எல்லாம் உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். இதிலே என்ன பொறுத்த

வரையில் பிரபாகரன் என்றோ, அல்லது வரதராஜப்பெருமாள் என்றோ, அல்லது பாலகுமாரன் அல்லது பத்மநாபன் என்றோ எனக்கு எந்த விதமான வித்தியாசமும் கிடையாது. அவர்கள் எல்லாம் தமிழ்நாட்டிலிருந்தபோது அனைவரையும் ஒன்று சேர்த்து அவர்கள் அனைவரும் ஒன்றாக இருக்கவேண்டும் என்பதிலே பெருமுயற்சி எடுத்துக்கொண்டவன் நான். அவர்கள் ஒன்றாக இருக்கவேண்டும் என்ற முயற்சி எடுத்துக் கொண்டவன் நான். அவர்கள் எல்லாம் என் சொற்படி ஒன்றாக இருக்கக் கூடாது என்று தடுத்தவர்கள் யார் என்பது பல பேருக்கும் தெரியும். நான் அவைகளை எல்லாம் இங்கே சொல்ல விரும்ப வில்லை. அதிலேயும் குறிப்பாக இன்றைக்கு வரதராஜப்பெருமாள் அவர்கள் முதலமைச்சராக வடகிழக்கு மாகாணத்திலே இருக் கிறார்கள். அவர்கள் என்னுடைய வீட்டிலே இருந்து உண்டு உறங் கியவர். எல்.டி.டி.யினுடைய தலைவராக இருக்கிற பிரபாகரன் ஒரு காலத்திலே அண்ணாநகர் தொகுதியிலே எனக்காகத் தேர்தல் பணியாற்றியவர். அப்படிப்பட்டவர்கள்தான் அவர்கள் எல்லாம். அந்த அளவிற்கு என்னோடு ஒருங்கிணைந்து இருந்தவர் கள்தான் அவர்கள். ஆனாலும் பிரபாகரன் அவர்கள், இடைக் காலத்திலே என்னுடைய பிறந்தநாள் விழாவின்போது எனக்கு அளித்த நிதியை, நான் பங்கிட்டு அளித்த நிதியைக்கூடப் பெற முடியாமல் தடுக்கப்பட்டார். அதற்கெல்லாம் காரணங்களை நான் இங்கே சொல்லவிரும்பவில்லை. ஏனென்றால் பிரச்சினை பெரியது. எனவே சிறிய காரணங்களிலே நான் தலையிட விரும்பவில்லை. ஆனால் அவைகளைப் பற்றி எல்லாம் நான் வருத்தப்படவில்லை. பிரபாகரன் ஒரு அறிக்கை விடுத்தார். பாசிஸ்ட் ஆட்சி தான் தேவை, ஜனநாயகம் எங்களுடைய ஈழத் திலே இருக்கக் கூடாது என்று சொன்னார். அதை மாத்திரம் நாங்கள் மறுத்தோம். ஜனநாயகம் கூடாது என்பதை எங் களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று நாங்கள் மறுத்தோம். அதற்குப் பிறகு இலங்கையிலே இதுபோன்ற நிலவரங்கள். இந்தியப் படை அங்கே சென்றது. அதனால் ஏற்பட்ட விளைவு கள், அங்கே தமிழர்கள் ரத்தம் சிந்திய கொடுமைகள், இந்தியப் படைகள் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் எல்லாம் இந்த மன்றத் திலே உள்ளவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். நான் அவை களை எல்லாம் விளக்க விரும்பவில்லை. அது தேவையும் இல்லை. நாட்டு மக்கள் அனைவருக்கும், உலகத் தமிழர்கள் அனை வருக்கும் அந்த உண்மை தெரியும் என்ற காரணத்தினால். இதற்கிடையிலே திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டம் நிறைவேற்றிய தீர்மானத்திலேகூட களத் திலே ஒன்றாக நின்றுகொண்டு இருப்போர்கள் பிரபாகரனுடைய போராளிகள், புலிகள். எனவே அவர்களோடு, இந்திய அர சோடு சமாதானமாகப் பேசி அவர்களையும் அழைத்துப் பேசி ஒரு நல்ல முடிவை ஏற்படுத்தவேண்டும் என்ற வகையிலேதான் பிரபாகரனுக்கும், எனக்கும் நெருக்கம் இல்லாவிட்டாலும் கூட நிலைமைகளைத் தெரிந்து அவர்களோடு பேசுவதுதான் சாலச்

1990 சனவரி 22] [டாக்டர் மு. கருணாநிதி]

சிறந்தது என்று இந்தியப் பிரதமருக்கு அறிவுறுத்தி நாங்கள் தீர்மானங்களையெல்லாம் நிறைவேற்றினோம். எல்லாம் முன் நடந்த கதைகள். நான் முதலிலே சொன்னது நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு நடைபெற்ற நிகழ்ச்சிகள். அதற்குப் பிறகுதான் வி. பி. சிங் அவர்கள் தலைமையில் தேசீய முன்னனி ஆட்சி டில்லியிலே அமைந்தது. அதற்குப் பிறகு அவர்களே இந்தப் பிரச்சினை பற்றிப் பேசவேண்டுமென்று என்னை அழைத்திருந் தார்கள். அங்கே சென்று அவர்களோடு பேசினேன். வெளி உறவுத்துறை அமைச்சர் குஜ்ராலோடு பேசினேன். பிறகு வெளி உறவுத்துறைச் செயலாளர் மற்றும் அதிகாரிகள் அனைவரோடும் பேசினேன். இதைத் தொடர்ந்து எல்.டி.டி. யினரோடு பேசுவதற்கு அவர்களே முன் வந்தார்கள். எல்.டி.டி.ஈ. குழுவினுடைய ஆலோசகராக இருக்கின்ற பாலசிங்கம் அவர்கள் என்னைத் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு டில்லிக்குச் செல்பவர்கள் எல்லாம் திரும்ப வந்தபிறகு சந்திக்க வேண்டுமென்றார். நான் அதைப் பிரதமரிடம் சொன்னேன். அவரும் சந்திக்கலாம் என்று சொன்னார். பிறகு சந்தித்தார்கள். முதன் முதலாக என்னோடு தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு பேச விரும்பியவர்களே எல்.டி.டி.யினர்தான்.

(10-50 மணி]

அதனால்தான் அவர்களைச் சந்தித்தேன். நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் கூட இங்கே பேசும்போது முதலிலே எல்.டி.டி.யினரை சந்தித்தீர்களே என்றார்கள். யாரையும் ஒதுக்கிவிட்டு சந்திக்க வேண்டும் என்பது அல்ல. முதலிலே அவர்கள் தொடர்பு கொண்டார் கள். ஆகவே அவர்களைச் சந்தித்து 2, 3 நாட்கள் தொடர்ந்து நானும் நம்முடைய கல்வியமைச்சர் அவர்களும் மத்திய அமைச்சரும், மற்றவர்களும் அவர்களோடு பேசினோம். அதற்குப் பிறகு ஈராஸ் இயக்கத்தைச் சேர்ந்த பாலகுமாரன் அவர்களைச் சந்தித்துப் பேசினேன். அதற்கிடையில் டி.யு. எல். எப்.—தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி—அமிர்தலிங்கம் அவர்களுடைய தலைமையில் இயங்கி வந்த அந்த அணியி னுடைய தலைவர் சிவசிதம்பரம் மற்றும் சிலர் என்னைக் கோட்டையிலே வந்து சந்தித்து அரை மணி நேரத்திற்கு மேலாகப் பேசிச் சென்றிருக்கிறார்கள். இவையெல்லாம் பத்திரிகையில் வராத காரணத்தால் யாரையும் சந்திக்க வில்லை என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. அவர்களே இவற்றைப் பத்திரிகைகளில் வெளியிடக் கூடாது, ஏனென்றால் அவர்களுடைய நடமாட்டம் கூட தெரிய வேண்டாம் என்று விரும்பிய காரணத்தால் அன்றைக்கு நான் சொல்லவில்லை. கோட்டையிலே அவர்கள் வந்து சந்தித்து விட்டுச் சென்றார்கள்.

அதற்குப் பிறகு வரதராஜப்பெருமாள் வருவதாக பல முறை அறிவிக்கப்பட்டு வரவில்லை. பிறகு வந்து வரதராஜப்பெருமாள் அவர்கள் 2, 3 நாட்கள் தங்கி, 4, 5 மணி நேரம் என்னிடத்திலே பேசியிருக்கிறார். நான் அவரிடத்திலே எடுத்துச் சொன்னது எதுவும் இரகசியம் இல்லை, எல்லாம் வெளிப்படையானதுதான். எல்.டி.டி.யினர் கேட்டது—அங்கிருக்கிற தமிழ் நேஷனல் ஆர்மி என்று இன்றைக்கு அங்கிருக்கிற அந்தப் படை பெயரளவில் தமிழ் நேஷனல் ஆர்மி என்று இருந்தாலும் கூட அதற்கு பின்னாலிருந்து உதவிகளைச் செய்துக் கொண்டிருப்பது ஐ.பி.கே.எப். தான். அவர்கள் தான் உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆயுதங்களை தந்து கொண்டிருக்கிறார்கள். முதலிலே அந்த ஆயுத சப்ளை நிறுத்தப்பட வேண்டும். அந்த இயக்கம் கலைக்கப்பட வேண்டும். அப்படி கலைக்கப்பட்டால் மறுநாளே Ceasefire என்ற யுத்த நிறுத்தம் அறிவிக்கப்படும். மறுநாளே நாங்கள் சண்டை போட்டுக்கொள்ள மாட்டோம் என்று அறிவிக்கத் தயாராக இருக்கிறோம் என்று எல்.டி.டி.யினர் என்னிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். வடகிழக்கு மாநிலங்களில் புதிய தேர்தலை நடத்தச் சொல்லுங்கள். நாங்கள் எங்களுடைய இயக்கத்தை அரசியல் கட்சியாக ஆக்கிக் கொண்டு நாங்கள் அரசியலிலே ஈடுபட்டு ஜனநாயக ரீதியில் மக்களிடத்தில் வாக்குகளைப் பெற்று நாங்கள் தேர்தலிலே போட்டியிடுகிறோம் என்று சொன்னார்கள், இந்தக் கருத்துக்களை நான் வரதராஜப்பெருமாளிடத்திலே எடுத்து வைக்கும்போது அவர் சொன்னார். முதலிலே அங்கிருக்கிற வடகிழக்கு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும். அதற்குப் பிறகுதான் இவைகளைப் பற்றியெல்லம் பேச முடியும் என்று சொல்லிவிட்டார்.

அதற்கு நான், இரண்டாண்டுக் காலமாகத் தரப்படாத அதிகாரத்தை 2 மாதங்களில் எப்படித்தர முடியும் என்று கேட்டேன். இங்கே கூட சொன்னார்கள்; அதுவரையிலும் படை வாபஸ் பெறக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால் படை வாபஸ் பெறவேண்டுமென்று அறிவித்தது இன்றைய பிரதமர் வி. பி. சிங் அல்ல. முன்னால் பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களே அதை அறிவித்து, சனவரி 31 ஆம் தேதிக்குள் எல்லாப் படைகளும் திரும்பி விடுவார்கள் என்று அறிவித்து, அந்த அறிவிப்புக்கு ஏற்ப வாராவாரம் கப்பல்களில் படையினர் வரத் தொடங்கிவிட்டார்கள். இது நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிகழ்ச்சி. இப்போது மார்ச் மாதம் வரையிலே அதற்குத் தவணை போடப்பட்டிருக்கிறது. அதற்கிடையில் நடைபெறுகிற நிகழ்ச்சிகள்—அவர்கள் கொல்லப்பட்டார்கள், இவர்கள் கொல்லப்பட்டார்கள் என்று சொல்கின்ற செய்திகள் பத்திரிகைகளிலே வருகின்றன. நாம் படித்துப் பார்த்து துடித்துப் போகிறோம். எந்த இலங்கை மண்ணில் தமிழர்களுடைய,

இரத்தம் சிந்தக்கூடாது என்று நாம் அனைவரும் விரும்பினோமோ அதற்கு மாறாக சிங்களவர் அடிக்காமல் இந்திய சிப்பாய்கள் அடிக்காமல் தமிழர்களே ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டு உயிர் விடுகின்ற நிலையும் இரத்தம் சிந்துகின்ற நிலைமையும் தொடர்ந்து வேதனை அளிக்கக் கூடியவை என்பதில் இருவேறு கருத்துக்கு இடமே இல்லை.

எனவே தான் அந்த இரு சாராரையும் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டேன். சகோதர யுத்தத்தைக் கைவிடுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். அதுபற்றித் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறேன்.

நேற்றைக்கு கூட கவர்னர் உரையில் பேசும்போது ஆல்போன்ஸ் அவர்களும் மற்றவர்களும், என்னுடைய கடமை முடிந்து விட்டது, என் பணி முடிந்து விட்டது என்று நான் சொன்னதாகச் சொன்னார்கள், அவர்கள் அடுத்த வரியைப் படிக்கவில்லை. எல்.டி.டி.யினரோடு பேசிய என்னுடைய பணி முடிந்துவிட்டது, மேற்கொண்டு மத்திய சர்க்கார் யாரோடு பேச வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்களோடு பேச நான் தயாராக இருக்கிறேன் என்று சொன்னேன். அதற்குப் பிறகுதான் வரதராஜப்பெருமாள் என்னோடு பேசுவதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தந்தார்கள். வரதராஜப் பெருமாள் வந்து என்னோடு பேசினார். அந்த அளவிலே பணி முடிந்து விட்டதாகச் சொன்னேனே அல்லாமல் வேறு அல்ல. பணி முடியவில்லை. தமிழர்களுடைய ரத்தம் சிந்தப்படாமல் காப்பாற்றப்படுவதற்காக என்னுடைய இறுதி மூச்சு வரையிலும் பாடுபடுவேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணி என்றைக்கும் முடியாது என்பதைத் தெரிவித்து இந்த அவையிலே எழுப்பப்பட்ட பிரச்சினைகளை, எதிர்க்கட்சித் தலைவர் ஆனாலும், காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவரானாலும், லத்தீப் அவர்களானாலும், மற்றவர்கள் ஆனாலும் இன்று எழுந்து பேச சந்தர்ப்பம் இல்லாமல் அந்த உணர்வோடு ஒன்றிப்போயிருக்கிற அத்தனை பேருடைய உணர்வுகளோடும் என்னுடைய உணர்வையும் இணைத்து இந்தச்சிக்கலான பிரச்சினைக்கு சீக்கிரமே ஒரு முடிவு காண வேண்டும்; அந்த முடிவை விரைவில் எய்துவதற்கு நாம் அனைவரும் ஒரு மனதாகப் பணியாற்ற வேண்டும் என்று கூறி அமைகிறேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஒருவாரகாலமாக திருச்சி மாவட்டத்திலே காலரா(குறுக்கீடு)

10-55 மணி

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் ஒரு முக்கியமான விளக்கமான, உணர்வுப் பூர்வமான அறிக்கையினை இந்த மாமன்றத்திற்குத் தாக்கல்

செய்துள்ளார்கள். அவர்கள் தெரிவித்துள்ள உணர்வுகளிலே எங்களுக்கு முழுமையான உடன்பாடு உண்டு, எல்.டி.டி.யைச் சேர்ந்த அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் நம்முடைய முதல்வர் அவர்களைச் சந்தித்து பேசியதாகவும், அங்கே இருக்கின்ற நேஷனல் ஆர்மிக்கு ஐ.பி.கே.எப். ஆயுதங்கள் சப்ளை செய்வதாகவும் அதை நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாகவும் சொன்னார்கள். அதிலே எங்களுக்கு மாறுபாடான கருத்து இல்லை. அதைப் போல அவர்கள் வைத்திருக்கின்ற ஆயுதங்களையும் அவர்கள் சரண்டர் செய்வார்களா? அதைப் பற்றி முதல்வர் அவர்கள் கேட்டார்களா என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே நான் கேட்காமல் இருந்திருக்கமாட்டேன், கேட்டேன். அதில் ஆயுதங்களைச் சரண்டர் செய்வதாகச் சொன்னால் மாத்திரம் நடந்துவிடுவதில்லை, ஆயுதங்களைச் சரண்டர் செய்யும்போது 10 ஆயுதங்கள் இருந்தால் 5 ஆயுதங்களைச் சரண்டர் செய்வார்கள். 5 ஆயுதங்கள் புதையுண்டு போகும். இது தான் நடப்பது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டத்திலே இந்தப் பிரச்சினை பல வருடங்களாக நடந்துகெண்டிருக்கிறது, மத்திய அரசு தீர்க்க வேண்டிய பொறுப்பு இது, நம்முடைய தலையிலே கட்டுகிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இப்போது நீங்கள் காலராவிற்கு வருகிறீர்கள்.

(ஆ) திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலே சில பகுதிகளில் காலரா நோய் பரவியுள்ளது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : காலராவிற்கு வந்து விட்டேன். சென்ற ஒரு வார காலமாக எங்கள் மாவட்டத்திலே, எங்கள் தொகுதியிலே, அந்தநல்லூர், பழூர், முத்தரச நல்லூர் ஆகிய கிராமங்களிலே காலரா பரவி, ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிட்டலிலே கிட்டத்தட்ட 40 பேர்களுக்கு மேலே அனுமதிக்கப்பட்டு, இரண்டு பேர்கள் அதிலே இறந்து போயிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, அந்தக் காலரா அதோடு நிற்கும் என்று எதிர்பார்த்தேன். அது அப்படியே நீண்டு கொண்டே போய், திருவரம்பூர், தூவாக்குடி பக்கமாகப் போய் அரியலூர், ஜெயங்கொண்டம் என்று நம்முடைய மாவட்டத்திலே பரவி இருக்கிறது. நான் நினைத்தேன். ஏதோ காவேரிப் பகுதி, மழை பெய்திருக்கிறது. தண்ணீர் தேக்கம் இருக்கும். அந்தத் தண்ணீரில் ஏதோ மிஸ்டேக், முனிசிபாலிட்டி தவறு

செய்துள்ளார்கள். அவர்கள் தெரிவித்துள்ள உணர்வுகளிலே எங்களுக்கு முழுமையான உடன்பாடு உண்டு, எல்.டி.டி.யைச் சேர்ந்த அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் நம்முடைய முதல்வர் அவர்களைச் சந்தித்து பேசியதாகவும், அங்கே இருக்கின்ற நேஷனல் ஆர்மிக்கு ஐ.பி.கே.எப். ஆயுதங்கள் சப்ளை செய்வ தாகவும் அதை நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்ட தாகவும் சொன்னார்கள். அதிலே எங்களுக்கு மாறுபாடான கருத்து இல்லை. அதைப் போல அவர்கள் வைத்திருக்கின்ற ஆயுதங்களையும் அவர்கள் சரண்டர் செய்வார்களா? அதைப் பற்றி முதல்வர் அவர்கள் கேட்டார்களா என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே நான் கேட்காமல் இருந்திருக்கமாட்டேன், கேட்டேன். அதில் ஆயுதங்களைச் சரண்டர் செய்வதாகச் சொன்னால் மாத்திரம் நடந்துவிடுவதில்லை, ஆயுதங்களைச் சரண்டர் செய் யும்போது 10 ஆயுதங்கள் இருந்தால் 5 ஆயுதங்களைச் சரண்டர் செய்வார்கள். 5 ஆயுதங்கள் புதையுண்டு போகும். இது தான் நடப்பது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டத்திலே இந்தப் பிரச்சினை பல வருடங்களாக நடந்துகெண்டிருக்கிறது, மத்திய அரசு தீர்க்க வேண்டிய பொறுப்பு இது, நம்முடைய தலையிலே கட்டுகிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இப்போது நீங்கள் காலராவிற்கு வருகிறீர்கள்.

(ஆ) திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலே சில பகுதிகளில் காலரா நோய் பரவியுள்ளது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : காலராவிற்கு வந்து விட்டேன். சென்ற ஒரு வார காலமாக எங்கள் மாவட்டத்திலே, எங்கள் தொகுதியிலே, அந்தநல்லூர், பழூர், முத்தரச நல்லூர் ஆகிய கிராமங்களிலே காலரா பரவி, ஹெட்குவார்ட் டர்ஸ் ஹாஸ்பிட்டலிலே கிட்டத்தட்ட 40 பேர்களுக்கு மேலே அனுமதிக்கப்பட்டு, இரண்டு பேர்கள் அதிலே இறந்து போயிருக் கிறார்கள். அந்த அடிப்படையிலே, அந்தக் காலரா அதோடு நிற்கும் என்று எதிர்பார்த்தேன். அது அப்படியே நீண்டு கொண்டே போய், திருவரம்பூர், தூவாக்குடி பக்கமாகப் போய் அரியலூர், ஜெயங்கொண்டம் என்று நம்முடைய மாவட்டத் திலே பரவி இருக்கிறது. நான் நினைத்தேன். ஏதோ காவேரிப் பகுதி, மழை பெய்திருக்கிறது. தண்ணீர் தேக்கம் இருக்கும். அந்தத் தண்ணீரில் ஏதோ மிஸ்டேக், முனிசிபாலிட்டி தவறு

1990 சனவரி 22] *[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]*

என்று. ஆனால் இது ஜில்லா பூராவும் பரவி வருவதால் இதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? அதனுடைய விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : தலைவர் அவர்களே, கடந்த 17-ந் தேதி நான் இங்கு புறப்பட்டுக்கொண்டிருக்கும் போது இரண்டு பேர்கள் இறந்திருந்தார்கள், திருவரம்பூர், தூவாக்குடியில். அங்கு டி.எச்,ஓ., மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து நடவடிக்கை எடுக்கக்கோரி விட்டு வந்தேன். இங்கு வந்த பிறகு அந்தத் துறை அமைச்சரிடமும் அதைப்பற்றிக் கூறினேன். நான் வந்தபோது இரண்டு பேர்கள் இறந்திருந்தார்கள். பிறகு 4 ஆகி இன்றைக்கு 7 ஆகிவிட்டதாக தொலைபேசி மூலமாக தகவல் வந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, அந்தப் பகுதியிலே சுகாதாரக் கேடுகளும், நல்ல சுத்தமான குடிதண்ணீரும் இல்லாத காரணத்தினால் இந்த நோய் பரவலாக பரவக்கூடிய அபாயம் இருக்கிறது. ஆகவே இந்தச் சூழ்நிலையில் நம்முடைய அதிகாரிகளைத் துரிதமாக விரைவாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கச் சொல்லி இப்படி அகாலமாக மரணம் அடையக்கூடிய மக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக எல்லாக் கிராமங்களிலும், 20 தாலுக்காக்களில் இந்த காலரா நோய் மிகக் கடுமையாக பரவியிருக்கிறது. அதனால், 45, 50 பேர் தஞ்சாவூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 15 பேர்கள் இறந்து விட்டதாக எனக்குத் தொலைபேசி மூலமாக தகவல் சொல்லப் பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல பேராவூரணியில், அழகிய நாயகிபுரம், செருவாவிடுதி, பட்டுக்கோட்டை, ராஜாமடம் மற்றும் அதிராம்பட்டினம் போன்ற பகுதிகளில் இந்த நோய் பரவி நூற்றுக்கணக்கான நபர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் வைத்தியங்கள் செய்யப்பட்டு பலர் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆனால் தஞ்சை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்கள் 15 பேர்கள் இறந்துவிட்டதாகத் தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே பெராவூரணி, மற்ற பகுதிகளில் குளுகோஸ் ஏற்றுவதற்கு பாட்டில்கள் கூட சம்பந்தப்பட்ட ஏழைகளிடம் வாங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இது போன்ற அவசரக் காலங்களில் அந்த குளுகோஸ் பாட்டில்கள் அதிகமான அளவில் எல்லா மருத்துவமனைகளுக்கும் வழங்குவதற்கான தீவிர நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். சுகாதாரக் கேட்டினால் தான் இந்த விளைவு ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதைப்பற்றி அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

எத்தனை பேர்கள் இறந்தார்கள்? எத்தனை பேர்கள் ஆஸ்பத்திரியில், தஞ்சை மாவட்டம் முழுவதும் அனுமதிக்கப்பட்டார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த திருவரம்பூர், அந்தநல்லூர், திருமானூர் வட்டாரங்களில் குடற் சுழற்சி நோய் ஏற்பட்டு 11–1–1990 லிருந்து 21–1–1990 வரை மொத்தமாக 88 நபர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 10 நபர்கள் இந்நோயினால் இறந்துள்ளார்கள். தற்சமயம் அரியலூர் அரசு மருத்துவமனையில் 6 நபர்கள் மட்டும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(11-00 மணி)

மற்றவர்கள் சிகிச்சைக்குப் பின் குணமடைந்து வீடு திரும்பி விட்டனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்நோய் மேலும் பரவாமல் இருக்க 5,405 நபர்களுக்கு காலரா தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. 516 பாதிக்கப்பட்ட மற்றும் இதர வீடுகள் கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளன. 90 குடிநீர் நிலைகள், கிணறுகள், டேங்குகள் போன்றவைகள் குளோரினேஷன் செய்யப்பட்டு வருகின்றன. தேவையான அளவுக்கு மருந்துகளும், கிருமிநாசினிகளும், வாக்சின்களும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு, இந்நோயினைக் கட்டுப்படுத்தத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 5 மருத்துவ அலுவலர்கள் இதற்கெனவே தனியாக அமர்த்தப்பட்டு, திருச்சி மருத்துவமனையினுடைய துணை மாவட்ட அதிகாரியினுடைய தலைமையிலே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். மேலும், அரியலூர் அரசு மருத்துவமனையில் 4 மருத்துவர்கள் முகாமிட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். திருச்சிராப்பள்ளி மண்டல பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு துணை இயக்குநர் அவர்கள் தடுப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டு வருகின்றார்கள். சென்னை கிங் நிலையத்திலிருந்து நீர் பகுப்பாய்வாளர் குழு ஒன்று நீர் மாதிரிகள் எடுத்து பரிசோதனை செய்யும்பொருட்டு அனுப்பப்பட்டுள்ளது. மல மாதிரிகள் எடுக்கப்பட்டு, பரிசோதனைக்காக அனுப்பப்பட்டு, அவைகள் இப்போது பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன. 21–1–1990 அன்று (நேற்று) பாதிப்புகள் எதுவும் இல்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில்துறை அமைச்சர் அவர்களும் நேற்று திருச்சியிலேயே இருந்து அவரே தொடர்பு கொண்டு அங்கே இருக்கிற மருத்துவ அதிகாரிகளுடன் அதைப்பற்றிக் குறிப்பிட்டு துரித நடவடிக்கைகளில் ஈடுபாடுமாறு பணித்திருக்கிறார்கள். அந்தப் பணிகள் இப்போது விரைந்து தடுப்பதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

1990 சனவரி 22]

திரு. கே. ஏ. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீதான விவாதத்தில் உழவர்-உழைப்பாளர் கட்சியின் கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னுடைய அறையிலே வந்து செய்தித் தாளில் வந்த செய்தி தொடர்பாக வாய்ப்புக் கேட்டீர்களே, (குறுக்கீடு) ஒன்றும் இல்லையா, சரி அடுத்து, திரு. கே. அர்ஜுனன்.

(இ) சேலத்தில் வெப்ப உருட்டாலை அமைக்க வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்த வேண்டிய அவசியம் குறித்து.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலைக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களும், முந்தைய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் அடிக்கல் நாட்டினார்கள். அந்த உருக்காலை இன்றைக்கு உருட்டாலையாக நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அதன் பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தொழில் அமைச்சராக திரு. திருநாவுக்கரசு இருந்தபோது, மத்திய அமைச்சர் திரு. என். டி. திவாரி அவர்களும் இருந்து, அங்கே அந்த ஆலை சற்று விரிவாக்கப்பட்டு 400 கோடி ரூபாய் அளவிற்கு விரிவாக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அந்த ஆலை 20 ஆண்டுக் காலமாகி, இன்றைக்கும் அது உருக்காலையாக உருவாகவில்லை. ஆனால் தற்போது செய்தித் தாளில் வந்திருக்கிற செய்திக் குறிப்பின்படி வெப்ப உருட்டாலை சேலத்திலே உருவாவதற்குண்டான வாய்ப்பு தென்படுகிறது. 382 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய அரசின் மூலமாக வெப்ப உருட்டாலை சேலத்திலே உருவாவதற்கு ஒரு வாய்ப்பு உருவாகியிருக்கிறது. இந்த ஆலை வருமானால் நிறைய உபரி தொழிற்சாலைகளும் வருவதற்குண்டான வாய்ப்பு இருக்கிறது. மேற்கு வங்கத்திலும், தமிழகத்திலும்தான் இந்த ஆலை வருவதற்குண்டான வாய்ப்பு இருப்பதாக மத்திய அரசு செய்திக் குறிப்பு குறிப்பிடுகிறது. மத்திய அமைச்சர் திரு. கோஸ்வாமி அவர்கள் இங்கே வந்திருந்த போது நம்முடைய முதல்வரைச் சந்தித்து இருக்கிறார். அப்போது இந்தப் பிரச்சினையை அவரிடத்திலே வலியுறுத்தவில்லை என்று பத்திரிகையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, இந்த ஆலை அங்கே வந்தால் இன்னும் சேலம் பகுதியின் வளர்ச்சிக்கு வலுவாக இருக்கும். ஏப்ரல் மாதம் முதல் வாரத்திலே இதற்குண்டான முடிவு அறிவிக்கப்பட்டுவிடும் என்று குறிப்பிடப்படுகிற காரணத்தால் இன்னும் இரண்டு மாதத்திற்குள்ளாக வருகிறது. எனவே, தற்போது இருக்கிற சூழ்நிலையில் மேற்கு வங்கத்தை விட நம்முடைய அரசிற்கு, மத்திய அரசிடத்திலே கேட்டுப் பெறுவதற்

1990 சனவரி 22]

திரு. கே. ஏ. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீதான விவாதத்தில் உழவர்-உழைப்பாளர் கட்சியின் கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னுடைய அறையிலே வந்து செய்தித் தாளில் வந்த செய்தி தொடர்பாக வாய்ப்புக் கேட்டீர்களே, (குறுக்கீடு) ஒன்றும் இல்லையா, சரி அடுத்து, திரு. கே. அர்ஜுனன்.

(இ) சேலத்தில் வெப்ப உருட்டாலை அமைக்க வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்த வேண்டிய அவசியம் குறித்து.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலைக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களும், முந்தைய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் அடிக்கல் நாட்டினார்கள். அந்த உருக்காலை இன்றைக்கு உருட்டாலையாக நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அதன் பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தொழில் அமைச்சராக திரு. திருநாவுக்கரசு இருந்தபோது, மத்திய அமைச்சர் திரு. என். டி. திவாரி அவர்களும் இருந்து, அங்கே அந்த ஆலை சற்று விரிவாக்கப்பட்டு 400 கோடி ரூபாய் அளவிற்கு விரிவாக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அந்த ஆலை 20 ஆண்டுக் காலமாகி, இன்றைக்கும் அது உருக்காலையாக உருவாகவில்லை. ஆனால் தற்போது செய்தித் தாளில் வந்திருக்கிற செய்திக் குறிப்பின்படி வெப்ப உருட்டாலை சேலத்திலே உருவாவதற்குண்டான வாய்ப்பு தென்படுகிறது. 382 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய அரசின் மூலமாக வெப்ப உருட்டாலை சேலத்திலே உருவாவதற்கு ஒரு வாய்ப்பு உருவாகியிருக்கிறது. இந்த ஆலை வருமானால் நிறைய உபரி தொழிற்சாலைகளும் வருவதற்குண்டான வாய்ப்பு இருக்கிறது. மேற்கு வங்கத்திலும், தமிழகத்திலும்தான் இந்த ஆலை வருவதற்குண்டான வாய்ப்பு இருப்பதாக மத்திய அரசு செய்திக் குறிப்பு குறிப்பிடுகிறது. மத்திய அமைச்சர் திரு. கோஸ்வாமி அவர்கள் இங்கே வந்திருந்த போது நம்முடைய முதல்வரைச் சந்தித்து இருக்கிறார். அப்போது இந்தப் பிரச்சினையை அவரிடத்திலே வலியுறுத்தவில்லை என்று பத்திரிகையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, இந்த ஆலை அங்கே வந்தால் இன்னும் சேலம் பகுதியின் வளர்ச்சிக்கு வலுவாக இருக்கும். ஏப்ரல் மாதம் முதல் வாரத்திலே இதற்குண்டான முடிவு அறிவிக்கப்பட்டுவிடும் என்று குறிப்பிடப்படுகிற காரணத்தால் இன்னும் இரண்டு மாதத்திற்குள்ளாக வருகிறது. எனவே, தற்போது இருக்கிற சூழ்நிலையில் மேற்கு வங்கத்தை விட நம்முடைய அரசிற்கு, மத்திய அரசிடத்திலே கேட்டுப் பெறுவதற்

குண்டான வாய்ப்பு நிறைய இருக்கிறது. மேற்கு வங்கத்தைப் பொறுத்தவரையில் அங்கே இடது கம்யூனிஸ்டு கட்சியினுடைய ஆட்சி மத்திய அமைச்சரவையிலே இடம் பெறவில்லை. நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொன்னால் தான் அடுத்த தடவை வாய்ப்புக் கொடுப்பேன். ஒவ்வொருவரும் உரையாற்றத் தொடங்கினால் எப்படி நான் அவையை நடத்த முடியும்?

திரு. சே. அர்ஜுனன்: அங்கே அவர்கள் இருக்கிற காரணத்தால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதை வலியுறுத்தி கண்டிப்பாகப்பேசி சேலத்திற்கு வாங்கித் தரவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

(11-05 மணி)

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அர்ஜுனன் அவர்கள் எழுப்பிய அதே பிரச்சினைதான் என்று சொன்னாலும் மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய நிலையிலிருந்து ஒரு மாறுபட்ட சூழ்நிலையிலே நம்முடைய புதிய அரசிடமிருந்து ஒரு விளக்கத்தை நான் எதிர்பார்க்கிறேன். மாண்புமிகு உறுப்பினர், இந்தப் பிரச்சினையைப் பொறுத்த அளவிலே ஒரு அரசியல் ஆதாயம் கிடைக்குமா என்று எதிர்பார்க்கிறார். என்னைப் பொறுத்த அளவிலே, இன்றைக்கு, மூடப்பட்ட ஆலைகள் திறக்கப் பட்டு வருகின்றன. பல்வேறு புதிய தொழிற்சாலைகள் மாவட்டங்களிலே திறக்கப்பட்டு வருகின்றன........ (மணியடிக்கப் பெற்றது).

*திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடத்தில் இந்த சேலம் வெப்ப உருட்டாலை வருவது சம்பந்தமாக ஒரு சிறிய விளக்கத்தை முதலமைச்சர் அவர்களிடத்திலே கேட்கவேண்டுமென்று தங்கள் அனுமதி கேட்டிருந்தேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சேலம் உருட்டாலையை விஸ்தரிப்பு செய்ய வேண்டுமென்று தொடர்ந்து அது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து சொல்லிக் கொண்டு வருகின்றார்கள். பத்திரிகையிலே வந்த செய்தியை வைத்து நான் தவறாக எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. 382 கோடி ரூபாய் அளவிலே இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு முதன்மையாக வெப்ப உருட்டாலை தற்போது துர்காபூரிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு, அந்த ஷீட்டுகளெல்லாம் பதப்படுத்துவதற்கு அனுப்பி திரும்பவும் துர்காபூருக்கு வந்து, மறுபடியும் சேலம் வருகிறது. இதிலே அந்நிய செலாவணி நிறைய சேதப்படுகிறது. அதை மிச்சப்படுத்தும் பொறுப்பு, முக்கிய வாய்ப்புகள் சேலம் உருக்காலைக்கு இருக்கிறது. அந்த சேலம் உருக்காலையை வெப்ப உருட்டாலையாக மாற்றுவதற்கு தற்போது முயற்சிகள் மேற்கொண்டு வருகின்ற நேரத்தில் நமக்கு

1990 சனவரி 22] (திரு. கோ.பூவராகன்)

இருக்கின்ற முன்னுரிமையை வைத்து, அரசாங்கம் அடிக்கடி வலியுறுத்துவதை வைத்து, தற்போது கோஸ்வாமி அவர்கள் சென்னைக்கு வந்தார்கள்; நமது முதல் அமைச்சர் அவர்களை மரியாதை நிமித்தம் சந்தித்தார்கள்; மரியாதை நிமித்தம் சந்திக்கின்றபோது அவர்கள் கோரிக்கைகளெல்லாம் எழுப்பி, எங்களுக்கு இவைகள் தேவை என்று சொல்லவில்லையென்றாலும், அடிக்கடி டெல்லி நகருக்குச் செல்கின்றபோது தற்போது புதிய அமைச்சரவையிலே பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வி. பி. சிங் அவர்களிடத்திலே இது சம்பந்தமாகப் பேசி இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். விரைவிலே அதைத் துரிதப்படுத்துவதற்கு, இந்தத் திட்டத்தை இந்த ஆண்டிலே சேர்ப்பதற்கு மறுபடியும் வற்புறுத்துவார்கள் என்று நம்புகிறேன். வற்புறுத்திப் பெறுவதற்கு முயற்சி எடுப்பார்கள். மத்திய அரசும் இதற்கு உதவும் என்பதிலே தெள்ளத் தெளிவாக முதல்வர் அவர்கள் இதற்கு ஒரு விளக்கம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் ஸ்டீல் பிளான்ட் என்பதற்கும் சேலம் ஸ்டீல் ரீ-ரோலிங் மில்ஸ் என்பதற்கும் உள்ள வித்தியாசத்தால்தான் இன்றையதினம் இந்தப் பிரச்சினையே எழும்பி இருக்கிறது. கழகம் ஆட்சியிலே இருந்த கடந்த காலத்தில், 1969 ஆம் ஆண்டு, அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு பொறுப்பேற்ற நான், டெல்லியில் நடைபெற்ற என்.டி.சி. (நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சில்) முதலமைச்சர்கள் கலந்து கொள்கின்ற அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டபோது நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் விவாதிக்கப்பட்டது. அதை ஏற்றுக் கொள்கிறீர்களா என்று ஒவ்வொரு முதலமைச்சரையும் அன்றைய பிரதமர் அன்னை இந்திராகாந்தி அம்மையார் கேட்ட நேரத்தில் நான் எழுந்து, சேலம் உருக்காலைத் திட்டம் இடம் பெறாத அந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்ட (டிராப்ட்) வரைவை, தமிழக மக்களின் சார்பாக நான் எதிர்க்கிறேன், ஏற்றுக்கொள்ளவில்லையென்று நான் என்னுடைய மறுப்பைத் தெரிவித்தேன். அந்த மறுப்பை மதித்து, அடுத்த ஒரு வாரத்திற்கெல்லாம் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் சேலம் ஸ்டீல் பிளான்ட், அதற்கான அனுமதியை வழங்கி அதை ஏடுகளிலும் அறிவித்தார்கள். அதைத் தொடர்ந்து அவர்களே சேலத்திற்கு வந்து அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்து விட்டு, அதற்கு அடிக்கல் நாட்டு விழா செய்து விட்டும் சென்றார்கள். அதற்குப் பிறகு ஸ்டீல் பிளான்ட் என்ற நிலை மாறி அது உருக்காலை அல்ல—உருட்டாலை, ஸ்டீல் ரீ-ரோலிங் என்கின்ற அளவிற்கு உருட்டாலையாக அது மாற்றம் பெற்றது.

நண்பர் அர்ஜுனன் இங்கே பேசும்பொழுது, இன்றைக்கு உருட்டாலையாக இருக்கிறது என்று சொன்னார். ஒருவேளை இன்றைக்கு என்பதை ஒரு அசைச் சொல்லாக அவர் பயன்

படுத்தியிருக்கிறார் என்று நான் கருதுகின்றேன். இன்றைக்கல்ல, நேற்றைக்கே அது உருக்காலையாக ஆகிவிட்டது எஃபதை நான் அவருக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்தாலும்கூட அது மீண்டும் உருக்காலையாக விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பதிலே அக்கறை செலுத்தி, பாராளுமன்றத்திலும் அதுபற்றி பேசப்பட்டிருக்கிறது; இங்கேயும் அதுபற்றி பேசப்பட்டிருக்கிறது. இன்று பத்திரிகையிலே வந்துள்ள செய்தியைப்பற்றி திரு. அர்ஜுனன் அவர்களும், திரு. பூவராகன் அவர்களும், திரு. அண்ணாதுரை அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். பத்திரிகையிலே வந்த செய்தியின்படி அரசு அதிலே அக்கறையற்று இருக்கவில்லை. நான் டெல்லிக்குச் சென்று தமிழ்நாட்டிற்குத் தேவையான பல்வேறு திட்டங்களைப் பற்றி அங்குள்ள பிரதமரிடத்திலும், மத்திய அமைச்சர்களிடத்திலும் விவாதித்து, இந்தத் துறையைச் சேர்ந்த மத்திய அமைச்சர் இடத்திலும் இது குறித்துப் பேசியிருக்கின்றேன். தொடர்ந்து கடிதமும் எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஒரு திட்டம் மாத்திரம் அல்ல; தமிழகத்திற்குத் தேவையான உரிய திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றித் தர வேண்டுமென்று தொடர்ந்து அந்தக் காலத்திலேயிருந்து இந்தக் காலம் வரையில் நாம் எழுதிக் கொண்டு இருக்கிறோம். இதைத் தவற விட்டுவிட மாட்டோம் என்ற உறுதியை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(11–10 மணி)

(ஈ) காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி வெளியே தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் குறித்து:

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்கு மிகவும் அக்கறையுள்ள, ஆனால் சிக்கலான காவிரி நீர்ப்பிரச்சினை சம்பந்தமாக அண்மையில் வெளியாகி இருக்கக் கூடிய இரு தகவல்கள் குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே விளக்கம் பெறுவதற்காக உங்கள் இசைவு பெற்று நான் எழுப்புகிறேன். 1924 ஆம் ஆண்டில் ஏற்பட்ட காவிரி நீர் சம்பந்தமான ஒப்பந்தம் அன்றைய சென்னை-மைசூர் மாகாணங்களுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தம். அது 1956 ஆம் ஆண்டில் உருவாகிய கர்நாடக அரசைக் கட்டுப்படுத்தாது, எவ்வாறு கட்டுப்படுத்தும் என்கிற பொருள்பட கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. வீரேந்திரபட்டீல் பெங்களூரில் சனிக்கிழமையன்று ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். எந்த ஒரு ஒப்பந்தமும் அடுத்து ஒரு ஒப்பந்தமோ அல்லது தீர்ப்போ வராத வரையில் அதனுடைய காலக்கெடு முடிந்தாலும் அமலில் இருப்பதாகத்தான் கருதப்படும் என்ற பொருளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே அவையில் முன்பு ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதற்கு மறுப்புத் தெரிவிப்பது என்பது மிக ஆபத்தான, இப்போது நடைமுறையில் காவிரி நீர் கிடைக்கக்கூடியதைக் கூட கிடைக்காமல் செய்யக்கூடிய ஒன்று. அது பற்றிய கருத்தை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்.

படுத்தியிருக்கிறார் என்று நான் கருதுகின்றேன். இன்றைக்கல்ல, நேற்றைக்கே அது உருக்காலையாக ஆகிவிட்டது என்பதை நான் அவருக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்தாலும்கூட அது மீண்டும் உருக்காலையாக விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பதிலே அக்கறை செலுத்தி, பாராளுமன்றத்திலும் அதுபற்றி பேசப்பட்டிருக்கிறது; இங்கேயும் அதுபற்றி பேசப்பட்டிருக்கிறது. இன்று பத்திரிகையிலே வந்துள்ள செய்தியைப்பற்றி திரு. அர்ஜுனன் அவர்களும், திரு. பூவராகன் அவர்களும், திரு. அண்ணாதுரை அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். பத்திரிகையிலே வந்த செய்தியின்படி அரசு அதிலே அக்கறையற்று இருக்கவில்லை. நான் டெல்லிக்குச் சென்று தமிழ்நாட்டிற்குத் தேவையான பல்வேறு திட்டங்களைப் பற்றி அங்குள்ள பிரதமரிடத்திலும், மத்திய அமைச்சர்களிடத்திலும் விவாதித்து, இந்தத் துறையைச் சேர்ந்த மத்திய அமைச்சர் இடத்திலும் இது குறித்துப் பேசியிருக்கின்றேன். தொடர்ந்து கடிதமும் எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஒரு திட்டம் மாத்திரம் அல்ல; தமிழகத்திற்குத் தேவையான உரிய திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றித் தர வேண்டுமென்று தொடர்ந்து அந்தக் காலத்திலேயிருந்து இந்தக் காலம் வரையில் நாம் எழுதிக் கொண்டு இருக்கிறோம். இதைத் தவற விட்டுவிட மாட்டோம் என்ற உறுதியை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(11–10 மணி)

(ஈ) காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி வெளியே தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் குறித்து:

*திரு. உ.ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்கு மிகவும் அக்கறையுள்ள, ஆனால் சிக்கலான காவிரி நீர்ப்பிரச்சினை சம்பந்தமாக அண்மையில் வெளியாகி இருக்கக் கூடிய இரு தகவல்கள் குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே விளக்கம் பெறுவதற்காக உங்கள் இசைவு பெற்று நான் எழுப்புகிறேன். 1924ஆம் ஆண்டில் ஏற்பட்ட காவிரி நீர் சம்பந்தமான ஒப்பந்தம் அன்றைய சென்னை-மைசூர் மாகாணங்களுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தம். அது 1956ஆம் ஆண்டில் உருவாகிய கர்நாடக அரசைக் கட்டுப்படுத்தாது, எவ்வாறு கட்டுப்படுத்தும் என்கிற பொருள்பட கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. வீரேந்திரபட்டீல் பெங்களூரில் சனிக்கிழமையன்று ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். எந்த ஒரு ஒப்பந்தமும் அடுத்து ஒரு ஒப்பந்தமோ அல்லது தீர்ப்போ வராத வரையில் அதனுடைய காலக்கெடு முடிந்தாலும் அமலில் இருப்பதாகத்தான் கருதப்படும் என்ற பொருளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே அவையில் முன்பு ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதற்கு மறுப்புத் தெரிவிப்பது என்பது மிக ஆபத்தான, இப்போது நடைமுறையில் காவிரி நீர் கிடைக்கக்கூடியதைக் கூட கிடைக்காமல் செய்யக்கூடிய ஒன்று. அது பற்றிய கருத்தை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்.

1990 சனவரி 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேளுங்கள், உரையாற்ற ஆரம்பிக்காதீர்கள்.

திரு. உ. ரா. வரதராசன் : அதேபோல் காவிரி நீர் சம்பந்தமாக உச்சநீதிமன்றத்திலே தொடரப்பட்ட வழக்கை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கடந்த கால ஆட்சியில் இன்றைய முதல்வர் அவர்கள் வாபஸ் பெற்றார்கள். பின்னாலே ஹேமாவதி போன்ற அணைக்கட்டுகள் கட்டுகிறபோதும் உச்ச நீதிமன்றத்திலே தடை வாங்கத் தவறி விட்டார்கள் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இணைச் செயலாளர் திரு. எஸ்.டி.எஸ். அவர்கள் (குறுக்கீடு) கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை நான் எதிர்பார்த்து அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இரண்டு பிரச்சினைகளை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். ஒன்று கர்நாடக மாநில முதல்வர் திரு. வீரேந்திரபட்டீல் அவர்கள் அண்மையில் தெரிவித்த கருத்து பற்றியதாகும். இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் அன்றைய தினம் பேசும்போது சொன்ன சில கருத்துக்களின் அடிப்படையில் நான் எடுத்து வைத்த கருத்தை திரு. வீரேந்திரபட்டீல் அவர்கள் மறுத்து இருக்கிறார்கள். நான் ஒன்றை இங்கே முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசியலுக்கு அப்பாற்பட்டு, கட்சி மாறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு நானும் திரு. வீரேந்திரபட்டீலும் நெருங்கிய நண்பர்கள். அந்த நட்பின் அடிப்படையில் கூட நான் அவரிடத்திலே காவிரிக்குத் தண்ணீர் விட வேண்டும் என்று கேட்டுக்கொண்டதுண்டு. அவரும் அந்த நட்பின் அடிப்படையில் உடனடியாக அதைப்பற்றிக் கவனிக்கிறேன் என்று சொன்னதும் உண்டு. இருந்தாலும் இங்கும் அங்கும் எழுகின்ற அரசியல் பிரச்சினைகள் காரணமாக அது சற்றுத் தடங்கலாக நிற்பதாக நான் உணர்கிறேன்.

அடுத்து இங்கே எடுத்து வைக்கப்பட்ட மிக முக்கியமான பிரச்சினை 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் இப்போது இருக்கிறதா, இல்லையா என்பதுதான். திரு. எஸ்.டி.எஸ். அவர்கள் கூட இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அந்த ஒப்பந்தம் காலாவதி ஆகிவிட்டது என்று அறிக்கை விடுத்திருந்தார்கள். உடனடியாக நானே அவரோடு தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு இப்படி ஒரு தவறான கருத்தைத் தயவுசெய்து சொல்ல வேண்டாம் என்று சொன்னேன். சில பத்திரிகைகள்கூட அப்படித் தவறாகத் தலையங்கம் எழுதிய போது அந்தப் பத்திரிகையாசிரியரோடு தொடர்பு கொண்டு ஒப்பந்தத்தைப் படித்துக்காட்டி 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் எந்த வகையிலும் காலாவதியாகவில்லை என்பதை அவருக்கு எடுத்துக்கூறி இருக்கிறேன். காலாவதியாகிவிட்டது என்று சொல்வது நமக்கே கூட பாதகமாக முடியக்கூடிய ஒன்று. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் என்ன இருக்கிறது என்

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 சனவரி 22

றால் 50 ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது 1974ஆம் ஆண்டு '' சர்ப்ளஸ் வாட்டர் '' என்று சொல்லப்படுகிற காவிரியில் வரக் கூடிய உபரித் தண்ணீரை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பது பற்றிப் பேசி முடித்துக் கொள்ளலாம்; அந்தப் பேச்சுவார்த்தை யிலே சுமூகமான ஒரு முடிவு ஏற்படாவிட்டால் பிறகு வேறு வழியே இல்லாத சூழ்நிலையில் ''ட்ரிபியூனல்'' அதாவது நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்று ஒப்பந்தத்தில் இருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் பேசிப் பேசிப் பார்த்து, முடி யாத சூழ்நிலையில் நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று இன்று தமிழக அரசு—தமிழகத்திலே உள்ள எல்லாக் கட்சியினுடைய தலைவர்களும்—கட்சிகள் அனைத்தும் வலியுறுத்திக் கொண்டிருப் பதை நாம் அனைவரும் மிக நன்றாக அறிவோம். 1924ஆம் ஆண்டு ஒப்பந்தம் காலாவதியாகவில்லை என்பதற்காக நான் சொன்ன காரணங்களை மறுத்து திரு. வீரேந்திரபட்டீல் அவர் கள் சொல்லியிருக்கிற காரணம் 1924ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஆனபோது இருந்த மாநிலங்கள் வேறு;

(11–15 மணி)

இன்றைக்கு இருக்கிற மாநிலங்கள் வேறு. அன்றைக்கு தமிழ் நாடு என்று இல்லை. சென்னை இராஜதானி என்று இருந்தது. ஆகவே, அதிலே கர்நாடகத்திலே சில பகுதிகள், கேரளத்திலே சில பகுதிகள் எல்லாம் இருந்தன. எனவே, அந்த ஒப்பந்தம் செல்லாது என்று திரு. வீரேந்திரபட்டீல் அவர்கள் சொல்கின் றார்கள்.

இரண்டு அரசுகளுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் ஏற்படுவது என்பது நிர்வாகத்தினுடைய அடிப்படையிலேயே தவிர நிலப் ப்ரப்பின் அடிப்படையிலே அல்ல. எனவே, நிலப்பரப்பைக் காரணமாக வைத்துக் கொண்டு அப்போது இருந்த நிலம் இப் போது இல்லை. அவைகள் எல்லாம் போய்விட்டன. அவை கள் எல்லாம் வேறு மாநிலத்திலே சேர்ந்துவிட்டன. ஆகவே, ஒப்பந்தம் செல்லாது என்று குறிப்பிட இயலாது. நிலப் பரப்பு என்று வாதத்திற்காக எடுத்துக்கொண்டாலும்கூட, ஒப்பந்தம் ஆகும்போது இருந்த நிலம் தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு மாவட்டத்தில் சில பகுதிகள் என்கிற காவேரி டெல்ட்டாதான். காவிரி நதி தீரம், காவிரி டெல்ட்டா அப் படியே இருக்கிறது. அது எங்கும் போய்விடவில்லை. நாம் இப்போது அதற்குரிய தண்ணீருக்காகத்தான் 1924ஆம் ஆண்டு ஒப்பந்தம் போடப்பட்டு அதைத்தான் இப்போது வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். அது நீடிப்பதாக நாம் வாதித்துக் கொண்டிருக்கிறோம். அந்த வாதம் தவறான வாதம் அல்ல. ஏனென்றால் ஒப்பந்தத்திலே உபரித் தண்ணீரைப் பற்றித்தான் பிரச்சினை என்பதால் வாதாடிக்கொண்டிருக்கிறோம். அவர் கள் இப்போதும் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்று சொல்கின் றார்கள்.

நடுவர் தீர்ப்புக்கு நாங்கள் விடுகின்ற காரணத்தினால் இடை யிலே பேசவே கூடாது என்று பொருள் அல்ல. நடுவர் தீர்ப்புக் கான ஆணை பிறப்பிக்கப்பட்டபோதுகூட நாம் பேசித் தீர்த்துக்

1990 சனவரி 22] [டாக்டர் மு. கருணாநிதி]

கொண்டு, ஒரு சுமூகமாகப் போய், நாமும் அவர்களும் சென்று நடுவர் தீர்ப்புக்கு முன்னால் நின்று நாங்கள் பேசித் தீர்த்துக் கொண்டு விட்டோம். எனவே, நடுவர் தீர்ப்புத் தேவையில்லை என்று சொன்னால், இல்லை, இல்லை, நீங்கள் பேசித் தீர்த்தாலும் முடியாது, நான் தீர்ப்பு அளித்துத்தான் தீருவேன் என்று எந்த நடுவரும் சொல்லமாட்டார். எத்தனையோ வழக்குகள் இப்போதுகூட கோர்ட்டுக்குப் போனபிறகு, வழக்கிலே சம்பந்தப் பட்டவர்கள் அவர்களுக்குள்ளே சமரசம் செய்துகொண்டு கோர்ட் டுக்குப் போய் நாங்கள் சமரசமாக ஆகிவிட்டோம் என்று சொல்லி வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொள்வதுண்டு. அதுபோல செய்துகொள்ள வழி இருக்கிறது.

அ.தி.மு.க. இணைப்பொதுச்செயலாளர் திரு. எஸ். டி. சோம சுந்தரம் அவர்கள் சொன்னதாக திரு. வரதராசன் அவர்கள் ஒன் றைக் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே ஹேமாவதி போன்ற சில இடங்களிலே அணை கட்டுகின்றபோது, தமிழக அரசு அதற்கு ஸ்டே கேட்டு வாங்கவில்லை என்று சொன்னார்கள் என்றார்கள். அவர் கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்ததால், இங்கே அரசின் சார்பிலே செய்யப்பட்டதை, திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் மறந்திருக்கலாம். அவருக்குக் கவனத்திற்கு வராமல் இருக்கக்கூடும். ஹேமாவதியில் அணை கட்டுவதைத் தடுக்க ஸ்டே நாம் கேட்டோம். ஹேமாவதியில் அணை கட்டுவதற்கு ஸ்டே கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். ஆனால், சுப்ரீம் கோர்ட்டில் அதற்கு ஸ்டே கொடுக்கவில்லை. அதுதான் உண்மையே தவிர, நாம் ஸ்டே கேட்காமல் இல்லை. நாம் ஸ்டே கேட்டோம். ஆனால், சுப்ரீம்கோர்ட் ஸ்டே கொடுக்கவில்லை. பிறகுதான் வழக்கை வாபஸ் வாங்கினோம். எல்லாக் கட்சிகளுக் கும் அறிவித்துவிட்டுதான் வாபஸ் வாங்கினோம். திரு. எஸ். டி. சோமசுந்தரம் சொல்லியிருப்பது தவறு.

அனைத்துக் கட்சிக் கூட்டம் பலமுறைகள் கூட்டப்பட்டு இருக் கின்றது. அதோடு மட்டுமல்ல, டெல்லிக்குச் செல்வதற்கு முன் னாலேகூட எல்லாக் கட்சிகளையும் கலந்துகொண்டுதான் டெல் லிக்குச் சென்றிருக்கிறேன். இந்தப் பிரச்சினை பற்றி பேசிவிட்டு வந்த பிறகு, அங்கே டெல்லியிலே அவர்களிடம் என்ன என்ன பேசப்பட்டது என்பதைப் பற்றி சொல்லியிருக்கிறேன். முன் னாள் முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் திரு. காமராசர் அவர்களிடம் கலந்துகொண்டு பேசியிருக்கிறேன். பின்னர் என் னென்ன நடந்தது, என்னென்ன பேசவேண்டும் என்று கலந்து பேசியிருக்கிறேன். அதேபோல பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்களிடமும் கலந்து கொண்டுதான் போவேன். திரும்பி வந்து அங்கு நடந்தது என்ன என்று சொல்லிடுவேன். இங்கு எல்லோ ருடைய கருத்தையும் அறிந்த பிறகுதான் செல்வேன். திருமதி இந்திராகாந்தி அவர்கள் பேசும்போது, நீங்கள் வழக்கு போட் டிருக்கின்றீர்களே, அப்படியிருக்கும்போது பேசமுடியாது, அந்த வழக்கை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னார். வாபஸ் வாங்கினோம். அது மட்டுமல்ல அந்த வழக்கை வாபஸ்

வாங்கும்போது liberty to file a fresh suit, if necessary on the same cause of action என்ற நிபந்தனையோடுதான் வழக்கை வாபஸ் வாங்கியிருக்கிறோம். கடந்த பத்து ஆண்டுகளாக வழக்குப்போட யாரும் தடுக்கவில்லை. காங்கிரஸ் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, சி.பி.ஐ., முஸ்லீம் லீக் ஆகிய அனைவரையும் இந்தப் பிரச்சினையில் அணுகி ஒன்றாகச் செய்யவேண்டும் என்று மீண்டும் கூறி அமைகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே கட்சிப் பிரச்சினை என்று வர வேண்டாம். இதிலே காவிரிப் பிரச்சினை என்று வருகின்றநேரத்தில் தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் அவர்கள் எப்படி பாதிக்கப்படுகிறாரோ அதே போலத்தான் அந்த மாவட்டத்திலேயே பிறந்து வளர்ந்த காரணத்தினால் நானும் பாதிக்கப்படுகிறேன். ஒவ்வொரு நிமிடமும் எதிர்பார்க்கிறோம். தண்ணீர் வருவது தாமதப்படுத்தப்படுமேயானால், தஞ்சை மாவட்டம் பாதிக்கப்படும், அதன் மூலமாக தமிழகம் எந்த அளவுக்கு பாதிக்கப்படுகிறது என்பதையும் நாம் நிச்சயமாக உணர வேண்டும். இன்றைக்கும் தண்ணீர் வருமா, வராதா என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நமக்குத் தண்ணீர் வரவேண்டும். தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற பயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற நீர்ப்பாசன வசதிகள் நன்றாக இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

[11-20 மணி]

ஆனால் இந்தப் பிரச்சினை வருகிறபோது திடீரென்று இதனை அரசியல் பிரச்சினையாக்கி, எங்களுடைய கட்சியினுடைய இணைப் பொதுச் செயலாளர் திரு. எஸ். டி. எஸ். சொன்னதை மறுத்துச் சொல்லி அரசியல் பிரச்சினையாக இதனை இந்த மன்றத்திலே ஆக்க வேண்டாமென்று தயவுசெய்து அவர்களுக்குச் சொல்கிறேன். நான் இந்த மன்றத்திற்குத் தெரிவிப்பதெல்லாம், திரு. எஸ். டி. எஸ். அவர்களும் தஞ்சை மாவட்டத்துக்காரர்தான். அதுமட்டுமல்ல, இந்தப் பிரச்சினையில் ஆரம்பக்காலத்திலிருந்து, தி.மு.க. ஆட்சிக் காலத்திலிருந்து அவர் எந்த அளவுக்கு உணர்ச்சிப்பூர்வமாக கலந்துகொண்டவர் என்பது என்னை விட அனுபவம் வாய்ந்த நம்முடைய முதல்வர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அவர்கள் பேசியதை வைத்துக் குழப்ப வேண்டாம். அனைத்துக் கட்சிகளையும் கேட்கவில்லை என்ற குற்றச்சாட்டை அன்றில் இருந்தே சொல்லிக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சிகளையும் கேட்டுதான் வழக்கு வாபஸ் பெறப்பட்டது. அதுமாத்திரமல்ல, இந்திரா காந்தி அவர்கள் சொன்ன வாசகங்களை கேபினெட்டில் வைத்து எல்லோருடைய அனுமதியையும் கேட்ட பிறகுதான் அந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

1990 சனவரி 22]

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்வதால் சொல்கிறேன். அவர்கள் சொல்வதை மறுக்க வேண்டுமென்ற அடிப்படையில் சொல்கிறேன். நீண்ட காலமாக இதனைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பேச அனுமதிக்கப் படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வழக்கை நடத்த ஒவ்வொரு விவசாயியிடமிருந்தும் வசூல் செய் தார்கள். ஆகவே, வசூல் செய்யப்பட்டது உண்மை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, யார் யாருக்கு எவ்வளவு கொடுத் தார்கள், யாரிடத்தில் அதற்கான ரசீது இருக்கிறது ?

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே திரு. மூப்பனார் இருந்திருந்தால் அதுபற்றி சொல்லியிருப்பார். ஒவ்வொரு விவசாயியிடத்திலிருந்தும் கட்டாய மாக வசூலிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஒரு குழு போட்டு அந்த வழக்கை நடத்த வேண்டுமென்ற நிலை வந்தபோது எல்லாக் கட்சிகளும் பங்கு பெற்றபோது எதிர்க்கட்சித் தலைவர் மட்டும் அதில் பங்கு பெறவும் இல்லை, அதில் ஈடுபடவும் இல்லை, அதற்கான முயற்சிகளிலும் ஈடுபடவில்லை. இதை நான் சொல் வதற்குக் காரணம், அதனுடைய செயலாளரே நான்தான்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மீண்டும் இதனைப் பிரச்சினையாக ஆக்க வேண்டாம். அனைவரும் ஒத்த கருத்தோடு இருந்து வாதாடி தண்ணீர் பெற வேண்டுமென்ற நிலையில் இருப்பதால் சொல்கிறேன், வசூல் செய்யப்பட்டது எவ்வளவு பணம் என்பதெல்லாம் வேறுவிவகாரம். அதற்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால் ஒன்றைச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது வேறு விவகாரம் என்று சொல்வதால் சந்தேகம் வருகிறது. அப்படி ஏதாவது சந்தேகம் இருந்தால் யார் யார் எவ்வளவு கொடுத்தார்கள், யார் தணிக்கை செய்தார் கள், யார் எவ்வளவு செலவு செய்தார்கள், அதில் எவ்வளவு மிச்சம் போன்ற விவரங்களை வெளியிட்டால் நன்றாக இருக்கும். ஆதாரத்துடன் சொல்ல வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து அனுமதி அளித்தால் ஆதாரம் தருவதற் கும் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டுகள் ஆதாரத் தோடு சொல்லப்பட வேண்டும், ஆதாரத்தைத் தயார் செய்து

கொண்டு அதற்கு பிறகு வாதாடுவது நல்லது. ஆதாரம் இல்லாமல் புழுதி வாரித் தூற்றிவிட்டுப் போகக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் ஒன்றைக் கவனிக்க வேண்டும். தாங்கள் தக்க ஆதாரங்களோடு பேச வேண்டும். ஆதாரத்தைக் கொண்டுவந்தால் விவாதத்திற்கு ஏற்பாடு செய்யலாம். இப்போது இப்பிரச்சினையை முடித்துவிட்டு ஆளுநர் உரைக்குச் செல்லலாம்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் எங்கள் தரப்பில் பல்வேறுவிதமான மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும்கூட உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தண்ணீர் வாங்கித் தந்து விவசாய மக்களைக் காப்பாற்ற வேண்டும். தமிழகத்தின் உணவு பிரச்சினை சம்பந்தமாக இது இருப்பதால் இதற்கு ஆவன செய்ய வேண்டும். நான் சொன்ன பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும் திரு. எஸ். டி. எஸ். அவர்கள் சொன்ன கருத்துக்களை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் ஆதாரத்தை வைத்து நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

3. அறிவிப்பு.

எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

கொண்டு அதற்கு பிறகு வாதாடுவது நல்லது. ஆதாரம் இல்லாமல் புழுதி வாரித் தூற்றிவிட்டுப் போகக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் ஒன்றைக் கவனிக்க வேண்டும். தாங்கள் தக்க ஆதாரங்களோடு பேச வேண்டும். ஆதாரத்தைக் கொண்டுவந்தால் விவாதத்திற்கு ஏற்பாடு செய்யலாம். இப்போது இப்பிரச்சினையை முடித்துவிட்டு ஆளுநர் உரைக்குச் செல்லலாம்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் எங்கள் தரப்பில் பல்வேறுவிதமான மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும்கூட உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தண்ணீர் வாங்கித் தந்து விவசாய மக்களைக் காப்பாற்ற வேண்டும். தமிழகத்தின் உணவு பிரச்சினை சம்பந்தமாக இது இருப்பதால் இதற்கு ஆவன செய்ய வேண்டும். நான் சொன்ன பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும் திரு. எஸ். டி. எஸ். அவர்கள் சொன்ன கருத்துக்களை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் ஆதாரத்தை வைத்து நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

3. அறிவிப்பு.

எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

கொண்டு அதற்கு பிறகு வாதாடுவது நல்லது. ஆதாரம் இல்லாமல் புழுதி வாரித் தூற்றிவிட்டுப் போகக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் ஒன்றைக் கவனிக்க வேண்டும். தாங்கள் தக்க ஆதாரங்களோடு பேச வேண்டும். ஆதாரத்தைக் கொண்டுவந்தால் விவாதத்திற்கு ஏற்பாடு செய்யலாம். இப்போது இப்பிரச்சினையை முடித்துவிட்டு ஆளுநர் உரைக்குச் செல்லலாம்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் எங்கள் தரப்பில் பல்வேறுவிதமான மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும்கூட உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தண்ணீர் வாங்கித் தந்து விவசாய மக்களைக் காப்பாற்ற வேண்டும். தமிழகத்தின் உணவு பிரச்சினை சம்பந்தமாக இது இருப்பதால் இதற்கு ஆவன செய்ய வேண்டும். நான் சொன்ன பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும் திரு. எஸ். டி. எஸ். அவர்கள் சொன்ன கருத்துக்களை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் ஆதாரத்தை வைத்து நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

3. அறிவிப்பு.

எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

11-25 மணி

(ஆ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைத்தல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

"1990 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைத்தல் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

3. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் —தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொடுக்கப் பட்டுள்ள திருத்தங்கள் இன்று மொழியப்பெற்று, வழிமொழியப் பெற வேண்டும். முதலில் பேராசிரியர் க. பொன்னுசாமி.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழிகிறேன்:

"1. கிராமப் புற ஏழை மக்கள் அனைவருக்கும் வீட்டு மனை கிடைக்கும் வகையில் அறிவிப்பு பற்றியும்;

2. பினாமி நிலங்களைக் கையகப்படுத்தி, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் பற்றியும்;

3. கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்து ஏழை விவசாயிகள் பயன்பெற அறிவிப்பு பற்றியும்;

11-25 மணி

(ஆ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைத்தல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

"1990 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைத்தல் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

3. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் —தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று மொழியப்பெற்று, வழிமொழியப் பெற வேண்டும். முதலில் பேராசிரியர் க. பொன்னுசாமி.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழிகிறேன்:

"1. கிராமப் புற ஏழை மக்கள் அனைவருக்கும் வீட்டு மனை கிடைக்கும் வகையில் அறிவிப்பு பற்றியும்;

2. பினாமி நிலங்களைக் கையகப்படுத்தி, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் பற்றியும்;

3. கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்து ஏழை விவசாயிகள் பயன்பெற அறிவிப்பு பற்றியும்;

4. விவசாயிகளுக்கும், விவசாயக் கூலிகளுக்கும் நன்மை தரும் திட்டங்கள் பற்றியும் ;

5. விவசாயப் பொருள்களுக்குக் கட்டுப்படியான விலை நிர்ணயம் செய்வது பற்றியும் ;

6. தொழிலாளர் நலவாழ்வுத் திட்டங்கள் பற்றியும் ;

7. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வழி வகைகள் பற்றியும் ;

8. மூடிக்கிடக்கும் பஞ்சாலைகள் திறப்பது குறித்தும், நெசவாளர் துயர் துடைப்பது பற்றியும் ;

9. கடந்த ஓராண்டுக் காலமாக விஷம் போல் ஏறும் விலைவாசியைக் குறைக்க நடவடிக்கை எடுப்பது பற்றியும் ;

10. அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர் ஊதிய நிர்ணயத்தில் காணப்படும் முரண்பாடுகள் களையப்படவும், ஊதிய நிலுவை உடனடியாக வழங்கப்படவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது பற்றியும் ;

11. சென்னைப் பெருநகர் விரைவு ரயில்வே திட்டம், கரூர்-தூத்துக்குடி அகல ரயில்பாதைத் திட்டம், சேலம் உருக்காலைத் திட்டம், தூத்துக்குடி துறைமுகம் விரிவாக்கத் திட்டம், கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டம், சேது சமுத்திரத் திட்டம் ஆகியவை பற்றியும் ;

12. நெய்வேலி நிலக்கரிக்கு ராயல்டி பெறுவது, நரிமணம் எண்ணெய்க்கு ராயல்டி பெறுவது, பம்பாய் பகுதியில் வீணாகும் எரிவாயுவை உத்தரப்பிரதேசத்திற்குக் கொண்டு சென்று மின் உற்பத்தி செய்யப்படுவது போல், அதே தொலைவில் உள்ள தமிழ்நாட்டுக்கும் குழாய் மூலம் எரிவாயு கொண்டு வர மத்திய அரசை வலியுறுத்துவது பற்றியும் ;

13. அனைத்துச் சமுதாய மக்களும் மகிழ்வடையும் வகையில் தந்தை பெரியார், முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். பெருந்தலைவர் காமராசர், இந்திரா காந்தி அம்மையார், காயிதே மில்லத் ஆகியோரது பிறந்த நாட்களிலும் இலவச அரிசி வழங்கும் திட்டம் பற்றியும் ;

14. இலவச அரிசி பெறுவதற்கான மாத வருமான வரம்பை ரூ. 1,500 என உயர்த்துவது பற்றியும் ;

15. கல்வி மேம்பாடு பற்றியும்;

1990 ஜனவரி 22] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

16. அண்மையில் தமிழ்நாட்டில் ஆங்காங்கே தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் முகமூடிக் கொள்ளை மற்றும் சட்ட விரோதச் செயல்கள் போன்ற சமுதாயத்தைப் பாதிக்கும் செயல்களைத் தடுக்கும் வகையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும்;

17. புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள், சாலை அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவை பற்றியும் ;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : நான் திருத்தங்களை வழிமொழிகிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழிகிறேன்:

"Add at the end the following :

'but regret to note that no mention is made about :—

(1) the steps taken to get the speedy execution of the Mass Rapid Transit System ;

(2) the deteriorating environmental conditions in Madras City and the actions to be taken to improve the conditions ;

(3) the steps to be taken to implement the Sethu Samudram Project ;

(4) the re-construction of Buckingham Canal into a navigation system ;

(5) the increase in communual tensions causing injuries to the members of forward communities and the steps taken to prevent it ;

(6) the emergence of dacoities all over the State and the steps taken to prevent it ;

(7) the absence of foreign tourist at Jallikattu function during the Pongal seasons ;

(8) the selection of secondary grade teachers in Kanyakumari District ;

(9) the death of an Advocate on the eve of the Lok Sabha elections ;

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(10) the flat promotion activites of M.M.D.A. ;

(11) the re-constitution of M.M.D.A. with Technical Staff ;

(12) the congestion in Madras City and the action by the M.M.D.A. to clean the City ;

(13) the irregularity in issuing planning permission by M.M.D.A.

(14) the action taken by the Government on the Report of Director of Vigilance and anti-corruption against M.M.D.A.''

திரு. ஆ. பாலையா : நான் திருத்தங்களை வழிமொழிகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"Add at the end the following :

' but regret to note that no mention is made about ;—

the communal approach of a section of the people in Tamil Nadu resulting in physical injury to persons at Thanjavur".

திரு. டி. சி. விஜயேந்திரையா : நான் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழிகிறேன் :

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும் :—

"1. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த கிறுஸ்துவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட இந்துக்களுக்கு வழங்கும் சலுகையை வழங்குவது பற்றியும் ;

2. விஷம் போல் ஏறி இருக்கும் விலைவாசியைக் கட்டுப்படுத்துவது பற்றியும் ;

3. ரேஷன் கடைகளில் உணவுப் பங்கீட்டு முறையில் ஏற்படுகின்ற சிரமங்களை நீக்குவதற்கு வழிவகை பற்றியும்; ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நான் திருத்தங்களை வழிமொழிகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 சனவரி 22]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் விவாதத்தைத் தொடங்குபவர் திரு. ஏ. செங்குட்டுவன்.

*திரு. ஏ. செங்குட்டுவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே, இனமானத் தலைவர் பேராசிரியர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, 1990 ஆம் ஆண்டு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேச வாய்ப்பு அளித்தமைக்காக எனது தொகுதி மக்கள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1989 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றபோது, ஆதி திராவிட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆகியோருக்கு இன்னும் 10 ஆண்டு காலம் சட்டத்திலே பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற நிலை இருந்தபோது 4-வது முறையாக இந்த மாமன்றத்தில், ஆதி திராவிடர்களுக்கும் மற்றும் பின் தங்கிய மக்களுக்கும் இட ஒதுக்கீடு, வேலைவாய்ப்பு ஆகியவைகளுக்கு அனைத்துக் கட்சிகளினுடைய ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றி ஆதி திராவிட மக்களுடைய நெஞ்சத்தில் நீங்காத இடத்தைப் பெற்று இருக்கும் இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் 1989 ஆம் ஆண்டு—தி.மு.க. பொறுப்பேற்ற நேரத்தில் நிதி நிலைப் பற்றாக்குறை, உணவு தானியப் பற்றாக்குறை, குடிநீர்ப் பற்றாக்குறை, மின்சார விநியோகத்தில் தட்டுப்பாடு, வேலைவாய்ப்பு இல்லாத நிலை, உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு ஆகியவைகளைக் கடந்த ஆண்டு இந்த அரசு சமாளித்து இந்த ஆண்டு தன்னிறைவு பெறும் அளவுக்கு முன் வந்திருப்பதற்கு அனைத்துத் தரப்பினருடைய மக்கள் தங்களின் இதயமார்ந்த நன்றியைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவு கூர்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் தஞ்சை மாவட்டம் பல்வேறு நிலைகளில் வாடிக்கொண்டிருப்பதை உணர்ந்து காவிரித் தண்ணீருக்காக பல்வேறு கட்டங்களில் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணுமாறு காலம் தாழ்த்தப்பட்டுக் கொண்டிருந்த நிலையையும் உணர்ந்து , இப்போது அதற்குத் தீர்வு காண உரிய முறையில் நடுவர் நீதி மன்றத்திற்கு விட இந்த அரசு முன் வந்திருப்பதற்கு தஞ்சை, திருச்சி மாவட்டங்களின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் தஞ்சை மாவட்டத்தில் நரிமணம் போன்ற பகுதிகளில் எண்ணெய் கிடைத்து இருக்கிறது.

(11-30 மணி)

அந்த எண்ணெய் சென்னை மாநகரம் வரை சென்று அங்கே சுத்திகரிக்கப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது. இதன் காரணமாக அங்கே வேலைவாய்ப்பு இல்லாமல் தஞ்சை மாவட்டத்தில் வாடிக் கொண்டிருக்கிற மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய வகையில் ஒரு திட்டத்தை தஞ்சை மாவட்டத்திலேயே உருவாக்கித் தர வேண்டுமென்று கழகத் தலைவர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, போக்குவரத்துச் சாலைகளெல்லாம்— அங்கே ஆயிரக்கணக்கான லாரிகள் அதன் வழி கடந்து செல்வதால் மிகவும் பள்ளமும், படுகுழிகளாகவும் காட்சி அளிக்கக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமை தவிர்க்கப்பட வேண்டும். இந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசாங்கத்திற்கு வருவாய் அதிகரிப்பதற்கும் தஞ்சை மாவட்டத்திலேயே ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு கலைஞர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அருள்கூர்ந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதின் மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்களே, தாங்கள் அந்த மாவட்டத்திலே உள்ள மக்களுடைய வேலைவாய்ப்பு இன்மையைப் போக்க முன் வர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தஞ்சை மாவட்டத்திலேயே பல்வேறு பகுதிகள் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய நிலையில் உள்ளன. மற்ற மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் தஞ்சை மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது என்பதை உணர்ந்து, சென்ற சட்டமன்றத் கூட்டத் தொடரின் போது பின் தங்கிய தாலுக்காக்களை அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் பூம்புகார் பகுதியில் தொழில் மையம் ஒன்று அமைக்கப்பட இருக்கிறது என்று தெரிவித்தார்கள். இன்றைக்கு அதற்கான திட்டங்கள் எல்லாம் விரைவாகத் தொடங்கப் பட்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். காரணம் தஞ்சை மாவட்டத்தில் பூம்புகார் தொகுதியில் அமைந்தாலும் சரி, மயிலாடுதுறை தொகுதியில் அமைந்தாலும் சரி அந்தத் திட்டத்தின் பயன் தஞ்சை மாவட்டம் முழுவதற்கும் பயன்படும் என்பதாலே வரவேற்கிறேன். அதற்காகத் தஞ்சை மாவட்ட மக்கள் சார்பில் நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, 1990 ஆம் ஆண்டுக்குரிய ஆளுநர் உரையிலே மயிலாடுதுறையில் 30 கோடி ரூபாய் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தொழில் தொடங்க உதவியாக அரசு அனுமதித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக தஞ்சை மாவட்ட மக்கள் அதிலும் குறிப்பாக மயிலாடுதுறை மக்கள் என்றென்றைக்கும் நன்றிக் கடன் செலுத்தக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நீண்ட நாட்களாக நிறைவுபெறாத பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படும் வகையில் இந்த மாமன்றத்திலே ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருப்பது, அனைத்துத் தரப்பு மக்களுடைய உணர்வுகளையும் இந்த உரை கணக்கில் கொண்டிருக்கிறது என்பதால் இதை நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

மயிலாடுதுறையில் பல ஆண்டுக்காலமாக—ஏன் கடந்த நம்முடைய ஆட்சிக் காலத்திலேயே—அந்த நகரத்திலுள்ள கொசுத் தொல்லையைப் போக்க வேண்டும் என்று மறைந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் அங்கே பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று அன்பு வேண்டுகோள் விட்டார்கள். ஆனால், அதற்குப் பிறகு நடைபெற்ற நகராட்சி மன்றத் தேர்தலில் பெருவாரியான இடங்களை நாங்கள் பெறமுடியாத சூழ்நிலையால் அந்தத் திட்டம் கைவிடப் பட்டு, சிதம்பரம் போன்ற நகரத்திற்கு அது கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாயிற்று. அதன் காரணமாக மயிலாடுதுறையில் கொசுத் தொல்லையால் வாடிக் கொண்டிருக்கிற மக்களுக்கு நிரந்தரமான பரிகாரம் காண வேண்டும். அதற்கு அங்கே பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரைவில் உருவாக்கித் தாருங்கள் என்று கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் தாள்பணிந்து கேட்டுக் கொள்கிறேன். அதுவரையில் மயிலாடுதுறை நகரத்தில் மையத்தில் ஓடிக்கொண்டிருக்கிற பழங்காவேரி கூவம் போன்ற நதியாக ஓடிக் கொண்டிருப்பதால் அங்கே கொசு உற்பத்தியாகி மக்கள் அவதிப்படுகிறார்கள் என்கிற நிலையை உணர்ந்து, அந்த வாய்க்காலை நகராட்சி மன்றத்திடமே ஒப்படைத்தால் நாங்கள் அதைப் பராமரித்து ஓரளவுக்கு அங்கே கொசுத் தொல்லையைக் குறைக்க முடியும் என்று கேட்டிருக்கிறோம். அதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தஞ்சை மாவட்டத்தையும் தென்னாற்காடு மாவட்டத்தையும் இணைக்கிற ஒரு பாலம்—மணமேடு—முட்டம் வரை இணைக்கிற ஒரு பாலத்தை நம்முடைய அரசு காலத்தில் மாமன்ற உறுப்பினராக இருந்து மறைந்த அண்ணன் திரு. எம். ஆர். கே. அவர்களும், மறைந்த அண்ணன் திரு. கிட்டப்பா அவர்களும் வலியுறுத்தினார்கள். அதற்குப் பிறகு வந்த ஆட்சி அதைச் செயல்படுத்தவில்லை. இப்போது அவர்களுடைய உணர்வுகளை மதித்து கொள்ளிடத்தில் ஒரு பாலத்தை உருவாக்குவதன் மூலம் காட்டுமன்னார்கோயில், நெய்வேலி, விருத்தாச்சலம், சேலம், சென்னை வரை உள்ள மார்க்கங்களுக்கு துரிதமாக வருவதற்கும் அதோடு குறைந்த பணச் செலவில், குறைந்த நேரத்தில் வரக்கூடிய சூழ்நிலையும் உருவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(11—35 மணி)

இதன் காரணமாகத் தஞ்சை, தென்னார்க்காடு மக்களுடைய இதயத்தில் நிரந்தரமாகத் தலைவரவர்கள் இடம் பிடிப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்து, அதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைய நிதிநிலையில் மயிலாடுதுறையில் பல்வேறு பணிகள் ஆரம்ப காலத்தில் இருந்த நிலையிலேயே இருந்து கொண்டிருக்கின்றன. மயிலாடுதுறை மருத்துவமனை, அதைப் போல பெண்களுக்கான கல்லூரி, ஞானாம்பிகா கலைக் கல்லூரி ஆரம்ப காலத்திலே எப்படி இருந்ததோ அதே நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அதை விரிவுபடுத்த வேண்டும் என்று நான் சிரம் தாழ்த்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மயிலாடுதுறையில் நகரத்தினுடைய மையப் பகுதி நெரிசலிலே மக்கள் அவதிப்படுகின்ற நிலைமையில் இருந்து கொண்டு வருகிறது. அந்த நிலையைத் தவிர்க்க வேண்டும். அதற்கு மருத்துவமனை சாலையிலிருந்து ஒரு பைபாஸ் பாலம் அமைக்க அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதைச் செய்வதன் மூலம் நகரத்தினுடைய நெரிசலை ஓரளவுக்குத் தணிக்க முடியும் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்து அதைச் செயல்படுத்தித்தர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பல்வேறு பணிகளை நகராட்சியே செய்ய வேண்டு மென்று நாங்கள் வெளியிலே வாக்குறுதியைத் தந்தோம். அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை. காரணம் நிதிப் பற்றாக்குறை. எதை எடுத்துக்கொண்டாலும் நிதிப் பற்றாக் குறையின் காரணமாகச் செய்யமுடியாத நிலையில் இன்றைய உள்ளாட்சி நிர்வாகம் இருந்து வருகிறது.

அது மட்டுமல்ல, நகராட்சியினுடைய கடைகள், அதைப் போல பல்வேறு வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் தேங்கிக் கிடக் கின்றன. அந்தத் தேக்க நிலையைத் தவிர்த்து, வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வந்தால் ஓரளவுக்கு நகராட்சியினுடைய நிதி உயர வாய்ப்பிருக்கிறது. அதை அன்புகூர்ந்து செய்து தர வேண்டும்.

அதுமட்டுமல்ல, நகராட்சியிலே தேங்கியிருக்கின்ற அந்த வழக்குகளைத் தனி நீதிமன்றம் அமைத்து, அதன் மூலம் துரித மாக வழக்குகளை முடித்துத்தர வேண்டுமென்று நம்முடைய அரசைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நகரத்திலே பல்வேறு பணிகள், குறிப்பாகச் செய்ய வேண்டிய பணிகளையெல்லாம் செய்வார்கள் என்ற நம்பிக்கையில்தான் எங்களைப் போன்றவர்களையெல்லாம் நகராட்சி மன்றத் தலைவர்களாக ஆக்கியிருக்கிறார்கள். நிதிநிலை இல்லை என்ற காரணத்தைச் சொல்லி தப்பித்துக்கொள்ள முடியாது, காரணம், இரண்டு பொறுப்பிலேயும் இருக்கின்ற காரணத்தால், நகராட்சி மன்றத் தலைவர் பொறுப்பிலேயும் இருக்கிறாய், சட்டமன்ற உறுப்பினராகவும் இருக்கிறாய், செய்ய முடியவில்லையா என்று கேட்கின்ற மக்களுக்குப் பதில் சொல்லுகின்ற வகையில், இந்த

1990 சனவரி 22] [திரு. ஏ. செங்குட்டுவன்]

நிதி ஆதாரம் நகராட்சிகளுக்கு ரோடு போடுவதற்கு, சுகாதாரப் பணிகளைக் கவனிப்பதற்கு, அதைப்போல பாதைகளை அமைத்துத்தருவதற்கு ஓரளவு நிதி உதவியை உள்ளாட்சிகளுக்கு வழங்க வேண்டுமென்று நான் சிரம் தாழ்த்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராம ராஜ்யம் உருவாக வேண்டும், உள்ளாட்சி நிர்வாகம் சிறப்பாக இருந்தால்தான் நாடு மேம்பட்ட நிலையை அடைய முடியும் என்ற நிலையை இந்த அரசு உணர்ந்திருக்கின்ற காரணத்தால், சாதாரண மக்களெல்லாம் அந்தப் பாதைகளைக் காட்டுகிறார்கள், ரோடுகளைக் காட்டுகிறார்கள், சுகாதாரம் இல்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையைத் தவிர்ப்பதற்கு நகரத்தில் நல்ல மாறுதல்களை உருவாக்கக்கூடிய அரசு என்று நாம் பெயரெடுப்பதற்கு இந்த அரசு பெரு நிதியை உள்ளாட்சித் துறைகளுக்கு வழங்க வேண்டும்.

அதைப்போல, உள்ளாட்சித் துறைகளுக்குக் குடிநீர் வாரியம் என்றால், அது தனி வாரியமாக இருக்கிறது. நகராட்சியிலே நடைபெறுகின்ற அந்தக்குடிநீர், குடிநீர் வாரியத்தின் மூலம்தான் செயல்படுகிறது. அதனால் காலதாமதம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்கின்ற வகையில் அந்தத் துறையினுடைய அதிகாரி நகராட்சியினுடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும்.

அதைப்போல, சுகாதாரப் பிரிவு அரசுத் துறையின் மூலமாகவும், சுகாதாரப் பிரிவின் மூலமாகவும் இயங்குகிறது. இதனால் அடிக்கின்ற மருந்து ஒரே மருந்தாக இருந்தாலும், வேலைகள் துரிதமாக நடைபெறவில்லை. எனவே, நகராட்சியினுடைய பொறுப்பில் அந்தக் கொசுத் தடுப்புப் பிரிவை உருவாக்கித்தர வேண்டும்.

அது மட்டுமல்ல, இன்னொன்றை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். நகரத்தில் பல்வேறு பணிக்காகச் செல்லுகின்றபொழுது அந்தப் பகுதியினுடைய மக்கள் சொல்லுகின்ற உணர்வு, குறைந்த அளவு சுகாதாரம், ரோடு வசதிகளையாவது செய்து தாருங்கள் என்று சொல்லுகின்றபொழுது, இரண்டு நிலையிலும் ஒரே ஆட்சி கையில் இருந்தால்தான்—ஒன்று நகராட்சியினுடைய கைவசம் இருக்க வேண்டும் அல்லது அரசு அந்தச் சுகாதாரப் பிரிவை எடுத்துக் கொண்டாலும்கூட நகராட்சிகள் விட்டுக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. காரணம் ஏதாவது ஒரு முடிவு, எந்தத் துறையில் இருக்கிறார்களோ அந்த அதிகாரிகள் கட்டுப்பாட்டுக்குள் இருந்தால்தான் அந்த வேலை சிறப்பாக அமைய முடியும்.

(11-40மணி)

ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள் என்ற முறையில் கிராமப் பகுதிகள் உருவாகிறபோது ஐ.ஆர்.டி.பி. லோன் போன்றவைகள் சாதாரண மக்களுக்கு

கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. ஒரு கிராமத்தில் 15, 20 பேர்களுக்கு தான் வழங்கப்படுகிறது. பாக்கியிருப்பவர்கள் 200 பேர்களில் 175 பேர்களுடைய எதிர்ப்புக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. எனவே ஒரு கிராமத்தில் குறைந்தது 100 பேர்களுக்காவது இந்த உதவியை வழங்கக்கூடிய அளவிற்கு விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சியில் இருக்கிற மருத்துவமனை மகளிர் கல்லூரி ஆகியவைகளை விரிவுபடுத்தி நகர மக்களுக்கு பேருதவி செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நகராட்சியால் போடப்பட்ட பல வழக்குகள் நீண்ட நாட்களாக தேங்கியிருக்கின்றன. கடை வியாபாரிகள் சங்கம் என்ற பெயரால் அவை தேங்கி கிடக்கின்றன. அந்த வழக்குகள் தீர்க்கப்படாத காரணத்தால் நகராட்சிக்கு நிதி வருவதில்லை. அப்படிப்பட்ட நிலையை ஒரு தீர்வுக்கு கொண்டு வரவேண்டுமென்றால் தனி கோர்ட் அமைக்கலாம். உச்ச நீதி மன்றத்தில் இருக்கிற தேங்கிக் கிடக்கிற வழக்குகளைத் துரிதப் படுத்தி நகராட்சிகளின் நிதிநிலையை உயர்த்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு, ஆளுநர் உரையில் எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நெஞ்சார்ந்த நன்றியை என் தொகுதி மக்கள் சார்பாக தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. மா. **சுந்தரதாஸ்** : தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரை என்று சொல்வது செக்ஷன் 176 (1) என்ற சட்டப்படிதான் வாசிக்கப்படுகிறது.

"This Government Welcomes the many initiatives which the new National Front Government have announced in the President's Address......"

"......finding solutions to problems such as the Punjab and Jammu and Kashmir......"

"......Welcome the steps that have been initiated to ensure a clean and open Government, particularly autonomy for AIR and Television and the legislation for setting up......"

1990 சனவரி 22] [திரு.மா. சுந்தரதாஸ்]

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அளவிற்குச் சொல்லும் போது, எரிந்து கொண்டிருக்கிற பஞ்சாப், ஜம்மு, காஷ்மீர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம் என்பதை வரவேற்கிறது இந்த அரசு. எனக்கு முன்னால் சில உறுப்பினர்கள் பிரச்சினை களைஎழுப்பியபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன் னார்கள். ஆனால் இந்த ஆளுநர் உரையில் ஒரு வார்த்தைகூட நம்முடைய சிலோன் பிரச்சினை குறித்து பேசப்படவில்லை. அடுத்தபடியாக டி.வி. அட்டானமி என்று சொல்லப்படுகிறது. இதற்கு முன்னால் இந்த அரசு, ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் கூட டி.வி. அலுவலகத்தின் முன்னால் பல போராட்டங்களை நடத்தினார்கள். அதை நாம் எல்லாம் அறிவோம். ஆனால் இந்த மன்றத்திலே எதிர்கட்சிகளைக் காண்பிக்காத முறையில் டி.வி.ஐ நடத்தியது டெல்லியில் ஆள்கிற மைனாரிட்டி சர்க்கார் தலைமையா? அல்லது அது அதை பின் தாங்கிக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையா என்று கேட்க விரும்புகிறேன். நீங்கள் தான் ராஜீவ் காந்தியை மாத்திரம் காட்டுகிறார்கள் என்று இங்கே எல்லா இடங்களிலும் பறை சாற்றினீர்கள். இந்த அவையில் நடந்ததைச் சொல்கிறேன். வெளியே நடந்தவற்றை சொல்லத் தயாராக இல்லை. முதலமைச் சரை காண்பிக்கட்டும், பார்ப்போம், ரசிப்போம், பிரச்சினை இல்லை. ஆனால் ஒன்றைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன் நீங்கள் எதிர்க்கட்சிகள் இங்கே இல்லையென்று சொல்லியிருந் தாலும், நாங்கள் டி.வி. முன்னால் உண்ணாவிரதம் செய்ய மாட்டோம். டி.வி.யில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களை காண்பித்தார்கள் என்ற ஒரே காரணத்திற் காக நீங்கள் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தீர்கள் ஆனால் அட்டானமி என்று சொல்கிற டி.வி.யில் நாங்கள் தினமும் பார்ப்பது வேறு ஒன்றுமில்லை. மாநில அமைச்சர்களை காண்பிக்க வேண்டும், மத்தியிலே இருக்கிற இரண்டு அமைச்சர் களை காட்ட வேண்டும், வெளிநாடுகளில் நடக்கிற பிரச்சினை களை காண்பிக்க வேண்டும். இதைத்தவிர இந்த இந்திய நாட்டிலே நடப்பதை எதையும் காண்பிக்கக் கூடாது. அதற்கு ஏன் போக வேண்டும்? தமிழகத்திலே சட்டமன்றத்திலே நடப் பதை காட்டவில்லை. டி.வி. நிறுவனத்தை கேட்டுக் கொள் கிறேன். அட்டானமி என்று சொல்லி மைனாரிட்டி சர்க்காருக்கு நீங்கள் இவ்வளவு வக்காலத்து வாங்கினால் நிச்சயமாக ஆட்சி கள் மாறும், அதிகாரிகள் மாறாமாட்டார்கள். மாற்றப்படக் கூடாது என்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இது தான் அட்டானமியா என்று கேட்கிறேன். சட்டமன்றத்தில் எல்லோரும் சட்டமன்ற உறுப்பினர்கள் தான். இன்றைக்கு எதிர்க்கட்சியாக இருப்போம், பின்னால் ஆளும் கட்சியாக வருவோம், வராமலும் இருப்போம். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களை காண்பித் தால் கூட தவறு. பாவம் என்கிற அளவில் ஸ்டேட் அட்டானமி இன்றைக்கு டி.வி.க்கு கொடுக்கப்பட்டிருப்பதை மிக வன்மை யாகக் கண்டிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. செ. நூர்முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் டி.வி.க்கு எதிராக ஒரு விவாதம் நடத்திக் கொண்டிருப்பதைப் போல தோன்றுகிறது. மாண்புமிகு சுந்தர தாஸ் அவர்கள் சொல்வதைக் கேட்கும்போது டி.வி. நிலையத் தாருடன் இத்தனை ஆண்டுக் காலம் பழகிய பழக்க தோஷம் அவர்களை விட்டு செல்லவில்லையோ என்று தான் எனக்கு நினைக்கத் தோன்றுகிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

(11.45 மணி)

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தகைய பதில்களை நான் அமைச்சரிடத்திலே யிருந்து எதிர்பார்க்கிறேனே தவிர, சட்டமன்ற உறுப்பினர்களிட மிருந்து எதிர்பார்ப்பதில்லை. இந்த அவையில் பல தடவை நான் பார்த்து இருக்கிறேன். இது டெல்லி சப்ஜக்ட்தான். ஆனால் நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால்,— இந்த ஆளுநர் உரையிலே வர வேண்டிய சப்ஜக்ட் அல்ல— நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைக் குறித்து எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகையாலேதான் சொன் னேன். இதற்கு பதில் சொல்லவேண்டிய பொறுப்பு முதல்வர் அவர்களுக்கு இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன் னால் நான் பதில் சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

அடுத்ததாக இந்தத் தேசிய முன்னணிக் கட்சி தேர்தல் காலத்திலே சொன்னார்கள். 10 ஆயிரம் ரூபாய் வரை நாங்கள் விவசாயக்கடனை ரைட்-ஆப் செய்வோம் என்று. அதைப்பற்றி ஒரு வார்த்தைகூட இந்த ஆளுநர் உரையிலே சொல்லப்படவில்லை நல்ல காரியங்களை யெல்லாம் வரவேற்கிறோம். ஆனால் இந்த ஆளுநர் உரையில் ஒரு வார்த்தை கூட அதைப் பற்றிச் சொல்லப் படவில்லை. ஆனால் பீகார் மாநிலத்தில் 10 ஆயிரம் ரூபாய் விவசாயக் கடன் அந்த அரசால் ரத்து செயயப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பீகார் மாநிலத்தில் 10 ஆயிரம் ரூபாய் தள்ளுபடி செய்து அந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டதா என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் மூலமாக அறிந்து கொள்ள விரும்பு கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, பணம் வழங்குவதில்லை. கொடுத்த கடனை ரைட்-ஆப், திருப்பிக் கட்டவேண்டாம் என்று சொன்னார்களே தவிர, அந்த அரசு கொடுத்ததாகச் சொல்லவில்லை. தேர்தல் அறிக்கையிலே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். உங்களுக்கும் ஒரு எம். பி. சீட் கிடைத் திருக்கிறது, உங்கள் தொகுதியிலே, நான் கேட்கிறேன், நீங்கள் அங்கம் வகிக்கின்ற தேசீய முன்னணிக் கட்சி தேர்தல் காலத்தில் சொன்னது 10 ஆயிரம் ரூபாய் ரைட்-ஆப் செய்வோம் என்பது.

1990 சனவரி 22]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கடன் வாங்கிய விவசாயிகளை, அவர்களிட மிருந்து கடன் பெறுவதற்கும், அல்லது மீண்டும் தருவதற்கும் நாணயமற்ற முறையில் போகாமல் இருப்பதற்கும், ஒரு அரசாங் கம் கட்டாதே என்று கட்ட வருபவர்களைச் சொல்ல வருவது தவறு. அதை நான் ஏற்றுக்கொள்ள வில்லை.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் பேசுகிற போது, நீங்கள் அங்கம் வகிக்கிற தேசீய முன்னணி சர்க்கார் என்று சொல்கிறார்கள். தேசீய முன்னணி சர்க்காரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அங்கம் வகிக்கவில்லை. வெளி யிலிருந்து நிபந்தனையற்ற ஆதரவைத் தான் தந்து கொண்டிருக் கிறோம்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய கட்சி ஆதரவைத் தரவில்லை என்றால், அந்த ஆட்சி கவிழும் என்பதை உறுப்பினர் திரு. வரதராசன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் தயவில்லாமல் ஆட்சி நடத்தமுடியாது. தமிழகத்திலே இருக்கிற சர்க்காருக்கு உங்கள் தயவு தேவையில்லை. உங்கள் தயவு இல்லாமல் அவர்கள் ஆட்சி நடக்கும். ஆனால் தேசிய முன்னணி ஆட்சிக்கு நீங்களும் பி. ஜே. பி.-யும் இல்லை என்றால், திரு. வி. பி. சிங் அவர்கள் ஆட்சி இல்லாமல் போய்விடும். அதனால் நீங்களும் அந்த ஆட்சி யிலே ஒரு பங்கு வகிக்கிறீர்கள். உங்கள் ஆட்சி இல்லை என்கிற வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வாதம் அல்ல.

அடுத்ததாக, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் ஆட்சிக் காலத்திலே மத்திய அரசு மாநிலத்தினுடைய அதிகாரங் களிலே கை வைக்கிறது என்று தினமும் சட்டமன்றத்திலே சொல்லி வந்ததை ஒரு ஆண்டுக்காலமாக கோரஸாகச் சொல்லி வந்ததைப் பார்த்தோம். நான் கேட்கிறேன். தேசிய முன்னணி யில் அங்கம் வகிக்கின்ற அஸ்ஸாமில் உள்ள முதல்வர் திரு. மகந்தா அவர்கள் மைய அரசினுடைய அமைச்சர்கள் வந்தால், காங்கிரஸ் கட்சியினுடைய அமைச்சர்கள் வந்தால், அவர்களோடு ஐ.ஏ. எஸ்., ஐ. பி. எஸ். அதிகாரிகள் யாருமே பேசக்கூடாது என்று ஜி.ஓ. போட்டார்கள். அதைக்கூட இந்த அரசு மார்தட்டி வரவேற்றது. இன்று உங்கள் கட்சியில் உள்ளவர்கள் அமைச்சர் களாக வந்திருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்லவில்லை. மரியாதைக்குரிய அமைச்சர் மாறன் அவர்கள் இங்கே வந்து அதிகாரிகளை அழைத்துப் பேசினார்களே,....

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் மாநில அரசோடு நேரடித் தொடர்பு கொள்ளாமல், நேரிடை யாக மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலந்து மாநாடு நடத்தும்

முறையை மேற்கொண்டார்கள். இப்போது மைய அமைச்சர் மாநில அரசு மூலமாக தங்களுடைய திட்டத்தை நிறைவேற்று வதற்கு எந்தெந்த வகையில் இந்தத் திட்டத்தை மாற்றியமைக்க லாம் என்பதற்காக அவர்கள் ஆலோசனை நடத்த, கருத்துக் களைத் தெரிந்துகொள்ள, மாநில அரசு மூலமாக அதிகாரிகளை அழைத்துப் பேசினார்களே தவிர, மற்ற மாநிலங்களிலும் மாநில அரசுடன் கலந்து நிர்வாகத்தினரோடு, மைய அமைச்சர் என்ற முறையிலே பேசுகிறார்களே தவிர, தனிப்பட்ட முறையில் நேரிடையாகப் பேசியதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, உறவு வேறு, அமைச்சர் வேறு. இங்கே உறவினால் வந்தார்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அஸ்ஸாமில் நடந்ததை நான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, ஏதோ மத்தியிலே அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு முரசொலி மாறன் அவர்கள் இந்த அரசாங்கத்திற்குத் தெரியாமல் அதிகாரிகளைக் கூப்பிட்டு ஒரு கூட்டத்தை நடத்தியதைப் போல மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே அவர்கள் எந்த அதிகாரியையும் சந்திக்க விரும்பவில்லை. தமிழகத்திலே குடிசை மாற்று வாரியம் போன்ற வாரியங்களுக்குத் தேவையான பணத்தைத் தரவேண்டும் என்று நாங்கள் முறையிட்டபோது இதுவரையிலே மத்தியிலே அமைச்சர்களாக இருந்தவர்கள் யாருமே, குடிசை மாற்று வாரியப் பணிகளைப் பார்வையிடாத ஒரு சூழ்நிலையில் அவர்கள் சென்னையிலே 2, 3 பகுதிகளுக்கு வந்து, குடிசை மாற்று வாரியப் பணிகள் எப்படி நடைபெறு கின்றன என்பதைப் பார்த்துவிட்டு, அதற்குப் பிறகு இந்த வாரியத்திற்குத் தேவையான பணத்தை நாங்கள் கேட்டபோது இது சம்பந்தமாக என்ன திட்டங்களை வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள்.

(11-50 மணி)

அவர்கள் கேட்டதன் பேரில் அமைச்சர் என்ற முறையிலே நானும் அதிகாரிகளோடு கலந்து பேசலாம் என்று அவர்களை அழைத்தோம். நாங்கள் அழைத்ததன் பேரில் அவர் வந்தாரே தவிர, அவர்கள் ஏதோ இந்த அரசாங்கத்தினுடைய அதிகாரத் திலே தலையிடவில்லை என்பதை நான் தெரிவித் துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, அப்படி அவர் வந்த காரணத்தினாலே நாங்கள் முடிக்க வேண்டிய பணிகளைக் குறித்து பேசி, தமிழ்நாட்டில் அடுத்த ஆண்டிற்கு சுமார் 50 ஆயிரம் குடிசைகளை ஹட்கோ மூலமாக மாற்றுவதற்கு ரூ. 52 கோடி பணத்தை அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சி யான செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1990 சனவரி 22]

திரு. மா. சுந்தரதாஸ்: இந்த மாநிலத்திலிருந்து காங்கிரஸ் ஆண்ட காலத்தில் எந்த அமைச்சரையும் அங்கேயிருந்து யாரும் அழைத்துப் பேசியது கிடையாது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: அந்த அமைச்சர்கள் அவ்வளவு பொறுப்பாக இருந்தார்கள் என்று பொருள்.

திரு. மா. சுந்தரதாஸ்: துணைத் தலைவர் அவர்களே, இந்த அளவு நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, நாங்கள் அலட்சியம் செய்யவில்லை. சிந்தனை செய்து முயற்சி செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் உணர்ச்சிவசப்படாமல் பேசுவது உடலுக்கு நல்லது.

திரு. மா. சுந்தரதாஸ்: நான் சொல்வது அஸ்ஸாமிலே முதலமைச்சராக இருக்கின்ற, உங்கள் தோழமைக் கட்சியினர் ஒரு ஆணையை வெளியிட்டிருக்கிறார்கள். திரு. மகந்தா அவர்கள் காங்கிரஸ் ஆண்ட காலத்திலே மத்தியிலிருந்து எந்த அமைச்சர்கள் வந்தாலும் மாநிலத்திலிருந்து அதிகாரிகள் வந்து அவர்களிடம் பேசக் கூடாது என்ற ஒரு ஆணையை போட்டிருக்கிறார்கள். I can show the G.O.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைப் போலவே ராஜீவ் காந்தி அவர்கள் காலத்தில் நாங்கள் ஆணையிடவில்லை என்று அவர் சொல்லியிருந்தார்கள். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அவர்கள்—கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல் மாநில அரசைக் கலக்காமலே, சரியாகச் சொல்ல வேண்டுமென்றால், மதிக்காமலே அதிகாரிகளோடு நேரடியாக அவர்கள் பேசியதை நாங்கள் கண்டித்திருக்கிறோம். ஆனால் மாநில அரசை மதித்து அணுகி, அதிகாரிகளை அனுப்புங்கள் என்று கடிதம் எழுதியதற்குப் பிறகு அதிகாரிகளை அனுப்பியிருக்கிறோம். பெங்களூரிலே நகர்பாலிகா பில்லைப் பற்றி பேசுவதற்கு, இந்த மாநாட்டிலே நகராட்சி மன்றத் தலைவர்களை எல்லாம் அங்கு செல்லுமாறு அரசின் சார்பில் கடிதம் எழுதப்பட்டது. அதிகாரிகளை அனுப்பி இருக்கிறோம். மாநில அரசு மதிக்கப்படுகிற சூழ்நிலையில் மத்திய அமைச்சர் வந்து அதிகாரிகளோடு கலந்து பேசுவதில் எந்தவிதமான தவறும் இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, ராஜீவ் காந்தி பேசியது பொது பிரச்சினை தான். தனிப்பட்ட முறையில் அல்ல. பேசக் கூடாது என்று சொல்வது எங்களுடைய கொள்கை அல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாங்கள் மாநில அரசைக் கலந்துகொண்டு பேசவேண்டும் என்று சொல்லவில்லை. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ராஜீவ் காந்தி, கோவையிலே நடைபெற்ற மாநாட்டிலும் சரி, இந்தியாவில் வேறு பகுதிகளிலே நடைபெற்ற மாநாடுகளிலேயும் சரி, அந்த மாநில பிரச்சினையை தெளிவாக ஆராய அவர் அழைக்கவில்லை. இந்தியாவிலே இருக்கின்ற பிளானிங் கமிஷன் திட்டங்களை அடி மட்டத்திலே இருக்கின்ற கிராமங்களிலுள்ள அதிகாரங்களை பரவலாக்குவது பற்றிப் பொதுவாக பேசுவதற்கு அகில இந்திய சர்வீஸ் அதாவது ஐ.ஏ.எஸ்.-ஐ சேர்ந்தவர்களை நேரடியாக மாநில அரசிற்கு உட்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்துப் பேசினார்கள். நிச்சயமாக உங்களுடைய அதிகாரத்திலே அவர்கள் குறுக்கிடவில்லை. உங்களுடைய அதிகாரம் எதையும் அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாநில அதிகாரிகளை அழைத்துப் பேசும்போது மாநில அரசுக்குத் தொடர்பு கிடையாதா ?

THIRU S.R. BALASUBRAMANIAM : They come under the Indian Administrative Service—Article 312 of the Constitution. It has been discussed in this House.

மாண்புமிகு துரைமுருகன் : தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தில் அந்த அதிகாரிகள் எந்தப் பிரிவின் கீழ் வருகிறார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்கவில்லை. அதிகாரிகளை அழைத்துப் பேசுகின்றபோது, அதில் அமைச்சர்களுக்கு பங்கு இல்லையா என்று கேட்டால், அரசியல் சட்டத்தில் அதிகாரம் இருக்கிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நிச்சயமாக நான் சொல்லமுடியாது. இப்போது நேஷன் ஒயிடு டிபேட் வேண்டுமென்பதற்காக எல்லா மாநிலங்களையும் சேர்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், டெபுடி கமிஷனர்களையும் கலந்து பேசியிருக்கிறார்கள். அதன் விளைவு தான் பஞ்சாயத்து ராஜ் சட்டமும், நகர பாலிகா சட்டமும் உருவாகியிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாநில அரசுகளைக் கலக்காமல் மாநில அதிகாரிகளோடு மத்தியிலே உள்ள அமைச்சர்கள் நேரடியாக அழைத்துப் பேசுவதை அன்றைக்கும் எதிர்த்தோம் இன்றைக்கும் எதிர்ப்போம். சுயமரியாதை உள்ள அரசு இது.

(11–55 மணி)

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர் எந்த சர்வீசிலே இருந்தாலும் இந்த மாநிலத்தின் கீழ் பணி புரியக் கூடிய அந்த அதிகாரிகளை அழைத்து, இந்த மாநிலத்தின் சட்ட ஒழுங்கைப் பற்றியோ அல்லது அபிவிருத்திகளைப் பற்றியோ கோயம்புத்தூரில் அல்லது திருச்சியில் கூடி எப்படி அமல் நடத்துவது என்பதைப் பற்றி பேசுவது, அதுவும் மாநில அரசின் சம்பந்தம் இல்லாமல் அழைத்து பேசியது சரி என்று சொல்கிறாரோ அதுதான் முறை என்று சொல்கிறாரா? அப்படித்தான் இப்போதும் இருக்க வேண்டுமென்று சொல்கிறாரா என காங்கிரஸ் கட்சியின் நண்பர் பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : அவர்கள் கோவையிலே அழைத்துப் பேசிய நேரத்தில் தமிழகத்திலே இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை மட்டும் அழைக்கவில்லை, அகில இந்திய அளவிலே இருக்கக் கூடிய அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், டெபுடி கமிஷனர்களையும் அழைத்து அவர்களில் 4-லில் ஒரு பங்கு பேர் கோவையிலே கூடி அந்த மாநாடு நடைபெற்றது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

* திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதம் நல்ல சுவையான விவாதம் என்ற அடிப்படையில் நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு கலைஞர் அவர்கள் சுயமரியாதை என்ற நோக்கத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதே உணர்வு இன்றைக்கு மாநில அரசுகளிலே உள்ள உள்ளாட்சி மன்றங்களிலேயும் சில இடங்களில் வந்திருக்கிறது. உள்ளாட்சி மன்றத் தலைவர்களையும், ஊராட்சி மன்றத் தலைவர்களையும் மதிக்காமல், நேரிடையாக அதிகாரிகளை அழைத்து அமைச்சர்களும் மற்றவர்களும் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்ற குறைபாட்டை, உள்ளாட்சி மன்றங்களிலே உள்ள தலைவர்கள் சொல்லி வருத்தப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும் இந்த சுயமரியாதை கொடுத்து, அதையும், பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உள்ளாட்சி மன்றத் தலைவர்களுக்கு மாத்திரம் அல்ல, சில கட்சிகளில் உள்ள தலைவர்களுக்கும் கூட சுயமரியாதை கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் (சிரிப்பு).

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான விளக்கம் கொடுத்துவிடக்கூடாது. இது அரசியல் சட்டப் பிரச்சினை என்பதனால் நான் ஒரு கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்—அவர்கள்

இண்டியன் அட்மினிஸ்டிரேடிவ் சர்வீஸ் என்று இருந்தாலும் மாநில அரசுகளின் கீழ்தான் பணியாற்றுகிறார்கள். மாநில அரசாங்கத்தினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டவர்கள். எனவே முனிசிபாலிட்டிகள், மாநில அரசுகள் இவை இரண்டும் அரசமைப்புச் சட்டத்தின்படி வெவ்வேறானவைகள். மாநில அரசு என்பதும், மாநில சட்டமன்றம் என்பதும் கான்ஸ்டிடியூஷனல் பாடி, முனிசிபாலிட்டிகள் என்பது ஸ்டேச்சுடரி பாடி, இந்த அவையால் ஏற்படுத்தப்பட்டது. எனவே மாநில அரசுகளுக்கு அவைகளை கட்டுப்படுத்துகிற ஒழுங்குப் படுத்துகிற, கேள்வி கேட்கிற, நிர்வாக நெறி முறைகளை ஏற்படுத்துகிற அதிகாரம் உண்டு.

ஆனால் இந்தச் சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில் மாநில அரசுகளைப் பொறுத்த வரையில், அரசமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்டு அதற்கு தனி அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே நேரிடையாக மத்திய அரசு தலையிடுவதற்கு எந்தவிதமான உரிமையும் இல்லை. இது அரசமைப்புச் சட்டத்தினுடைய ஏற்பாடு. எனவே இதை பொதுவாக கருத வேண்டும். கட்சி ரீதியாக கருதி நம்முடைய அதிகாரத்தை விட்டுவிடக் கூடாது. இது அடிப்படையான கொள்கை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்காகச் சொல்லவில்லை. ஏனென்றால் இந்த ஓராண்டு காலத்தில் நடந்த சம்பவங்கள் என்பதால் சொன்னேன், சில வற்றை தவிர. இது தவறு என்றோ இதைச் செய்யக் கூடாது என்றோ நான் சொல்லவில்லை. அரசே நாளைக்கு இதைப் பின்பற்ற வேண்டி வரலாம். நாளைக்கு இந்த ஆட்சி மாற லாம். வேறு ஆட்சி வந்தால் வேறு பிரச்சினை வரும். ஆகவே இதைச் செய்யக் கூடாது, தவறு, என்று சொல்ல நான் தயாராக இல்லை. ஆனால் நீங்கள் ஆளும்போது ஒரு கொள்கை, காங்கிரஸ் ஆளும்போது ஒரு கொள்கை என்று இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் வலியுறுத்தினேனே தவிர வேறு ஒன்றும் சொல்ல நான் தயாராக இல்லை.

அடுத்தபடியாக, 263-வது ஷரத்துக்களைப் பற்றி சொன்னீர்கள் இண்டர் ஸ்டேட் கவுன்சில் என்று. இண்டர் ஸ்டேட் கவுன்சில் என்று சொன்னால் தென்னிந்தியாவும் அதிலே ஒரு பகுதிதான். நமக்கும் பாகிஸ்தானுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஆனால் பொதுப்பிரச்சினை என்றால் சம்பந்தம் வரும். முன்னால் சவுத் ஸோன், நார்த் ஸோன், வெஸ்ட் ஸோன், ஈஸ்ட் ஸோன், சென்டர் ஸோன் என்று 5 ஸோன்கள் இருந்தன. சவுத் ஸோனிலே நடைபெற்ற கூட்டத்திற்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட முன்பு முதலமைச்சராக இருந்த போது பங்கேற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பின்னால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நீங்கள் கலந்துக்

கொள்ளவில்லை. ஆனால் இப்போது நீங்கள் சிங்கிள் ஸ்டேட் கவுன்சில் என்று சொல்லுகிறீர்கள். முன்னால் இருந்தபடி சவுத் ஸோன், நார்த் ஸோன் என்று 5 ஸோனாக பிரித்திருந்தாலே நன்றாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால் நம்முடைய கலாசாரம், நம்முடைய கல்சர் என்பது வேறு. அதனால்தான் ஐந்தாக பிரிக்க வேண்டுமென்று சொல்கிறேன்.....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. ராஜீவ் அவர்கள் ஆட்சியிலே நீங்கள் குறிப்பிட்ட இந்த ஸோன்கள் எப்போதாவது கூடியதா?

திரு. மா. சுந்தரதாஸ்: அந்த ஸோனிலே நீங்கள் கலந்து கொள்ளவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எங்கு கூடியது. நான் எப்போது கலந்துகொள்ளவில்லை? நான் அப்போதும் முதலமைச்சராக இருந்திருக்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: 1972–74–லே நடந்தபோது நீங்கள் முதலமைச்சராக இருந்தபோது அட்டெண்ட் பண்ணியிருக்கிறீர்கள். அதற்குப் பிறகு பண்ணவில்லை. (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஸோனல் கவுன்சில் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக இருந்தபோது ஹைதராபாத்திலே நடைபெற்றது. அதிலே கலந்துகொண்டோம். நான் கேட்டது திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக பொறுப்பேற்று இருந்தபோது அந்த ஸோனல் கவுன்சில் கூட்டம் எங்காவது கூட்டப்பட்டதா?

திரு. மா. சுந்தரதாஸ்: முதலமைச்சர்களே வரமாட்டேன் என்றீர்களே, அப்புறம் எங்கே ஸோனைக் கூட்டுவது?

(12-00 மணி)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஸோனல் கவுன்சில் என்றால் என்ன? அதைச் சொல்லுங்கள்.

திரு. மா. சுந்தரதாஸ்: தலைவர் அவர்களே, தென் மாநிலங்களுடைய முதலமைச்சர்களைக் கூட்டி இங்குள்ள பிரச்சினைகளைப் பேசுவதற்கு ஒரு கௌன்சில் இருக்கிறது. அது கான்ஸ்டிடியூஷனிலும் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தென் மாநில முதலமைச்சர்கள் கலந்த மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நான் எப்படிக் கலந்து கொள்ள முடியும்?

திரு. மா. சுந்தரதாஸ் : நீங்கள் திசை திருப்புகிறீர்கள் 1974–லே அன்னை இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்த அந்த கௌன்சிலில் நீங்கள் அட்டெண்ட் ஆகியிருக்கி றீர்கள். அதைத்தான் சொல்கிறேன். அதற்குப் பின்னால் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்குப் பின்னால் முதலமைச்சர்கள் மாநாடு கூட்டினாலே நீங்கள் வரமாட்டீர் கள் என்ற காரணத்தினால் அது நடத்தப்படவில்லை. அதுதான் உண்மை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது—நான் இந்த ஆண்டு தான் முதலமைச்சராக ஆகியிருக்கிறேன்.—வேறு அந்தக் காலகட்டத்திலே முதலமைச்சராக இல்லை. நான் கலந்துகொள்ளவில்லை என்று சொல்லுகிற குற்றச்சாட்டு எப்ப டிப் பொருந்தும் என்று எனக்குப் புரியவில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் இங்கே இருக்கின்ற முதலமைச்சரைச் சொல்லவில்லை (சிரிப்பு). எதைப் பேச வருகிறேன் என்று புரியாமல் சிரிப்பதிலே அர்த்தம் இல்லை. சௌத் ஸோனைப் பொறுத்தவரையில் ஆந்திரப் பிரதேசத்திலும் சரி, கர்நாடகத்தி லும் சரி, பிறகு கேரளத்திலேயும் சரி 3 மாநிலங்களிலும் எதிர்க் கட்சி முதலமைச்சர்கள் இருந்தார்கள். ஜனதா தளம் இருந்தது, தெலுங்கு தேசம் இருந்தது, சி.பி.ஐ.எம். இருந்தது, அவர்கள் அதிலே கலந்து கொள்ள மாட்டேன் என்று பகிரங்கமாகவே பலமுறை அறிவித்திருக்கிறார்கள் என்று நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, அவைக்குத் தவறான தகவல்களைத் தரக்கூடாது. நான் கேட்பது ராஜீவ் காந்தி பிரதமரான பிறகு தென் பிராந்திய ஸோனல் கவுன்சில் கூட்டம் எங்கெங்கே நடைபெற்றது? சொல்லுங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, நடைபெறவில்லை. காரணம், ஒத்துழைப்புத் தர மறுத்ததாலே நடைபெறவில்லை.

திரு. கோ. வீரையன் : துணைத் தலைவர் அவர்களே, தென் மாநில முதலமைச்சர்களுடைய கூட்டத்தில் கேரளாவும் கலந்துகொள்ளவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தமட்டில் அரசியல் ரீதியாக இருக்கக்கூடிய அமைப்புகளை, எந்த அமைப்புகளையும் நிராகரிப்பதில்லை, மறுப்பதில்லை, போகாமல் இருப்பதில்லை. அப்படி நடத்தாமலேயே, அழைக்காமலேயே நாங்கள் கலந்து கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டை சபைக்குக் கொடுக்கக் கூடியது தவறான தகவல். அதை நான் மறுக்கிறேன்.

1990 சனவரி 22]

திரு. மா. சுந்தரதாஸ் : துணைத் தலைவர் அவர்களே, ஃப்ரீ ரேஷன் என்று சொல்லியிருந்தீர்கள். 300 வரை கொடுத்தீர்கள். விளைவுகளை நீங்கள் சந்தித்தீர்கள். இனி வருகின்ற காலத்தில் ஆயிரம் என்று ஆக்கினீர்கள். நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எவ்வளவு கொடுத்தாலும் மக்கள் நம்பத் தயாராக இருக்கிறார்களா என்பது சந்தேகத்திற்குரிய விஷயம். நீங்கள் அடுத்த பாராவிலே கொடுத்துள்ளது " We have also had to undertake a sizable financial burden arising from open market purchases in other States " அது கோர்ட்டில் இருக்கிற விவாதம். அதை இங்கே எழுப்ப விரும்பவில்லை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சியினுடைய பொதுச் செயலாளர் கூட இதைத்தான் வேறுவிதமாகச் சொன்னார்கள். ஏன் இந்த லாஸ் வந்தது ? சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு போட்டு வாங்கியிருந்தால் பிரச்சனை வந்திருக்காது. ஆனால் எல்லா மாநிலங்களிலும் இருக்கிறதா என்று கேட்பீர்கள். அந்த மாநிலத்தில் பிரச்சனை வரவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் சொன்ன குற்றச்சாட்டை நீங்களும் சொல்கிறீர்களா ? ஆதாரம் இருக்கிறதா ?

திரு. மா. சுந்தரதாஸ் : நான் அதைச் சொல்லவில்லை "*** We have also had to undertake a sizable financial burden arising from open market purchses in other States."
நாங்கள் வெளி மாநிலத்தில் வாங்கினால் எங்களுக்குப் பணம் அதிகமாக செலவாகிறது என்று சொன்னால். . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் எம். ஜி. ஆர். முதலமைச்சராக இருந்த போது கூட வெளி மாநிலங்களிலே அரிசி வாங்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது இப்படியெல்லாம் சர்வ கட்சிக் குழு போட்டு வாங்கப்படவில்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : " We have also had to undertake a sizable financial burden arising from open market purchases in other States கொடுத்திருப்பதைத்தான் சொல்கிறேன். உங்களுக்கு அந்த நிலைமை வந்திருப்பதால் தான் சொல்கிறேன். இந்தப் பிரச்சனையை நீங்கள் தவிர்த்திருக்கலாமே என்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறேனே தவிர நாங்கள் அதைத் தவறு என்று. . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மத்திய அரசு போதுமான அரிசி வழங்கினால் வெளி மாநிலங்களில் வாங்கத் தேவையில்லை. இப்போதுள்ள மத்திய அரசு வழங்குகின்ற அரிசி கூட நமக்குப் போதாது. வெளி மாநிலங்களில் வாங்க வேண்டி இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடந்த காலத்தில் மத்திய அரசு பாதியாக அந்த அளவைக் குறைத்துவிட்ட காரணத்தினால் வெளி மாநிலங்களிலே வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

திரு. மா. சுந்தரதாஸ் : பாரா 17-லே கொடுக்கப்பட்டிருக்கிறது. ''சிப்காட்' எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் நீங்கள் புறக்கணித்துவிட்டீர்கள் என்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நீர் வளம் இருக்கிறது, ரப்பர் இருக்கிறது, கயிறு இருக்கிறது. படித்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே சிப்காட் வைக்க வேண்டும். முன்னால் நீங்கள் சொன்னீர்கள். நெல்லை எங்களது எல்லை. குமரி எங்கள் தொல்லை என்று சொன்னீர்கள். இனி நீங்கள் அந்த மாதிரி சொல்ல மாட்டீர்கள் என்ற நம்பிக்கை உண்டு. நீங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு தொழிற்சாலை தொடங்குவேன் என்று சொன்னீர்கள். தொடங்க முயற்சிப்பேன் என்று சொன்னீர்கள். ஆனால் ஆளுநர் உரையிலே 3 மாவட்டங்களிலே நீங்கள் தொழிற்சாலை தொடங்க பணம் அனுமதிப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உங்களுக்குத் தெரியும்

(12-05 மணி)

80 சதவிகிதம், 85 சதவிகிதம் படித்த மக்கள். அந்த படித்த மக்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறோம். ஆனால் மாண்புமிகு முதல்வர் கருணை உள்ளம் கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு தொழிற்சாலை உருவாக்குவதற்கு நிச்சயமாக மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

அதேபோல் 'பப்ளிக் மென் மிஸ்கான்டக்ட் ரூல்ஸ்' ஒன்று கொண்டு வருவதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இங்கே இருக்கிற 'விஜிலென்ஸ் அண்டு ஆன்ட்டி-கரப்ஷன்' டிபார்ட்மெண்ட்டையே ஒரு ஸ்டேச்சுட்டரியாக மாற்றி செய்தாலே நன்றாக இருக்கும். இப்போது கூட பல்வேறு ஊழல் பிரச்சினைகளைச் சொன்னால்கூட, அதற்கு ஒரு சரியான பதில்கூட கிடைப்பதில்லை. இங்கே இருக்கிற சட்டங்களை வைத்து சரியாகப் பார்த்தாலே முடியுமே தவிர, இதற்கென்று தனியாக ஒரு பெரிய சட்டத்தைக் கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை.

முந்தைய ஆட்சிக் காலத்திலே கார்ப்பரேஷன் தேர்தலைப் பற்றி மிகத் தெளிவாக நீங்கள் எப்போதும் இந்த மசோதா வரும்போது பேசுவது உண்டு, எங்கு பார்த் ாலும் நடக்கமுடிய வில்லை என்று சொல்வீர்கள். நான் இந்த மசோதாவினுடைய எக்ஸ்டென்ஷன் பில் வரும்போது கூட அமென்ட்மென்ட் கொடுத்திருந்தேன். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், 'நீங்கள் அந்த அளவிற்குப் போகவேண்டிய அவசியம் இல்லை, நாங்கள் நடத்துவோம்' என்று சொன்னார் கள். ஏனென்றால் இந்த மாதம் வந்திருந்தால் நிச்சயமாக டிவிஷன் கேட்டு இருப்பேன். ஆனால் டிவிஷன் கேட்காத காரணம், முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், 'மூன்று' கார்ப்பரேஷனுடைய தேர்தலை உடனடியாக நடத்துவேன் என்று சொன்னார்கள். (மணியடிக்கப்பெற்றது) இந்த தேர்தலை நடத்தாமல் மிகவும் தள்ளித் தள்ளிப் போவது நிச்சயமாக அது ஒரு நல்ல மரபு அல்ல. நிச்சயமாக நடத்த வேண்டும்.

இன்று சென்னையைப் பொறுத்தவரையில், அண்ணா சாலையையும், காமராஜ் சாலையையும் பார்த்துவிட்டு இரண்டு சாலைகள் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது. உள் பகுதிகள் மிக மிக மோசமாக இருப்பது எல்லோருக்கும் தெரியும். நீங்கள் தேர்தலை நிச்சயமாக நடத்தி முடிக்க வேண்டும் என்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், பிளானிங் கமிஷனைப்பற்றிச் சொல்லியிருக் கிறீர்கள். இப்போது பிளானிங் கமிஷனை கான்ஸ்டியுடிஷனல் பாடியாக்கப்போகிறோம் என்று சொன்னால், ஸ்டேட் கவர்ன் மென்ட் பிளானிங் கமிஷனை எடுத்துவிடப் போகிறீர்களா? மாநிலத்திலே இருக்கிற பிளானிங் கமிஷனுடைய நிலைமை என்ன என்பதைத் தெளிவாக விளக்கவில்லை இந்த ஆளுநர் உரையிலே. ஆகவே, மத்திய அரசினுடைய ஒரே கொள்கையாக மத்திய அரசே பிளானிங் கமிஷன் வைத்திருக்கிறதா? மாநில அரசு பிளானிங் கமிஷன் வைத்திருக்குமா என்பதைப் பற்றித் தெளிவாகக் கூறப்படவில்லை என்று சொல்லிக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றி சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ச. அழகுவேலு: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது பங்குகொண்டு நான் உரை யாற்றுவதிலே மகிழ்ச்சி அடைகின்றேன். மேதகு ஆளுநர் உரை யில், தமிழ்நாடு அரசின் கடந்த கால முற்போக்குத் திட்டங்களை யும் எதிர்காலத்திலே செய்ய இருக்கும் நலப்பணித் திட்டங்

களையும் சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள். மத்திய அரசு, மாநில அரசுகள் தாயாகவும், சேயாகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியதை நான் வரவேற்கின்றேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையில், தேசிய முன்னணி அரசு அறிவித்துள்ள வானொலி, தொலைக்காட்சி ஆகியவைகளுக்கு சுயாட்சி அளித்திருப்பதை, மேற்படி அறிவு பரப்பும் சாதனங் களாக அது அமையும் என்ற நம்பிக்கையை சுட்டிக்காட்டி இருக் கிறார்கள். மேலும், லோக்பால் என்ற அமைப்பின் மூலமாக பொது வாழ்க்கையிலே தூய்மை சேர்க்க சட்டம் இயற்றப்படும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பேரவையில் பெண்களுக்கு சொத்துரிமை சட்டம் இயற்றப்பட்டு அது மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் ஏற்கப்பட்டுள்ளது என்ற இனிய செய்தியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அதுபோலவே ஆதிதிராவிடர்கள், மலைவாழ் மக்கள் ஆகியோருக்கு நாடாளு மன்றம், சட்டமன்றம் ஆகியவற்றில் ஒதுக்கீடு மேலும் 10 ஆண்டுகளுக்கு நீட்டிக்க நடுவண் அரசால் கொண்டு வரப்பட்ட சட்ட முன்வடிவுக்கு இந்த மாமன்றம் தன்னுடைய மேலான ஒப்புதலை அளித்திருக்கின்றது. எவ்வளவு கருத்து வேறுபாடு கள் இருந்தாலும், கொள்கைகளிலே வேறுபாடு இருந்தாலும், இங்கே இருக்கக்கூடிய அரசியல் கட்சிகள் எல்லாம் தங்கள் கருத்து வேற்றுமைகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு தமிழ்நாடு சட்டமன்றம் தன்னுடைய உயரிய பண்பாட்டை உணர்த்து கின்ற வகையிலே எல்லா அரசியல் கட்சிகளும், எல்லா அரசியல் வல்லுநர்களும் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய எல்லா அரசியல் நாளேடுகளும், ஒரு மனதாகப் பாராட்டி இந்த மன்றத்தில் அதற்கு அங்கீகாரம் அளித்து இருக்கிறார்கள். அதே நேரத் தில் நாம் ஒன்றை மறந்து விடமுடியாது. நடுவண் அரசால் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்ட முன்வடிவு பத்திரிகைகளிலே வெளி வந்தபோது வட மாநிலங்களிலே எவ்வளவு பெரிய எதிர்ப்பு இந்த மசோதாவிற்குக் காட்டப்பட்டது என்பதை நாம் ஒரு கணம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

(12-10 மணி)

இந்தப் பேரவையிலே உரையாற்றுகின்ற பல்வேறு அரசியல் கட்சிகளினுடைய தலைவர்கள் இந்த மாநில சட்ட மன்றத்திலே சிலர் உறுப்பினர்களாக வந்து விடுவதாலோ அல்லது நாடாளு மன்றத்திலே சிலர் அங்கம் வகிப் பதாலோ, இந்த தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட, சமுதாயம் முன்னேறிவிடாது என்பதைக் கூறினார்கள். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்த அரசியல் சட்டத்தை உருவாக்கி, இந்தப் பாதுகாப்பை அளிக்கவில்லையென்றால்

1990 சனவரி 22] [திரு. ச. அழகுவேலு]

என்ன ஏற்பட்டிருக்கும் என்பதை ஒரு கணம் நினைத்துப் பார்க்க வேண்டும். அந்த மாமேதைக்கு நன்றி செலுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம். வட இந்தியாவிலே எவ்வளவு பெரிய எதிர்ப்புகள் ஏற்பட்டு நடுவன் அரசிலே அந்த மசோதா உருவாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டாலுங்கூட வட இந்திய மக்கள் அதற்கு எவ்வளவு பெரிய எதிர்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள் என்று கருதிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், தமிழகத்திலே சுயமரியாதை இயக்கம், திராவிடர் இயக்கம் கண்ட தந்தை பெரியார் அவர்கள், தமிழகத்தின் மூத்த புதல்வராக இருந்து இந்த மாமன்றத்திலே அறிவு மழையைப் பொழிந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் போன்றவர்கள் 40 ஆண்டுக்காலம், 50 ஆண்டுக் காலம் தமிழகத்தை வளப்படுத்தி அவர்களுடைய பண்பட்ட பேச்சாலும் எழுத்தாலும் இந்த நிலைமைக்கு அழைத்து வந்துள்ளார்கள் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் இந்தப் பேரவையில் பெண்களுக்கு சொத்துரிமைச் சட்டம் இயற்றப்பட்டு அது குடியரசுத் தலைவர் அவர்களால் ஏற்கப்பட்டிருக்கிறது. மக்கள் முன்னேற வாய்ப்பு அளிக்கின்ற பல்வேறு சட்டங்களை நாம் இயற்றினாலும்கூட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளிலும் கல்வித்துறை, நீதித்துறை, பொறியியல் துறை போன்றவைகளிலெல்லாம் போதுமான அளவிற்கு இடம் கிடைக்கவில்லை என்ற கவலை தோய்ந்த கருத்தினை இந்த மன்றத்திலே வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். தகுதி வாய்ந்த இளைஞர்கள் இந்தத் துறைக்கு கிடைக்கவில்லை என்று செய்தித் தாள்கள் ஒவ்வொரு நாளும் செய்தி வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. அதே நேரத்திலே வாழ்க்கையின் அடித்தளத்தில் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டுள்ள சமுதாயத்திற்கு இட ஒதுக்கீடு என்பது ஒரு ஊன்றுகோல். ' காலுக்கு செருப்பு இல்லையே என்று வருந்தினேன் காலே இல்லாதவனை காணும் வரை ' என்பதற்கு ஏற்ப மற்றைய சமுதாயங்களுக்கு காலுக்கு செருப்பு தேவைப்படுகிறது. ஆனால், பொட்டுப்பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் அடக்கி வைக்கப்பட்டு, சற்று தலை நிமிர முடியுமா என்று எண்ணுகின்ற ஊன்றுகோலாக, செயற்கைக் கால்களாக பயன்படுவதுதான் இந்த ஒதுக்கீடு நீடிப்புகள். அங்கொன்றும் இங்கொன்றுமாக ஜாதிக் கலவரங்களும், கொடுமைகளும் தலைதூக்கினாலும் சமுதாய நீதிக்கு போராடி சமநீதியை நிலைநாட்டுகின்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் கரங்களில் தமிழகத்தின் சமூக நீதி முறைப்படுத்தப்பட்டு, தமிழக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடிவுகாலம் பிறக்கும் என்ற நம்பிக்கை வீண் போகாது. அதைப் போலவே, பெண் உரிமைக்கு குரல் கொடுத்து, தந்தை பெரியார் வழியில் பேரறிஞர் அண்ணா வழியில் காலம் சென்ற தமிழ் அறிஞர் திரு. வி. கலியாணசுந்தரனார் வழியில், பெண் உரிமைக்கு சட்டம்

கொடுத்த முதல்வர் பெண் உரிமைக்குச் சான்றாக சொத்துரிமைச் சட்டத்தை உருவாக்கினார்கள். தாயின் வயிற்றிலே கருவாக இருப்பது முதல் திருமண உதவி வரை பெண் சமுதாயத்திற்கு எந்தெந்த வகையிலே உதவுகின்றது இந்த அரசு என்பதை நேற்று இந்த மாமன்றத்திலே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் தென்னரசு அவர்கள் மிக அழகாக குறிப்பிட்டுக் காட்டினார்கள். ஏழையெளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. இது போலவே, ஏழை விவசாயிகள் முன்னேற பல சீரிய திட்டங்களை இந்த அரசு ஆளுநர் உரையிலே கோடிட்டுக் காட்டியுள்ளது. நலிந்த பிரிவினருக்கான சீரிய திட்டங்களுக்கு உரு கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் தென்னரசு அவர்கள் நேற்று அவையிலே உரையாற்றுகின்ற பொழுது, 'சிலப்பதிகாரம் இல்லையென்று சொன்னால் மணிமேகலை இல்லை' என்று குறிப்பிட்டார்கள்.

(12-15 மணி)

மணிமேகலையிலே வருகிற ஒரு சில வரிகளை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"காணார் கேளார் கால் முடப்பட்டோர்
பேணுநர் இல்லார் பிணி நடுக் குற்றோர்
யாவரும் வருகஎன இசைந்தமு தூட்டினாள்."

என்று மணிமேகலையில் கூறப்பட்டிருக்கிறது. இந்த வரிகளை அடியொற்றி திராவிட முன்னேற்றக் கழக அரசும், டாக்டர் கலைஞர் அவர்களும் ஆயிரம் ரூபாய் வரை வருமானம் உள்ள எல்லா ஏழை எளிய மக்களுக்கும், அதாவது அரைப்பட்டினியாக இருக்கக்கூடிய இலட்சக்கணக்கான மக்களுக்கும் பொங்கல் நாளில், தீபாவளிப் பண்டிகை கொண்டாடுகிற நேரத்தில், தமிழ்ப்புத்தாண்டு நாளில் — இந்த நாட்களிலாவது அவர்கள் — முழுமையாகச் சாப்பிட வேண்டுமென்ற அரிய நோக்கத்தோடு இலவச அரிசி வழங்குகிற இந்த அரிய திட்டத்தை இங்கே அறிவித்து இருக்கிறார்கள்.

எதிர்க்கட்சிகள், அரசியல் லாப நோக்கத்தோடு 'எவ்வளவு கொடுத்தாலும் உங்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள்' என்று கேலி பேசினாலும் கூட இந்த அருமையான திட்டத்தைத் தமிழக மக்களுக்குத் தந்த இந்த அரசைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

காந்தியடிகளுக்குத் தமிழகத்தில் மிகப் பிடித்தமான பழமொழி 'திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை' என்பதுதான். எனவே, திக்கற்றவர்களுக்குத் தெய்வமாக இருப்பது இந்த அரசும் இதனுடைய தலைவரும் என்பதை இந்த மாமன்றத்தில்

பெருமையோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கருத்துக்களை எல்லாம் தெரிவித்துக் கொள்கிற அதே நேரத்தில், முக்கியமான ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் தென் தமிழகத்திலே வெள்ளப் பெருக்கால் மக்கள் அவதிப் பட்டாலும் கூட நான் சார்ந்திருக்கின்ற தென்னாற்காடு மாவட்டம் மற்றும் வட ஆற்காடு மாவட்டம் செங்கற் பட்டு மாவட்டம் போன்றவற்றில் எல்லாம் போதுமான மழையின்மை காரணத்தால் அவை வறண்டு கிடக்கின்ற அவல நிலைமை இருக்கிறது. சாதாரணமாக, குடிதண்ணீருக் குக் கூட மிகவும் கஷ்டப்படுகிற ஒரு நிலையிலே இந்தப் பகுதி யிலே நாங்கள் இருக்கிறோம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கு கிற வகையில் எங்கள் பகுதியில் வேகமாகச் செயல்பட்டாலும் கூட அதை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு அரசு இன்னும் விரை வாக குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்க்க உதவி செய்ய வேண்டு மென்று நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து 40, 50 ஆண்டுகளாக புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டிக் குடியிருக்கக்கூடிய மக்கள் முதல் தலைமுறையைக் கடந்து, இரண்டாம் தலைமுறையையும் கடந்திருக்கின்ற நிலைமையில் அந்தக் குடியிருப்புகளுக்குப் பட்டா அளிக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள் கிறேன். வருவாய்த்துறை அதிகாரிகள் நீர்வழிப் புறம்போக்கு, மந்தைவெளிப் புறம்போக்கு கோவில் புறம்போக்கு என்று பதி வேடுகளில் இருப்பதைச் சுட்டிக்காட்டி அவர்களுக்குப் பட்டா வழங்க மறுக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். சுதந்திரம் அடைந்து 43 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட அவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. அவர் களுக்குக் குடியிருக்கின்ற மனைகூட உரிமையாக்கப்படவில்லை என்பதை வேதனையோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக ஒரு கமிஷன் அமைத்து அத்தகைய இடங்களை எல்லாம் பார்வையிட்டு உடனடியாகப் பட்டா வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) இன்னும் சில கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டி இருப்பதால் ஒரு நிமிடம் கூடுதலாகத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

தென்பெண்ணையிலே தண்ணீர் வந்து பல ஆண்டுகள் ஆகி விட்டன. எங்கள் பகுதியில் இருக்கக்கூடிய வீடூர் அணை தண்ணீரைப் பார்த்து பல ஆண்டுகள் ஆகிவிட்டது. இதன் காரணமாக அங்கே இருக்கக்கூடிய நிலத்தடி நீர் மிக ஆழமாகப் போய்விட்டது. தென்னாற்காடு மாவட்டத்திலே நெய்வேலி யிலே வீணாகச் செல்கிற அந்தத் தண்ணீரை—வீராணம் திட்டத் திற்காக உருவாக்கப்பட்ட சிமென்ட் குழாய்கள் வீணாகக் கிடக்

கின்றன. நிலங்களில் போடப்பட்ட அகழிகள் அப்படியே கிடக்கின்றன, அவற்றை எல்லாம் பயன்படுத்தி தண்ணீரை—எங்களுடைய வறட்சிப் பகுதியில் இருக்கக்கூடிய திண்டிவனம், செஞ்சி, விழுப்புரம் போன்ற வட்டங்களிலே கொண்டு வந்து நீர்நிலைகளில் நிரப்பினால் நிலத்தடி நீர் உயர வாய்ப்பு இருக்கும். இதனை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மன்றத்தினுடைய உறுப்பினர் மாண்புமிகு திரு. கோவிந்தராஜன் அவர்கள் கூட இன்றைக்கு ஒரு வினாவைத் தொடுத்திருந்தார்கள். கரும்புச்சாலைத் திட்டம் என்பதன் கீழ் இங்கே எங்களுடைய பகுதியிலே இருக்கக்கூடிய எல்லா பாதைகளையும் செப்பனிடவேண்டும். அதிகாரிகளிடத்தில் சென்று முறையிடுகிறோம். எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பஸ்ஸிலே செல்கிறபோது பொதுமக்கள் எல்லாம் எங்களைப் பிடித்துக்கொள்கிறார்கள்.

(12-20 மணி)

நாங்கள் எல்லாம் உங்களுக்கு வோட்டுப் போட்டோம். நீங்கள் எல்லாம் இந்த பாதைகளைப் பார்ப்பதே இல்லை என்ற குறைபாடுகளை என்று பஸ்-ஐ விட்டு இறங்குகிறபோது சபித்துக் கொண்டு இருக்கிறார்கள். நான் அதிகாரிகளிடத்திலே முறையிட்டால் கரும்பு சாலை வளர்ச்சித் திட்டம் அதற்கு அவர்கள் ஸ்டே வாங்கியிருக்கின்றார்கள். அதற்கு பணமே இல்லை என்று சொல்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்தினுடைய எல்லா பாதைகளிலும் கரும்பு வளர்ச்சி திட்டத்தால் ஏதோ நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று தப்பித்துக் கொள்கிறார்கள். தயவு செய்து இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து கரும்பு சாலை திட்டத்தின் மூலமாக இருக்கக் கூடிய பாதைகளை எல்லா பாதைகளையும் அவர்கள் சீர் செய்ய வேண்டும் என்ற கருத்தினை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

விக்கிரவாண்டி ஒன்றியத்தை தொழில்பேட்டையாக அறிவிக்க வேண்டும். பம்பை ஆறு திட்டத்தை மிக விரைவாக நிறைவேற்ற வேண்டும். இந்த மன்ற உறுப்பினர் திரு. ஏ. ஜி. சம்பத் அவர்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கக் கூடிய நந்தன் கால்வாய் திட்டத்தை மிக விரைவாக நிறைவேற்ற வேண்டும். நேமூர் பாதையில் வராகநதியின் இடையிலே ஒரு மேம்பாலம் கட்ட வேண்டும் என்று பணிவான வேண்டுகோளை இந்த மன்றத்திற்கு வைத்து என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

திரு. **ஆர். அண்ணாநம்பி** ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் அவர்கள் உரையில் என்னுடையகருத்தினை சொல்கின்றபோது, ஆளுநர் உரையிலே இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக விளங்குகின்ற விவசாயிகளுக்குச் சொன்னதை இதிலே குறிப்பிடவில்லை. அது வருத்தமான ஒன்றாகும். அந்த விவசாயிகளுக்கு கூட்டுறவு கடனை ரத்து செய்

1990 சனவரி 22] [திரு. ஆர். அண்ணாநம்பி]

வோம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலேயே சொல்லி ஓராண்டு உருண்டோடிவிட்டது. ஆனால் இன்னமும் ஓராண்டு ஆகியும்கூட இந்த கூட்டுறவுக் கடனை ரத்து செய்யவில்லை என்று இந்த மன்றத்திலே ஞாபகப் படுத்த விரும்புகிறேன். ஆனால் அதே நேரத்தில் என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்ட வர்கள். என்னுடைய அவினாசி தொகுதியைப் பொறுத்தவரை யில் அந்த தொகுதியிலே நிலத்தடி நீர் இல்லாத பிளாக் ஏரியா என்று அரசு அறிவித்து இருக்கிறது. அப்படி விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. 150 அடியி லிருந்து 200 அடி வரை தோண்டினால்தான் தண்ணீர் கிணறு களில் கிடைக்கும் என்கின்ற அவல நிலை இருந்துகொண்டிருக் கிறது. எனவே இவற்றையெல்லாம் இங்கே பேசிய உறுப்பினர் கள் எடுத்து சொன்னார்கள். இது மாநிலம் முழுவதும் இருக் கின்ற பிரச்சினை என்றாலும் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நிலத்தடி நீரே இல்லாத பகுதி என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்வதோடு, அதற்குண்டான நீர் வசதியை விவசாயிகளுக்கு உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக கர்நாடகத்தில் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டது. 'நோ வாட்டர்' நோ மணி' என்கின்ற ஒரு திட்டம். தண்ணீர் இல்லை என்றால் பணம் தேவையில்லை என்ற ஒரு தலைப்பிலே ஒரு சட்டத்தைக் கர்நாடக அரசு கொண்டு வந்திருக்கிறது. விவசாயிகளுக்கு கடனாக துளைக் கிணறுகள் அமைப்பதற்காக அந்த கர்நாடக அரசு அந்த திட்டத்தைச் செயல்படுத்துகிறது. அங்கே இருக்கின்ற நிபுணர்கள் எல்லாம் எங்கெங்கே துணை கிணறுகள் போட வேண்டுமோ அந்த பகுதிகளில் பரிசோதனை செய்து பின்னாலே அங்கே தோண்டப்படுகிற இடத்தில் தண்ணீர் இல்லை என்று சொன்னால் அந்த விவசாயிகளுக்குக் கொடுக்கப் படுகின்ற கடன் அவர் கட்டவேண்டிய தேவை இல்லை என்ற அடிப்படையிலேதான் அந்தத் திட்டம் செயல்படுகிறது. அதை இந்த அரசு செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு, தேர்தலுக்குப் பின்னாலே பல்வேறுவிதமான தொந்தரவுகள், எதிர்க்கட்சியினருக்கு பழிவாங்கும் முறையிலே நடந்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரி வித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(12-25 மணி)

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தேர்தல் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்கிறபோது அது தொடர்பான விவரங்களை மன்றத்தில் தெரிவிப்பது நல்ல மரபல்ல. இங்கே அப்படி பேசாமல் இருப்பது என்பது தொடர்ந்து கடைபிடிக்கப்படுகிற நல்ல மரபாகும். ஆகவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பேசிய இந்தக் கருத்தை மட்டும் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 'போடி' தொடர்பாக மன்ற உறுப்பினர் திரு. அண்ணாநம்பி பேசியது அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'போடி தொகுதி வழக்கு' தொடர்பாக உறுப்பினர் பேசவில்லை. ** ** ** ** என்று சொல்கிற இப்படிப்பட்ட நிலைகளை இங்கே தயவு செய்து பின்பற்ற வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது உறுப்பினர் பேசுகிற காரணத்தால் அது உண்மையா அல்லவா என்பது அவையிலுள்ள ஆளும் கட்சி அமைச்சர்களுக்கு எப்படித் தெரியும்? அவர் சொல்வது உண்மையாகவும் இருக்கலாம். உண்மை அல்லாமலும் இருக்கலாம். 'போடி' தொகுதி தேர்தல் பற்றி இங்கே பேசினால், அது வழக்கு மன்றத்தில் இருக்கிற காரணத்தால் சட்ட மன்றத்தில் அதனைத் தொடர்பு படுத்தி பேசுகிறபோது வழக்கைப் பாதிக்கும் என்கிற அடிப்படையில், Sub-Judice என்ற அடிப்படையில் அதை சட்ட மன்றத்தில் பேச அனுமதிப்பதில்லை. அப்படி ஏதாவது குற்றச்சாட்டுகள் எதிர்க் கட்சியினருக்கு இருக்குமேயானால் அதைப் பற்றி முதலமைச்சருக்கு எழுதி, அதை விசாரிக்குமாறு கேட்டுக் கொள்ளலாம். ஆகவே, வழக்கு மன்றத்தில் இருக்கிற ஒன்றைப் பற்றி, சட்டமன்றத்தில் தொடர்பு படுத்திப்பேசுவது முறையல்ல.

திரு. ஆர். அண்ணாநம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் போடி தொகுதியில் நடந்த விவகாரங்களைத் தொடவில்லை: அதற்குள் போகவும் இல்லை, **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

1990 சனவரி 22]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** ** ஆகவே, ஆதாரம் இல்லாமல் அவைக் குறிப்பில் ஒன்றையும் ஏற்றக் கூடாது. அப்படி செய்வது மரபுக்கு மாறான ஒன்று. ஆதாரம் இல்லாமல் பேசிய உறுப்பினருடைய செய்திகளை மரபை கடைபிடித்து அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுமாறு உத்தரவிட கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுவான விஷயங்களைப் பேசுங்கள்.

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விவரத்தைச் சொல்கிறபோது அந்த உறுப்பினர் சொல்வது உண்மையா இல்லையா என்பதைத் தெரிந்து அறிவிக்க வேண்டியது அமைச்சருடைய கடமை, அரசினுடைய கடமை என்பதை அமைச்சருக்கு தெரிவித்துவிட்டு தொடர்ந்து என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன்.

அடுத்து, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நான் போடி சம்பந்தமான பிரச்சினையை இங்கே எழுப்ப வில்லை என் பதை மீண்டும் தெரித்துக் கொள்கிறேன். ** **

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் மீண்டும் மீண்டும் வழக்கு மன்றத்தில் இருக்கின்ற ஒன்றைப் பற்றி சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுவான விஷயங்களை மட்டும் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** ** என்று சொல்வது பத்திரிகைகளுக்கு தலைப்பு கொடுக்க பயன் படுமே தவிர எந்தவிதமான ஆதாரத்தையாவது உறுப்பினர் காட்ட முடியுமா? இங்கே சொல்வதை எல்லாம் விசாரிக்க வேண்டு மென்று உறுப்பினர் சொல்கிறார். இவர்கள் ஆதாரம் இல்லாமல் சொல்கிற செய்திகளை எல்லாம் கவனிப்பது மட்டும் அமைச்சர்களுடைய கடமை இல்லை. ஆதாரம் இருந்தால் இங்கே சொல்லட்டும். இல்லாவிட்டால் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும். அவை நடவடிக்கைக் குறிப் பில் ஏறக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, பொதுவாகச் சொல்லவேண்டும் அவையில் இல்லாதவர்களைப் பற்றி ஒன்றும் சொல்லக் கூடாது.

(12.30 மணி)

திரு. ஆர். அண்ணாநம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் அதனை நான் தொடர விரும்பவில்லை என்றாலும், இத்தகைய ஒரு நிகழ்ச்சி நடந்துள்ளது என்பதை அரசுக்குத் தெரிவிக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன். அந்த வகையில் பழிவாங்கும் படலங்கள் நடக்கின்றன. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் கடந்த, தேர்தல் நடந்த பிறகு, திருச்சியில் ஒருவர் பச்சை குத்தியிருந்தார் என்ற காரணத்திற்காகவே வக்ப் வாரியத்திலிருந்து அவரை அந்த செயலாளர் வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். நான் அதைச் சொல்லவேண்டுமானால்..

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு உறுப்பினர் சொல்வது வாதத்திற்கு வேண்டுமானால் சொல்லலாம் பச்சை குத்தியிருந்தவர் வேறு காரியத்தில் ஈடுபட்டிருந்ததற்காகவும், வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கலாம். அது எனக்கும் தெரியாது. யாருக்கும் தெரியாது. அந்தச் செய்தி குறித்து முறையாகத் தெரிந்து அதை உரிய அமைச்சருக்கு எழுதியனுப்பி அவர் அதைப் பற்றி விசாரித்துச் சொல்கிற வரையிலாவது அப்படிப்பட்ட செய்தியை, தானே கருதி, தானே முடிவு எடுத்துச் சொல்வது முறையுமல்ல, பயனும் தராது.

திரு. ஆர். அண்ணாநம்பி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அந்த வகையில் ஆதாரம் இல்லாமல் பேசவில்லை. ஆதாரத்தோடு தான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த ஆதாரத்தை முன்கூட்டியே என்னிடம் கொடுத்திருக்கவேண்டும். நான் அனுமதி அளித்தபின் தான் அதைப்பற்றி நீங்கள் பேசவேண்டும்.

(திரு. ஆர். அண்ணாநம்பி சில தாள்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரிடம் அளித்தார்.)

திரு. ஆர். அண்ணாநம்பி: ஆகவே பச்சை குத்தியவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால் இன்றைக்கு, கலைஞரை, உதய சூரியனை பலபேர் பச்சை குத்திக்கொண்டு வேலையில் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் மாண்புமிகு முன்னவர் அவர்கள் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னால், சட்டமன்றத்தில் சொன்னால், அப்படி யார் யார் பணியாற்றுகிறார்கள் என்ற லிஸ்டை நான் தரத் தயாராக இருக்கிறேன்.

1990 சனவரி 22]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : எந்த ஒரு காரண மாக இருந்தாலும், பச்சை குத்தியிருப்பதற்காகவோ அல்லது உதயசூரியன் அணிந்து இருந்தாலோ யார் மீதும் யாரும் நட வடிக்கை எடுக்க முடியாது. எடுக்க மாட்டார்கள். அப்படி ஏதேனும் புகார் இருந்தால் குறிப்பிட்ட புகாரைக் கொடுத்தால் முதலமைச்சரே நடவடிக்கை எடுப்பார்.

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல, பச்சை குத்தியதாகத்தான் புகார் வந்து நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். ஆகவே, அதை ரத்து செய்து தயவுசெய்து அவருக்கு வேலை அளிக்க அரசு உத்தரவு இடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த உத்தரவில் பச்சை குத்தியதால்தான் வேலை நீக்கம் செய்யப்படுகிறார் என்று கூறப்பட்டிருக்கிறதா?

திரு. ஆர். அண்ணாநம்பி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்த பிரச்சினைக்குச் செல்கிறேன். இங்கே பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார் கள். நான் சுருக்கமாகச் சொல்லி விடை பெற விரும்புகிறேன் அதைப்போலவே இந்த அரசு அறிவித்த பல்வேறு திட்டங்களை நிறைவேற்றவில்லை என்று குற்றச்சாட்டாக சொல்ல விரும்பு கிறேன். போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றுகிற தொழி லாளர்களுக்கு அரசு ஊழியர்களைப் போல பென்ஷன் கொடுப் போம் என்று அறிவித்தீர்கள். ஆனால் இதுவரையில் அது செயல்படுத்தப்படவில்லை. அதேபோல, தனியார் லாட்டரி சீட்டுகளை ரத்து செய்வோம் என்று அறிவித்தீர்கள். இன்றும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. அதற்கு இடையில் என்ன நடந்ததோ தெரியவில்லை. தனியார் கோடிக்கணக்கான ரூபாயை தனியார் லாட்டரிகள் மூலம் சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு இதுவரை சரியான பதில் அரசாங்கத்தின் சார்பில் சொல்ல வில்லை, இடையில் என்ன நடந்ததோ தெரியவில்லை.

(12-35 மணி)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : அரசாங்கம் செய்கின்ற ஒவ்வொரு நடவடிக்கையிலும் என்ன நடந்ததோ தெரியவில்லை என்று சந்தேகப்படுவதும், அதற்கு மக்கள் மத்தியில் இந்த அரசுக்கு ஒரு கெட்ட பெயர் ஏற்படுத்த முயல் வதும் முறையல்ல. இந்த அரசு தனியார் மூலமாக ரூ. 500 கோடிக்கு மேல் சம்பாதித்து, தமிழ்நாட்டுப் பணம் கொள்ளை அடிக்கப்படுவதாகத் தெரிந்து, அதைத் தடுக்க வேண்டுமென்று முடிவு செய்தது. அப்படி முடிவெடுத்ததற்குப் பிறகு, நோட் டீஸ் கொடுக்கப்பட வேண்டும். எடுத்த உடனேயே உத்தரவு போட்டு, அவர்களை லாட்டரி விற்கக் கூடாது என்று சொல்ல

முடியாது. அதற்காக அரசாங்கம் ஒரு நோட்டீஸ் கொடுத்திருக்கிறது. அதற்குப் பிறகு அவர்கள் விற்றால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. எனவே இடையில் ஒன்றும் நடந்துவிடவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின்பு நான் தொடருவதற்கு இல்லை. ஆனால் அதே நேரத்தில், இன்னொரு விந்தையும் நடந்துகொண்டு இருக்கிறது. கலைஞர் அல்லது டாக்டர் மு. கருணாநிதி என்று சொன்னால் தமிழ்நாட்டில் மட்டுமல்ல எல்லா இடங்களிலும் சின்னக் குழந்தை முதல் பெரியவர்கள் வரை நன்றாக அறிவார்கள், ஆனால் இன்றைக்கு அவருக்கு அரசின் சார்பில் ஒரு விளம்பரம் நடந்துகொண்டிருக்கிறது. அரசாங்கம் சார்பில் முதியோர் பென்ஷன் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படுகிற மணியார்டர் பாரத்தில் கலைஞருடைய பெயரும், 'நான் அனுப்புகிறேன்' என்று சொல்லத்தக்க விதத்தில் விளம்பரம் நடக்கிறது. அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(உறுப்பினர் திரு. ஆர். அண்ணா நம்பி ஒரு மணியார்டர் பாரத்தின் நகலை பேரவைத் துணைத் தலைவரிடம், அளித்தார்) மணியார்டர் பாரத்தின் மீது, ரூ. 500 கொடுக்கிறேன் என்று சொல்லி இப்படிக்கு மு. கருணாநிதி, முதலமைச்சர் என்று எழுதியிருக்கிறது. இந்த விளம்பரம் தேவைதானா என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து , நான் பேசுகிறபோது...

திரு. அ. மலர்மன்னன் : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே, தமிழக முதலமைச்சருடைய .பெயரைக் குறிப்பிட்டு அந்தத் திட்டத்தின் கீழ் அவருடைய பெயரை எழுதுவதாகச் சொன்னார்கள். ஆனால் கடந்த காலத்தில், எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அவருடைய .பெயரிலேதான் சத்துணவுத் திட்டத்தையே ஆரம்பித்தார்கள் என்பதை உறுப்பினர் அறிவாரா? முதலமைச்சர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்றே விளம்பரப்படுத்தினார்கள். நானே அதைப்பற்றி இந்த மன்றத்தில் அப்போது பேசியிருக்கிறேன். அதை உறுப்பினர் அறிவாரா ?

திரு. எஸ். டி. உகம்சந்த் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று போடவில்லை. முதலமைச்சர் சத்துணவுத் திட்டம்

என்றுதான் போடப்பட்டிருந்தது. எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயர் பயன்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

திரு. ஆர். அண்ணாநம்பி : முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் என்றுதான் இருந்தது. சில பேர் ஆர்வத்தின் காரணமாக எம்.ஜி.ஆர். பெயரை எங்காவது பயன்படுத்தியிருக்கலாம். அரசாங்கத்தின் சார்பாக முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் என்றுதான் இருந்தது. ஆனால் அதே நேரத்தில், அதைவிட்டு வேறு விஷயத்திற்கு வர விரும்புகிறேன், (சிரிப்பு), மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். நானும் ஆதாரத்தோடு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அடுத்ததாக..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படியானால் இதுவரை கூறியதெல்லாம் ஆதாரம் இல்லாதவையா? (சிரிப்பு).

திரு. ஆர். அண்ணாநம்பி : ஆதாரத்தோடு தான் கூறினேன். ஆளுநர் உரையில், கிராமப்புற வளர்ச்சிக்காக திட்டங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. எங்களது சட்டமன்றத் தொகுதிகளுக்குச் சென்று பார்க்கிறபோது எங்கே பார்த்தாலும் அவல நிலைகள் உள்ளன என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக பள்ளிக்கூடங்களில் கதவுகள் இல்லாத இடங்கள் இருக்கின்றன. கூரைகள், ஓடுகள் இல்லை. என் தொகுதியில் நானே பல இடங்களைப் பார்த்தேன். நான் ஆதாரத்தோடு சொல்கிறேன், அச்சம்பாளையம் என்ற ஊரில்

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர் சொல்கிற அத்தனையும் நான் ஒத்துக்கொள்கிறேன். ஓடு இருக்கிறது, கூரை இருக்கிறது என்று நான் சொல்லத் தயாராக இல்லை. ஒரு காலத்தில், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகளுடைய பொறுப்பில் இருந்த பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக்கொண்ட பிறகு முறைப்படி பராமரிக்க இடைக்காலத்தில் சில தடைகள் இருந்தன, குறைகள் இருந்தன. அண்மையில் அரசு எந்தெந்த ஒன்றியங்களில் உபரி நிதி வசதி இருக்கிறதோ அவர்கள் ஒவ்வொரு பள்ளிக்கூடத்தையும் எடுத்து அவர்கள் விரும்புகிறபடி பராமரிக்க ரூ. 5,000 வரை செலவு செய்யலாம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இனி உள்ளாட்சி மன்ற நிர்வாகிகளோ அல்லது அரசாங்க நிர்வாகிகளோ அந்தக் குறைகளை பெருமளவுக்குப் போக்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம். புதியதாகக் கட்டிட வசதிகள் செய்வது எல்லாம் தகுந்த நிதியாதாரத்தைத் தேடிக்கொண்டுதான் செய்ய முடியும்.

[12-40 மணி]

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அச்சம்பாளையத்தில் உள்ள பள்ளி கூடத்திலே மேற்கூரை இல்லாததுபோல பல பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் பயிலுகிறார்கள். அதை உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைத் சீர்செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பள்ளியின் புகைப் படத்தை உங்களிடத்தில் தருகிறேன்.

(உறுப்பினர் புகைப்படத்தை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரிடம் கொடுத்தார்.)

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். நான் அவையில் இல்லாத போது, பச்சை குத்திக் கொண்டதற்காக ஒரு பணியாளர் வக்ப் வாரியத்தில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கி றார் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லி இருக்கிறார்கள். அவர் பச்சை குத்தியதற்காக வேலை நீக்கம் செய்யப்படவில்லை; அவர் விதியை மீறி, அரசு பணியாளர்கள் கடைப்பிடிக்க வேண் டிய விதியை மீறி நடந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார். ''14 அரசு ஊழியர்களுக்குப் பொருந்தும்படியான ' பை-லா '' 14-கீழ் அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார். பச்சை குத்திக் கொண்டு இருப்பது எனக்குக் கூட தெரியாது. மாண்பு மிகு உறுப்பினர் அதைக் குறிப்பிட்டுச் சொன்னதனால் அந்தப் பணியாளருக்கும், மாண்புமிகு உறுப்பினருக்கும் தான் தொடர்பு இருக்கிறது என்றுஇதிலிருந்து தெரியவருகிறது. எனக்கு அந்தப் பணியாளரிடம் நேரடியாக தொடர்பு கிடையாது. ஆகையால் (தை குற்றச்சாட்டாக, என் மீது நான் இல்லாதபோது சொல்லியிருப்பது முறையற்றது. முறையாகச் சட்டப்படி அந்தப் பணியாளர் மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். அவர் நீதிமன்றத்திற்குப் போய் இருக்கிறார். அதுபற்றி நீதி மன்றம் தீர்ப்பை வழங்க இருக்கிறது. அது முறைப்படி தீர்ப்பை வழங்கும். இதில் அரசியல் காழ்ப்புணர்ச்சிக்கு இடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப் பற்றிக் குறிப்பிட்ட திலே இருந்து அவர் பச்சை குத்திக் கொண்டிருக்கிறார் என்பது தெரியவருகிறது. தேர்தலிலே வேலை செய்தார் என்பதும் ஒரு குற்றச்சாட்டு. அவர் விதியின் அடிப்படையில்தான் வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறாரே தவிர வேறு அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் இப் போது நீதிமன்றம் போய் இருக்கிறாரா ?

திரு. எம். அப்துல் லத்தீப் : இப்போது அவர் நீதிமன்றத் திலே ஸ்டே வேண்டும் என்று கேட்டு இருக்கிறார். அவர் சட்டப் படி என்ன பரிகாரம் தேட வேண்டுமோ அதை அவர் தேடிக் கொள்ளட்டும். அதில் அரசியல் காழ்ப்புணர்ச்சிக்கு இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அண்ணா நம்பி அவர்கள் மேலும் அதைப்பற்றிப் பேச முடியாது.

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக சுருக்கமாகச் சொல்லி விடைபெற உள்ளேன். மாநகராட்சித் தேர்தல்களை நடத்துவோம், நடத்துவோம் என்று பலமுறை சொல்லி இப்போதும் செப்டம்பர் 30க்குள் நடத்துவோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதே நேரத்தில் கோட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டு மாநகராட்சித் தேர்தல்கள் நடக்கும் என்று சொல்லி இருக்கிறார்கள். நீங்கள் கோட்டங்களை மாற்றி அமைத்தால் மட்டும் மாநகராட்சித் தேர்தலில் வெற்றி காணமுடியாது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் செப்டம்பர் 30-லேயும் தேர்தல்களை நடத்த மாட்டீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அப்போதும் நாங்கள் கேட்டால் என்ன சொல்வீர்கள், இன்னும் கோட்டங்கள் மாற்றி அமைக்கப்படவில்லை; அதற்குக் காலதாமதம் ஆகிறது என்பீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் ஆகிறது, சீக்கிரம் முடியுங்கள்.

திரு. இரா. மோகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மாநகராட்சித் தேர்தல் செப்டம்பரிலே நடக்காது என்று மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார். 10 ஆண்டுக்காலத்திற்கும் மேலாக தமிழ்நாட்டை ஆண்டவர்களுடைய கட்சி, அந்தப் 10 ஆண்டுக் காலத்திலேயே கோவை மாநகராட்சிக்கும், மதுரை மாநகராட்சிக்கும் ஏன் தேர்தலை நடத்தவில்லை என்பதை அவர் தெரிவிப்பாரா?

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் எது கேட்டாலும் இப்படித்தான் திருப்பிக் கேட்பீர்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும். நான் கேட்பது மக்களுக்காக நன்மைகள் அளிக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான். நீங்கள் அதை நடத்த வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இதைச் சொல்கிறோமே தவிர, நீங்கள் நடத்தாமலேயே போய்விடுவீர்களோ என்ற ஆசை எனக்கு இல்லை; தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : நீங்கள் கேட்பது மக்களுக்காக என்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் மோகன் கேட்டது, அந்தப் பத்தாண்டுக் காலத்தில் நீங்கள் ஏன் தேர்தலை நடத்தவில்லை என்று கேட்டார். ஏன், அதை மக்களுக்காக நடத்தவில்லையா? அதுவும் மக்களுக்காகத்தான் கேட்கப்பட்டது.

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வாதங்கள் என்னமோ அழகாகத்தான் இருக்கின்றன. நீங்கள் பலசாலிகள் என்பது உண்மையானால் நீங்கள் தேர்தலை நடத்துங்கள். என்னால் அதைத்தான் சொல்ல முடியும்.

அடுத்தபடியாக, இலவச அரிசி போடுகிறார்கள். இதில் கொஞ்சம் பேர் பயன் அடைகிறார்கள். அது இயக்கம் வளருவதற்குத்தான் பயன்படுமே தவிர வேறு எதற்கும் பயன்படவில்லை. அரிசி விலை தான் ஏறிக் கொண்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் கருத்தாகச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த இலவச அரிசி போடுவதை விட்டுவிட்டு, அரிசியின் விலையைக் குறைத்து ரேஷனில் நீங்கள் போடலாம். நாங்கள் அரிசி ரூபாய் 1.75-க்குக் கொடுத்தோம். இன்றைக்கு நீங்கள் ரூபாய் 2-25க்கு அரிசி கொடுக்கிறீர்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தைச் சொல்லக் கூடாது என்பதற்காகத் தெரிவிக்க விரும்புகிறேன். ரூபாய் 1-75-க்கும் அரிசி இருக்கிறது. ரூபாய் 2-க்கும் இருக்கிறது ; ரூபாய் 2-25-க்கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[12-45 மணி]

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். காலத்தில் ரூபாய் 1-75-க்கு அரிசி போட்டோம் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போதும் அது இருக்கிறது. இப்போதும் ரூபாய் 1-75-க்கு அரிசி இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்.

திரு. ஆர். அண்ணாநம்பி : நான் சொல்வது அது மட்டரகமான அரிசி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எது ? எம். ஜி. ஆர். போட்டதா ? எம். ஜி. ஆர். போட்டது மட்டரகமான அரிசியா ? (சிரிப்பு).

திரு. ஆர். அண்ணாநம்பி : இல்லை. நீங்கள் போடுவது தான் மட்டரகமான அரிசி. எம். ஜி. ஆர். போட்டதல்ல.

1990 சனவரி 22]

திரு. டி. கே. பழனிச்சாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினரைப் பார்த்து ''நீங்கள் போட்டதுதானே'' என்று கேட்டீர்கள் அது நியாயம். ஆனால் அவர் திரும்ப ''நீங்கள் போட்டதுதான்'' என்று உங்களைச் சொல்லுகிறார். சபாநாயகரைப் பார்த்து இப்படி கேட்பது நியாயம்தானா என்று சிந்திக்க வேண்டும்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, திரு. அண்ணாநம்பி அவர்கள் குறிப்பிட்டது ரூ. 1.75க்கு நல்ல அரிசி அன்றைக்கு வழங்கினார்கள். ஆனால் இன்றைக்கு 3 தரமாக அதைப் பிரித்து அதிலே ரூ. 1.75க்குப் போடுகிற அரிசி தரம் குறைந்ததாகவும், ரூ. 2.25க்கு போடுகிற அரிசி தரம் உயர்ந்ததாகவும் இருக்கிறது என்று கோடிட்டுக் காட்டினாரே தவிர புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் ரூ. 1.75க்கு வழங்கிய அரிசி உயர்ந்த ரக அரிசி என்றுதான் சுட்டிக்காட்டினார் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று வகையான அரிசி ஏதோ தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் போடப்படு தில்லை. கடந்த 10 ஆண்டுக் காலமாக தமிழகத்தில் ரேஷன் கடைகளின் மூலம் ''காமன், ஃபைன், சூப்பர் ஃபைன்'' என்று 3 வகைகளிலேயும்—ரூ. 1.75க்கு காமன் வெரைட்டியும், ரூ. 2.25-க்கு பைன் வெரைட்டியும் ரூ. 2.50க்கு சூப்பர் ஃபைன் வெரைட்டியும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அது சம்பந்தமாக திரு. அண்ணாநம்பி அவர்கள் ஏதாவது பார்க்க வேண்டுமென்றால் உணவு இலாக்காவில் போய் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற கோப்புகளைப் பார்த்துக் கொள்ளலாம். ஏனென்றால் ஒரு வரலாற்றை மறைக்கக்கூடாது. இந்த 3 வகையான அரிசி 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து கொடுக்கப்பட்டது—கவர்னர் ஆட்சியிலும் கொடுக்கப்பட்டது—இப்போதும் கொடுக்கப்பட்டு வருகிறது—இதிலே எந்தவிதமான மாற்றமுமில்லை.

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய காலத்தில் பல்வேறு வகையான அரிசி ரேஷனில் போடப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அப்போது ரூ. 1.75க்கு அரிசி போட்டாலும் சிறப்பு அரிசி என்று ரேஷன் கடையிலே யார் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம் என்ற கொள்கையை வைத்திருந்தார்கள். எனவே இந்த அரிசி பிரச்சினையை இத்தோடு விட்டுவிட்டு இறுதியாக மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரிசி விலையைக் குறைத்து இலவச அரிசி திட்டத்தை விட்டுவிட்டு மக்களுக்கு ரூ. 1.75க்கு நல்ல அரிசியை தரமான

[திரு, ஆர். அண்ணாநம்பி] [1990 சனவரி 22

அரிசியை இந்த அரசு வழங்குவதற்கான திட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் (சிரிப்பு)

அடுத்து ஒரு கருத்தை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கோவையைப் பொறுத்த வரையில் அது கோயம்புத்தூர் என்று இருந்தது இப்போது கோயம்புத்தூர் என்று விளங்குகிறது. கோயம்புத்தூரைப் பொறுத்த வரையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும் எங்கள் தலைவர் மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் நீண்ட நெடுங்காலமாக கோவை மாநகரத்திலே இணைந்து பழகினார்கள். கோவை நகரில் கலைஞர் அவர்கள் சென்ட்ரல் ஸ்டுடியோவில் கதை வசனம் எழுதுகிறபோது கோவை சிங்காநல்லூரில் இருந்து கொண்டுதான் அவர் பல ஆண்டுக்காலம் தொழிலைப் பார்த்தார்கள். அப்படிப்பட்ட கோவை மாநகரத்திற்கு—மாவட்டத்திற்கு எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்களின் பெயரை 40 ஆண்டுக் காலம் எங்கள் தலைவரின் நண்பராக இருந்த கலைஞர் அவர்கள்—மக்களுடைய உள்ளத்திலெல்லாம் இடம் பெற்றுவிட்ட புரட்சித் தலைவர் பெயரை கோவை மாவட்டத்திற்கு வைக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் மூத்த உறுப்பினர், மரியாதைக்குரிய திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்களால் முன்மொழியப்பட்டு, கடந்த 2,3 தினங்களாக இம்மன்றத்தில் விவாதிக்கப்பட்டு வருகிற ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு எனக்கும் வாய்ப்பினை அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மணி இப்போதே 12.45 ஆகிறது. காலையில் சபை கூடுகிறபோது 9 மணிக்கு வந்திருப்பவர்களின் முகமெல்லாம் ஒளிமயமாக இருக்கிறது. எங்களைப் போன்ற உறுப்பினர்கள் பேச ஆரம்பிக்கும்போது பசிமயமான நேரமாகிவிடுகிறது. பெரியவர்கள் பேசுகிறபோது ''பாயிண்ட் ஆப் ஆர்டர், குறுக்கீடு'' ஆகியவைகள் மூலமாக நேரத்தை விழுங்கிவிடுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, ஆளுநர் உரை என்பது இந்த ஆட்சி செய்தவைகளையும், இனிச் செய்ய இருப்பவைகளையும் அரசின் திட்டங்களையும், கொள்கைகளையும் எடுத்துக் கூறுகிற ஒன்று ஆகும்.

)12.50 மணி)

அந்த வகையிலே சுருக்கமாகச் சொன்னால் ஒரு நல்ல நூலின் தன்மையை எடுத்துக் கூறுகின்ற முகவுரையாக, முன்னுரையாக, இந்த ஆளுநர் உரை திகழ்கிறது. விலைவாசி, உயர்வு, வேலை

1990 சனவரி 22] [திரு. இளம்வழுதி]

யில்லாத் திண்டாட்டம், மூடப்பட்ட ஆலைகள், முடங்கிப் போன நிதி நிலைமை, சீர்குலைந்துவிட்ட அரசு நிர்வாகம், இத்தகைய நெருக்கடியான நிலையில் பொறுப்பேற்ற டாக்டர் கலைஞர் அவர்களும் அரசும் எத்தனையோ இன்னல்களுக்கும் இடையூறு களுக்குமிடையே சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக் காகவும் அவர்கள்தம் நல்வாழ்விற்காகவும் நல்ல முறையில் சிறப் பாகப் பணியாற்றி வருகிறது.

எந்தெந்தத் துறைகளில் எந்த அளவுக்குக் காரியமாற்றி இருக் கிறது என்பதையும், இனி ஆற்ற இருக்கிறது என்பதையும் இந்த ஆளுநர் உரையில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த அரசு மக்களுடைய பிரச்சினைகளை அணுகி அவற்றிற்குத் தீர்வு காண வேண்டும் என்பதிலே முனைப்பாகச் செயல்படக்கூடிய அரசு. எனவேதான் தமிழ்நாட்டில் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்க முன்னுரிமையளித்து போர்க்கால வேகத்தில் செயல்பட்டு வருவதோடு, நாட்டிலுள்ள மின் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு மின் உற்பத்தியைப் பெருக்க தன்னால் முடிந்த அனைத் தையும் செய்து வருகிறது.

மேட்டூர் மூன்றாவது மின் உற்பத்தி நிலையத்தைத் துவக்க வும் எண்ணூரில் மூன்று மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க வும் நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் ஜனவரி 12ஆம் தேதிக்குப் பின்னர் மின்வெட்டு அறவே நீக்கப்பட்டு விட்டது.

அடுத்து இலவச அரிசி விநியோகத்திற்காக சுமார் 36 கோடி ரூபாய் செலவாகும் என்ற நிலையிலும் இந்த அரசு இலவச அரிசி பெறும் மக்களின் வருமான வரம்பை உயர்த்தி ஒரு கோடியே இருபது இலட்சம் குடும்பத்தினர் பயன்பெறும் வகையில், மாதம்1,000 ரூபாய் வருமானமுள்ள குடும்பத்தின ருக்கு இலவச அரிசிவழங்கும் திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளது.

எங்களின் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பை ஏற்ற நேரத்தில்—கஜானாவும் காலி, களஞ்சி யமும் காலி என்ற நிலையிருந்தது. எனவேதான் 1988-89 ஆம் ஆண்டிற்கான திட்டச் செலவு ரூ. 1,457 கோடி என்றிருந் ததை ரூ. 1,202 கோடியாகக் குறைக்க நேர்ந்தது. ஆனால், தலைவர் கலைஞர் அவர்களுடைய நிர்வாகத் திறமையால் தற்போது ரூ. 1,360 கோடியாக உயர்த்த வகை செய்யப்பட் டுள்ளது. இதனால் நடப்பாண்டில் திட்டச் செலவு குறையா மலிருக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இது இந்த அரசின் சாதனையென்பதைப் பொருளாதாரம் தெரிந்தவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

சர்க்கரைத் தொழிலைப் பொறுத்தவரை 5 புதிய சர்க்கரை ஆலைகள் அமையவிருக்கின்றன. மேலும் ரூ. 45 கோடி முதலீட் டில் எல்காட் நிறுவனம் 5 தொழில் திட்டங்களை மேற்கொண்

டிருக்கிறது. மயிலாடுதுறை, ஈரோடு, கங்கைகொண்டான், பெருந்துறை, மானூர் ஆகிய பகுதிகளில் 90 கோடி ரூபாய் செலவில் தொழில் வளர்ச்சி மையங்களை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் வேலை வாய்ப்பும் பெருகும், தொழில் வளமும் பெருகும். நாட்டின் பொருளாதார நிலையும் உயரும்.

அடுத்து, பெண்களுக்குப் பரம்பரைச் சொத்தில் சமஉரிமை வழங்கும் சட்டத் திருத்தம் இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதைத் தாய்க்குலம் பெரிதும் மகிழ்ச்சியோடு வரவேற்கிறது.

மேலும் சென்னை நகர மக்களுக்குக் குடிநீர் அளிக்கின்ற தெலுங்கு கங்கை திட்டத்தைப் பற்றி இன்றைக்குக் காலையிலே கூட எல்லோரும் விரிவாகப் பேசினார்கள். ஒரு காலத்தில் தமிழ்நாடு வற்றாத ஜீவ நதிகளால் சூழ்ந்து கிடந்தது. மகாகவி பாரதியார் பாடுகின்றபோது—

காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருநை நதி-யென
மேவிய யாறுபல ஓடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு

என்று பாடினார்.

அதே பாரதியார் இப்பொழுது உயிரோடு இருந்திருந்தால்

காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருநை நதி-யென
மேவிய யாறு பல ஓடவெறும்
மணல் கொண்ட தமிழ்நாடு.

என்று பாடியிருப்பார். அந்த நிலையிலே இன்றைக்குப் பல்வேறு ஆறுகள் இருந்தும் காய்ந்து வறண்டு போயிருக்கும் நிலையிலும் கூட, இயற்கை எங்களைச் சோதிக்கின்ற நிலையிலும்கூட, சென்னை நகர மக்களுக்குக் குடிநீர் அளிக்க தெலுங்கு கங்கை திட்டம் காலதாமதமின்றி நிறைவேற இந்த அரசு முழுமூச்சோடு செயல்பட்டு வருகிறது. இது சென்னை நகர மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய விசயமாகும்.

அடுத்து, பதவியில் இருப்போர் மீது குற்றச்சாட்டு சொல்லப்பட்டால் அவற்றை விசாரித்து நடவடிக்கை எடுக்க 1973-ஆம் ஆண்டிலேயே இந்த அரசுதான் சட்டம் கொண்டு வந்தது. இந்தியாவிலேயே முதன் முதலாக இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்தவர் கலைஞர்தான் என்பது நாம் அனைவரும் பெருமைப்படக்கூடிய விஷயமாகும்.

இப்படிச் சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினருக்காகவும் முடிந்த அனைத்தையும் செயல்படுத்தும் இந்த அரசு—

1990 சனவரி 22] [திரு. இளம்வழுதி]

''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை'' —என்ற

குறளுக்கு ஏற்ப எங்கள் மீது எத்தகைய விசமத்தனமான அவதூறுகள், விமர்சனங்கள் செய்யப்பட்டாலும், அவற்றைக் கண்டு நாங்கள் வருத்தப்படுவதுமில்லை, கவலைப்படுவதுமில்லை. காரணம்,

''ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன்
மறைவதில்லை
ஆணையிட்டே யார் தடுத்தாலும் அலைகடல்
ஓய்வதில்லை''

என்று எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், இந்த அரசும் நாங்களும் தொடர்ந்து எங்களை மக்கள் பணியிலே ஈடுபடுத்தி வருகிறோம்.

மேலும் ஜனநாயகத்தில் தேர்தலிலே வெற்றி தோல்வி என்பவை சர்வ சாதாரணமானவை. இரண்டாம் உலகப் போரின் போது யுத்த நெருக்கடியில் சிக்கித் தவித்தது இங்கிலாந்து நாடு.

(12-55 மணி)

அப்போது அந்த இங்கிலாந்து நாட்டில் இருக்கிற அனைத்துக் கட்சிகளும் தேச நலனைக் கருத்தில் கொண்டு அந்நாட்டு மக்கள் 'தேசிய அமைச்சரவை' என்று ஒன்றை அமைத்து, மிகவும் மோசமான சூழ்நிலையில் பொறுப்பை சர் வின்ஸ்டன் சர்ச்சிலிடம் ஒப்படைத்தார்கள். பொறுப்பை ஏற்றுக் கொண்ட சர்ச்சில், தேம்ஸ் நதித் தீரத்திலே குண்டு மழை பொழியப்பட்டபோது, நெஞ்சை நிமிர்த்து, London will take it என்று சொன்னார். இலண்டன் இந்தச் சவாலை ஏற்கும் என்று சொன்னதோடு தன்னுடைய துணிச்சலான நடவடிக்கையாலும், இராஜ தந்திரத்தாலும் மன உறுதியாலும் இலண்டன் மாநகரத்தைக் காப்பாற்றியதோடு இங்கிலாந்திற்கு வெற்றியையும் தேடித்தந்தார் சர்ச்சில். ஆனால் அந்த யுத்தத்தின் வெற்றிக்குப் பிறகு இங்கிலாந்தில் நடைபெற்ற தேர்தலில் யுத்தத்தில் வெற்றியைத் தேடித்தந்த சர்ச்சிலின் கட்சி ஆட்சிக்கு வர முடியாமல் போய்விட்டது. அதனால் இங்கிலாந்து நாட்டு மக்கள் சர்ச்சிலை புறக்கணித்துவிட்டார்கள் என்று கூறிவிட முடியுமா? முடியாது. அதைப்போல, யுத்த நெருக்கடியிலிருந்த இங்கிலாந்தையும் அந்நாட்டு மக்களையும் காப்பாற்றிய நம்மை ஆட்சிக்கு வரவிடாமல் செய்து விட்டார்களே, நான் ராஜினாமா செய்துவிடுகிறேன், மக்கள் பணியிலிருந்து ஒதுங்கிவிடுகிறேன் என்று கூறி சர்ச்சில் ஒதுங்கிவிடவில்லை. மாறாக இறுதிவரை தொடர்ந்து அந்நாட்டு மக்களுக்காகப் பாடுபட்டார். பணியாற்றிக்கொண்டிருந்தார் என்பது இங்கிலாந்து வரலாறு.

அதைப்போல எண்ணற்ற தோல்விகளைத் தந்தாலும் என்னுடைய தமிழ்நாட்டிற்காக என்னுடைய தமிழ் மக்களுக்காக என் இறுதி மூச்சிருக்கும் வரை தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருப்பேன் என்று இன்முகத்தோடு தமிழகத்து வின்ஸ்டன் சர்ச்சிலாகக் காட்சியளித்துக் கொண்டிருப்பவர்தான் எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

அதைப்போல, இன்னும் நேரத்தை அதிகமாக நீட்டித்தந்தால் என்னால் நிறைய கருத்துக்களைச் சொல்ல முடியும். ஆனால் நேரம்தான் இல்லை. தொடர்ந்து இரண்டு, மூன்று நாட்களாக இந்த விவாதம் அமைதியாக, அதே நேரத்தில் சுவையோடு நடந்து கொண்டிருக்கிறது. இங்கே மரியாதைக்குரிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்றைய முன்தினம் இந்த அவையிலே, ஆளுநர் உரை மீதான விவாதத்திலே பேசினார்கள். அண்ணன் பாலசுப்பிரமணியம் அவர்கள் சிறந்த பேச்சாளர்: திறமையாக வாதிடுவதிலே வல்லவர். ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டால் அதை முழுமையாக ஆராய்ந்து விவாதிப்பதிலே வல்லவர். அவர்கள் திறமையாக வாதிடுவதைப் பார்த்து நாங்கள் பெருமைப்படுகிறோம். காரணம் என்னவென்றால், இப்போது பர்மா பஜாருக்குச் சென்று 'வாச்' ஒன்று வாங்கினால் அதிலே Made in Swiss என்று இருக்கும். ரேடியோ ஒன்று வாங்கினால் Made in Japan என்றிருக்கும். ஆகையால் சுவிஸ்ஸுக்கும், ஜப்பானுக்கும்தான் பெருமை. அதைப்போல அண்ணன் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் வாதிடுவதிலே வல்லவர் என்றால் அதற்குக் காரணம் அவர் Made in D.M.K. என்று சொன்னால் அவர்கள் மறுக்க மாட்டார்கள். மேலும் திராவிட இயக்கப் பாசறையிலே பயின்றவர் யாராக இருந்தாலும், எங்கேயிருந்தாலும், சோடை போக மாட்டார்கள் என்பதற்கு அண்ணன் பாலசுப்பிரமணியம் அவர்கள் ஓர் உதாரணம்.

அவர்கள் இங்கே பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். நாடாளுமன்றத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுப் போய்விட்டது என்று வெகு விஸ்தாரமாகப் பேசினார்கள். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அண்ணன் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களை நான் கேட்கிறேன். உங்கள் நெஞ்சைத் தொட்டு சொல்ல வேண்டும். நீங்கள் பெற்ற வெற்றி நேர்மையான வெற்றியா? இந்த மாநில அரசின்மீது மக்களுக்கு கசப்பும் வெறுப்பும் ஏற்பட வேண்டும் என்பதற்காகத் திட்டமிட்டு கலைஞர் பொறுப்பேற்றதும் அரிசி விலையை உயர்த்தினீர்கள். இலட்சம் டன் என்றும் 80,000 டன் என்றும் வழங்கி வந்த அரிசியின் அளவை 40,000 டன்னாகக் குறைத்து, இந்நாட்டு மக்களின்

1990 சனவரி 22] [திரு. இளம்வழுதி]

வயிற்றோடும் வாழ்வோடும் விளையாடிப் பெற்ற வெற்றி அது. அதனால்தான் பெற்ற வெற்றியைக்கூட மகிழ்ச்சியோடு கொண்டாட முடியாத சூழ்நிலை உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் அரிசி கொடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். நம்முடைய தமிழ்நாட்டிலிருந்து மத்தியத் தொகுப்புக்கு ஒரு பொட்டு அரிசி கூட கொடுக்காமல் இருந்த போதிலும், இதற்கு முன்னாலே மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலே மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் 40,000 டன் அரிசியை தமிழ்நாட்டு மக்களுக்காக, இந்த நாட்டு மக்களுடைய நலன் கருதி அனுப்பி வைத்ததை நீங்கள் மறந்துவிடக் கூடாது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : துணைத் தலைவர் அவர்களே, வெற்றி தோல்வி என்பதைப் பொறுத்தவரையில் யாருக்குமே மகிழ்ச்சி இல்லாமல் போய்விட்டது. காரணம் எங்களுக்கு மகிழ்ச்சி கலந்தத் துக்கம் ; உங்களுக்கு துக்கம் கலந்த மகிழ்ச்சி. இதிலே யாரும் பாராட்டி, மார்தட்டிக்கொள்வதற்கு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் (பலத்த சிரிப்பு).

திரு. இளம்வழுதி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் அழகாகச் சொன்னார்கள். அதனால்தான் நாங்கள் அடக்கமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதைப்போல நீங்களும் அடக்கமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசுப்பு அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் பெரியவர் எம்.ஜி. ஆர். காலத்தில் அரிசி அனுப்பியதாகச் சொன்னார்கள். ஆனால் எங்களுடைய காலத்தில் அரிசி எப்படி வாங்கப்பட்டது? முன்னாள் சபாநாயகர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் நீதிமன்றத்திலே வாதாடி, எப்படி அரிசியைப் பெற்றுத் தந்தார்கள் என்பதை தனியாக அவரை அழைத்துப் பேசிக்கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல.

(13-00 மணி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இசைவுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரிசிப் பிரச்சினை ஒன்றையே வைத்துத் தான் இந்த நாடாளுமன்றத் தேர்தலிலே

[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1990 சனவரி 22

திராவிட முன்னேற்றக் கழகம் தோல்வி அடைந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். 1987 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் இரண்டாண்டுக் காலம் மழையில்லாத நேரத்தில் மத்திய அரசு கொடுக்கின்ற அரிசிகூட பற்றாக்குறை ஏற்படுகிற நேரத்தில் வேறு மாநிலங்களிலேயிருந்து அரிசியை வாங்கி அன்றைக்கெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் வழங்கினார்கள் என்பதை நான் இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களுடைய தலைவரும் அதைத்தான் சொன்னார். மத்திய அரசிலேயிருந்து இப்பொழுது கொடுக்கின்ற அரிசி பற்றாக்குறை இருக்கிறது, இருந்தாலும் அதன் காரணத்தினாலே தான் வேறு மாநிலங்களிலேயிருந்து நாங்கள் வாங்குகிறோம் என்று சொன்னீர்கள். ஆகவே, தேசிய முன்னணியைச் சேர்ந்த ஆந்திர மாநிலத்தை ஆண்டு கொண்டிருந்த முன்னாள் முதலமைச்சர் என்.டி.ஆர். அவர்கள் இருக்கின்றபொழுது நீங்கள் அங்கேயிருந்து பெற்றிருக்கலாம். அதை நழுவ விட்டுவிட்டு இப்பொழுது அதுதான் காரணம் என்கின்ற அளவிலே நீங்கள் சுட்டிக்காட்டுவது சரியாக இல்லை.

திரு. இளம்வழுதி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே சொன்னார்கள். ஆனால் இப்பொழுது மத்தியிலே அமைந்திருக்கக் கூடிய தேசிய முன்னணி அரசு தமிழ்நாட்டு மக்கள் மீது அவர்களது நலன்களின் மீது அக்கறை உள்ள அரசு என்பதால் அதிகமாக அரிசி தரும் என்று நாங்கள் நம்புகிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தோற்று விட்டதாலே எங்களுக்குச் சிறுமை கிடையாது. பெல்ஜியம்—அந்த நாட்டின் வழியே இட்லர் தன்னுடைய படையை நடத்திச் சென்று அடுத்த நாட்டின் மீது போர் தொடுக்க வேண்டுமென்று கேட்ட பொழுது, பெல்ஜியம் அனுமதிக்காமல், மாறாக வலிமை மிக்க படைகளைக் கொண்ட இட்லரோடு மோதிப் போரில் தோற்றது. தோற்றாலும் சிறுமை பெல்ஜியத்திற்குக் கிடையாது. மாறாக, உலகத் தலைவர்கள் அனைவருமே பெல்ஜியத்திற்கு வாழ்த்துக் கவி பாடினார்கள். உலகத்தவர் என்று சொல்வதை விட, எங்கேயோ இருக்கின்ற பெல்ஜியத்திற்கு இங்கே இருக்கின்ற பாரதி வாழ்த்துக் கவி பாடுகிறார். போரில் தோற்றுப் போன பெல்ஜியத்திற்கு—

அறத்தினால் வீழ்ந்து விட்டாய்;
அன்னியன் வலிய னாகி
மறத்தினால் வந்து செய்த
வன்மையைப் பொறுத்தல் செய்யாய்
முறத்தினாற் புலியைக் காக்கு
மொய்வரைக் குறப்பெண் போலத்
திறத்தினால் எளியை யாகிச்
செய்கையால் உயர்ந்து நின்றாய்.

1990 சனவரி 22] [திரு. இளம்வழுதி]

என்று எங்கோயோ இருக்கின்ற பெல்ஜியத்திற்கு இங்கே தமிழ் நாட்டில் பிறந்த பாரதியார் வாழ்த்துக் கவி பாடினார். அதைப் போல போரிலே நாங்கள் தோற்றுப் போனாலும், சர்வாதிகாரி இட்லரை எதிர்த்து நின்று, துணிச்சலையும், தர்மத்தையும் நிலை நாட்டிய பெல்ஜியத்திற்கு எப்படிப் பாரதியார் வாழ்த்துக் கவி பாடினாரோ அதைப் போல மத்திய அரசினுடைய அதிகார பலம், மோசமான தந்திரங்கள், அரிசியை அரசியலாக்கிய சூழ்ச்சிகள், இவை அனைத்தையும் எதிர்த்து நின்று, நாங்கள் தோற்றாலும், இட்லரை எதிர்த்துத் தோற்பினும் வரலாற்றில் புகழிடம் பெற்றுள்ள பெல்ஜியத்தைப் போல நாங்கள் நிமிர்ந்து நிற்கிறோம்.

எங்களைப் பொறுத்தவரையில் வெற்றியும், தோல்வியும் எங்களுக்குப் பெரிதும் அல்ல, புதியதும் அல்ல. தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா காட்டிச் சென்ற வழியிலே நடை போடுகின்ற வேங்கைகளின் பட்டாளம் இது. இந்த ஆட்சி என்பது தமிழ்ச் சமுதாயத்திற்காகப் பணியாற்ற எங்களுக்குக் கிடைத்த வாய்ப்பாகக் கருதுகிறோமே அல்லாமல், இந்த ஆட்சியே எங்களுடைய இலட்சியம் என்று கருதுபவர்கள் அல்ல நாங்கள். எங்களுடைய எண்ணம் இந்த நாடும், இந்த நாட்டு மக்களும் நலிவு நீங்கி, வளம் பெற்று, தலை நிமிர்ந்து வாழ வேண்டுமென்பது தான் எங்களுடைய இலட்சியம். இந்த இலட்சியம் நிறைவேற எத்தகைய விழுப்புண்களையும் ஏற்க நாங்கள் தயாராக இருக்கிறோம். எங்களையே பலி கொடுக்கவும் நாங்கள் தயராக இருக்கிறோம். ஆகவே, வெற்றிகள் வரும், போகும். "Men may come; men may go; but the river will flow for ever" என்று சொல்வதைப் போல வெற்றி தோல்விகள் வரும், போகும். அதில் வெற்றி கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய இலட்சியப் பயணத்தைத் தங்கு தடையின்றித் தொடரும்; இந்த நாட்டு மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும், இந்திய வரலாற்றிலே என்றென்றும் இமயமாக உயர்ந்து நிற்கும். எனவே, நீங்கள் எத்தகைய சுடு சொற்களை வீசினாலும் அதைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை.

ஏற்கனவே நம்முடைய நண்பர் காங்கிரஸ் கட்சி உறுப்பினரவர்கள் பேசுகின்ற நேரத்திலே, ஐந்து கிலோ தங்கத்தை வீடு வீடாகத் தேடிச் சென்று கொடுத்தாலும்கூட இனிமேல் உங்களை ஏற்கத் தயாராக இல்லை என்று சொன்னார்கள். அது அவருடைய கடந்த கால அனுபவத்தைச் சொல்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் இன்னொன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் நாளைக்கே கூட கூடை கூடையாக வைரம், வைடூரியங்களை வாரிச் சென்று வீடு வீடாகச் சென்று கொடுத்தால் கூட தமிழ்

நாட்டிலே தனித்து நின்று உங்களால் வெற்றி பெற முடியாது என்பதை இந்த நேரத்திலே நான் ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் பேசுவது அழகாக இருந் தாலும், தனித்துக் காங்கிரஸ் இயக்கம் நிற்கத் தயாரா என்று கேட்கிறார்கள். நாங்கள் தனித்து நிற்கத் தயார். ஆனால் நீங்களும் எந்தவிதக் கட்சியையும் சேர்க்காமல் தனித் திராவிட முன்னேற்றக் கழகம் என்று நிற்கத் தயாரா என்பதை மட்டும் கேட்க நான் ஆசைப்படுகிறேன்.

திரு. இளம்வழுதி : அதாவது, தயாரா, தயார் இல்லையா என்பதை எங்களுடைய தலைவர் சொல்ல வேண்டிய பதில். அதனால் அடக்கமாகவே சொல்கிறேன். நீங்கள் எப்பொழுது அப்படி வருகின்ற நிலைமை வருமோ அப்பொழுது அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரி வித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஏதேதோ பேசுகிறார்கள். இங்கே ஆளுநர் உரைமீது பேசுவார்கள் என்று பார்த்தால் நம்முடைய மரியாதைக்குரிய உறுப்பினர் அவர்கள் கூட, பாராளுமன்றத்திலே உறுப்பினராக இருந்தவர், ஒரு செய்தியைச் சுட்டிக்காட்டி அதன் மீது குற்றச் சாட்டைச் சுமத்துகின்ற நேரத்திலே, முன் கூட்டியே சபாநாய கருடைய அனுமதியைப் பெற்று, அதன் மூலமாக அமைச்சர் களுக்கு விவரங்கள் கிடைத்த பிறகு அதை இங்கே சொன்னால் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.

(13-05 மணி)

அதை விட்டு விட்டு அவ்வப்போது நான் உங்களிடம் தரு கிறேன், உங்களிடம் தருகிறேன் என்று உட்கார்ந்து விட்டு பேசுவது சர்க்கஸ் வேடிக்கை வித்தை போல இருக்கிறது. தவறாக எடுத் துக் கொள்ளக் கூடாது. மரபுகள் கட்டிக் காக்கப்பட வேண்டும் என்பதில் உங்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ, அதே அக்கறை எங்களுக்கும் இருப்பதால் சொல்கிறேன். இப்படி பல் வேறு இடையூறுகள், இன்னல்கள் எத்தனை வந்தாலும் சொல் கிறேன், வட்டமிடும் கழுகுகள், வாய் பிளந்து நிற்கும் ஓநாய்கள், வளைந்து நிற்கும் மலை பாம்புகள் இவற்றுக்கிடையே கொண்ட லட்சியத்தை நிறைவேற்ற துணிந்து வீர நடை போடுகிற லட்சிய வீரன் போல எங்களுடைய இனமானத் தலைவர் கலைஞர் அவர்கள் இருக்கிறார். இந்த நாட்டு மக்கள் அவரிடம் தான் நிறைய எதிர்பார்க்கிறார்கள். இனிமேலும் அவரைத் தான் நம்புவார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர் கிறேன், வணக்கம்.

1990 சனவரி 22]

திருமதி பாப்பா உமாநாத் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சென்ற ஆளுநர் உரைக்கும், இந்த ஆளுநர் உரைக்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருக்கிறது. மத்தியிலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, போகி சென்று பொங்கல் மலர்ந்ததைப் போல, தேசிய முன்னணி ஆட்சி அமைந்திருக்கிறது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், இங்கே எவ்வளவு தான் பேசினாலும் கூட, நாட்டு மக்கள் காங்கிரஸ் கட்சிக்குப் படுதோல்வியை ஏற்படுத்தி, ஆட்சிப் பீடத்திலிருந்து இறக்கி இருக்கிறார்கள் என்பதும், புதிய ஆட்சியை அமர்த்தியிருக்கிறார்கள் என்பதும், இந்தக் காலத்தினுடைய சிறப்பான அம்சமாகும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

405 எம்.பி.-க்களைப் பெற்று, மிகப் பெரிய பெரும்பான்மை பலத்தைப் பெற்று, அரசு அமைத்த திரு. ராஜீவ் காந்தி அவர்கள் ஐந்தாண்டுகளில் செய்ய மறுத்து வந்த நல்ல காரியங்களில் தேசிய முன்னணி அரசு ஆரம்பித்தவுடனேயே பல காரியங்களை அறிவித்து இருப்பதும், பிரச்சினைகளை எடுத்திருப்பதையும் நம்முடைய கவர்னர் உரையில் எடுத்துரைத்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கதாகும்.

பொதுவாக ராஜீவ் காந்தி அவர்கள் அரசு, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்களைப் போலவே மாற்றுக்கட்சி அரசாங்கங்களை மதிக்காமல் மாறாக மாற்றான் தாய் பிள்ளையை நடத்தக் கூடிய முறையில் தான் நடத்திக் கொண்டு வந்தது. அதை எவ்வளவு மறுத்தாலும் உண்மை என்றும் உண்மை தான். குறிப்பாக தமிழகத்திற்கு கொடுக்கக் கூடிய அரிசி மற்ற பொருள்களைக் கொடுக்கதாது மட்டுமல்ல. மோசடி தேர்தல் நடத்தி, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் திரிபுரா என்று வடகிழக்கு மாநிலம் ஒன்று இருக்கிறது. அந்த மாநிலத்தில் தினசரி கொல்லப் படுகிறார்கள். பெண்கள் மானபங்கம் செய்யப்படுகிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இன்றைக்கும் பெரும்பான்மை இருந்தும் கூட வன்முறை மூலமாக, அநீதி மூலமாக பலரைக் கொன்று குவித்து தேர்தலை நடத்தி, டி.யூ.ஜே.எஸ். என்று சொல்லக்கூடிய பிரிவினைவாத சக்திகளோடு ஒரு கூட்டாட்சி நடத்தி கொண்டிருப்பது காங்கிரஸ் கட்சி. அந்த முறையில் திரிபுராவைப் போல மோசடி தேர்தல் நடத்தி புகழ் பெற்ற காங்கிரஸ் கட்சி, ராஜீவ் அரசு இன்றைக்கு தேர்தல் சீர்திருத்தங்களைப் பற்றி கவலைப்படவில்லை. தேர்தல் சீர்திருத்தங்கள் வந்து விட்டால் இந்த அளவிற்கு நாடு முழுவதும் வெற்றி பெற முடியாது என்பதை அவர்கள் அறிவார்கள். ஆனால் இன்றைக் இருக்கக் கூடிய தேசிய முன்னணி ஆட்சி அரசு........

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாப்பா உமாநாத் அவர்கள் பேசுகிற போது, ராஜீவ் காந்தி அவர்களின் சர்வாதிகாரத்தால் தான் தோற்றது என்று சொன்னார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஏன் தோற்றது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ கூட்டத்தில் கூடி பேசுகிற போது தி.மு.க.வை கடுமையாக விமர்சனம் பண்ணி, அதன் நடைமுறைகளை விமர்சனம் பண்ணி பேசினார்கள். அது குறித்து....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது குறித்து நேற்றைக்கு திரு. வீரையன் அவர்கள் பேசியிருக்கிறார்கள். எனவே, அது வேண்டாம். திருமதி பாப்பா உமாநாத் தொடர்ந்து பேசலாம்.

திருமதி பாப்பா உமாநாத் : இப்படி பேசும்போது அநாவசியமாக குறுக்கிடுவது நிச்சயமாக பேச்சை திசை திருப்புவதாக இருக்கும் என்று கூட நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்றைக்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசி இருக்கிறார்கள்.

திருமதி பாப்பா உமாநாத் : முழுமையாக காங்கிரசைத் தோற்கடிக்க வேண்டும். அதற்கு இசைவாக நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் எங்களுடைய தீர்மானம் சுட்டிக்காட்டுகிறதே தவிர வேறில்லை. எல்லாவற்றுக்கும் தலையாட்டி விட்டு ஆட்டம் போடுவது நட்பல்ல. தவறு செய்கிறபோது அதைச் சுட்டிக் காட்டுவது தான் உண்மையான நட்பிற்கு இலக்கணமாகும். அடுத்து மோசடி தேர்தல் என்று சொல்லும்போது தேர்தல் சீர்திருத்தங்களைப் பற்றி அவர்கள் பேசவில்லை.

(13-10 மணி)

ஆனால் தேசிய முன்னணி அரசு இந்தத் தேர்தல் சீர்திருத்தத்தைப் பற்றி பேசியதுமட்டுமல்ல, அனைத்துக் கட்சிகளையும் அழைத்து ஆலோசித்தது மட்டுமல்ல, அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த ஒரு குழுவையும் அமைத்து இருக்கிறது. உண்மையிலேயே நான் குறிப்பிட விரும்புகிறேன், பணம் மட்டும் தேர்தலிலே விளையாடாது என்று ஒரு தடை வரும் என்று சொன்னால் கட்டுப்படுத்துவோம் என்று சொன்னால், இன்றைக்கு ஆட்டம் போடக்கூடிய பல கட்சிகள், பாராளுமன்றத் தேர்தல், மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் எட்டிக்கூட பார்க்க முடியாது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன், மூட்டை மூட்டையாக பணத்தை வைத்துக் கொண்டு வாக்குகளை, காசுகளைக் கொடுத்து வாங்கக் கூடிய நிலைமை மட்டும்

1990 சனவரி 22] [திருமதி பாப்பா உமாநாத்]

மாற்றப்படும் என்று சொன்னால், எங்களைப் போன்ற உண்மையான கொள்கையும், சேவையும் இருக்கக்கூடியவர்களுக்கு ஒரு மதிப்பாவது ஏற்படும்.

அதே மாதிரி தமிழகத்தில் வெற்றி பெற்று விட்டோம் என்று சொல்கிறார்கள். ஆட்சியை ராஜினாமா செய்யவேண்டும் என்று சொன்னார்கள். எங்களுடைய துணைத் தலைவர் திரு. வீரையன் அவர்கள் தகுந்த பதிலை அதற்கு அளித்திருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரசும் சேர்ந்து 60 சதவீத வாக்குகள் பெற்று அவர்களுக்கு வெற்றியைத் தேடித் தந்து இருக்கலாம். ஆனால் ஒன்றை மட்டும் சொல்கிறேன். அந்த சக்தி வெல்லப்பட முடியாத ஒரு சக்தியல்ல. அதை வெல்ல முடியும் என்ற நம்பிக்கையில் தான் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறோம். எம். ஜி. ஆர். அவர்கள் இருந்தபோது, நகரமன்றம் மற்றும் பஞ்சாயத்துத் தேர்தல்களில் நீங்கள் தோல்வி காணவில்லையா ? யானைக்கும் அடி சறுக்கும் என்று சொல்வார்கள் அதுபோல் வெற்றி பெற்று விட்டோம் என்று கூறுகிறார்கள். நான் இன்றைக்குக் கேட்கிறேன், காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில், அது ஒரு பெரிய சக்தி அல்ல தமிழ்நாட்டில், ஏன் என்றால், மருங்காபுரியும், மதுரை கிழக்குத் தொகுதியிலும் டெபாசிட் போன கட்சிதான். ஆகவே அவர்கள் தனித்து நின்று வெற்றி பெற முடியாது. மக்கள் சம்பந்தப்பட்ட தவறான கொள்கையின் விளைவாகத்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரும் ஆதரவோடுதான் 26 சீட்டுகளை அவர்களுக்கு தாரை வார்த்திருக்கிறார்கள். உண்மையிலேயே இது தமிழகத்து மக்களுக்கு உகந்ததாக இல்லை என்பது என்னுடைய கருத்து.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவது, இங்கே இருக்கின்ற 26 காங்கிரஸ் உறுப்பினர்களும் தனியாக நின்று வெற்றி பெற்றவர்கள் என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : பாராளுமன்றத் தேர்தலைத் தான் நான் சொன்னேன். சட்ட மன்றத்திலே தனியாக நின்றது எனக்குத் தெரியும்.

அடுத்து நான் சொல்லவிரும்புவது, இந்த கவர்னர்கள் ராஜிநாமா பற்றி. ஐயோ, ஜனநாயகத்திற்கு ஆபத்து வந்துவிட்ட மாதிரி புலம்புகிறார்கள். நான் உண்மையிலே சொல்கிறேன். இந்த 18 கவர்னர்களிலே 14 பேர்கள் பக்கா காங்கிரஸ்காரர்கள், என்பது நமக்குத் தெரியும். மத்தியிலே அமைச்சராக இல்லை என்றால், ஒரு ஸ்டெப்னி மாதிரி மாநிலத்திலே அவர்களை கவர்னர் பதவியிலே வைப்பது வழக்கம். அதை நான் புதிதாகச் சொல்லவில்லை, வழக்கமானதுதான். இதைப் பற்றிச் சொன்னால், கோபித்துக் கொள்வதில் பிரயோஜனம் இல்லை. மத்திய

அமைச்சராக இல்லை என்றால், அவர்களை கவர்னர்களாகப் போடுவார்கள். கவர்னராக இல்லை என்றால், மத்திய அமைச்சராகப் போடுவார்கள் அல்லது மாநிலத்திற்கு ஒதுக்கிவிடுவார்கள், இதுதான் சென்ற கால ஆட்சியினுடைய நடைமுறை. ஒரு புது ஆட்சி வந்த பிறகு, கவர்னர்கள் ராஜிநாமா செய்யவெண்டும் என்று சொல்லப்பட்டது. மதிப்பிற்குரிய ராஜிவ் காந்தி அவர்கள் மறுத்துவிட்டதன் காரணமாக நம்முடைய ராஷ்டிரபதி மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டது. நான் உண்மையிலே கேட்க விரும்புகிறேன். கேரளத்திலே, ஆந்திரத்திலே, கர்நாடகத்திலே—இந்தியா பூராவும் நான் போகவில்லை—இந்த ஆளுநர்கள் என்ன செய்தார்கள். திரு. பொம்மை அரசாங்கம் ஒரு வாரம் அவகாசம் கேட்டார்கள், நான் என்னுடைய மெஜாரிட்டியை நிரூபிக்கிறேன் என்றார்கள். தந்தார்களா ? அவர்களை டிஸ்மிஸ் செய்தார்கள். ஆகவே கவர்னர்களாக இருக்கக்கூடியவர்கள் புதிய ஆட்சி வந்தபிறகு மாற்றப்படவேண்டும்.

மேற்கு வங்காளத்திலே இருக்கக்கூடிய ராஜேஸ்வரன் ஒரு உளவு இலாக்காவினுடைய தலைவர். ஆகவே இப்படிப்பட்டவர்கள் அவர்களை கவர்னர்களாக வைப்பது புது ஆட்சி வரும் போது, அதை நடத்துவதற்கு சிரமமாக இருக்கும். அது சரியாக இருக்காது, என்பதால்தான் மாற்றப்பட வேண்டும் என்றும், ஒரு முறையைக் கொண்டுவர வேண்டும் என்றும் சொல்கிறோம். மாநில அரசுகளை, அது எந்த அரசாக இருந்தாலும் கலந்து கொண்டு கவர்னர்களை நியமிக்க வேண்டும் என்று எங்களுடைய கட்சியின் சார்பிலே கருத்து கூறியிருக்கிறோம்.

அடுத்து நான் முக்கியமான பிரச்சினை என்று சொல்லும் போது, இந்தக் குடி தண்ணீர் பிரச்சினைதான். நாடு சுதந்திரம் அடைந்து 40 ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்னும் மக்களுக்கு ஜீவாதாரமாக இருக்கக்கூடிய இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். நகர்ப்புறங்களிலே இரவு முழுவதும் கண்விழித்துத்தான், இரவு 1 மணிக்கு, 2 மணிக்கு தண்ணீர் பிடிக்கிறார்கள். ஆனால் கிராமப்புரங்களில் குடி நீருக்காக வெகுதூரம் நடக்கிறார்கள். குடிநீர்ப் பிரச்சினைக்கு தலையாய முக்கியத்துவம் தருவதாக ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டு இருப்பது நல்ல அம்சம் தான். ஆனால் அந்த உணர்வோடு வேலைகள் நடக்கின்றனவா, வேலைகள் முடுக்கிவிடப்படுகின்றனவா, கவலையோடு அதில் அதிகாரிகள் ஈடுபடுகிறார்களா, என்பது கேள்விக்குறி.

அதுமட்டுமல்ல, போர்-வெல் போடுகிறார்கள். போர்-வெல் குழாய்கள் இத்தனை போட்டோம் என்று சொல்வது குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. நல்ல தண்ணீர் கொடுக்கிறோமா, குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கொடுக்கப்படுகிறதா என்பதைப் பார்க்கவேண்டும். போர்-வெல்லிலே உப்புத்

1990 சனவரி 22] [திருமதி பாப்பா உமாநாத்

தண்ணீர் வருகிறது. என்னுடைய தொகுதியிலே பல பகுதிகளிலே உப்புத் தண்ணீர்தான். குடிக்கவே முடியாது. குடி தண்ணீர் கொடுக்கிறோம் என்றால் நல்ல தண்ணீர் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, இதுபோன்று போர்-வெல் தோண்டும்போது உப்புத் தண்ணீராக இருக்குமானால் பரிசோதனை செய்யப்பட்டு, அதை மாற்றியமைக்கின்ற திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. ராமநாதபுரத்தில் 2 இடங்களில் உப்புத் தண்ணீர் வந்தபோது, அதை மாற்றியமைப்பதற்காக திட்டங்கள் தீட்டப்பட்டு, இன்னும் ஒரு வாரத்தில் அவைகள் திறக்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே உப்புத் தண்ணீர் வருகிறது என்று அவர்கள் அறிவார்களானால், அதைப் பரிசீலனை செய்து, அவைகளை மாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(13-15 மணி)

திருமதி பாப்பா உமாநாத்: நல்லது, என்னுடைய தொகுதியிலே இருக்கிறது ஒன்று. அதுமட்டுமல்ல, 1000 குடும்பங்கள் இருந்தால் ஒரு போர்-வெல் என்ற அளவிற்கு அங்கே குடி தண்ணீர் கொடுக்கும்படியான கிராமங்கள் இருக்கின்றன. நான் வேண்டுமானால் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் கூறத் தயாராக இருக்கிறேன். அந்த முறையில் முயற்சிகள் எடுத்து, விட்டு விடுகிறார்கள். குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளைப் பற்றி நாம் சொல்லவேண்டாம். அவர்கள் மிகவும் மெதுவாகத்தான் போவார்கள். நாம் அரசைத் தான் தேர்ந்தெடுத்தோமே தவிர, அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கிற வாய்ப்பு நமக்குக் கிடையாது. ஆகவே அந்த முறையில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்பது எனக்குப் புரிகிறது. ஆனாலும் குடிநீர் விஷயத்தில் நாம் வேகமாகச் செய்ய வேண்டும்.

காவிரி ஓடுகின்ற திருச்சிராப்பள்ளியிலே உண்மையிலேயே பொன்மலை நகராட்சிச் சுற்றுப்புற பேரூராட்சிகளைக் கொண்டிருக்கக் கூடிய பொன்மலை குடிநீர்த் திட்டம் என்பது பல வருடங்களாக அப்படியே இருக்கிறது. ஆனால் சென்ற கால ஆட்சியிலே என்ன பண்ணியிருக்கிறார்கள் என்று சொன்னால், ஏழு இடங்களில் பெரிய பெரிய ' வாட்டர் டாங்கி ' கட்டிவிட்டார்கள். ஆனால் பைப்லைன் போடவில்லை. மெயினாக ஆற்றிலே கிணறு வெட்டவில்லை. ஏனென்றால் எல்லோரும் தண்ணீர் வேண்டுமென்றால் அந்த இடத்தைப் பார்த்துக் கொண்டிருங்கள் என்று சொல்லிவிட்டு, போய்விடுவார்களோ என்னவோ தெரியாது. ஆனால் இப்போது நான் வந்த பிறகு, ஏறத்தாழ ஒரு வருடமாக சில முயற்சிகள் எடுத்து, சில அசைவு இருக்கிறது என்று நான் சொல்வேனே தவிர, இன்னும் அதற்கு வேகம்

இல்லை. இடைக்காலமாக ஒரு குடிநீர்த் திட்டம் கொண்டு வந்தாலும், ரயில்வே நிர்வாகம் அதற்கு அனுமதி வழங்காததால் சில பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினையிலே அமைச்சரவர்கள் சுறுசுறுப்பாக கவனிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து காவிரி தாயின் கருணை கிடைக்காமல் என்னுடைய தொகுதியிலே உள்ள பெண்கள்படும் தொல்லைகள் ஏராளம். அதுமட்டுமல்ல, திருப்பூர், கோயம்புத்தூரிலே இப்படி பல தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய தண்ணீர் திட்டங்களைக் குறிப்பிட்ட காலத்தில் செய்து முடிக்க வேண்டுமென்று ஒரு காலக்கெடு நிர்ண யிப்பது அவசியம் என்று நான் நினைக்கிறேன். அத்தோடு நம் முடைய சென்னை நகரத் தண்ணீருக்கு வரும்போது பூண்டி நீர்த் தேக்கத் திட்டம் என்பது சத்தியமூர்த்தி அவர்கள் இருந்தபோது கொண்டுவந்த கடைசியான திட்டம் என்று நினைக்கிறேன். அன்றைக்கு இருந்தது 7 இலட்சம் பேர். ஆனால் இன்றைக்கு 45 இலட்சம் பேர் இருக்கிறார்கள். வருகின்ற கோடையை நினைக்கின்றபோது நாமும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருப் பதனாலே சில சமயங்களில் பெரும்பாலும் உப்புத் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே சட்டமன்ற விடுதி யில் தண்ணீரைப் பொறுத்தவரையில் ஒழுங்காகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நேற்று நம்முடைய மதிப்பிற்குரிய சென்னாரெட்டி, ஆந்திர முதலமைச்சர் அவர்கள் இந்த தெலுங்கு கங்கைத் திட்டம் நிறைவேறுமா என்ற ஐயப் பாட்டை ஏற்படுத்தியிருப்பதை இந்து பத்திரிகையில் பார்த்தேன். உண்மையிலே அவர்கள் குறித்துக் கொள்வார்கள், கவனிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். தெலுங்கு கங்கைத் திட்டம் வந் தால் தான் நம்முடைய சென்னை நகரம் உண்மையிலேயே செழிப்பு அடையும் தமிழகத்திற்கு ஒருங்கிணைந்த ஒரு குடிநீர் வடிகால் திட்டம் வேண்டும்.

அதுமட்டுமல்ல, நம்முடைய தமிழ்நாட்டில் 36,000 ஏரிகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஏரிகள் நன்கு பராமரிக் கப்படாமல் இருக்கின்றன. இப்போது கொஞ்சம் பண்ணியிருக் கிறார்கள். பெரும்பாலான ஏரிகளுக்குக் கரைகள் உடைந்திருக் கின்றன. இப்போது தெற்கு மாவட்டங்களில் வெள்ளம் வந்து எல்லாவற்றையும் அடித்துக் கொண்டு போய்விட்டது என்று உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக்காட்டினார்கள். நாம் எல்லோரும் கவலைப்பட்டோம். உண்மையிலேயே ஏரி களின் கரைகளைக் கட்டி, ஏரிகளில் மழைத் தண்ணீர் தேங்கக் கூடிய அளவிற்கு நிலைமைகள் இருந்தால், அந்த அளவிற்கு வெள்ள நிலை ஏற்பட்டிருக்காது என்பது என்னுடைய கருத்து (குறுக்கீடு) இப்போது தான் ஆரம்பிக்கிறேன்.

1990 சனவரி 22] [திருமதி பாப்பா உமாநாத்]

இன்னொரு கவலை தரக்கூடிய விஷயம், கெமிக்கல் தொழிற் சாலைகளைப் பற்றியது. தோல் பதனிடும் தொழிற் சாலைகளி லிருந்து வெளியாகும் கழிவு நீரால் இன்றைக்கு தண்ணீர் எல்லாம் விஷமாக்கப்படுகிறது. ஒரு முறை நம்முடைய மதிப்பிற்குரிய திரு. துரைமுருகன் அவர்கள்கூட சட்டமன்றத்திலே கூறினார்கள் கிணற்றுத் தண்ணீர் எல்லாம் வீணாகிறது என்று. அதே மாதிரி திருப்பூர் சாய பட்டறைத் தொழிற்சாலையிலிருந்து வெளி யாகும் கழிவு நீரால் இன்னும் 10 ஆண்டுகளில் திருப்பூர் நகரமே காலி பண்ண வேண்டிய நிலைமையில் இருக்கிறது. ஆகவே இதையெல்லாம் சீரியசாக நாம் கவனிக்கவேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அதேமாதிரி திருச்சியிலே எரி சாராய தொழிற்சாலை ஒன் றைப் பற்றி ஏற்கெனவே பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அரசு சுத்தம் செய்யாமல் கழிவு நீரை விடக் கூடாது என்பதில் கண்டிப்பாகவும், கட்டாயமாகவும் இருக்க வேண்டும். மக்கள் வாழ்வதுதான் முக்கியமே தவிர, ஒரு சில தனிப்பட்ட நபர்களுடைய லாபத்தை நாம் முக்கியமாகக் கருதக் கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நான் ஒன்றைப் பற்றிச் சொல்ல விரும்புவது, கழிப்பறையைப் பற்றியது. பெண்களுக்கு மிகவும் முக்கியமாக வேண்டியது. இயற்கையில் நீதி புறக்கணிக்கப்பட்டு வருகிறது இந்த நாட்டிலே என்று சில பேர் நினைக்கவேண்டாம். 10 வரு டங்களாக நாங்கள் கழிப்பறை வேண்டும் என்று கேட்டுக் கொண் டிருக்கின்றோம். கக்கூஸ் வேண்டும். பொதுக் கழிப்பறை வேண்டும், அது கிடையாது. குறிப்பாக இதை எத்தனை வருடம் தான் சொல்வது என்று புரியவில்லை. அதுமட்டுமல்ல, பெரிய கிராமங்களில், பேரூராட்சிகளில், நகராட்சிகளில் பொதுக் கழிப் பறைகள் இல்லை. எனது தொகுதியில் துவாக்குடி, திருவெரம் பூர், அரியமங்கலம், மேலப்பன்செந்தூர் ஆகிய பேரூராட்சிகளில் பொதுக் கழிப்பறைகளே கிடையாது. இரவு வரை தங்கி போனால் ஒரு சிறிய ஒதுக்குப்புறமாக இடம் இருந்தது. அதையும் பிளாட் போட்டு விற்றுவிட்டார்கள். அங்கு மைதானமும் கிடை யாது. ஆகவே இந்த முறையில் அங்கே கஷ்டம் இருக்கிறது. எனவே அரசு இந்தக் கழிப்பறைகளை ஒரு ஆண்டிற்குள்ளாக எல்லா பகுதிகளிலேயும் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நிதி வசதியில்லை, என்றாலும், கவனித்து கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(13—20 மணி)

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மார்க்கிஸ்ட் கட்சியினுடைய உறுப் பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, இந்த அரசாங்கம் ஏற் கெனவே கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு, மார்ச் 31-ந்

தேதிக்குள், சென்னை மாநகராட்சியில் இருக்கிற கழிப்பறைகள் அனைத்திலும் தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டுமென்றும், இதர நகராட்சிகளில் எங்கெங்கு கழிவறைகள் கட்ட வேண்டுமோ அதைக் கணக்கு எடுத்து விரைவில் கட்டுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

திருமதி பாப்பா உமாநாத்: சென்னை நகரம் மட்டுமல்ல, எல்லாப் பகுதிகளுக்கும் வேண்டும். கக்கூஸ் கட்டி விட்டு தண்ணீரும் பக்கத்தில் இருக்கும்படி பார்க்கவேண்டும்.

பொது விநியோக முறை என்பதே விலைவாசியைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு முறைதான். ஆனால் நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்று செய்யக் கூடிய சில நடவடிக்கைகள் கூட, கெட்ட பெயரையே ஏற்படுத்தியிருப்பது என்பது அனுபவம். மகன் செத்தாலும் பரவாயில்லை, மருமகள் தாலியறுத்தால் போதும் என்ற எண்ணத்தோடு, மக்களை திசை திருப்புகிற சில கட்சிகள் நாட்டில் இருக்கின்றன. (குறுக்கீடு) யார் என்று சொல்ல மாட்டேன். அதுமட்டுமல்ல, 1000 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கும் இலவச அரிசி என்பதைத் திட்டமிட்டு அமலாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மரியாதைக்குரிய திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் மாமியார்த்தனம் சில கட்சிகளில் இருப்பதைச் சொன்னார்கள். அது எந்தக் கட்சி என்று சொன்னால் அதை நாங்களும் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாமியார்கள் இருக்கிற கட்சிதான். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் பக்கத்திலேயே இருக்கிறார்கள், ரகசியமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே. (சிரிப்பு)

திருமதி பாப்பா உமாநாத்: பெயரை நான் சொல்ல மாட்டேன். தனியாகக் கேட்டால் சொல்கிறேன். ஜனங்களுக்குப் பொருட்கள் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, இந்தக் கட்சி கெட்டுப் போக வேண்டும், நாசமாகப் போகவேண்டுமென்று நினைக்கக் கூடியவர்கள் இருப்பதைக் காட்டத்தான் இந்த உதாரணத்தைச் சொன்னேன். அதைத்தான் நீங்கள் கவனிக்க வேண்டும். அதுமட்டுமல்ல, 1000 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கும் இலவச அரிசி திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். பொது விநியோக முறையை ஒழுங்குப்படுத்தவேண்டும். எந்தக் கட்சியையும் புறக்கணிக்காமல், அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களையும் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்றை அமைக்க வேண்டும். வெளிமார்க்கெட்டில் அரிசி விலையை கண்ட்ரோல் செய்ய

வேண்டும். அதுமட்டுமல்ல, விலை குறைக்கப்பட்ட அரிசியை கேரளாவில் கொடுக்கிறார்கள், ஆந்திராவில் கொடுக்கிறார்கள். நாமும் அதைப் பரிசீலிக்க வேண்டும். குடும்ப அட்டைகள் புதிதாகத் தருவோம் என்று அறிவித்தீர்கள். பிறகு இல்லையென்று சொன்னீர்கள். புதுசா கொடுக்கிறீர்களோ, பழசையே வைத்துக் கொள்ளச் சொல்கிறீர்களோ, ரேஷன் கார்டு இல்லாதவர்களுக்கு அதைக் கொடுக்கவேண்டும். உணவுப் பொருட்கள் அவர்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். 500 குடும்பங்களுக்கு ஒரு நியாய விலைக் கடை என்று இருந்ததை, இப்போது 800 குடும்பங்களுக்கு ஒரு கடை என்று அறிவித்திருப்பதாகத் தெரிகிறது. நான் கூட ஒரு வருடமாக 12 கடைகளுக்காக திரிந்துகொண்டிருக்கிறேன். இன்னும் கிடைக்கவில்லை. அது கொடுக்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் மதுவிலக்கு சம்பந்தமாக ஒரு வரலாறே உண்டு. பொதுவாக சட்டத்தின் மூலம் அதைத் தீர்க்கமுடியாது என்பது அனுபவம். எம்.ஜி.ஆர். இருந்தபோது, பல்லாயிரக்கணக்கான பேர்களை சிறையில் அடைத்தார்களே தவிர, குற்றங்களைக் குறைக்க முடியவில்லை. நாமும் பார்த்தோம். ஆகவே கள்ளச்சாராய சாம்ராஜ்யம் அன்று முதல் இன்று வரை காவல் துறையின் அரவணைப்புடன் நடந்துகொண்டுதான் இருக்கிறது. அதனால் அதிகமாகப் பாதிக்கப்படுவது பெண்கள்தான். நான் ஆண்களைச் சொல்லவில்லை. ஆண்களால் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள், கண்ணீர் விடுகிறார்கள். கடுமையாகத் தாக்கப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆண்களால் பெண்கள் பாதிக்கப்படுவது காலங்காலமாக நடக்கிறது.

திருமதி பாப்பா உமாநாத் : நல்ல நேரத்தில் எடுத்துச் சொன்னதற்காகப் பேரவைத் தலைவருக்கு நன்றி. அதில் என்னவென்றால், சொந்த புருஷன் அடிப்பது மட்டுமல்ல, ஊரில் குடித்துவிட்டுப் போகிறவன் கூட பெண்களைப் பார்த்தால் தகராறு செய்கிறான், ஆகவே அதை முழுமையாகக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வதுடன் காவல் துறையை முற்றாக அதிலிருந்து விலக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல, சாலை வசதி என்று சொன்னால் (குறுக்கீடு) இடையில் தலையிட்டுக் கொண்டிருந்தால் டைம் போய் விடும்.

(13-25 மணி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருந்தாலும் பசி வயிற்றைக் கிள்ளுகிறது என்று சொல்கிறார்கள். இன்னும் இரண்டு பேர் பேச வேண்டும்.

திருமதி பாப்பா உமாநாத் : முடித்து கொள்கிறேன். சாலை வசதி என்பது பெரிய விவகாரமாக இருக்கிறது. ஒதுக்குகிற பணம் போதவில்லை என்று சொல்கிறார்கள். நவல்பட்டு சாலை ஐந்து வருடமாக சேற்றில் நிற்கிறது. அதைச் சொன்னால், பேரூராட்சிக்கும், ஹைவேஸ் துறைக்கும் சக்களத்தி சண்டை நடக்கிறது. சக்களத்தி சண்டை என்று சொன்னால் வேறு விதமாக நினைக்காதீர்கள். நீ கட்டுகிறாயா, நான் கட்ட வேண்டுமா என்று தகராறு அங்கே நடக்கிறது. அதனால் ஒரு வேலையும் அங்கே நடக்கவில்லை. பணம் இல்லையென்று சொல்லாமல் அதற்கான பணத்தை சரியாக ஒதுக்கி நடவடிக்கை எடுக்கவேண்டும். அதிகாரிகளிடம் கேட்டால் அழுகிறார்கள். நீங்கள் வந்து கேட்கிறபோது உங்களுக்காகச் செய்வோம், அப்படியானால் இன்னொரு இடம் சும்மா கிடக்கும் என்று சொல்கிறார்கள். அதைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுடுகாடு பல இடங்களில் இல்லை. செத்துப் பிணத்தை உப்பு கண்டம் போட முடியாது. ஒரு மனிதனின் கடைசி நேரத்தில் மரியாதையோடு அடக்கம் செய்யவேண்டும். பல சுடுகாடுகளில் ஷெட் இல்லை, திறந்த வெளியில் மாடுகள், பன்றிகள் மேய்கின்றன. விளக்கு வசதி அங்கே கிடையாது. என்னுடைய தொகுதியில் 12 சுடுகாடுகள் வேண்டுமென்று ரொம்ப நாளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடையும் பன்னிரண்டு, சுடுகாடும் பன்னிரண்டா? (சிரிப்பு)

திருமதி பாப்பா உமாநாத் : ஆகவே இந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டும். நடவடிக்கை எடுக்கவேண்டும். மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் கூட இந்த விஷயத்தைப் பேசியிருக்கிறேன். அந்த முறையில் சுடுகாட்டு விஷயத்தை கவனிக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாம் இப்போது ஒரு முடிவான கட்டத்திற்கு வந்திருக்கிறோம். முடித்துவிடலாமா?

திருமதி பாப்பா உமாநாத் : அடுத்ததாக, மகளிர் மேம்பாட்டுக் கழகம் என்று முந்தைய ஆட்சியில் அமைக்கப்பட்டது. அதில் பணியாற்றுபவர்கள் அடிப்படை ஊதியத்திற்காக 40—45 நாட்களாக ஸ்டிரைக் செய்கிறார்கள். அவர்களுக்கு நியாயம் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அடுத்ததாக, ஆதிதிராவிடர் பள்ளிகள். இந்தப் பள்ளி கட்டக்கூடாது என்று ஸ்டே கொடுத்திருக்கிறார்கள். இப்போதெல்லாம் எதற்குத்தான் ஸ்டே கொடுப்பது என்ற நிலையே இல்லை. இது குறித்து ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சருடன் சேர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தாலும் அந்த ஊரில் ஆதிதிராவிடர் பெண்கள் பள்ளி கட்ட

1990 சனவரி 22] (திருமதி பாப்பா உமாநாத்)

முடியாமல் இருக்கிறது. இடம் ஒதுக்கி ஒரு வருடம் ஆகிறது. அதற்கு முன்பே ஐந்தாறு வருடமாக ஸ்டே இருக்கிறது. ஒரு ஸ்டே எத்தனை வருடம் இருக்கமுடியும்? 10 வருடம் கூட இருக்கலாமா? சட்ட அமைச்சர் இல்லை. அவராவது தலையிடவேண்டும். உண்மையிலேயே பள்ளி கட்டவேண்டு மென்றிருந்தால் ஸ்டேயை உடைத்துவிடலாம். ஸ்டேயை உடைப்பதில் அரசு கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெண்களுக்கு பரம்பரைச் சொத்தில் பங்கு உண்டு என்ற சட்டத்திற்கு ராஷ்டிரபதி அனுமதி கொடுத்திருக்கிறார். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, நில உச்சவரம்பு சட்டத்தில் பல முறைகேடுகள் இருக்கின்றன என்று சென்ற சட்டமன்றத் தேர்தலின்போது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கூட சொல்லி, பினாமி நிலங்களைக் கைப்பற்றுவோம் என்று சொன்னார்கள். ஒரு வருடம் ஆச்சு, சீக்கிரம் கைப்பற்றி அவைகளை அரசு ஏற்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புத்தனாம்பட்டி கலைக் கல்லூரியை அரசு ஏற்க வேண்டு மென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறேன். அது அவசியம் தேவை என்பதை வலியுறுத்தி, சிறு விவசாயிகள் கடன் தள்ளுபடி விஷயத்தை அரசு சீரியசாகக் கவனிக்கவேண்டுமென்று கோரி, இந்த அளவுக்கு என்னைப் பேச அனுமதித்தற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசுகிற வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே நம்முடைய முதல்வர் அவர்கள் இல்லாத காரணத்தால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான பிரச்சினைகளை கடைசியில் வைத்துக் கொண்டு, முதலில் மற்ற பிரச்சினைகளைப் பேச விரும்புகிறேன். விவசாயிகள் பிரச்சினையில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்படி வந்தாலும் சுருக்கமாக வரவேண்டும். 10 மணித்துளிக்குள் பேச வேண்டும்.

திரு. ஆர். சிங்காரம் : மற்றவர்களுக்கு 30 நிமிடம் தந்தீர்கள். எனக்கு 25 நிமிடங்களாவது வேண்டும். விவசாயிகள் பிரச்சினையில் தமிழக அரசு அலட்சியப்படுத்துகிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஏனென்றால், தமிழகத்தில் இருக்கிற அத்தனைத் தரப்பு மக்களையும் திருப்திப் படுத்துகிற அறிவிப்புகளை இந்த அரசு செய்கிறது. ஆனால் விவசாயிகளுக்கு மட்டும் இந்த அரசு ஒரு நல்ல திட்டத்தையும் அறிவிக்கவில்லை.

கேட்டால் 30 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம், எம்.ஜி.ஆர். கொடுத்த 70 கோடியையும் அட்ஜஸ்ட் செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அது விவசாயிகளைப் பொறுத்த வரையில் திருப்தியான நடவடிக்கை அல்ல. அவர்கள் இந்த நாட்டின் முதுகெலும்பு ஆக இருக்கிறார்கள். விவசாயிகள் தான் எல்லா மட்டத்தில் அரசாங்கத்தின் நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்த உறுதுணையாக இருக்கிறார்கள். உணவு தானியங்களைக் கொடுக்கிற முதுகெலும்பாக செயல் படுகிறார்கள். ஆகவேதான் விவசாயிகள் கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது ஏற்பட்டு இருக்கிற தேசிய முன்னணி அரசு கூட 10 ஆயிரம் ரூபாய்க்கு.........

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் இந்த அவையில் பேசுகிறபோது, கடன் தள்ளுபடி செய்ததில், 36 கோடி ரூபாய் தள்ளுபடி செய்ததும், ஏற்கெனவே இருந்த அரசு தள்ளுபடி செய்ததும் சேர்ந்து 106 கோடி ரூபாய் மொத்தம் தள்ளுபடி செய்தபோது, நபார்ட் வங்கி என்ன நமக்கு அறிவுரை வழங்கியது என்றும், இதுவரை எவ்வளவு தகராறு இருக்கிறது என்பதையும் அப்போதிருந்த அமைச்சர் தெரிவித்து, அதற்கு மத்திய அரசு தலையிட்டு, ரிசர்வ் வங்கி மூலம் தீர்த்துவையுங்கள் என்று கேட்டோமே, அப்போதிருந்த மத்திய ஆட்சியினர் அவர்களின் கடைசி பதவிக்காலம் வரையில் ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா? ஏதாவது நமது கருத்துக்கு ஆதரவு தந்தார்களா? உங்கள் கட்சிதான் நடவடிக்கை எடுத்ததா? ஆதரவு தெரிவித்ததா? என்பதைத் தயவுசெய்து தெரிவிக்க வேண்டும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நீங்கள் முறையாக அன்றைய மத்திய அரசிடம் சொல்லி நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் எனது குற்றச்சாட்டாகும். தற்போது உங்களுக்கு ஏற்றாற் போல, மத்தியில் தேசிய முன்னணி அரசு வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : நடவடிக்கைகள் குறித்து பலமுறை எழுதப்பட்டது. சட்டமன்றக் கூட்டங்கள் நடைபெறுகிறபோதும் இங்கேயும் சொல்லப்பட்டது. நீங்களும் அதைப்பற்றி விரிவாகப் பேசியிருக்கிறீர்கள். விவசாயிகள் கடன் பளு என்பது பொதுவான பிரச்சினை. அதற்காக நீங்களோ உங்கள் கட்சி சார்பாகவோ மத்திய அரசில் உங்கள் கட்சி ஆட்சியில் இருந்தபோது, முன்மாதிரி நடவடிக்கை ஏதாவது எடுத்தீர்களா? என்பதுதான் எனது கேள்வி.

1990 சனவரி 22]

(13-30 மணி)

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று திரு. சொக்கருடைய விவாதம் வருகிறபோது முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர் என்னிடத்திலே தொலைபேசியிலே சொன்னாரா? புகார் கொடுத்தாரா, முன்பே என்னிடத்தில் சொன்னாரா? என்று கேட்டார்கள். அது போல மத்திய அரசிலே கோருகின்ற நீங்கள் சம்பந்தப்பட்ட தகவல் கோர்வையோடு தக்க ஆதாரத்தோடு சம்பந்தப்பட்ட அமைச்சரையும் பிரதம அமைச்சரையும் பார்த்து பேசி அதற்கான முடிவை செய்ய வேண்டும் என்று சொல்கிறேனே தவிர நான் அமைச்சர் அல்ல. நான் அமைச்சராக இருந்திருந்தால் இந்தத் தமிழகத்திலே இருக்கிற அத்தனை விவசாயிகளுக்கும், எல்லா விவசாயிகளுக்கும் சிறிய விவசாயிகள் பெரிய விவசாயிகள் என்ற பேதம் இல்லாமல் அனைவருக்குமே கடன் தள்ளுபடி செய்திருப்பேன். (சிரிப்பு) (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டாம் உட்காருங்கள் அவர் பேசட்டும், திரு. சிங்காரம் பேசுங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : அந்த அளவுக்கு ஒரு வாய்ப்பு பின்னால் வரும் என்று கருதுகிறேன். பரவாயில்லை. (சிரிப்பு) இருந்தாலும் இந்த தமிழக அரசு விவசாயிகள் மத்தியிலே ஒரு நல்ல பெயர் வாங்க வேண்டுமென்று சொன்னால், விவசாயிகளுடைய துயர் துடைக்கப்பட வேண்டுமென்று சொன்னால் தயவுசெய்து மத்திய அரசு அறிவித்தபடி தேசிய முன்னணி அரசு அறிவித்தபடி 10 ஆயிரத்திற்கு கீழே உள்ள கடன்கள் எல்லாம் தள்ளுபடி செய்யப்படும் என்று சொன்னார்கள். அந்த தள்ளுபடியை செய்ய வேண்டும். இல்லையேல் நீங்கள் ஒரு தனி ஸ்டேண்ட் எடுத்து தள்ளுபடி செய்வதற்கான முயற்சியை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் ஒரிஸ்ஸா, பீகார், உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் எல்லாம் தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது— 12 மாநிலங்களில். அது போல் தமிழக அரசும் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் விவசாயிகள் மத்தியிலே இருக்கிற குறைகளை உங்கள் முன்னாலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எந்த ஒரு குறையாக இருந்தாலும் சுட்டிக் காட்டினால் திருத்திக் கொள்கிற அளவிலே செய்கின்றேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையினால்தான் நான் இவைகளைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எனக்கு பதில் சொல்வதனால் எந்த பலனும் கிடையாது. விவசாயிகளை திருப்திபடுத்த வேண்டுமென்று நீங்கள் கருதினால் விவசாயிகளுக்கு ஏதாவது செய்தாக

வேண்டும். 30 கோடி, 30 கோடி, 30 கோடி என்று ஓராண்டு காலமாகச் சொல்லிக் கொண்டேயிருக்கிறீர்கள். அதில் பிரயோஜனமே இல்லை.....

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, செய்தாக வேண்டும், செய்தாக வேண்டும், செய்தாக வேண்டும் என்று சொல்வதிலே மட்டும் பிரச்சினை தீருமா?

திரு. ஆர். சிங்காரம் : ஆளுகின்றவர்கள் நீங்கள், உங்களிடத்திலே சுட்டிக் காட்டவேண்டியது என்னுடைய பொறுப்பாகும் என்ற முறையில் நாங்கள் சுட்டிக் காட்டுகிறோம். சம்பந்தப்பட்ட துறைகளோடு இணைந்து விவரங்களைச் சேகரித்து என்ன செய்ய வேண்டுமோ செய்யுங்கள். போராட்டம் செய்ய வேண்டுமா செய்யுங்கள் மாண்புமிகு திரு. கோ. சி. மணி அவர்கள் தலைவராக இருக்கட்டும், நான் வருகிறேன் ஜெயிலுக்கு. விவசாயிகளுக்காக தமிழக அரசு எந்த ஒரு தீர்வையும் செய்யவில்லை என்பதுதான் என்னுடைய பகிரங்க குற்றச்சாட்டாகும். ஆகவே தயவு செய்து விவசாயிகளுடைய குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். இதை தமிழகத்தில் இருக்கிற எல்லாக் கட்சிகளும் விரும்புகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் கூட இரகசியமாக இதனை விரும்பும். தி.மு.க. வில் மட்டும் என்ன விவசாயிகள் இல்லையா. எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்ந்துதான் இதைச் சொல்ல நினைக்கிறோம். தனிப்பட்ட சிங்காரம் மட்டும் நினைக்கவில்லை. தனிப்பட்ட காங்கிரஸ் கட்சி மட்டும் நினைக்கவில்லை. விவசாயிகள் என்பது எல்லாத் தரப்பிலேயும் இருக்கிறார்கள். அவர்களுக்கு எதையும் செய்யவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. தயவு செய்து இதைக் கவனிக்க வேண்டுகிறோம். கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டுகிறோம்.

அதை அடுத்து மீனவர்களுடைய பிரச்சினை. நீண்ட காலமாக கடலிலே மீனவர்கள் தொழில் செய்கிறபோது இறந்து விடுகிறார்கள். அந்த இறப்பிலே என்ன இரகசியம் இருக்கிறது என்று பார்த்தால், சின்ன படகு, 3 ஆயிரம் 4 ஆயிரம் பெறும் ஒரு சின்ன படகை எடுத்துக் கொண்டு செல்கிறார்கள். காரங்குடா என்ற கிராமம். அந்த காரங்குடா கிராமத்திலே 5 பேர் இதுவரையில் செத்து விட்டார்கள். முதலிலே இராஜமாணிக்கம், பிறகு இராமலிங்கம், அதற்குப் பிறகு, ராமு, அதற்கு அடுத்து மாரிமுத்து, இப்போது மாரிமுத்து, பாலு. இப்படி தொடர்ந்து செத்துக் கொண்டிருக்கிறார்கள். என்ன காரணம் என்று கேட்டால், அந்த சின்ன மீனவர் படகு விரைவாக கவிழ்ந்து போய் விடுகிறது. அத்தோடு கவிழ்ந்தவுடன் படகு கீழே போய் விடுகிறது. ஆனால் 20 ஆயிரம் ரூபாய்

1990 சனவரி 22] [திரு. ஆர். சிங்காரம்]

பெறக்கூடிய படகு கவிழாது, கவிழ்ந்தாலும் மேலாக நிற்கும், அதைப்பிடித்துக் கொண்டு வந்து விடலாம். ஆக, அப்படி ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அந்த சிறிய படகுகள் 3 ஆயிரம் ரூபாய் பெறக்கூடிய படகுகள் 57 இருக்கின்றன. சாதாரண ஏழைகள் வைத்திருக்கிறார்கள். அந்த மீனவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால் பெரிய படகுகளை வாங்க வேண்டும். அதற்கு 20 ஆயிரம் ரூபாய் பணம் கொடுக்க வேண்டும். இப்போது 15 ஆயிரம் ரூபாய் பணம் கடன் கொடுக்கிறார்கள். அதிலே 3 ஆயிரம் மானியம் ஆகிறது. ஆனால் நான் சொல்வது 20 ஆயிரம் கொடுக்கவேண்டும். அதிலே 10 ஆயிரம் அல்லது 5 ஆயிரம் மானியம் கொடுக்க வேண்டும். மீதியை கடனாகக் கொடுக்க வேண்டும். அப்படி வாங்கிக் கொடுக்க வேண்டும். அத்தோடு, 'லைப் ஜாக்கெட்' என்று ஒன்று இருக்கிறது. அதை ஒவ்வொரு படகிலேயும் உள்ள ஒவ்வொரு மீனவர்களுக்கும் கொடுத்தால் படகு கவிழ்கிறபோது அதைப் பிடித்துக்கொண்டு நீந்தி கரையேறிவிடலாம். இந்தப் பிரச்சினை சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையில் இருக்கிறது. அதையும் தயவுசெய்து கவனித்து நீங்கள் செய்யவேண்டும்.

அது மட்டும் அல்ல. போன 1989-90 ஆம் நிதி ஆண்டில் கட்டு மரத்தைப் பொறுத்தவரையில் 600 என்ஜின்கள் மானிய விலைக்கு கொடுப்பதாக அறிவித்தார்கள். இதுவரையில் கொடுக்கவில்லை. கேட்டதற்கு கவர்னர் ஆட்சியிலே அறிவித்ததைத்தான் இப்போது செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே அதையும் கட்டுமர மீனவர்களுக்கு மானிய விலையில் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல எங்கள் பகுதியில் மீனவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். அதிராம்பட்டணத்திலிருந்து கட்டுமாவடி வரையில் இருக்கிறார்கள். அதற்குமேலே இன்னும் திரு. திருநாவுக்கரசு தொகுதி இருக்கிறது அந்தப்பக்கம். அந்த மீனவர்களுக்கெல்லாம், அவர்கள் பிடிக்கும் மீனை, நண்டை, கருவாடை, இராலை பஸ்களில் ஏற்ற முடியவில்லை. நாம் சாப்பிடும்போது சுவையாக சாப்பிடுகிறோம். அமைச்சர் நன்றாக சாப்பிடக் கூடியவர், சுவையாக சாப்பிடுவார் (சிரிப்பு). ஆனால் இந்த மீனை, இராலை (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்குத்தான் இந்த நேரத்திலே சாப்பாடு என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டாம் என்று சொன்னேன் (சிரிப்பு).

திரு. ஆர் சிங்காரம் : அவைகளை பஸ்ஸிலே ஏற்ற முடியவில்லை. காரணம் அதிராம்பட்டணத்திலிருக்கும் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் எல்லாம் அந்த பஸ்ஸில் வருகிறார்கள். நாறுகிறது என்று சொல்கிறார்கள். பஸ்ஸிலே ஏற்ற மாட்டேன் என்கிறார்கள். மறுக்கிறார்கள். பொது மக்களும் வாதம் பண்ணுகிறார்கள். வயிற்றுக்குள் போகும்போது சுவையாக இருக்கிறது.

(13-35 மணி)

ஆனால் பஸ்ஸிலே வருகிறபோது கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லி ஆட்சேபிக்கிறார்கள். அதற்காகத்தான் தனியாக பஸ் விடவேண்டுமென்று சொல்லி மீனளத் துறை அமைச்சரைக் கேட்டுக் கொண்டேன். போன தடவை பேசினேன். மனு கொடுத்தேன். எந்தவித நடவடிக்கையும் இல்லை. சி.ஆர். சி.-க்கு அனுப்பி விட்டார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் டிரான்ஸ்போர்ட் மினிஸ்டராக இருப்பதால் தயவு செய்து அதற்கு தனியாக பஸ் விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பஸ்ஸுக்கு கீழே அனெக்ஸர் மாதிரி போட வேண்டும். அல்லது பஸ்ஸுக்குப் பின்னால் பாக்ஸ் மாதிரி தயார் பண்ணி போட வேண்டும். அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். காரங்குடாவில் இறந்த மீனவர் ஒருவரை கண்டு பிடித்தேன். கிட்டத்தட்ட 12 நாட்கள் ஆயிற்று. எப்படி? கஸ்ட்டம்ஸ், டி.எஸ்.பி., இன்ஸ்பெக்டர், கலெக்டர், ஆர்.டி.ஓ. அத்தனை பேர்களுக்கும் சொல்லி, ஸ்டீமர் வாங்கி அதைத் தேடினோம். கடைசியில் கட்டுமாவடிப் பக்கம் போயிற்று. கட்டுமாவடி தாண்டி மணமேல்குடி போயிற்று. அந்த ஏரியாவிலே போய் கண்டுபிடித்து அப்புறம் கொண்டு வந்தோம். சட்ட மன்ற உறுப்பினருக்கு 3 நாட்கள் வேலை. ஸ்டீமர் கிடைக்கவில்லை. மல்லிப் பட்டினத்திலே ஒரு ஸ்டீமர் இருந்தது. எமர்ஜென்சிக்கு பயன்படுத்துவதற்காக எப்படி ஃபயர் என்ஜின் திடீரென்று ஆபத்து என்றால் பாதுகாக்க போகிறதோ அது போல ஸ்டீமர் ஒன்று மல்லிப்பட்டினத்தில் அமைக்கவேண்டும். அப்படி அமைத்தால் அதிராம்பட்டினத்திலிருந்து கட்டுமாவடி வரை மீனவர்கள் திடீரென்று காணாமல் அல்லது இறந்து போய் விட்டால் தேடிக் கொண்டு வருவதற்கு. ஏனென்றால் பாடி வந்தால் தான் எப்.ஐ.ஆர். போடலாம். பாடி வந்தால்தான் போஸ்டு மார்ட்டம் பண்ணலாம். எப்.ஐ.ஆர். காபி, போஸ்ட் மார்ட்டம் காபி இருந்தால் தான் ரூ. 15,000 பணம் வாங்கலாம். இப்படி ஒரு கஷ்டமான சூழ்நிலை. 19 வயது பையன் இறந்து விட்டான். பாலு என்கிற பையன். அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மீனவர் சங்கத்திலே மெம்பர் இல்லை. சொஸைட்டி தேர்தல் கிடையாது. சொஸைட்டியை குளோஸ் பண்ணிவிட்டார்கள். (மணியடிக்கப்பெற்றது). தயவு செய்து அனுமதிக்க வேண்டும். முதல் பாயின்ட், இன்னும் இருக்கிறது. ஒரு ஸ்டீமரை மல்லிக்குளத்தில் பிரத்யேகமாக வைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக நான் ஒரு கோரிக்கையை விட விரும்புகிறேன். 1973-லிருந்து இன்று வரை சுமார் 5,000க்கு மேற்பட்ட சுமைதூக்கும் ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். அந்த ஊழியர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று நம்முடைய அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்கள் இங்கே தெளிவாக குறிப்பிட்டார்கள். வருகின்ற காலங்களில் நிச்சயமாக நிரந்தரம் செய்வோம் என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூட மே தின விழாவிலே அவர்கள் நிரந்தரம் ஆக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். ஆகஸ்ட் 15 சுதந்திர தின விழாவிலே டி.வியிலே பேசினார்கள். ரேடியோவிலே பேசினார்கள், செப்டம்பரிலிருந்து நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று சொன்னார்கள். ஆனால் நிரந்தரம் செய்யப்படவில்லை? மாண்புமிகு உணவுத் துறை புதிய அமைச்சர் அவர்கள் சுறுசுறுப்பாகச் செயல்படுவார்கள் என்று கருது கிறேன். அதை கவனிப்பாரா, ஆவன செய்வாரா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஸீரோ டயத்திலே ஒரு பிரச்சினையைக் கிளப்பினேன். நம்முடைய பேரவைத் தலைவர் அனுமதித்தார். அதை 3 பேர்கள் கிளப்பினோம். திருச்சி மாவட்டம் மற்றும் தஞ்சை மாவட்டம் பற்றி. திருச்சி மாவட்டத்தில் உள்ள பிரச்சனைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பிரச்சனைக்கு பதில் சொல்லவில்லை. 15 பேர்கள் இறந்து போய் விட்டார்கள். மேற்கொண்டு என்ன பண்ணினீர்கள்? என்று மினிஸ்டர் சொல்லக் கூடாதா? மினிஸ்டரும் சொல்லவில்லை. யாருமே ஒன்றும் சொல்லவில்லை. என்ன காரணம்? முறையான நடவடிக்கை உண்டா? குழு அனுப்பினோம் என்று சொல்கிறீர்கள். மேற்கொண்டு செத்தானா? சாகவில்லையா? எத்தனை பேர் சாகப் போகிறான்? குளுக்கோஸ் கிடைக்கவில்லை என்று சொன்னேன். இதையெல்லாம் பார்த்து பதில் சொல்லக் கூடாதா? இப்போதாவது அமைச்சர் பதில் சொல்வாரா? தஞ்சையிலே என்ன ஆச்சு?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களைப் பேசச் சொல்கிறேன். நீங்கள் இன்னொருவரைப் பேசும்படி சொல்கிற வேலையெல்லாம் வைத்துக் கொள்ள வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் மருத்துவ மனையில் பல நோயாளிகள் அங்கே அனுமதிக்கப்பட்டு அதற்கான மருத்துவ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்கள் காலையிலே சொன்னார்கள். அவரிடம் நேரிலேயும் சொல்லியிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்திலே அங்கு இருக்கின்ற மாவட்ட சுகாதார அலுவலர் அதற்கான பணியில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : நன்றி, ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு குடும்பக் கார்டுகளுக்கு அரிசி கொடுத்து இருக்கிறீர்கள். ரொம்ப நன்றி. வரவேற்கிறேன். ஆனால் அந்த குடும்பக் கார்டுகள் வழங்குவதிலே பல சிக்கல். புதிய கார்டு வீடு வீடாக வழங்க வேண்டுமென்று உங்களிடம் கேட்டோம். நீங்களும் உத்திரவிட்டீர்கள். வீடுவீடாகச் சென்று கார்டு லிஸ்ட் எடுத்தீர்கள். ஆனால் ஒரு குடும்பத்திலே 4 பேர்கள் திருமணம் ஆனவர்கள் என்று சொன்னால் 4 பேர்களுக்கும் கார்டு இருக்கிறது. பேராவூரணி தாலூக்காவிலே 10,000 கார்டு கூட. பட்டுக்கோட்டையில் 10,000 கார்டு கூட. ஆக ஸ்டேட் லெவலிலே அதிகமாகிவிட்டது. ரத்து செய்து விட்டீர்கள். ஆனால் இந்தச் சூழ்நிலையில் கார்டே இல்லாதவர்களுக்கு கார்டு கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். அதையும் ரத்து செய்து விட்டீர்கள். புதுக் கார்டும் வரவில்லை. முன்னாலே உள்ளவர்களுக்கும் கார்டு இல்லை. ஆக இப்படிப்பட்ட சூழ்நிலையில் சீனி வேண்டுமா கார்டு, அரிசி வேண்டுமா கார்டு, பாஸ்போர்ட் வேண்டுமா கார்டு, லோன் வேண்டுமா கார்டு, எல்லாவற்றிற்கும் கார்டு கார்டு என்று சொல்லி இம்பார்ட்டன்ஸ் கொடுத்து விட்டீர்கள். எல்லோரும் கார்டு கேட்கிறார்கள்.

(13.40 மணி)

ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒழுங்கான ஏழை யார் என்பதை அடையாளம் கண்டுபிடிக்கவேண்டிய பொறுப்பு அரசிற்கு இருக்கிறது. ஆகவே, இந்த நிறுத்தி வைக்கிற உத்தரவை விரைவில் ரிலீஸ் பண்ணவேண்டும். உடனடியாக ஆவன செய்ய வேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன். தீபாவளிக்கு வேஷ்டி—சேலை கொடுத்தீர்கள். பொங்கலுக்கு, தீபாவளிக்குக் கொடுத்தவர்களுக்கு கொடுக்க வில்லை. ஏன் கொடுக்க வில்லை? அரசினுடைய பொறுப்பு தீபாவளிக்கு மட்டும்தான். அதில் கொடுத்தவர்களுக்கு இதிலே இல்லை என்று நீங்கள் சொல்லவில்லை. ஆனால் பொங்கலுக்குக் கொடுத்தவர்களுக்கு தீபாவளிக்கு இல்லை. தீபாவளிக்குக் கொடுத்தவர்களுக்கு பொங்கலுக்கு இல்லை. அப்படி கொடுத்ததிலேயும் பல குறைகள். இருந்தாலும் வருங்காலத்தில் இதையெல்லாம் நீங்கள் நிவர்த்தி செய்யவேண்டும் என்று பணிவண்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டு, ஆதி திராவிடர்கள் பிரச்சினையைப் பற்றி நான் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முக்கியமான பிரச்சினை. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முடித்து விட்டீர்கள் என்றால் நானும் நாகரிகமாக முடிப்பேன். (குறுக்கீடு) முடியுங்கள். இன்னொருவர் பேசவேண்டும்.

திரு. ஆர். சிங்காரம் : அடுத்து, ஆதி திராவிடர் பிரச்சினை. ஆதி திராவிடர்களுக்கு காலனி கட்டுகிறோம். 20 வீடு இருந்தால்தான் ஒரு காலனி கட்டுகிறோம். ஜவஹர் ஸ்கீமில், 10

வீடு இருந்தால் கிடையாது. 19 வீடுகள் வரைக்கும் கிடையாது. நான் என்ன சொல்கிறேன் என்றால், 19 அரிஜனங்களுக்கும் தனித்தனியாக அவரவர்களுடைய இடத்திலேயே வீடு கட்டுவதற்கான ஸ்கீமை நீங்கள் கொடுக்க வேண்டும்.

அடுத்து, கூட்டுறவுச் சங்கத்தின் வாயிலாக, வீடு கட்டும் சொசைட்டி சார்பாக 6,000 ரூபாய் கடன் கொடுக்கிறார்கள். இந்த 6,000 ரூபாய் கடன் என்பதில், மண் சாந்து வைத்துக் கட்டச் சொல்கிறார்கள். அது மியர் வேஸ்ட். ஆதி திராவிடர்களுக்கு முன்னால் கொடுத்த ஆயிரம் ரூபாயிலிருந்து 6,000 ரூபாய் வரைக்கும் வீடு கட்டினோம். அந்தக் காலத்திலே, காமராஜர் காலத்திலிருந்து, அந்த வீடுகள் எல்லாம் கம்ப்ளீட்டாக நொறுங்கிப் போய் விட்டன. பிரயோசனம் இல்லை. இப்போது கட்டுகிற வீட்டைப் பார்த்துவிட்டு அந்த ஆதி திராவிட மக்கள் வருத்தப்படுகிறார்கள். வேதனைப்படுகிறார்கள். ஆகவே, இந்த மாதிரி வீடு எங்களுக்கும் வேண்டும் என்று கேட்கிறார்கள். நியாயம். அதனாலே அவர்களுக்கும் அதே மாதிரி வீடு கொடுக்கவேண்டும். வீடு கட்டும் சொசைட்டியிலிருந்து 6,000 ரூபாய் கொடுப்பதை 10,000 ரூபாய் ஆக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கட்டுமாவடியிலே ஒரு பிரச்சினை. (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்ததாக, திரு. ஏ. கோதண்டம். (குறுக்கீடு).

*திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்த.... (திரு. ஆர். சிங்காரம் நின்று கொண்டே இருந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம், வாக்கியத்தை முடித்தால் அனுமதிப்பேன். இல்லாவிட்டால் அனுமதிக்க மாட்டேன்.

திரு. ஆர். சிங்காரம் : 2 நிமிடம்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. கோதண்டம், நீங்கள் பேசுங்கள். (திரு. சிங்காரம் நின்று கொண்டு மேசையைத் தட்டிக் கொண்டு பேசிக் கொண்டே இருந்தார்). திரு. சிங்காரம், இன்னொரு நாளைக்குப் பேசிக் கொள்ளலாம். மானியக் கோரிக்கையிலே விரிவாகப் பேசிக் கொள்ளலாம். (திரு. சிங்காரம் நின்று கொண்டு மேசையைத் தட்டிக் கொண்டு பேசிக் கொண்டே இருந்தார்). திரு. கோதண்டம், நீங்கள் பேசுங்கள்.

திரு. ஏ. கோதண்டம் : என்னைத் தேர்ந்தெடுத்த திருப்பெரும்புதூர் பகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிகச்சிறந்த திட்டங்களை செயல்முறைகளை அறிவித்துள்ள ஆளுநர் உரைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் போராடிப் பெற்ற இட ஒதுக்கீட்டால் பெருமளவு தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள் இட ஒதுக்கீடு பெறும் அளவு பயன் பெற்றுள்ளார்கள். மக்கள் மன்றத்திலே அவர்கள் இடம் பெற 10 ஆண்டுகள் தேசிய முன்னனி அரசு நீட்டித்து இருப்பதை ஆதரிக்கின்ற தீர்மானம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அதேபோல், மத்திய அரசுத் துறைகளிலே கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றில் இட ஒதுக்கீடு சம்பந்தமாக சிறப்புமிக்க தி.மு.க. ஆட்சியில் மண்டல் கமிஷன் பரிந்துரையை செயல்படுத்துமாறு கேட்டுக் கொண்டதை ஏற்று, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க மத்திய அரசு ஒப்புக்கொண்டு இருப்பதை ஆளுநர் அறிவித்துள்ளது சிறப்பு அம்சம் ஆகும்.

தமிழ்நாட்டில் அரசியல் லாபம் தேட அன்றைய காங்கிரஸ் அரசு உணவுப் பொருள்களைக் குறைத்து வேண்டுமென்றே ஏழைகள் பசியோடு விளையாடி தேர்தல் லாபம் தேடினார்கள் என்பது ஆளுநர் உரையின் 9-ஆம் பத்தியில் தெளிவாக விளக்கியிருப்பது பாராட்டத்தக்கது ஆகும். அதேபோல், புதிய மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்கும் அரிசி அளவை உயர்த்தி அளித்து இருப்பது மத்திய அரசின் பெருந்தன்மையையும், தமிழக மக்கள் மீது கொண்டுள்ள பற்றையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

அதேபோல், கழக அரசு மக்களின் கருத்துக்களுக்கு எந்த அளவுக்கு மரியாதை அளிக்கிறது என்பதற்கு அடையாளம் தான், வருமான அளவு குடும்ப அட்டைகளில் தவறாக உள்ளது என்ற மக்களின் கோரிக்கையை ஏற்று வருமான வரம்பை ரூ. 1,000 ஆக உயர்த்தியிருப்பது ஆகும். பின் தங்கிய 105 வட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கு அளிக்கப்படும் சலுகைகள், உதவிகள் திருத்தி வரையறுக்கப்பட்டு இருப்பதும், தொழில் வளம் பெருகுவதில் இந்த அரசும், முதல்வரும் எந்த அளவிற்கு அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதைக் காட்டுகிறது. மேலும் மறைந்த முன்னாள் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் வசித்த இராமாவரம் முதல் அரசு துணைக் கொறடா திரு. வி. கே. இராசு அவர்களின் அரக்கோணம் தொகுதியின் எல்லை வரையில் என் தொகுதி பரந்து விரிந்து உள்ளது. என் தொகுதி சென்னையை யொட்டி அமைந்திருக்கிறது என்றாலும்

இதுவரையில் எந்த ஒரு அரசு தொழிற்சாலையையும் அமைக்கப் படாமல் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடப்பு ஐந்தாண்டு திட்டத்திலாவது என் தொகுதியில் ஒரு அரசு தொழிற்சாலையை தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

(13.45 மணி)

தொழிற்சாலை தொடங்குவதற்குப் போதுமான இடவசதி என் தொகுதியில் இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற் குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் அடங்கிய திருப்பெரும் புதூர் ஒன்றியத்தில், திருப்பெரும்புதூர் பேரூராட்சியில் மட்டும் மேல்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. ஒன்றியம் சுமார் 30 கிலோ மீட்டர் தூரம் ஆகும். 30 கிலோ மீட்டர் சுற்றளவு உள்ள பகுதியாகும். 30 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள பல கிராம மாணவர்கள் திருப்பெரும்புதூர் வந்து, மேல்நிலைப் பள்ளியிலே படிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். திருப்பெரும்புதூரிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மதுரமங்கலம் உயர்நிலைப்பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக மாற்றினால், ஒன்றியத்தின் மையப் பகுதியில் இது அமைவதாக இருக்கும். மாணவர்களுக்கும் பெரும் உதவிகரமாக இருக் கும் என்று கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஒரே நேரத்தில் இரண்டு பேர் எழுந்து நிற்கின்ற சூழ்நிலை ஏற் பட்டது. உறுப்பினர் சிங்காரம் ஒரே ஒரு செய்தி மட்டும் சொல்ல வேண்டும். அவர் என்னிடம் சொல்கிறார். தயவு செய்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூன்று முறை, நான்கு முறை முடித்து விடுங்கள், முடித்து விடுங்கள் என்று வாய்ப்புக் கொடுத்த பிறகும், ** கடைசி வரைக்கும் முடிக்க முடியாது, 2 நிமிடம், 2 நிமிடம் என்று சொல்கிறார். இந்தச் சட்ட மன்றத்திலேயே அதிகமாக என்னிடம் சலுகை வாங்கியவர் திரு. சிங்காரம்தான் என்பதை நினைவூட்டுகிறேன்; அவர் அதை உணர்ந்து கொண்டால் போதும்

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, அவர் அதைப் பேசி முடித்து விடட்டும். தயவு செய்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, நன்றாக இருக் காது.

**23—1—1990 ஆம் நாளன்று மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[பேரவைத் தலைவர்] [1990 சனவரி 22

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (23-1-1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 13.47 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

45. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 28-2-1989 ஆம் நாளிட்ட 117ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

46. தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை தீர்வை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 20—1—1989-ஆம் நாளிட்ட 101ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961 112 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

47, தமிழ்நாடு 1988-ஆம் ஆண்டு நகராட்சி வரிவிதிப்பு மேல் முறையீட்டுக் குழு (அலுவல் நடைமுறை) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம் - குடிநீர் வழங்கல் துறையின் 18—7—1989ஆம் நாளிட்ட 434-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக் கப் பெற்றது.]

48. தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை தீர்வை செய்தல்) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 6—9—1988ஆம் நாளிட்ட 1697-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/ 1961) 112(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

[பேரவைத் தலைவர்] [1990 சனவரி 22

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (23-1-1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 13.47 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

45. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 28-2-1989 ஆம் நாளிட்ட 117ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

46. தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை தீர்வை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 20—1—1989-ஆம் நாளிட்ட 101ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961 112 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

47, தமிழ்நாடு 1988-ஆம் ஆண்டு நகராட்சி வரிவிதிப்பு மேல் முறையீட்டுக் குழு (அலுவல் நடைமுறை) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம் - குடிநீர் வழங்கல் துறையின் 18—7—1989ஆம் நாளிட்ட 434-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக் கப் பெற்றது.]

48. தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை தீர்வை செய்தல்) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 6—9—1988ஆம் நாளிட்ட 1697-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/ 1961) 112(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

1990 சனவரி 22]

49. தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை தீர்வை செய்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 12—12—1988-ஆம் நாளிட்ட 2307-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

50. தமிழ்நாடு செய்தித்தாள் — காகித நிறுவனத்தின் 1988—89-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

51. தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

52. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

18. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (முதலாம் பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை.)

19. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (இரண்டாம் பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை.)

1990 சனவரி 22]

49. தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை தீர்வை செய்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 12—12—1988-ஆம் நாளிட்ட 2307-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

50. தமிழ்நாடு செய்தித்தாள் — காகித நிறுவனத்தின் 1988—89-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

51. தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

52. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

18. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (முதலாம் பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை.)

19. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (இரண்டாம் பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை.)

———

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS